# நாடகமும் அரங்கியலும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 12

(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறுவதற்காளது)

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூகவிஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.
www.nie.lk
info@nie.lk

நாடகமும் அரங்கியலும்,
ஆசிரியர் வழிகாட்டி.
தரம் - 12
பாடத்திட்டம் - 2017

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2017
தேசிய கல்வி நிறுவகம்.

அழகியற்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.
மஹரகம

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு :

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007ஆம் ஆண்டு, நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சிமுறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதற் பாகத்தினைத் தேசிய கல்வி நிறுவகம் அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பெற்ற தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளையும் விருத்திசெய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக்களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவுவாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தபெற்றது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம் பாகம் 2015ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பெற்று வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடைநிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பெற்ற முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கி நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களுக்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு, புதிய ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி நூல்கள், ஆசிரியரைப் பொருத்தப்பாடுடைய ஒருவராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக்கப்பெற்ற பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பெற்ற பாட நூல்களின் உச்சப்பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் மற்றும் புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக் கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழிற் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனிதவளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர,
**பணிப்பாளர் நாயகம்,**
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும் நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கும் கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள்,தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற் காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டி, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

பாடநிறைவில் அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றி வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். இவ்வாசிரியர் வழிகாட்டி, மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக்குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்:** **கல்விசார் அலுவல்கள் சபை.**
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட நிபுணத்துவ ஆலோசனை:** **கலாநிதி சி.மௌனகுரு**
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**பாட இணைப்பாக்கம்:**
- **திரு. கே.ஜி. அஜித் ரூபசேன**
  செயற்றிட்டத் தலைவர், அழகியற்கல்வித் துறை.

**எழுத்தாளர் குழு:**

**(வெளிவாரி)**
- **திரு. செ.செல்வகுமார்,**
  ஆசிரியர் சேவை, யா/விக்ரோரியாக் கல்லூரி.
- **திரு. க. திலகநாதன்,**
  விரிவுரையாளர்,
  தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
- **திருமதி. செ. எ. வைதேகி,**
  ஆசிரியர் சேவை, கிளி / பளை மத்திய கல்லூரி.
- **திருமதி. கே. ஜீவாஜினி,**
  ஆசிரியர் சேவை, யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
- **திருமதி. ச. ஜெயந்தி,**
  ஆசிரியர் சேவை,
  யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை.
- **திரு. பி. ரவீந்திரன்,**
  ஆசிரியர் சேவை, மட் / செட்டிபாளையம் ம.வி.
- **திருமதி. வனிதா சுரேஸ்,**
  ஆசிரியர் ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, பட்டிருப்பு
- **திரு. யோ. யோண்சன் ராஜ்குமார்,**
  ஆசிரியர் சேவை,
  யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.
- **திரு. இ. ஜெகநாதன்**
  ஆசிரியர் சேவை,
  மட்/ துறைநீலாவணை ம.வி.

**செவ்விதாக்கம்:**
- **திரு. செ. செல்வகுமார்,**
  விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.

**கணினிப் பதிப்பு:**
- **திருமதி. நந்தினி**
  **தேசிய கல்வி நிறுவ**

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

21 ஆம் நூற்றாண்டு என்பது அறிவுப் பொருளாதார யுகத்தைக் குறித்து நிற்பதாகும். உலகம் கிராமமாகச் சுருங்கியதைப் போலவே, அறிவுத் திரட்டையும் மிகமிகச் சுருக்கமான தாக்கித் தருவது இந்த நூற்றாண்டின் சவால் மிக்க பணியாகும். உலகளாவிய கல்விச் செயற்பாடுகள் அதனை நோக்கியே குவிக்கப் பெற்றுள்ளன. தொழிற்றுறை மனிதன் இயந்திரமல்லன். அவனை மனிதனாகவே வைத்திருக்கக் கலைகளே பயனுறு பங்காற்றுகின்றன. ஆதலால் அன்பு, கருணை, ஒற்றுமை, நல்லிணக்கம், பிணைப்பு, பற்றுதி, படைப்பாற்றல் போன்றவற்றை மனிதர்களிடத்திற் பிரவாகிக்கச் செய்வதற்கு அழகியற் பாடங்கள் துணை செய்கின்றன.

நாடகம் மனிதரைப் பற்றிப் பேசுகிறது. அவர்கள் தமக்குட் கொள்ளும் உறவை இரத்தமும் சதையுமாக வெளிப்படுத்துகிறது. அறிவுப் பொருளாதார யுகத்தில் மனிதருக்கு மிக வேண்டப்பெறுகின்ற தொடர்பாடற் திறன், ஆளுமைத் திறன், கூட்டுணர்வு சார் நடத்தைகள், துல்லியமான, தெளிவான பேச்சு போன்றவற்றை விருத்தியுறச் செய்வதற்கு நாடகம் மிகவும் தாக்கவன்மையான சாதனமாகும். ஆகவேதான் இலங்கையின் பொதுக் கல்வித் துறையில் தரம் 6 முதல் தரம் 13 வரை நாடகமும் அரங்கியலும் ஒரு விளைதிறன் மிக்க பாடமாக முன்னிறுத்தப் பெற்றுள்ளது.

தரம் 12 மற்றும் தரம் 13இற்கான பாடத்திட்டங்கள் நாடகக் கொள்நெறிகளுடன் செயல் சார்ந்த கற்றலுக்கும் இடமளிப்பனவாய் வகுக்கப் பெற்றுள்ளன. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பிற் திட்டமிடுவதற்கு ஆசிரியருக்கு அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதை இந்த ஆசிரியர் வழிகாட்டி சுட்டிக் காட்டுகின்றது. ஒவ்வொரு பாடவிடய உள்ளடக்கம் தொடர்பிலும், கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு இங்கு முன்வைக்கப் பெற்றுள்ளது. அவற்றை மாணவர்களுடன் தொடர்புறுத்து வதற்கான முறையியல் தொடர்பில், சில முன்மாதிரியான உதாரணங்கள் தரப்பெற்றுள்ளன. ஆசிரியர்கள் பாடவிடயம், வகுப்பறைச் சூழல், மாணவரின் நிலை, பாடவேளை போன்ற அம்சங்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான முறையியலை வகுத்துக் கொள்ள முடியும். எவ்வாறெனினும், அவை மாணவரைச் செயற்படுபவராகவும் ஆசிரியரை வசதி செய்யும் வகிபாகத்தைக் கொண்டிருப்பவராகவும் கொள்ளும் வகையில் அமைதல் வேண்டும் என்று எதிர்பார்க்கப் பெறுகின்றது.

2015 முதல் கற்றற் பேறுகளை அடிப்படையாகக் கொண்ட தேர்ச்சி மையக் கலைத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. ஆசிரியர் வழிகாட்டியிற் சில அடிப்படையான கற்றற் பேறுகள் முன்வைக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடவேளையையும் திட்டமிடும்போதும், அக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவர்கள் எத்தகைய அடைவைக் காட்டுவார்கள் என்பதை எதிர்நோக்கி மேலதிக கற்றற் பேறுகளைகளைத் தாமாகவே தயாரித்துக் கொள்ள வேண்டும். கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது கணிப்பீடு மதிப்பீடுகளைச் செய்வதன் வழியாக எதிர்பார்க்கப் பெற்ற கற்றற் பேறுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை அவதானித்து, பரிகாரச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களின் தேடலுக்கும், படைப்பூக்கத்திற்கும் வழிசமைக்கும் வகையிற் போதிய வாய்ப்புக்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த தரத்திற் கற்கும் மாணவர்களின் வயது மற்றும் ஆளுமைப் பண்புகளுக்கு ஏற்ப, அமைக்கப் பெற்றுள்ள விடய உள்ளடக்கத்தினை எந்தளவிற்குக் கற்பிப்பது என்பதற்கான குறிப்புக்களாகப் பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள் அமைந்துள்ளன. புதிதாக அறிமுகஞ் செய்யப் பெற்றுள்ள மற்றும் தேடிப் பெறக் கடினமான உள்ளடக்கங்கள் தொடர்பில் மாத்திரம் சற்று விரிவான குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. அவ்வகையிற் செய்முறை சார்ந்த கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கைக் கட்டியெழுப்புவதற்கு இவ் வழிகாட்டி ஆசிரியர்களுக்குப் பயனுறுதி வாய்ந்ததாய் அமையும் என்று நம்புகின்றோம்.

**செயற்றிட்டக் குழு**

## உள்ளுறையாக


- பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv
- கலைத்திட்டக் குழு v
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் vi
- விரிவான பாடத்திட்டம்
  - அறிமுகம் viii-ix
  - தேசிய இலக்குகள் x
  - அடிப்படைத்தேர்ச்சிகள் xi - xii
  - பாடக்குறிக்கோள்கள் xiii
  - பாடத்திட்டம் xiv -xxix
  - தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு xxx
- கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் 1-276

# விரிவான பாடத்திட்டம்

# அறிமுகம்

இலங்கையின் கல்வி மறுசீரமைப்புக்கான செல்நெறி தொடர்பில் 2007 குறிப்பிடத்தக்கதொரு ஆண்டாகும். உலகப் பரப்பில் நிகழ்ந்து வருகின்ற உலகமயமாதற் போக்குகளுக்கேற்ப மேற்கிளம்பிய, புதிய மாதிரியிலான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஒரு பண்பு மாற்றம் அந்த வருடத்தில் தான் தொடங்கியது. புதிய சகாப்தத்திற்கான கல்வி மறுசீரமைப்பு எனத் தெரியவந்த தேர்ச்சி மையக் கலைத்திட்ட நோக்கே அது. இதுவரை காலக் கல்விப் போக்கில் அறிதல் ஆட்சிக்கு மாத்திரமே வழங்கப்பெற்றிருந்த முக்கியத்துவத்திற்கு அது முடிவுகட்ட முனைந்தது.

ஒன்றிணைந்த ஆளுமைப் பண்புகளான சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், சுயதிறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையிலான சிறந்த பொதுக் கல்வியை வழங்குவது முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

2015 முதல் நடைமுறைப்படுத்தப்பெறுகின்ற, புதிய சகாப்தத்தின் இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பானது, தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மாணவர் மையக் கலைத்திட்டத்தை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்லும் பயனுறுதி வாய்ந்த நடவடிக்கை ஆகும். ஏனெனில், அது அடுத்துவரும் இருபது ஆண்டுகளில் தேசிய, சர்வதேசிய ரீதியில் சந்திக்க நேரிடும் நோக்குகள், போக்குகள், மாறுதல்கள், சவால்கள் என்பவற்றிற்கான வருமுன் காக்கும் நடவடிக்கையாகும்.

உலகளாவிய விஞ்ஞான, தொழிநுட்ப இலத்திரனியல் விருத்தி காரணமாக எமது அறிவுத் திரட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டு வருகிறது. பழைய அறிவின் இடத்தில் புதிய அறிவு தோன்றியுள்ளது. இந்த அறிவுப் பிரவாகம் காரணமாக, கைத்தொழில் யுகத்திலிருந்து அறிவுப் பொருளாதார யுகத்திற்கான மாறுதல் ஒன்று நடைபெற்று வருகிறது. உலக மனிதன் என்கிற கருத்தாக்கம் விருத்தியுற்று வருகிறது. எனவே, எமது மாணவர் சமூகம் படைப்பாற்றலற்ற மனன கலாசாரத்திற்குள் இருக்க முடியாது. இந்த நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்கும் வல்லமையுடைய தலைமுறையை உருவாக்குவது என்பது நமது பொதுக் கல்வித்துறைக்கு விடப்பட்ட சவாலாகும். எனவே,

1. தாமாக முன்வந்து தொடங்கும் மனப்பாங்குள்ள
2. தீர்மானங்களை எடுக்கும் திறனுடைய
3. பிரச்சினை தீர்க்கும் வல்லமையுடைய
4. முரண்பாடுகளை முகாமை செய்யும் ஆற்றலுள்ள
5. மற்றவர்களுடன் தாக்கவன்மையான தொடர்பாடலை மேற்கொள்ளத்தக்க

6. குழுவாகப் பணியாற்றும் இயலுமையும், மனமும் உள்ள
7. தலைமைதாங்கும் பண்புடைய
8. மொழியறிவுடைய

புதிய பரம்பரையொன்றை எழுச்சிபெறச் செய்யும் தேவை பொதுக் கல்வித் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான, நிலைமைகள் சிந்தனைகளைக் கருத்துடன் உள்வாங்கிக் கொண்டுதான் நாடகமும் அரங்கியலும் புதிய பாடத்திட்டம் ஆக்கப் பெற்றுள்ளது. நாடகம் மனிதர்களுடன் இரத்தமும் சதையுமான தொடர்பைக் கொண்டிருக்கின்ற ஒரு அவைக்காற்றுக் கலை ஆகும். எனவே, நாடகம் மனிதரின் உணர்ச்சிகள், எண்ணங்கள், அபிலாஷைகள், விழுமியங்கள், திறன்கள் மற்றும் பண்பாடு என்பவற்றுடன் ஊடாடுகின்ற கலை வடிவம் ஆகின்றது. இதன் மூலமாக நல்லிணக்கம், ஒற்றுமை, பிணைப்பு, பற்றுறுதி போன்ற பண்புகளுடன் கூடிய ஒன்றிணைந்த ஆளுமைத் திறன்களை விருத்தி செய்ய முடியும். ஆகவே, நாடகமும் அரங்கியலும் தேசிய இலக்குகளை அடைவதற்கான மிகநெருக்கமான பாடமாகவும் உள்ளது.

புதிய சகாப்தத்திற்கான இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது, கலைத்திட்டச் சட்டகத்தில் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு மாற்றங்கள் எவையும் செய்யப்பெறவில்லை. அதேவேளை, பாடத்திட்டத்தில் கற்றற் பேறுகள் என்கிற விடயம் இணைக்கப்பட்டுள்ளது. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவரிடம் எதிர்பார்க்கப்பெறுகின்ற அடைவைச் சுட்டுவனவாக கற்றற் பேறுகள் அமைகின்றன. கணிப்பீடு மதிப்பீடுகள் மூலம் கற்றற் பேறுகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்த அடித்தளத்தில் நின்றே நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பொதுக் கல்வியானது மாணவர்களை வேலையுலகிற்குத் தயார்ப்படுத்துவதற்கான அடித்தளத்தை இடவேண்டும் என்கிற வகையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டமானது எழுத்துருவாக்கம், ஒப்பனை, ஆடை வடிவமைப்பு, ஒலி விதானிப்பு, ஒளி விதானிப்பு, காட்சி விதானிப்பு போன்ற கலை நுட்ப விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது, இதன் ஊடாகத் தொழிற் தேர்ச்சியும், படைப்பாக்க ஆளுமையும் உடையவர்களாக மாணவர்கள் உருவாக முடியும். அதனுடன் கூடவே நாடகக் கலைஞர்களாக , மானுட நேயமிக்கவர்களாக, அழகியல் நயப்புணர்வுடையவர்களாக அவர்கள் மிளிர முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

தவிர, பிரதான பாடங்களை இலகுவாகக் கற்பிப்பதற்கான முறையாகவும், அவதானம், கருத்தூன்றல், தர்க்க சிந்தனை என்பவற்றிற்கான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்யக் கூடிய துறையாகவும் நாடகம் வளர்ந்து வரும் பின்னணியில் நாடகமும் அரங்கியலும் பாடப் பயில்வு வழியாக மற்றப் பாடங்களையும் வினைத்திறனுடன் கற்க வசதி செய்ய முடியும் எனவும் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கு கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)*

# அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

## I. தொடர்பாடற் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவற் தொழிநுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவற் தொழிநுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவற் தொடர்பாடற் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

## II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

## III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையிற் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழற்றொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருள்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும். கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV.** வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புக்களையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடுதல்.

**V.** சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI.** ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII.** "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தலும்.

(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)

## பாடக் குறிக்கோள்கள்

- அரங்கக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- படைப்பாக்கத் திறனைப் பெறுதல்.
- அழகியல் நயப்புடையவராதல்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கைக் கொண்டிருத்தல்.
- பண்பாட்டின் பாற் பற்றுறுதியும் மரபைக் கையேற்கும் மனப்பாங்கும் உள்ளவராதல்.
- தன்னாற்றலை இனங்கண்டு, செயல்முனைப்புடன் செயலாற்றுதல்.
- சமநிலை ஆளுமையை விருத்தி செய்து கொள்ளுதல்.
- தலைமைத்துவப் பண்பை உடையவராதல்.
- தன்னைச் சூழவுள்ள உலகைப் புரிந்துகொண்டு, சமூகமயமாகும் பண்பைக் கொண்டிருத்தல்.
- முரண்பாடுகளை முகாமை செய்தல்.
- மனித சுபாவங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் மானுடப் பண்புகளைப் பெறுதல்.
- தாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் திறன் பெறுதல்.
- நேர்மனப்பாங்கினை விருத்தி செய்தல்.
- சிறந்த தொடர்பாடற் திறனை கொண்டவராதல்.
- தாமாக முன்வந்து செயலாற்றும் திறன் பெறுதல்.
- இயற்கையோடு இசைந்து வாழப் பழகுதல்.
- வளர்ந்துவரும் விஞ்ஞான தொழினுட்ப சாதனங்களை அரங்கிற் கையாளும் ஆற்றலைப் பெறுதல்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- உள ஆற்றுப்படுத்தலுக்கான அணுகுமுறையாக அமைதல்.
- ஏனைய பாடங்களை இலகுவாகக் கற்பதற்கான முறைமையாக அமைதல்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குதல்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணுதல்.

## நாடகமும் அரங்கியலும்
## விரிவான பாடத்திட்டம்
## தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 'கலை' என்பதனை விளங்கிக் கொண்டு, நாடக அரங்கக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிடுவார். | 1.1 'கலை' என்பதற்கு வழங்கப்பெற்றுள்ள விளக்கங்களைக் கூறுவார். | 1.1 'கலை' பற்றிய கீழைத்தேய, மேலைத்தேயச் சிந்தனைகள். | • கலை பற்றிய கீழைத்தேயச் சிந்தனைகளைக் கூறுவார்.<br>• கீழைத்தேயக் கலைக்கோட்பாட்டாளர் பெயர்களைத் தெரிந்திருப்பார்.<br>• 'கலை' பற்றிய மேலைத்தேயச் சிந்தனை களைக் கூறுவார்.<br>• மேலைத்தேயக் கலைக்கோட்பாட்டாளர்களின் பெயர்களை முன்வைப்பார்.<br>• கீழைத்தேய, மேலைத்தேயக் கலைக் கோட்பாட்டாளர்களுக்கு இடையேயான ஒருமித்ததும் வேறுபட்டதுமான இயல்புகளைக் கண்டுணர்ந்திருப்பார். | 04 |
| | 1.2 நாடக அரங்கக் கலையை ஆற்றுகைக் கலைகளுள் ஒன்றாக இனங்காண்பார். | 1.2.1 ஆற்றுகைக் கலைகளை அறிதல்.<br>• இசை.<br>• நடனம்.<br>• நாடகம். | • ஆற்றுகைக் கலைகள் எவை எவை என்று பட்டியலிடுவார்.<br>• இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகள் ஆற்றப்பெறும் விதத்தை எடுத்துரைப்பார். | 03 |
| | | 1.2.2 ஆற்றுகைக் கலைகளின் சிறப்பியல்புகள் | • ஆற்றுகைக் கலைகளை இனங்காண்பதற்குத் துணைசெய்யும் அவற்றின் சிறப்பியல்புகளை முன்வைப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | 1.2.3 நாடகமும் ஏனைய ஆற்றுகைக் கலைகளும். | • ஆற்றுகைக் கலைகளின் வலிமையை உணர்ந்திருப்பார்.<br>• நாடகம் ஏனைய ஆற்றுகைக் கலைகளில் இருந்து தனித்துவமாய் நிற்பதை உணர்ந் திருப்பார். | 04 |
| | 1.3 நாடகக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிட்டு, ஒருமைப்பட்டதும் வேறுபட்டதுமான அம்சங்களைப் பயில்வார். | 1.3.1 நாடகமும் தொழிநுட்பக் கலைகளும் (வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், சினிமா). | • நாடகத்தை வானொலி நாடகம், தொலைக் காட்சி நாடகம், சினிமா ஆகிய தொழி நுட்பக் கலைகளுடன் ஒப்பிட்டு, அவற்றுக் கிடையிலான ஒத்ததும் வேறுபட்டதுமான இயல்புகளை அறிந்திருப்பார். | 06 |
| | | 1.3.2 நாடகமும் இலக்கியமும் (சிறுகதை, நாவல், கவிதை). | • நாடகத்தை இலக்கியத்துடன் ஒப்பிட்டு, அவற்றுக்கு இடையிலான தொடர்பை முன்வைப்பார்.<br>• இலக்கியங்கள் நாடகத்தின் தாக்கவன் மைக்கு உதவும் விதத்தைக் கண்டறிந் திருப்பார். | 03 |
| | 1.4 நாடகத்துடன் தொழிநுட்பம் தொடர்புறும் விதத்தைப் பயில்வார். | 1.4 நாடகமும் தொழிநுட்பமும். | • ஒலி, ஒளி, இசைத் தொழிநுட்பம், ஆடை வடிவமைப்பு, ஒப்பனை, காட்சி விதானிப்பு போன்ற தொழிநுட்பங்கள் நாடகத்திற்கு வலுூட்டுவதை உணர்ந்திருப்பார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவர் | 2.1 நாடகமும் அரங்கக் கலைகளும் என்பவற்றுக்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் பற்றிப் பயின்றவர் ஆவார். | 2.1 நாடகமும் அரங்கக் கலைகளும் என்பதற்கு அடிப் படையான அம்சங்கள்<br>• நாடகம்.<br>• அரங்கு.<br>• ஆற்றுகை.<br>• பிளே (Play). | • நாடகத்துடன் தொடர்புறும் தொழிநுட்பம் சார் கருவிகளைப் பட்டியலிடுவார்.<br>• நாடகத் தொழிநுட்பங்களின் முக்கியத் துவத்தை எடுத்துரைப்பார்.<br>• 'நாடகம்' என்பதற்கு விளக்கம் அளிப்பார்.<br>• அரங்க மூலகங்களை எடுத்துரைத்து அரங்கை விளக்கிக் கூறுவார்.<br>• அரங்கிற்கும் ஆற்றுகைக்கும் இடையிலான தொடர்பை முன்வைப்பார்.<br>• ஆற்றுகையொன்றைப் பார்த்து, 'ஆற்றுகை' என்பதற்கு விளக்கமளிப்பார்.<br>• 'பிளே' என்பது பற்றிக் கருத்துரைப்பார். | 06 |
| | 2.2 நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர் பான அருஞ்சொற்பதங் களுக்குப் பொருள் விளக்கம் அளிப்பார். | 2.2 • நடிப்பு.<br>• நாடக எழுத்துரு.<br>• நாடகத் தயாரிப்பு. | • நடித்துக் காட்டி, நடிப்புப் பற்றி விளக்கம் தருவார்.<br>• நாடக எழுத்துரு என்றால் என்ன என்று கூறுவார்.<br>• நாடகத் தயாரிப்பு என்பது பற்றிக் கருத் துரைப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3 கிரேக்க அரங்கின் தோற்றுவாய்களையும் அதன் வளர்ச்சிக்குப் பங்காற்றிய காரணி களையும் பயின்றவர் ஆவார். | 2.3.1 கிரேக்க அரங்கின் தோற்றம். | • கிரேக்கம், அதன் சமூகம், நம்பிக்கைகள் பற்றி விவரிப்பார். | 04 |
| | | 2.3.2 கிரேக்க அரங்கில் நடிகன். | • கிரேக்க அரங்கின் தோற்றப் பின்புலத்தை விளக்கிக் கூறுவார். | 02 |
| | | 2.3.3 கிரேக்க அரங்க வெளி. | • நடிகனின் தோற்றத்தையும் அதில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளையும் எடுத்துரைப்பார். | 02 |
| | | 2.3.4 கிரேக்க நாடகாசிரியர்கள்.<br>• ஈஸ்கிலஸ்.<br>• சோ.்.போக்கிளிஸ்.<br>• !ரிபிடிஸ்.<br>• அரிஸ்ரோபேன்ஸ்.<br>• மெனான்டர். | • கிரேக்க அரங்க வெளியை வரைந்து காட்டுவார்.<br>• அவ்வரங்க வெளி ஆற்றுகையில் செலுத்திய செல்வாக்கை எடுத்துரைப்பார்.<br>• கிரேக்க நாடகாசிரியர்களின் கிரேக்க அரங்கிற்கான பங்களிப்பை விவரிப்பார். | 06 |
| | 2.4 கிரேக்க அரங்குடன் தொடர்புடைய கொள்நெறி அடிப்படைகளைக் கற்பார். | 2.4.1 கிரேக்க நாடக வகைகள்<br>• திறஜெடி.<br>• மகிழ்நெறி.<br>• சற்றயர். | • கிரேக்க நாடக வகைகள் எவையென்று கூறுவார்.<br>• அவற்றின் பண்புகளை எடுத்துரைப்பார். | 06 |
| | | 2.4.2 அரங்கு தொடர்பிலான அரிஸ்டோட்டிலின் கருத்து நிலை. | • அரிஸ்டோட்டிலை அறிமுகஞ் செய்வார்.<br>• அரிஸ்டோட்டிலின் கவிதையியலில் அரங்கு பற்றிக் கூறப்பட்டுள்ள அம்சங்களை முன்வைப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • கதாஸிஸ்.<br>• மூன்றன் ஒருமை.<br>• ஹமாஷியா<br>• திறஜெடி மூலக்கூறுகள்.<br>- கதைப்பின்னல்.<br>- பாத்திரம்.<br>- சிந்தனை.<br>- சொல்லாடல்.<br>- பாடல்.<br>- காட்சி. | • கதாஸிஸ் என்பதனைக் கிரேக்க திறஜெடி நாடகத்துடன் தொடர்புறுத்தி விளக்குவார்.<br>• மூன்றன் ஒருமை என்பது காலம், இடம், இயக்கம் என்பதைக் குறிப்பதாகும் என்பதை எடுத்துரைப்பார்.<br>• மூன்றன் ஒருமை என்பது காலம், இடம், இயக்கம் என்பதைக் குறிப்பதாகும் என என்பதை அறிந்திருப்பார்.<br>• காலம், இடம், இயக்கம் என்பதை ஈடிப்பஸ் நாடகத்துடன் தொடர்புறுத்திக் கருத்துரைப் பார்.<br>• திறஜெடி மூலக்கூறுகளை, விதந்துரைக்கப் பெற்ற கிரேக்க நாடகமொன்றுடன் தொடர் புறுத்தி விளக்குவார்.<br>• மேலைத்தேய அரங்கிற்கான அடித்தள மாகக் கிரேக்க அரங்கக் கட்டமைப்பு இருப்பதனை உணர்ந்திருப்பார். | |
| | | 2.4.3 கிரேக்கத்தில் திறஜெடி மற்றும் மகிழ்நெறி என்பன வளர்ந்து சென்ற முறைமை. | • கிரேக்க திறஜெடியின் வளர்ச்சிக்குப் பின்புலமாய் இருந்த விடயங்களை முன்வைத்திருப்பார்.<br>• கிரேக்க மகிழ்நெறியின் வளர்ச்சிப் போக்கை மதிப்பிட்டிருப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.5 பிரதான அரங்க மோடிகளுக்கு இடையிலான வேறுபாடுகளைப் பயின்றவர் ஆவார். | 2.5.1 யதார்த்தம் சாரா அரங்கு.<br>• கற்பித / மனோரதிய வாதம்<br>• மிகைப்பாட்டு வாதம்.<br>2.5.2 இயற்பண்புவாத/ யதார்த்த அரங்கு.<br>2.5.3. மோடிமைப் பாணி / யதார்த்த விரோத மோடி. | • பிரதான அரங்க மோடிகள் எவையென்று கூறுவார்.<br>• யதார்த்த அரங்கின் பிரதான இயல்புகளை எடுத்துரைப்பார்.<br>• யதார்த்தம் சாரா அரங்குகளை முன் வைப்பார்.<br>• யதார்த்தம் சாரா அரங்க முறைமைகளின் இயல்புகளை விவரிப்பார்.<br>• யதார்த்த, யதார்த்தம் சாரா அரங்க மோடி களுக்கு இடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுவார்.<br>• யதார்த்த, யதார்த்த விரோத அரங்கச் சித்திரிப்புக்களில் ஈடுபடுவார். | 06 |
| | 2.6 சமஸ்கிருத நாடகக் கலை தொடர்பான கொள்நெறி அடிப்படைகளைக் கற்றவர் ஆவார். | 2.6 சமஸ்கிருத நாடகங்கள் தொடர்பிலான பரதரின் பகுப்பு<br>• கட்டமைப்பு.<br>• கதைப்பின்னல்.<br>• நாடகப்பாணிகள்.<br>• அரங்கக் கட்டுமானம். (Theatre Architecture)<br>• ரசக் கோட்பாடு.<br>• சமஸ்கிருத நாடகத்தின் இலக்கணங்கள். | • சமஸ்கிருத நாடகங்கள் தொடர்பில் பரதர் முன்வைத்த விளக்கங்களை எடுத்துரைப்பார்.<br>• பரதரின் பகுப்பிற்கு அமையத் தனித்தனியே அவை பற்றிய விளக்கத்தை முன்வைப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.7 சமஸ்கிருத நாடகங்கள் பற்றிப் பயின்றவர் ஆவார். | 2.7.1 சமஸ்கிருத அரங்கின் தோற்றம். | • சமஸ்கிருத அரங்கின் தோற்றம் பற்றி விளங்கிக் கொண்டிருப்பார்.<br>• சமஸ்கிருத நாடக ஆசிரியர்கள் சமஸ்கிருத அரங்கிற்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றி அறிந்திருப்பார். | 03 |
| | | 2.7.2 சமஸ்கிருத நாடக ஆசிரியர்கள்<br>• பாசர்.<br>• காளிதாசர்.<br>• சூத்திரகர்.<br>• ஸ்ரீஹர்சர். | | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 நாடகமும் அரங்கக் கலை களுக்கும் அடித்தளமாக அமைகின்ற கொள்நெறிகள் நிலைப்பட்ட படைப்பாக்கங் களைக் கட்டி யெழுப்புவார். | 3.1 தெரிந்தெடுக்கப் பெற்ற நாடக எழுத்துருவில் உள்ள காட்சியொன்றினைப் படைப்பாக்கம் செய்வார். | 3.1 நாடக எழுத்துரு - ம. சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்'<br>• சொல்லாடல்.<br>• பாத்திரங்கள்.<br>• மோதுகை.<br>• மோடி.<br>• சொற்கள்.<br>• மேடைக் குறிப்புக்கள். | • எந்தையும் தாயும் நாடக எழுத்துருவை வாசிப்பார்.<br>• நாடகச் சொல்லாடல்களின் தன்மையை எடுத்துரைப்பார்.<br>• அந்நாடக எழுத்துருவில் உள்ள பாத்திரங் களை இனங்கண்டு அவற்றின் பண்புகளைப் பட்டியலிடுவார்.<br>• நாடக மோதுகையை இனங்காண்பார்.<br>• நாடக மோடியைக் கூறுவார்.<br>• நாடகச் சொற்களின் நேரடியான, மறை முகமான அர்த்தங்களைக் கண்டுணர்ந் திருப்பார்.<br>• மேடைக் குறிப்புக்களை நாடகமாக்கலுக்குத் துணையாகப் பயன்படுத்துவார்.<br>• நாடகக் காட்சியொன்றை நடித்துக் காட்டுவார். | 10 |
| | 3.2 நடிப்பாற்றலை விருத்தி செய்து கொள்வார். | 3.2 நடிப்பு நுட்பங்கள்<br>• போலச் செய்தல்.<br>• வகிபாகச் சித்திரிப்பு.<br>• ஊமச் சித்திரிப்பு.<br>• மறுதலையாகப் பாகமாடுதல் (Roll Reversal). | • நடிகனின் நடிப்பாற்றலை விருத்தி செய்வதற் கான நுட்பங்களை முன்வைப்பார்.<br>• போலச் செய்தலில் ஈடுபடுவார்.<br>• பல்வேறு புதிதளித்தல்களிலும் ஈடுபடுவார்.<br>• தம் கற்பனையாற்றலை வெளிப்படுத்துவார்.<br>• பல்வேறு வகிபாகங்களுக்கும் உரிய பண்புகளைத் திட்டமிடுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • அவ்வகிபாகங்களைச் சித்திரிப்பார்.<br>• ஊமச் சித்திரிப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி ஊமத்தில் சித்திரிப்பார்.<br>• நேராகவும் மறுதலையாகவும் பாகமாடுவார்.<br>• பாத்திர உணர்ச்சிகளை வெளிப்படுத்துவார். | |
| 4.0 சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார். | 4.1 நாடகத்தின் தோற்றத்தையும் அதனோடிணைந்த சமூகப் பின்புலத்தையும் ஆராய்வார். | 4.1.1 சடங்கு தொடர்பிலான எண்ணக்கரு விளக்கம். | • உள்நாட்டு, வெளிநாட்டுச் சடங்குகளை ஆராய்ந்து, சடங்கு என்பதற்கு விளக்கம் அளிப்பார். | 02 |
| | | 4.1.2 சடங்கின் சமூகவியல், மானுடவியற் பண்புகள். | • சடங்குகளில் சமூகவியல், மானுடவியற் பண்புகள் செல்வாக்குச் செலுத்தியிருப்பதை மனதிற் பதித்திருப்பார். | 03 |
| | | 4.1.3 சடங்கும் அரங்கும். | • சடங்கிற்கும் அரங்கிற்கும் இடையிலான தொடர்பை எடுத்துரைப்பார். | 04 |
| | | 4.1.4 சடங்கு அரங்காதல். | • சடங்கில் இருந்து நாடகம் உருவான தொடர் வளர்ச்சிப் போக்கை ஆராய்ந்து விளக்கம் அளிப்பார். | 03 |
| | | 4.1.5 சடங்கரங்கை நோக்கிய நவீன அரங்கின் தேடல்கள். | • நவீன அரங்க முயற்சிகளில் சடங்கு தொடர்பிற் செலுத்தப்படும் கரிசனைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைத்திருப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 4.2 | 4.2 தமிழகத்தில் அரங் கினது வளர்ச்சிப் போக்கையும் அதற்குப் பின்புலமாய் அமைந்த காரணி களையும் ஆராய்ந்து பார்ப்பார். | 4.2.1 தமிழக அரங்கினது சமூக வளர்ச்சிப் படிநிலைகளின் செல்வாக்கு. | • தமிழக அரங்கிற்கும் சமூக வளர்ச்சி நிலை களுக்கும் இடையிலான தொடர்பைக் கண்டறிந்திருப்பார். | 02 |
| | | 4.2.2 ஆற்றுகையின் நோக்கம் (கி.பி 1800 இற்கு முன்னும் அதற்குப் பிறகும் ஐரோப் பியர் வருகைக்கு முன்பும் பின்பும்). | • கி.பி 1800 இற்கு முன்னிருந்து சமகாலம் வரை, தமிழகத்தில் அரங்க ஆற்றுகைகள் நிகழ்த்தப் பெற்றமைக்கான காரணங்களை ஒப்பிட்டு நோக்குவார். | 02 |
| | | 4.2.3 ஆற்றுகை முறைமைகள் (கி.பி 1800 இற்கு முன்பும் அதன் பிறகும் ஐரோப்பியர் வருகைக்கு முன்பும் பின்பும்). | • காலத்திற்குக் காலம் தமிழக அரங்காற்றுகை முறைமையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொகுத்துரைப்பார். | 02 |
| | | 4.2.4 ஆற்றுகைக் குறிகளின் தாக்கவன்மை. (கி.பி 1800 இற்கு முன்பும் அதன் பிறகும், ஐரோப்பியர் வருகைக்கு முன்பும் பின்பும்). | • தமிழக அரங்கினது ஆற்றுகைக் குறிகளின் தாக்கவன்மை குறித்துக் கருத்துரைப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | 4.2.5 கலைஞர்களுக்கான தளம் (கி.பி 1800 இற்கு முன்னும் அதன் பிறகும், ஐரோப்பியர் வருகைக்கு முன்பும் பின்பும்). | • தமிழக அரங்க வரலாற்றில் கலைஞர்கள் பெற்றிருந்த இடம் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைத்திருப்பார். | 02 |
| | 4.3 ஈழத்துச் சுதேச நாட்டார் அரங்கு களைக் கற்றுக் கொண்டவர் ஆவார். | 4.3 சுதேச நாட்டார் அரங்கு களை ஆற்றுகை நிலையில் ஆராய்தல்.<br><br>4.3.1 • வடமோடி (மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்).<br>• தென்மோடி (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு).<br>• வடபாங்கு, தென்பாங்கு (மன்னார்).<br>என்பவற்றின் எடுத்துரைப்பு முறைமை, பாத்திரப் படைப்பு, அரங்க வெளிப் பயன்பாடு. | • நாட்டார் அரங்கு இன்றும் நின்று நிலைப் பதற்கான காரணங்களை முன்வைப்பார்.<br>• அவற்றின் அளிக்கை முறையை எடுத்துரைப்பார்.<br>• நடிப்பு முறை, பாத்திர உருவாக்கப் படிமுறைகள் என்பவற்றை விவரிப்பார்.<br>• கூத்தாற்றுகை பார்ப்போரின் கற்பனைக்கு இடமளிக்கிறதா? என்பது பற்றிக் கருத்துரைப்பார்.<br>• பார்ப்போருடனான ஊடாட்டத்திற்குக் கூத்தின் ஆற்றுகை வெளி உதவுவதை உணர்ந்திருப்பார். | 07 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | 4.3.2 • சிந்துநடைக் கூத்து<br>• கோவலன் கூத்து<br>• காமன் கூத்து<br>என்பவற்றின் எடுத்துரைப்பு முறைமை, பாத்திரங்கள், அரங்கவெளி, மேலோங்கி நிற்கும் பண்பு, ஆற்றுகைப் பண்புகள், பார்ப்போர். | | 06 |
| | | 4.3.3 கூத்தின் சமூக அழகியல். | • கூத்துக்களின் அழகியற் பண்புகளை நயப்பார். | 03 |
| | | 4.3.4 விதந்துரைக்கப்பெறும் கூத்துக்களிலிருந்து ஆட்டங்களையும் பாடல் களையும் பயிலுதல். | • கூத்துப் பாடல்களைப் பாடுவார்.<br>• நாட்டார் அரங்கின் ஆடல்களை ஆடுவார். | 10 |
| | 4.4 இலங்கைத் தமிழ் அரங்கின் வளர்ச்சி யில் இசை நாடகம் பெறும் இடத்தை ஆராய்ந்தறிவார். | 4.4.1 இசை நாடகம் - பாடலே அரங்காதல். | • பாடல் அரங்காகும் போது அது தனக்குள் உள்வாங்கிக் கொள்ளும் அம்சங்களை முன்வைப்பார். | 06 |
| | | 4.4.2 விதந்துரைக்கப்பெறும் இசை நாடகப் பாடல் களைக் கற்றல். | • இசை நாடகக் கட்டமைப்பை எடுத்துரைப்பார்.<br>• இசை நாடகப் பாடல்களைப் பாடிக் காட்டுவார்.<br>• இசை நாடகப் பாடல்களைப் பாடி நடிப்பார். | 09 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார். | 5.1 விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருக்களை நயப்பார். | 5.1 நாடக எழுத்துரு நயப்பு<br>5.1.1 சோ∴போகிளிசின் "ஈடிப்பஸ்.<br>5.1.2 மஹாகவி து. உருத்திரமூர்த்தியின் 'கோடை'.<br>5.1.3 சி. மௌனகுருவின் 'இராவணேசன்' (கூத்தாகவும் நவீன நாடகமாகவும்). | • நாடக எழுத்துருக்களை வாசித்தறிந்திருப்பார்.<br>• அந்நாடகங்கள் ஊடாக வெளிப்படும் நயப்பிற்குரிய அம்சங்களை முன்வைப்பார்.<br>• எழுத்துருக்களின் பகுதியை நாடக வாசிப்புச் செய்வார்.<br>• நாடக வாசிப்பின் போது எழும் உணர்ச்சிகளைப் பரிமாறுவார்.<br>• நாடகக் கதையைச் சுவைபட விவரிப்பார்.<br>• வாசிப்பின் வழியாகக் கண்டு கொண்ட மோதுகை குறித்து விளக்கம் தருவார்.<br>• நாடகப் பாத்திரச் செயலியக்கங்களைச் செய்து பார்த்திருப்பார்.<br>• சொற்கள் மற்றும் சொல்லாடலின் வன்மையை உணர்ந்திருப்பார். | 10<br>10<br>10 |
| | 5.2 விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களைப் பகுப்பாய்வு செய்வார். | 5.2.1 எழுத்துரு மூலக்கூறுகளை அறிதல்<br>- ஈடிப்பஸ்.<br>- கோடை.<br>- இராவணேசன். | • விதந்துரைக்கப் பெற்றுள்ள நாடக எழுத்துருக்கள் வழியாக மேற்கிளம்பும், நாடக மூலக்கூறுகளின் தன்மையை விவரிப்பார்.<br>• அம் மூலக்கூறுகள் நாடக முழுமைக்கு வழங்கியுள்ள பங்களிப்பை உணர்ந்திருப்பார். | 09 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | 5.2.2 நாடக எழுத்துரு மூலக் கூறுகளின் பகுப்பாய்வு<br>- ஈடிப்பஸ்.<br>- கோடை.<br>- இராவணேசன். | • கரு, கதைப்பின்னல், கட்டமைப்பு, மோதுகை, பாத்திரங்கள், சொல்லாடல், பாத்திர உணர்ச்சிகள், எதிர்பார்ப்பு நிலை, பாத்திரச் செயல்கள், காண்பியங்கள், மோடி, கதி போன்றவை எழுத்துருவிற்கு ஊடாக மேற்கிளம்பும் விதத்தைப் பகுப்பாய்வு செய்திருப்பார்.<br>• பார்ப்போர் நிலையில் எழுத்துரு ஏற்படுத்தும் தாக்கத்தை உணர்ந்திருப்பார்.<br>• நாடகத்தின் தோற்றம் கட்புல, செவிப்புல மற்றும் உணர்ச்சி ரீதியாக ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்போர் நிலையில் பெற்றிருப்பார். | 12 |
| | | 5.2.3 எழுத்துருவின் சமூக பண்பாட்டுப் பின்புலங்கள் பற்றிய மதிப்பீடு<br>- ஈடிப்பஸ்.<br>- கோடை.<br>- இராவணேசன். | • எழுத்துரு எழுதப்பெற்ற மூலம், களம் மற்றும் கலாசாரப் பின்னணியை எடுத்துரைப்பார்.<br>• எழுத்துருவின் மொழிநடை, மோதுகை, செயலியக்கம், மோடி, பாத்திரங்கள், சொல்லாடல், கதைப்பின்னல், கரு, உணர்ச்சிகள் போன்ற அம்சங்களில் சமூக பண்பாட்டுப் பின்புலத்தின் செல்வாக்கை இனங்கண்டிருப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.3 நாடக எழுத்துருவானது ஆற்றுகையாக மாற்றப் பெற்றுள்ள விதத்தை அறிந்து கொள்வார். | 5.3 நாடக எழுத்துருவின் காட்சித் துண்டம் ஒன்றை ஆற்றுகை செய்தல்.<br><br>5.3.1 ஈடிப்பஸ்.<br>5.3.2 கோடை.<br>5.3.3 இராவணேசன். | • கருவானது ஆற்றுகையில் இழையோடியுள்ள விதத்தை உரைத்திருப்பார்.<br>• சொற்கள், காட்சி வடிவம் பெறும் விதத்தை நயந்திருப்பார்.<br><br>• எழுத்துருவில் மேலோங்கி நிற்கும் உணர்ச்சி, ஆற்றுகையில் கையாளப் பெற்றுள்ள முறையினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• எழுத்துருவின் தொனியை வெளிக்கொணர்வதில் துணைக்கலைகளின் பங்களிப்பை விவரிப்பார். | 15 |
| | 5.4 நாடகத்தில் பார்ப்போரது பதிற்குறிகள் பெறும் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுவார். | 5.4 பார்ப்போரது பதிற்குறிகளின் முக்கியத்துவம். | • பார்ப்போரிடம் இருந்து என்னென்ன வகையான பதிற்குறிகள் கிடைக்கப் பெறலாம் என்பதை எடுத்துரைப்பார்<br>• பார்ப்போரின் பதிற்குறிகள் ஆற்றுகையின் போக்கில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பிடுவார்.<br>• பதிற்குறிகள் அகவயமாகவும் புறவயமாகவும் வரலாம் என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்.<br>• பார்ப்போருக்கிடையில் பதிற்குறிகள் ஏற்படுத்தும் தாக்கம் ஆற்றுகையைப் பாதிக்கும் விதத்தை எடுத்துக் கூறுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 6.0 நாடக அரங்கக் கலைகளுடன் தொடர்புடைய கொள்நெறிகளை அடிப்படையாகக் கொண்டு, படைப் பாக்கச் செயற் பாடுகளை விருத்தி செய்வார். | 6.1 அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, நாடகப் பொருத்தமான சூழமைவுகளைப் படைப்பாக்கம் செய்பவர் ஆவார். | 6.1 படைப்பாக்கத் திறன் விருத்தி. | • தாம் விருத்தி செய்ய வேண்டிய படைப்பாக்கத் திறன்களை இனங்கண்டிருப்பார்.<br>• திறன்களை விருத்தி செய்வதற்கான பயிற்சி களைச் செய்திருப்பார்.<br>• பயிற்சிமுறைகளை விவரித்திருப்பார்.<br>• ஆர்வமூட்டத்தக்க பாத்திரங்களை உருவாக்கியிருப்பார்.<br>• பாத்திரங்களுக்கு ஏற்ற சொல்லாடல்களை ஆக்கியிருப்பார்.<br>• எதிர்பார்ப்பைத் தூண்டும் மோதுகையை அமைத்திருப்பார். | 15 |
| 7.0 நாடக அரங்கக் கலைகளுடன் தொர்புடைய துணைக்கலை களைப் பயில்வார். | 7.1 துணைக்கலைகள் தொடர்பான பிரயோகக் கற்றலில் ஈடுபடுவார். | 7.1 எழுத்துருவிற்கு அமைவாகத் துணைக்கலைகளைக் கையாளுதல். | • நாடகாசிரியர் தரும் விவரக்குறிப்பில் இருந்து துணைக்கலைகள் பற்றிய தகவல் களைப் பெற்றிருப்பார்.<br>• பாடல்களின் விளக்கங்கள். காட்சிப் படிமங்கள், உணர்ச்சிகள், கரு, செயலியக்கம் என்பவற் றுக்கு அமைவாகத் துணைக்கலைகளைப் பயன்படுத்தும் விதத்தைக் கூறுவார்.<br>• காலம், களம், பாத்திரப் பண்புகள் மோடி என்பவற்றுக்கு ஊடாகத் துணைக்கலை களைத் திட்டமிட்டிருப்பார். | 13 |

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கான தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு

நாடகமும் அரங்கியலும் - தரம் 12

| தேர்ச்சி | தவணை 1 (ஏப்ரல் - ஜீலை) | | தவணை 2 (செப்ரெம்பர் - நவம்பர்) | | தவணை 3 (ஜனவரி – மர்ச்) | | மொத்தப் பாடவேளைகளின் எண்ணிக் |
|---|---|---|---|---|---|---|---|
| | தேர்ச்சி மட்டம் | பாடவேளைகள் | தேர்ச்சி மட்டம் | பாடவேளைகள் | தேர்ச்சி மட்டம் | பாடவேளைகள் | |
| 1.0 | 1.1<br>1.2 | 04<br>10 | 1.3 | 09 | 1.4 | 05 | 28 |
| 2.0 | 2.1<br>2.2<br>2.3 | 06<br>06<br>14 | 2.4<br>2.6 | 22<br>10 | 2.5<br>2.7 | 06<br>08 | 72 |
| 3.0 | 3.2 | 15 | 3.1 | 10 | - | - | 25 |
| 4.0 | 4.1<br>4.2 | 14<br>10 | 4.3 | 26 | 4.4 | 15 | 65 |
| 5.0 | 5.1.1<br>5.2.1.1<br>5.2.2.1<br>5.2.3.1<br>5.3.1<br>5.4 | 10<br>03<br>04<br>04<br>05<br>04 | 5.1.2<br>5.2.1.2<br>5.2.2.2<br>5.2.3.2<br>5.3.2 | 10<br>03<br>04<br>04<br>05 | 5.1.3<br>5.2.1.3<br>5.2.2.3<br>5.2.3.3<br>5.3.3 | 10<br>03<br>04<br>04<br>05 | 82 |
| 6.0 | - | - | - | - | 6.1 | 15 | 15 |
| 7.0 | - | - | - | - | 7.1 | 13 | 13 |
| | - | 109 | - | 103 | | 88 | 300 |

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 1.0 | : | 'கலை' என்பதனை விளங்கிக் கொண்டு நாடக அரங்கக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 1.1 | : | கலை என்பதற்கு வழங்கப் பெற்றுள்ள விளக்கங்களைக் கூறுவார். |
| **செயற்பாடு** | 1.1 | : | 'கலை' பற்றிய கீழைத்தேய, மேலைத்தேயச் சிந்தனைகளைக் கற்போம். |
| **பாடவேளை** | | : | 04 |
| **கற்றற் பேறுகள்** | | : | |

- கலை என்றால் என்ன என்பதற்கு விளக்கமளிப்பார்.
- கீழைத்தேயத்தில் 'கலை' என்பதற்கு வழங்கப் பெற்றுள்ள வரை விலக்கணங்களைக் கூறுவார்.
- 'கலை' என்பதற்கான மேலைத்தேய கருத்துக்களை எடுத்துரைப்பார்.
- மேலைத்தேயக் கலைக் கோட்பாளர்களின் பெயர்களை முன்வைப்பார்.
- கீழைத்தேய, மேலைத்தேயக் கலைக் கோட்பாட்டாளர்களுக்கு இடையேயான ஒருமித்ததும் வேறுபட்டதுமான இயல்புகளைக் கண்டுணர்ந்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- 'கலை' தொடர்பான கட்டுரைகள்.
- டிமைன் தாள்கள்.
- நிற அட்டைகள்.
- மாக்கர்.

**அறிமுகம்:**

- 'கலை' என்றால் என்ன என்பதற்கான கீழைத்தேய, மேலைத்தேயக் கருத்துக்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுதலே இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- நூல் உசாவல்.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

**செயற்பாடு – 1**

- மாணவர்கள் அனைவருக்கும் தனியே ஒவ்வொரு நிற அட்டைகளை வழங்குங்கள்.
- 'கலை' என்றால் என்ன? என்ற வினாவினை மாணவர்களிடத்தே எழுப்பி, ஒவ்வொரு மாணவரும் கலை பற்றித் தாம் அறிந்து வைத்துள்ள விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையினை நிற அட்டையில் எழுத வழிப்படுத்துங்கள்.
- அந் நிற அட்டைகளைக் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள்.
- கலை பற்றிய மாணவர்களது கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 'கலை' என்ற எண்ணக்கரு குறித்துக் கலந்துரையாடுங்கள்.
  - 'கலை' என்ற சொல் 'Arts', 'Technic' எனும் இலத்தீன், கிரேக்க வேர்ச்சொல்லில்

இருந்து உருவானது. இச்சொற்கள் 'ஆற்றல்' அன்றேல் 'திறன்' எனும் பொருளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

- சமஸ்கிருதத்தில் 'கலை' என்ற சொல்லுக்கான மூலச்சொல் 'கலா' என்பதாகும். 'கலா' என்பது வளர்தல், விரிதல், பெருகுதல் எனும் அர்த்தங்களைத் தருவதாக அமைகின்றது.

• பின்வரும் விடயங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுமாறு கலந்துரையாடுங்கள்.

- 'கலை' என்பது பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல். இலக்கிய வழக்கிலும் சரி, உலக வழக்கிலும் சரி 'கலை' என்ற சொல்லிற்குப் பல்வேறு வகையில் பொருள் விளக்கமளிப்பார்.
- 'கலை' என்பதற்கான வரைவிலக்கணங்கள், அறிஞர்களது சிந்தனைக்கேற்பவும் அவர்கள் வாழ்ந்த காலத்து மக்களின் வாழ்வியல் முறைமைக்கேற்பவும், பண்பாட்டிற்கேற்பவும் நாகரிக வளர்ச்சிக்கேற்பவும் பல்வேறு கோணங்களில் நோக்கப்பெறுகின்றன. அவை:
  - 'கற்கப்படுவன அனைத்தும் கலையே'
  - 'கலை என்பது ஒன்றைச் செய்வதில் அன்றேல் உருவாக்குவதில் உள்ள திறமை'
  - 'கலை ஒரு புனிதமான பொய்'
  - 'கலை என்பது உணர்வின் வெளிப்பாடு'
  - 'ஒருவரது திறமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதே கலை'
  - 'உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ள அழகுணர்வுகளை அகழ்ந்து எடுத்து வெளிப் படுத்துவதே கலை'
  - 'கலைஞனுக்கும் சுவைஞனுக்குமான தொடர்பாடல் ஊடகமே கலை'

  கலை என்றால் என்ன? என்பதற்கு இவ்வாறு பலர் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ள போதிலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாக ஹொனிக்மனின் கருத்தினைக் குறிப்பிடலாம்.

  > 'கலை என்பது ஓர் உணர்வினை அன்றேல் பெறுமானத்தினை
  > வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் மனிதத்திறன்
  > தொழிற்படும் முறைமை' ஆகும்.

• கலை என்பது ஒரு செய்முறை (Process). கலையின் வெளிப்படுகை முறைமைக்கும், சாதனத்திற்குமேற்பக் கலை பல்வேறு வகையில் வகைப்படுத்தப் பெறுகிறது. அவை:

1. வரை கலைகள் (Graphic Arts) - சித்திரம், ஓவியம்.
2. குழைமக் கலைகள் (Plastic Arts) - சிற்பம், மட்பாண்டம்.
3. வாய்ச்சொற் கலைகள் (Verbal Arts) - பாடல்.
4. ஆற்றுகைக் கலைகள் (Performing Arts) - நடனம், நாடகம், இசை, சினிமா.

**செயற்பாடு – 2**

- மாணவர்களை இரு குழுக்களாக்குங்கள்.

  குழு - 1 (கலை பற்றிய கீழைத்தேயக் கோட்பாட்டாளர், கோட்பாடுகள்).

  குழு - 2 (கலை பற்றிய மேலைத்தேயக் கோட்பாட்டாளர், கோட்பாடுகள்).

- மேற்படி விடயப் பரப்பினைக் குழுக்களிற்கு வழங்கி, அதுபற்றி முன்னளிக்கை செய்ய வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயம் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
  - கலை பற்றிக் காலத்துக்குக் காலம் கீழைத்தேயத்திலும் சரி, மேலைத்தேயத்திலும் சரி கோட்பாட்டாளர்கள் பலர் பல்வேறு வகைப்பட்ட கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர். அவற்றுட் சில வருமாறு:

**கீழைத்தேயக் கலைக் கோட்பாடுகள்**

- ''மனித உறவுகளையும், வாழ்க்கைக் குறிக்கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்து வதற்காகச் சமுதாயத்திடம் காணப்படும் நுட்பமான கவர்ச்சியுள்ள ஆற்றலுடைய கருவியே கலை''
  - இராமதாஸ் முகர்ஜி
- ''மனிதனது உள்ளத்தைத் தன்வசமாக்கி, நிரப்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படுத்தும் ஆற்றலே கலை'' - கலாநிதி மா. இராசமாணிக்கனார்
- ''கலை என்பது கலைஞனது அனுபவத்தினை அவன் வெளியிடும் வெளிப்பாடு மட்டுமன்றி அதன் வெளிப்பாட்டினையே கலைஞர் உணர்வு நிலையில் துய்க்கின்ற அனுபவமாகும்''
  - கலாநிதி தொ. பொ. மீனாட்சி சுந்தரனார்
- ''கலையும் இயற்கையும் அழகு நிறைந்தனவாக இருந்தாலும், கலையானது இலக்கியத்தின் ஜீவசிருஷ்டி ததும்பும் இயற்கை வடிவங்களை விஞ்சி விடுவதோடு, அதைவிட அதிகமான ஒழுங்குள்ளதாகவும், சுருக்கமான தாகவும், தத்ரூபமானதாகவும், சர்வவியாபகமானதாகவும் அமைந்துள்ளது.'' - மாசேதுங்
- ''இந்தியக் கலையானது பழிபாவமும், தன்னலமும் நிறைந்த உலகை விட்டுத் தம்மை அப்பால் அழைத்துச் செல்லவல்லது. இந்தியக் கலை அளிக்கும் அழகு வெறும் இயற்கையானதும் அன்று. செயற்கையானதும் அன்று. ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டுள்ளது. இக்கலை மனித இறைவழி முறை அனுபவத்தைக் காட்டுகிறது. கலைஞனானவர் கலைகளைப் படைக்கும் முன் அதன் பொருள் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவனது சிந்தனைகள் சிதறக்கூடாது. வெறும் கற்பனை உலகில் இருந்து கலையைப் படைத்துவிட முடியாது. படைப்புப் பொருள்களின் தன்மை மனதில் நிலைநிறுத்தப்படல் வேண்டும். உள்மனதில் பதிந்த படமே கலை. கலைஞனும் கலையில் ஒன்றிக்க வேண்டும்.'' - ரவீந்திரநாத் தாகூர்
- ''அழகைக் கண்டுபிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதும் கலை'' - அரவிந்தர்
- ''இந்தியக் கலையானது இந்தியாவை மட்டும் உள்ளடக்காது மக்களது மனிதப் பிரபஞ்சத்தை உள்ளடக்குகின்றது. '' - கலாயோகி ஆனந்தக் குமாரசாமி

**மேலைத்தேயக் கலைக் கோட்பாடுகள்**

- "தூய உள்ளுணர்வின் வெளிப்பட்ட கலை" - குரோசே (Croce)
- "கலைகளுக்கு அடிப்படை போலச் செய்தல்" - அரிஸ்ரோட்டில்
- "உண்மை நிலையினைப் புலனுணர்வுக்கு ஏற்ற வகையில் அளிப்பதே கலை" - ஹெகல் (Hegel)
- "கலை என்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடு" - R. G. கொலிுட்
- "புலக்காட்சிப் பொருளே கலை" - பியேட்ஸ்லி
- "தான் பெறுகின்ற அனுபவத்தைப் பிறரும் அனுபவிக்க வைப்பதே கலை" - எரிக் நி!ட்டன்
- "முனைப்புப் பெற்ற உணர்ச்சிகளின் தன்னிச்சையான வெளிப்பாடு" - வில்லியம் வேட்ஸ்வேத்
- "கலை மெய்ப்பொருளின் முற்றத்திலிருந்து துய்ப்போரைக் கருவறைக்கு இட்டுச் சென்று உலகியலைக் கடந்து நிற்கும் காட்சியினைப் புலப்படுத்தி நிற்கும்" - கோல்ரிட்சு செல்லிக்கு
- "ஒருவன் தான் அனுபவித்த உணர்ச்சிகளைச் சில வெளிக்குறிப்புக்கள் மூலம் சிலருக்கு வெளியிட்டு அவர்கள் மூலம் உணர்ச்சிகள் பரவி அவர்களும் அவனைப்போல் அனுபவித்தால் அது கலையாகும்" - டால்ஸ்டாய்
- மேற்படி கீழைத்தேய, மேலைத்தேயக் கோட்பாட்டாளர்களின் கலை குறித்த கோட்பாடுகளை நோக்கின், அக்கோட்பாடுகள் ஒவ்வொன்றும் அவர்களது சமூகப் பின்புலங்களின் அடிப்படையில் உருவானாலும் கலை குறித்த கருத்துக்கள் அடிப்படையில் ஒருமித்ததாகவே காணப்படுகின்றன. அதாவது:

  கலை என்பது:

  - மனித உணர்வுகளுடன் தொடர்புடையது.
  - அனுபவத்திலிருந்து முகிழ்ப்பது.
  - மனிதத்திறனுடன் தொடர்புடையது.
  - தொடர்பாடல் வன்மை மிக்கது.
  - அழகியல் இன்பம் பயப்பது.

- இந்தியக் கலையின் உட்பொருளும், தத்துவமுமாக அமைந்தது சமயமாகும். ஆன்ம ஞானத்தையும் இறைபக்தியையும் வளர்ப்பதே இந்தியக் கலைஞர்களின் நோக்கமாகக் காணப்பட, மேலைத்தேயக் கலைகளின் தலையாய பண்பாக யதார்த்தமே காணப்பட்டது. அதாவது, இயற்கைப் பொருள்கள் நம் கண்ணுக்கு எவ்வாறு தோற்றம் தருகின்றனவோ அவ்வாறே உள்ளத்துள்ளவாறு அவற்றைப் புனைந்தெழுதல்தான் மேலைத்தேயக் கலைகளின் நோக்கமாகும்.

**கணிப்பீடு:**

- கலை என்றால் என்ன என்பதற்கான விளக்கங்களை முன்வைக்குக.
- கீழைத்தேயக் கலைக்கோட்பாடுகள் சிலவற்றைக் கூறுக.
- கலை என்பதற்கு மேலைத்தேயக் கோட்பாட்டாளர்கள் வழங்கும் விளக்கத்திற்கு அடிநாதமாக அமைகிற விடயங்களைக் கூறுக.
- மேலைத்தேய, கீழைத்தேயக் கலைக் கோட்பாடுகளை அவற்றில் உட்பொருள் சார்ந்து ஒப்பு நோக்குக.
- கீழைத்தேய, மேலைத்தேயக் கலைக்கோட்பாட்டாளர்களது படங்களைக் கோவைப்படுத்துக.

**உசாத்துணைகள்**

- அழகியல் - முனைவர் சோ. கிருஸ்ணராசா.
- தொழிநுட்பக் கலைகள் (அறிமுக விளக்கம்) - எஸ். மோசேஸ்.
- தென்னிந்திய சிற்ப வடிவங்கள் - க. நவரத்தினம்.
- சிவானந்த நடனம் - டாக்டர் ஆனந்த குமாரசுவாமி
- இலங்கையிற் கலை வளர்ச்சி - க. நவரத்தினம்.
- கலையும் ஓவியமும் - கலாநிதி சபா. ஜெயராசா.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 1.0 | : | 'கலை' என்பதனை விளங்கிக் கொண்டு நாடக அரங்கக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 1.2 | : | நாடக அரங்கக் கலையை ஆற்றுகைக் கலைகளுள் ஒன்றாக இனங் காண்பார். |
| **செயற்பாடு** | 1.2.1 | : | ஆற்றுகைக் கலைகளை இனங்காண்போம். |
| | 1.2.2 | : | நாடகக் கலையை ஏனைய ஆற்றுகைக் கலைகளில் இருந்து வேறுபடுத்துவோம். |
| **பாடவேளை** | | : | 07 |

**கற்றற் பேறுகள்:**

- ஆற்றுகைக் கலைகள் என்றால் என்ன என்பதை அறிந்து கூறுவார்.
- ஆற்றுகைக் கலைகளைப் பட்டியற்படுத்துவார்.
- ஆற்றுகைக் கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வார்.
- ஆற்றுகைக் கலைகள் ஆற்றப்பெறும் விதத்தை எடுத்துரைப்பார்.
- ஆற்றுகைக் கலைகள் ஒவ்வொன்றினதும் தனித்துவமான பண்புகளை விளக்குவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- ஆற்றுகைக் கலைகள் தொடர்பான ஒளிப்படங்கள்.
- இறுவட்டுக்கள்.
- சஞ்சிகைகள்.
- நூல்கள்.

**அறிமுகம்:**

- ஆற்றுகைக் கலைகள் எனக் கருதப்படும் இசை, நடனம், நாடகம் என்பன தொடர்பான விடயங்களைத் தேடிக்கற்றலே இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- முன்னளிக்கை.
- கருத்துரை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- ஆற்றுகைக் கலைகள் அறிமுகம்
- பார்ப்போரை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் முன்னிலையில் ஆற்றுகை செய்யப்படும் கலைகள் ஆற்றுகைக் கலைகள் எனப்படும்.
- ஆற்றுகைக் கலையில் ஆற்றுவோர், ஆற்றுகை (விடயப்பொருள், அரங்கவெளி) பார்ப்போர் என்கிற மூன்று விடயங்கள் முக்கியமாகின்றன.
- பார்ப்போர் பிரதானமாக இடம்பெறுவதன் காரணமாகப் பார்ப்போரின் துலங்கல்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன.
- ஆகவே, பார்ப்போர் முன்னிலையில் ஆற்றுகை செய்யப்படும் இசை, நடனம், நாடகம் என்பன

ஆற்றுகைக் கலைகள் எனப்படுகின்றன.

• பார்ப்போர் இல்லாது ஆற்றுகைக் கலைகள் இல்லை.

• ஆற்றுவோர் இன்றி ஆற்றுகைக் கலைகள் இல்லை.

• பாடல்கள், இசை ஒலிகள், அசைவுகள், நடிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கலைஞர்களின் ஆளுமைகளை ஒன்றாக இணைத்து அரங்க வெளியில் ஆற்றுகை செய்யும் கலை இதுவாகும்.

• பார்ப்போரின் நேரடித் துலங்கலுக்கு உட்படுவதால் அதாவது, பதிற் குறிகள் (Response) உடனுக்குடன் வெளிப்படுவதால் (Action - Reaction - Response) இதனை Re - active எனவும் அழைப்பர்.

• இசை , நடனம், நாடகம் மட்டுமல்லாது வில்லுப்பாட்டு கதாகாலேட்சேபம், கதாப்பிரசங்கம் போன்றனவும் ஆற்றுகைக் கலைகளே.

**இசை, இசை நாடகம், ஒப்பேறா**

**இசை**

- இசை நிகழ்ச்சி உயிரோட்டமான ஒரு கலையாகும்.
- இசை நிகழ்ச்சியில் பாடலுடன் இசைவாத்தியங்களும் இணைத்து ஆற்றுகை செய்யப்படும்.
- தனியே இசைவாத்தியங்களின் ஒலிப்பாகவும் நிகழ்ச்சிகள் காணப்படும். (பல்லியம், நாதசுரக் கச்சேரி).
- தனியாள் பாடுவதாகவும் குழுவாகவும் இசைக்கச்சேரிகள் ஒழுங்குபடுத்தப்படும். (தனிக்கச்சேரி, இசைக்குழு).
- இந் நிகழ்வுகளுக்குள் காண்பியப் பங்களிப்பும் முக்கியத்துவம் பெற்று விளங்கும். (காட்சி, ஒளிவிதானிப்பு).
- நிகழ்த்துவோர் சில சமயங்களில் அசைவுகளை மேற்கொள்வதும் நடனமாடுவதும் உண்டு.
- நாடகத்திற்காக இசை பல்வேறு வகைகளில் பயன்படுகிறது.
    - பாடல்களாக (தனி, கூட்டு).
    - பின்னணி இசையாக.
    - குறியீட்டு மற்றும் மனநிலை இசையாக.
    - அசைவுகளிற்கானதாக.

**இசை நாடகம்**

- பாடலே அரங்காகக் காணப்படுவது இசை நாடகம் ஆகும்.
- பாடலுக்கான பொருளை விளங்கப்படுத்த மெய்யசைவுகள் பயன்படும்.
- பல்வேறு கதைகள் கொண்ட இசை நாடகங்கள் காணப்பெறுகின்றன. (புராணக் கதைகள், இதிகாசக் கதைகள், தெய்வீகக் கதைகள், நாட்டார் கதைகள்).
- நடிகர் இசையில் தேர்ந்தவராகக் காணப்படுவார்.

• இலங்கையில் இசை நாடகம் தமிழரிடையே ஸ்பெசல் நாடகம் எனவும் சிங்களவரிடையே நூர்த்தி நாடகமெனவும் அழைக்கப்படுகிறது.

• இசை நாடகம் கொட்டகைகளில் நிகழ்த்தப்படுவதால் கொட்டகைக் கூத்துக்கள் எனவும் அழைக்கப்படுவதுண்டு. சிங்களத்தில் இவை டவர் ஹோலில் ஆடப்பெற்றமையால் டவர் ஹோல் நாடக மரபு என அழைக்கப்படுகிறது.

• இசை நாடகங்களைப் பழக்குபவர்கள் அண்ணாவிமார் என அழைக்கப்பட்டனர்.(கிருஸ்ணாழ்வார் இணுவில் நாகலிங்கம்)

• சிறந்த நடிகர்கள் இருந்து வந்துள்ளனர். (நடிகமணி வி. வி. வைரமுத்து, அரியாலை செல்வம், செல்வரட்ணம்)

• இசை நாடகங்களில் பிரதான வாத்தியமாக ஹார்மோனியம் பயன்படுத்தப்பட்டது.

**ஒப்பேறா**

• 16 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய இசை நாடக வடிவம் இதுவாகும்.

• இசையைப் பிரதானமாகக் கொண்டது. வாத்தியக்கருவி இசையும் பிரதானம்.

• காவியத் தன்மையான மொழி பயன்படுத்தப்பட்டது.

• சீனாவிலும் Opera நாடகங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவை Peking Opera/ Beijing Opera என அழைக்கப்பட்டன.

• பாடலும் இசையும் இங்கு பிரதானப்படும். நடிகர் எந்த வேளையிலும் பாடவும் நடிக்கவும் தயாராக இருப்பார். பார்ப்போர் சிலவேளைகளில் தங்களுக்குப் பிடித்தமான பகுதிகளைத் திரும்பவும் செய்யுமாறு (Once more) கேட்கப்படும் வேளை மீண்டும் மீண்டும் செய்யவும் தயாராக இருப்பார்.

• ஆடைகள் பாத்திரத்திற்கு ஏற்றவாறு திட்டமிடப்பட்டிருக்கும். வர்ணங்கள் பார்ப்போருக்குப் பாத்திரங்களை இனங்கண்டு கொள்ளத் துணைபுரியும்.

• குறியீட்டுப் பாங்கான கைப்பொருள்களும் கமராவும் பயன்படுத்தப்படும்.

• இந்த வகை நாடகங்களிற்குச் செலவு அதிகமாகக் காணப்படும்.

## நடனம், நடன நாடகம், பலே

**நடனம்.**

• இசையைப் போன்று நடனமும் ஓர் ஆற்றுகைக் கலைவடிவமாகும்.

• நடனக் கலைஞர்களால் நிகழ்த்திக் காட்டப்படும்.

• நடனங்கள் பல்வேறு வகைப்படும். (பரத நாட்டியம், கதகளி.)

• நடன அளிக்கை என்பது உடல்வழி, உணர்ச்சிவழி, காண்பியவழிச் சித்திரிப்புக்களாகச் சித்திரிக்கப்படுவது.

• குரல்வழிச் சித்திரிப்பு பக்கப்பாட்டுக்காரரால் வெளிப்படுத்தப்படும்.

• இங்கு வாத்தியக் கருவிகள் பிரதான இடம் வகிக்கும்.

• நடனத்தின் போது அரங்க வெளிக்கான காட்சி விதானிப்பு ஒளி!ட்டுகை என்பன செவ்வனே பயன்படும்.

• நாடகத்திற்கு நடனம் பல்வேறு வகையில் பயன்படுகிறது. அசைவுகள்(Movements) , நடன அசைவியக்க வடிவாக்கம் (Choreography).

**நடன நாடகம்.**

• நடனங்களை அடிப்படையாகக் கொண்டு நடன நாடகங்கள் (Dance Drama) உருவாக்கப் படுகின்றன.

• நடன வகைகளில் நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பதில் நாட்டியமென்பது கதை தழுவிய நாடகம் என அழைக்கப்பெறும். இதுவே நடன நாடகம் என அழைக்கப்படுவதுண்டு. இதனை நாட்டிய நாடகம் என்பர்.

• நாட்டியமென்பது நாடகத்தைக் குறிப்பது. சிங்களத்தில் நாட்டியமென்பது நாடகத்தையே குறிக்கிறது.

• நடன நாடகத்தில் நடிகர்கள் உடல், உணர்ச்சி, காண்பியவழிச் சித்திரிப்பை மேற்கொள்வர். பாடுவோரும் நட்டுவாங்கம் மற்றும் இசை வாத்தியம் வாசிப்போரும் ஒருபக்கத்தில் அமர்ந்திருப்பார்.

• தற்போது காட்சியாகவும் நடன நாடகங்களில் பயன்படுத்துகின்றனர். ஒளி!ட்டுகையிலும் அவ்வாறே.

• மேலைத்தேயத்தில் இத்தகைய நடன வகைகள் ‘பலே’ என அழைக்கப்படுகின்றன.

**பலே.**

• பலே எனப்படுவது இசைக்கேற்ப உடலைப் பலவாறு பயன்படுத்தி ஆடப்பெறுவதாகும்.

• பல்வேறு விதமான நடனக் கோலங்கள் பிரதானப்படும்.

• இருவராக, குழுக்களாக இவற்றை ஆற்றுகை செய்வர்.

• நடனப் பயிற்சி அதிகம் பெற்றவர் பலே ஆட்டக்காரராகக் காணப்பெறுவார்.

• பெரும்பாலும் பலே நடனக்காரரின் குதிக்கால் பயன்பாட்டிலுள்ளதைப் பலே அளிக்கையில் காணலாம்.

• பலே நடனம் பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் தோன்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகெங்கும் வியாபித்த தொல்சீர் நடனங்களிலொன்றாகக் கருதப்பெறுகிறது.

• பலே நடனங்களில் செல்வாக்குச் செலுத்துவது அவர்களின் வேட உடை, ஒப்பனையாகும்.

• ஒளி!ட்டுகையும் பிரதான இடம்பெறும்.

• பிரசித்திபெற்ற பல பலே நடனங்கள் உண்டு.

  - Swan lake.
  - NutCrackerl.
  - Sleeping Beauty

**நாடகம்.**

• இசை, நடனம் போன்று நாடகமும் ஒரு முழுமையான ஆற்றுகைக் கலைவடிவமாகும்.

• கட்புல - செவிப்புல உயிர்ப்புள்ள கலைவடிவமாகும்.

• பார்ப்போரின் பங்கு பற்றலிலே நாடகத்தின் வெற்றி தங்கியுள்ளது.

- நடிகர் உடல், குரல், உணர்வு, காண்பியம் மூலம் நாடகத்தை அளிக்கை செய்வார்.
- ஒவ்வொரு நாடகத்திற்குமென ஒவ்வொரு பாணி இருக்கும்.
  (கற்பித பாணி, யதார்த்தப் பாணி, மோடிமைப் பாணி).
- இசை, நடனம், ஓவியம், சிற்பம், கட்டடம், இலக்கியம் எனப் பல கலைகள் இயைந்ததொரு கூட்டுக்கலை வடிவம் நாடகம் ஆகும்.
- நாடகாசிரியர், நடிகர், நெறியாளர், தயாரிப்பாளர் காட்சி, இசை, ஒலி, ஒளி விதானிப்பாளர்கள் எனப் பல காரணிகள் இணைந்ததொரு கூட்டு முயற்சியே நாடகமாகும்.
- ‘‘நாடகமென்பது யாதேனும் ஒரு செயலைப் போலச் செய்தலாகும்.’’ - அரிஸ்டோட்டில்.
- ‘‘நாடகமென்பது உலக நடைமுறைகளைப் போலச் செய்தலாகும்.’’ பரதமுனி.
- ‘‘நாடகமென்பது வாழ்க்கையின் ஒரு துண்டம்.’’ - போனாட்ஷா
- ‘‘நாடகமென்பது வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும், பழக்க வழக்கங்களைக் காட்டும் கண்ணாடியு மாகும்’’ -அல்டைஸ் நிக்கோல்
- ‘‘ஒரு சமூகத்தில் நாடகமென்பது அம்மக்களது வாழ்க்கை முறைகளால் எழுந்த கருத்துக் களினதும் அவர்கள் வாழும் சூழலால் வருகின்ற ஆற்றுகை முறையினதும் தொகுப்பு ஆகும்.’’ - குழந்தை ம. சண்முகலிங்கம் -
- ‘‘நாடகத்தின் சிறப்பியல்புகளுள் மிக முக்கியமான பண்பு அது பார்ப்போருடன் நேரடித் தொடர்பு கொள்வது ஆகும். பார்ப்போர் இல்லாது விடில் நாடகம் இல்லை. அது அவைக்காற்று கலை என அழைக்கப்படுகிறது. நடிகர் - பார்ப்போர் சங்கமித்தல்தான் இக்கலை உருவாவதற்கான மையப்புள்ளி. இது இக்கலையின் சகல உறுப்புக்களையும் தீர்மானிக்கும் அடி நாதம் ஆகும்.’’ - சு. வித்தியானந்தன் -
- ‘‘நாடகக் கலை ஏனைய கலைகளை விட வித்தியாசமான ஒரு கலையாகும். ஓவியம், சிற்பம், கட்டடம், இசை, நாடகம் என அனைத்துக் கலைகளையும் ரசிக்கும் முழுமையான கலையுணர்வு இக்கலையைப் பார்ப்பதால் நமக்கு ஏற்படுகிறது’’ - சி. மௌனகுரு -
- ‘‘நாடகம் எனும் சொல் நடித்துக் காட்டப் பெறுவதைக் குறிக்கும். நட என்பதே இதன் வேர் வடிவமாகும். நடனம். நாடகம், நடனம், நாட்டியம் என்பன இவ்வடிவில் இருந்தே பிறந்தவை. நாடகம் என்னும் சொல்லுக்குக் கருத்துக் கூறும் அடியார்க்கு நல்லார் அதைக் கதை தழுவி வரும் கூத்து என்பார். அதாவது, கூத்துக்குரிய ஆட்ட முறைமை மூலம் ஒரு கதையைச் சித்திரிப்பது நாடகம் ஆகும்.’’ - கா. சிவத்தம்பி -

**கணிப்பீடு**

- ஆற்றுகைக் கலைகள் என்றால் என்ன என்பதை விளக்குக.
- ஆற்றுகைக் கலைகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
- விரும்பிய ஏதாவது ஆற்றுகைக் கலை தொடர்பாகப் பத்திரிகைகளில் வந்த விடயங்களைச் சேகரித்து ஒப்படையாக வழங்குக.

**உசாத்துணைகள்**


- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் தா.சிவத்தம்பி
  பேராசிரியர் சி.மௌனகுரு
  திரு.க.திலகநாதன்
  திருத்திய பதிப்பு 2014.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் - 12 நாடகமும் அரங்கியலும், பழைய பாடத்திட்டம்.
- நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள் - சு. வித்தியானந்தன்
  தெல்லிப்பழை - 1990.
- அரங்கியல் - சி. மௌனகுரு
  □பாலசிங்கம் புத்தகசாலை - 2003.
- நாடக வழக்கு - தொகுப்பு - க.ஶ்ரீ கணேசன்,
  இணுவில் கலை இலக்கிய வட்டம் 2004.
- அரங்கக் கட்டுமானம் - க. திலகநாதன், குமரன் புத்தகசாலை 2013.

**தேர்ச்சி 1.0** : "கலை" என்பதனை விளங்கிக்கொண்டு நாடக அரங்கக்கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : நாடக அரங்கக்கலையை ஆற்றுகைக் கலைகளுள் ஒன்றாக இனம் காண்பார்.

**செயற்பாடு 1.2.3** : "நாடகத்திற்கும் ஏனைய ஆற்றுகைக் கலைகளுக்கும் உள்ள வலிமையை உணர்வோம்".

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- ஆற்றுகைக் கலைகளின் வலிமையை அறிந்து கூறுவார்.
- நாடகக்கலையின் தனித்துவத்தை ஏனைய ஆற்றுகைக் கலைகளோடு ஒப்பிட்டுக் கூறுவார்.
- நாடகக்கலை ஆற்றப்பெறும் விதத்தை எடுத்துரைப்பார்.
- நாடகம் தனது ஆற்றுகைத் திறத்தால் ஏனைய ஆற்றுகைக்கலைகளில் இருந்து வேறுபடுவதை இனம் காண்பார்.
- ஆற்றுகைக் கலைகளின் வலிமையை இனங்காணத் துணை செய்யும் காரணிகளை முன்வைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ஆற்றுகைக் கலை தொடர்பான ஒளிப்படங்கள்.
- இறுவட்டுக்கள்
- சஞ்சிகைகள் ( ஆற்றுகை, கூத்தரங்கம், கட்டியம்)

**அறிமுகம்**

- நாடகக் கலைக்கும் ஏனைய ஆற்றுகைக் கலைகளுக்கும் உள்ள வலிமைகளை இனம் காண்பதே இப்பாடத்தின் நோக்கம் ஆகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்** :

- குழுக்கலந்துரையாடல்.
- முன்னளிக்கை செய்தல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- ஏற்கெனவே கற்ற ஆற்றுகைக் கலைகள் பற்றியும் அதன் சிறப்பியல்புகள் பற்றியும் எடுத்துக் கூறுங்கள்.
- ஆற்றுகைக் கலைகளின் இயல்புகள் எனும் தலைப்பில் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட பட்டியலை மாணவர்களுக்குக் காட்டி விளக்கம் அளியுங்கள்.

**ஆற்றுகைக் கலைகளின் இயல்புகள்**

- பார்ப்போர் முன்னிலையில் ஆற்றுகை செய்யப்பெறுவது.
- ஆற்றுவோரும் பார்ப்போரும் பிரதானமாக இடம் பெறுவர்
- அரங்கவெளியொன்று காணப்படும்.
- கட்புல செவிப்புலக் கலையாக அமையும்.
- ஆற்றுகை விடயங்களாக பேச்சு, உரையாடல், இசை, பாடல், ஆடல், நடன வடிவாக்கம், நடிப்பு என்பன இடம்பெறும்.
- தனியிசையாகவும் (வாத்திய இசை) பாடலாகவும், வார்த்தைகள் அற்ற நடிப்பாகவும் (ஊமம்), கதை சொல்வதாகவும் (வில்லுப்பாட்டு, கதாகலாட்சேபம், கதாப்பிரசங்கம்) கதை ஒன்றை நடிப்பதாகவும் (நாடகம்) ஆற்றுகைக் கலைகள் அமையலாம்.

மேலும் பல விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடிக் குறித்துக்கொள்ளுங்கள்.

மாணவர்களை நான்கு அன்றேல் வகுப்பில் உள்ள மாணவர் தொகைக்கு ஏற்பக் குழுக்களாகப் பிரித்து ஆற்றுகை தொடர்பான படங்களை வழங்குங்கள் அன்றேல் இறுவட்டில் காண்பியுங்கள்.

குழு 1 - இசை – பாலமுரளிகிருஸ்ணா - பாட்டுக்கச்சேரி

குழு 2 – நடனம் - ருக்மணி அருண்டேல் - நடன நிகழ்ச்சி

குழு 3 – வில்லுப்பாட்டு – சின்னமணி – வில்லுப்பாட்டு

குழு 4 – நாடகம் - சி.மௌனகுரு – இராவணேசன்

ஒவ்வொன்றினதும் ஆற்றுகைத் திறன் வெளிப்பாடுகளைக் குறிக்குமாறு கூறுங்கள். அவற்றை முன்னளிக்கை செய்ய விடுங்கள்.

- அடுத்து, நீங்கள் தயாரித்த பட்டியலை இணைத்து அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**இசை**

- குரல்வழிச் சித்திரிப்பு பிரதானம்.
- உயிரோட்டமான கலை.
- பாடலுடன் இசை வாத்தியங்களும் பயன்படுத்தப்படும்.
- தனி வாத்தியம் அரங்காகவும் காணப்படும். (நாதஸ்வரம், புல்லாங்குழல்)
- தனியானதாகவும் கூட்டானதாகவும் இடம்பெறும் .(மேளம்)

**நடனம்**

- உடல்வழிச் சித்திரிப்பு பிரதானம்.
- உணர்ச்சி வழியும், காண்பிய வழியும் பக்க பலமாக அமையும்.
- குரல்வழியில் பாடியும் ஆடலாம், பாடாமலும் ஆடப்படுவதுண்டு.
- தாளமும் பாவமும் பிரதானம்.
- நடன வடிவாக்கம் பிரதானம். (Choreography)
- வெளியில் நிகழும் கோலம்.

**வில்லுப்பாட்டு**

- வில்லில் கதை சொல்லுதல்.
- வில்லு, வில்லுத்தடி, வாத்தியங்கள் என்பன பிரதானம்.
- தலைவர், துணைவர் எனப் பலர் இணைந்து கூறுவார்.
- பாடலும் உரையாடலும் நடிப்பும் பிரதானம்.
- கதை சொல்வதன் ஊடாகக் கலையை நகர்த்துதல்.

**நாடகம்**

- நடிப்பு பிரதானம்.
- நடிப்பிற்காய் ஏனைய கலைகள் உதவும்.
- நடிகரே பிரதானம்.
- பாடலும் ஆடலும் சொல்லாடலும் துணைக்கலைகளும் செல்வாக்குச் செலுத்தும்.

- நடிப்பதற்கான வெளி (space) பிரதானம்

**ஆற்றுகைக் கலைகளின் வலிமைகள்**

- நேரடியாகப் பார்ப்போருடன் தொடர்பு கொள்வது.
- உணர்ச்சிகள் பரிமாறப்படும்.
- உறவுகள் தொடர்ச்சியாகப் பேணப்படும்.
- வாழ்வின் உண்மைகள் நேரடியாகப் பார்ப்போரிடம் வந்தடையும்.
- உணர்வுகளைத் தட்டியெழுப்பும்.
- சமகால விடயங்களைக் கூறும்.
- பார்ப்போரைப் பங்குகொள்ள வைக்கும்.

**கணிப்பீடு**

- நாடகக்கலை ஆற்றுகைக் கலையாக விளங்கும் விதத்தை விளக்குக.
- நாடகக்கதை ஆற்றப்படும் முறையையும் பார்ப்போரிடையே ஏற்படுத்தும் தாக்கத்தையும் விபரிக்குக.
- ஆற்றுகைக் கலையாக நாடகக் கலையை இனங்காணத் துணைசெய்யும் காரணிகளை முன்வைக்குக.
- ஆற்றுகைக் கலைகள் தொடர்பாகப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்துத் தருக.
- காணொளி வழியாக வெவ்வேறு ஆற்றுகைக் கலைகளின் ஆற்றுகைப் பகுதிகள் சிலவற்றைப் பார்வையிட்டு, அவற்றின் தாக்கவன்மைக்குரிய காரணிகளைப் பட்டியலிடுக.

**உசாத்துணைகள்**


- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி.மௌனகுரு, திரு க.திலகநாதன் (திருத்திய பதிப்பு 2014).
- தமிழர் கலைகள் - தொகுப்பாசிரியர் - பேராசிரியர் கா.சிவத்தம்பி.

- நாடக வழக்கு – தொகுப்பு க.ஸ்ரீகணேசன்.
- கலைகள் - அன்னதா சங்கர்ராய்.
- கலை இலக்கியக் கட்டுரைகள் - சி.மௌனகுரு.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி -தரம் 12 நாடகமும் அரங்கியலும், பழைய பாடத்திட்டம்.

**தேர்ச்சி** 1.0 : 'கலை' என்பதனை விளங்கிக் கொண்டு நாடக அரங்கக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.3 : நாடகக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிட்டு ஒருமைப்பட்டதும் வேறுபட்டதுமான அம்சங்களைப் பயில்வார்.

**செயற்பாடு** 1.3.1 : நாடகத்தினைத் தொழிநுட்பக் கலைகளான, வானொலி, தொலைக் காட்சி, சினிமா என்பவற்றுடன் ஒப்பிட்டு நோக்குவோம்'.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்:**

- நாடகத்தை வானொலி, தொலைக்காட்சி, சினிமா ஆகிய தொழிநுட்பக் கலைகளுடன் ஒப்பிட்டு, அவற்றிற்கிடையான ஒத்ததும் வேறுபட்டதுமான இயல்புகளை அறிந்திருப்பார்.
- நாடகத்திற்கு வலிமை சேர்ப்பதில் தொழிநுட்பக் கலைகள் உதவு வதை உணர்ந்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திரைப்படத்தின் பகுதியொன்று.
- வானொலி நாடகம்.
- தொலைக்காட்சி நாடகம்.

**அறிமுகம்:**

- நாடகம் என்ற கலை வடிவத்தினைப் பயிலும் வேளையில் அக்கலை வடிவத்தின் தனித்துவத்தினை அறிந்து கொள்ளும் அதேவேளையில் அதனுடன் தொடர்புபட்டு வளர்ந்த தொழிநுட்பக் கலைகளை அறிவதும், நாடகத்துடன் அவற்றினை ஒப்பிட்டு நோக்குவதன் மூலமாக அவற்றுக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிவதும் இப்பாடத்தினூடாக எதிர்பார்க்கப்பெறுகிறது.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- கண்டறிமுறை
- விரிவுரை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- சினிமா, வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகங்களின் வடிவங்களை மாணவர்கள் பார்க்கச் செய்ததன் பின்னர் அவை தொடர்பான கருத்துக்களை முன்வைத்தல் பொருத்த மானதாகும்.
- **நாடகம்**

  நாடகம் மனித நிலை மோதுகைகளைச் சித்திரிக்கின்ற கலையாகும். அதாவது மனிதனை அவனது மோதுகை நிலையில் சித்திரிப்பது நாடகம். அது சித்திரிக்கப்படும் போது, அது

செய்து காட்டப்படும் கலையாகக் கணப்பிரசன்னமாகப் பார்ப்போர் முன் நிகழுமொன்றாகவும், நிகழ்வுகளின் எதிர்நிலைகளைப் பதிற்குறிகளின் மூலம் உடனுக்குடன் எதிர்கொள்ளும் கலையாகவும் காணப்படுகின்றது. அவ்வாறான நிகழ்த்துகை என்பதில் 'அரங்கு' என்கின்ற பல்கலைகளின் சங்கமம் நிகழ்கின்றது. ஆற்றுகைக் கலைகளின் அதியுச்ச வெளிப்பாட்டுக் கலையாக 'நாடகம்' மிளிர்கின்றது.

அது

- கூட்டுக்கலையாக இருக்கும்.
- எழுத்து வடிவக் (இலக்கியம்) கட்டமைப்புக் காணப்படும்.
- நால்வகை அபிநயங்கள் தொடர்புபடும்.
- கதை சொல்லுகின்ற பண்பினைக் கொண்டிருக்கும்.
- கதையில் வளர்ச்சிக் கட்டமைப்புக் காணப்படும்.
- ஆற்றுகை வெளி ஆற்றுகையில் செல்வாக்குச் செலுத்தும்.
- பாத்திரந்தாங்குதல், போலச்செய்தல், அடிப்படையானதாக இருக்கும்.
- பார்ப்போரின் உயிரோட்டமான பங்களிப்புக் காணப்படும்.

பார்ப்போரின் உயிரோட்டமான பங்களிப்பு, அதன் கணப்பிரசன்னமான இயங்கு நிலை, தொழிநுட்பக் கலைகளில் காணப்படாது.

- **வானொலி.**

'வானொலி' என்ற தொழிநுட்பக் கருவியின் கண்டுபிடிப்பின் பின் உருவாகிய, கலைவடிவங்கள் அது சார்ந்த தொழிநுட்பக் கலைவடிவங்களாகக் காணப்படுகின்றன.

உதாரணம்: வானொலி நாடகம்.

- வானொலிக் கருவிகள் முழுக்க முழுக்கக் கேட்டலால் நுகரப்படுகின்ற கலைகள்.
- செவிவழி நுழையும் ஒலியும், இசையும், உரையும் இணைந்தே கலையைத் தோற்றுவிக் கின்றது.
- கேட்டலால் பெறும் 'கேள்விப் படிமங்கள்' மனித மனங்களில் கற்பனையான காட்சிப்புலங் களை உருவாக்குகின்றன. இதனால் கேட்டு மனதில் உணர்ந்து தரிசிக்கும் அனுபவம் வானொலி கலைகளில் காணப்படுகின்றது.
- வானொலி நாடகங்கள் மேடை நாடகங்களில் இருந்து வானொலிக்காக வடிவ மாற்றம் பெற்றவை. அவ்ஃடகத்துக்குரிய தனித்துவத்துடன் அவை காணப்படுகின்றன.
- கதை உரையாடல் மூலம் நிகழ்த்தப்படும், உரையாடல்கள் செயல்களின் விளக்கத்தினையும் தம்முட் கொண்டு ஆக்கப்படும். அவ்விளக்கத்திலிருந்து கேட்போரின் கற்பனை உருவாக்கும் படிமத்தின் மூலம் கதை விளங்கி இரசிக்கப்படும்.
- குறைந்தளவு பாத்திரங்களே அதிகம் பயன்படுத்தப்படும். அப்பாத்திரங்களை, நிகழ்த்தும் மூலகமாக நடிகர்களின் குரல்கள் காணப்படும்.

- நடிகர்களின் குரல்களிற் காணப்படும் தொனி, இழைமானம், போன்றவற்றாலும் குரலினால் வெளிப்படுத்தும் உணர்வுகளாலும் பாத்திரங்கள் சித்திரிக்கப்படும்.

♦ இவ்வானொலி நாடகமும் மேடை நாடகமும் நாடகங்களாக இருப்பினும் பல ஒற்றுமை களும், பல வேறுபாடுகளும் கொண்டு காணப்படுகின்றன.

உதாரணம் : மனித முரணைச் சித்திரிப்பது, பாத்திரங்கள் மூலம் கதை நகர்த்தப்படுவது உரையாடல் மூலமான விடய வெளிப்பாடு என்பனவெல்லாம் ஆற்றுகைகளின் பண்பாக இருப்பினும்,வானொலி நாடகம் உடனடி எதிர்விளைவினையோ, நேரடித்தரிசனத்தையோ தருவதில்லை.

- **தொலைக்காட்சி.**

விரும்பிய இடத்தில் இருந்து பார்க்கக்கூடிய 9' - 40' அங்குல அளவுள்ள 'ஒளி எறித் தன்மையான' தொழிநுட்ப சாதனமாகிய தொலைக்காட்சியின் வருகையின் பின்னரே, அது சார்ந்த கலைகள் உருவாகின. தொலைக்காட்சி பார்த்தலுக்கும் கேட்டலுக்குமான சாதனமாக அசையும் படிமங்களை வெளிப்படுத்தும் சாதனமாகக் காணப்படுகின்றது. 'கமரா' என்கின்ற ஊடகத்தின் உள்வாங்கல்களையே, தொலைக்காட்சி சித்திரிக்கின்றது. இந்த தொலைக்காட்சியை மையமாகக் கொண்ட நாடகங்கள், குறும்படங்கள், குறுஞ் சித்திரங்கள், பாடல்கள், நடனங்கள் எனப் பலவும் உருவாக்கப்பட்டுள்ளன.

சிறப்பாகத் தொலைக்காட்சி நாடகங்கள், மேடை நாடகத்தின் நீட்சிகளாக, சினிமாவில் இருந்து வேறுபட்டவையாகத் தயாரிக்கப்படுகின்றன.

- இவை களஞ்சிப்படுத்தப்படக்கூடியவையாக
- ஒரே நேரத்தில் உலகெங்கும் பல லட்சக்கணக்கான பார்ப்போரைச் சென்றடையக் கூடியனவாக
- கமராவின் வல்லமையால் அண்மைக் காட்சிகள் உட்பட நடிகரின் உணர்வுகளை வெளிப்படுத்த வல்லவையாக
- கதைகளுக்கேற்ற காலங்களில் (Location) காட்சியைச் சித்திரிக்க வல்லவையாகப் பல்வேறு வசதிகளுடன் காணப்படுகின்றன.

ஆனால் மேடை நாடகத்தினைப் போன்று

- உயிரோட்டமான நாடக வடிவமாகவோ
- உடனடி எதிர்வினைகளைப் புலப்படுத்த வல்லவையாகவோ இல்லாது ஒளிச் சேமிப்பின் பின்னான வெளிப்படுகைக் கலையாகவே காணப்படுகின்றன.

**சினிமா**

'சினிமா' என்பது 'கமராவினால் வரையப்படும் ஓவியம்' என்ற கருத்து நிலைக்கு ஒப்ப கமராவின் சித்திரிப்புக் கலையாகக் காணப்படுகின்றது. அகன்ற திரையில், இருட் சூழலுக்குள், பார்ப்போரை இருத்தி, காட்சிக் கூறுகளின் அசையும் விம்பங்களினால் கதை சொல்லுகின்ற கலை வடிவமாகும். அண்மை சேய்மைக் காட்சிகள் மூலமும் வெவ்வேறு கோணங்களின்

மூலமும் காட்சிகளைச் சித்திரிக்க வல்லதாக இருக்கும்.

- கமராவின் நகர்வே கதையின் நகர்வாக இருக்கும்.
- நடிகன் மிக முக்கியமான மூலகமாக இருக்க மாட்டான்.
- சேமித்து வைத்திருக்கத்தக்க கலைவடிமாக இருக்கும்.
- இதற்கெனப் பிரத்தியேகமான அரங்கு தேவை.

எனினும் மேடை நாடகத்தின்

- உயிர்த்துவம் மிக்க பண்பு
- பார்ப்போரை உடன் எதிர்கொள்ளும் பண்பு.
- உடனடி எதிர்வினைகளைக் காணும் பண்பு போன்றவை காணப்படாது.

**பிரயோகம்:–** மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடிய, ஒலிப்பதிவுக் கருவி, கைபேசி மூலமாக, வானொலி நாடகத்தினை அன்றேல் விரும்பும் மனங்கொண்ட உரையாடல்களை நிகழ்த்தி ஒலிப்பதிவு செய்து அதனை எல்லா மாணவர்களையும் கேட்கச் செய்வதன் மூலமாகக் கலந்துரையாடுதல்.

அன்றேல்

Video கமரா, அன்றேல் ஒளிப்பதிவு வசதியுடைய கைபேசியின் மூலம் சிறியதொரு காட்சியைப் படம் பிடித்து, அதனை எல்லோரும் பார்க்கச் செய்து கலந்துரையாடுதல்

**கணிப்பீடு:**

- நாடகக் கலையின் தனித்துவமான பண்புகளைக் கூறுக.
- வானொலி நாடகத்திற்கும் மேடை நாடகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காண்க.
- சினிமாவுக்கும், மேடை நாடகத்துக்குமான ஒற்றுமைகளை விவரிக்குக.
- தொழிநுட்பக் கலைகளின் நன்மை தீமைகளை ஆராய்க.

**உசாத்துணைகள்:**

- அசையும் படிமங்கள் - மகேந்திரன்

**தேர்ச்சி 1.0 :** ‘கலை’ என்பதனை விளங்கிக் கொண்டு நாடக அரங்கக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3:** நாடகக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிட்டு ஒருமைப்பட்டதும் வேறுபட்டதுமான அம்சங்களைப் பயில்வார்.

**செயற்பாடு 1.3.2 :** நாடகத்தினை இலக்கிய வடிவங்களான, நாவல், சிறுகதை, கவிதை என்பவற்றுடன் ஒப்பிட்டு நோக்குவோம்.

**பாடவேளை :** 05

**கற்றற் பேறுகள்:**

- நாடகத்திற்கு ஒரு இலக்கியப் பரிமாணமும் உண்டு என்பதனை உணர்ந்து கொள்வார்.
- இலக்கியம் என்பதற்கான கருத்து நிலையை வெளிப்படுத்துவார்.
- நாடகத்திற்கும் ஏனைய இலக்கிய வடிவங்களுக்குமான வேறுபாட்டினை எடுத்துரைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரிச் சிறுகதை.
- நாவல்.
- கவிதைகள்.
- கவிதை நாடகம்.

**அறிமுகம்:**

- நாடகம் என்ற கலை வடிவத்திற்கு ஆற்றுகைப் பரிமாணமும் இலக்கியப் பரிமாணமும் காணப்படுகின்ற காரணத்தினால் நாடகக் கலை வடிவினை, ஏனைய இலக்கிய வடிவங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதும், அவற்றின் தனித்துவங்களை இனங்காண்பதும் இப்பாடத்திற்கூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- கண்டறிமுறை.
- நூல் உசாவல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- மாணவர்களுக்கு தெரிந்தெடுத்த மாதிரி சிறுகதை, நாவல், கவிதை என்பவற்றை மூன்று குழுக்களாக அவர்களைப் பிரித்துக் குழுவுக்கொன்றாக வழங்கி, அவற்றினை வாசித்து அவர்களின் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய வேறுபாடுகளைக் கலந்துரையாடலாம்.
- நாடகம் (இலக்கியமாக) நாவல், சிறுகதை, கவிதை போன்ற இலக்கிய வடிவங்கள் அனைத்திலும், சிந்தனைகள், கதைப்பின்னல், பாத்திரங்கள், மொழி, கதை நகரும் முறைமை, போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவை அவ்வவ் வடிவங்கள் சார்ந்து வேறுபடுகின்றன. நாடகம் இலக்கியப் பரிமாணத்துடன் உயிர்த்துவமுடைய அளிக்கைப்

பரிமாணத்தினையும் கொண்டு காணப்படுவதால் தனித்துவமுடையதாகக் காணப்படுகின்றது.

- ‘இலக்கியம்’ என்பதற்கு, பல்வேறு கொள்நெறிகள் கூறப்பட்டாலும் எளிமையாகக் கூறுவதானால் எழுதப்பட்ட வரிவடிவத்தில் இருந்து வாசிப்பதற்கூடாகப் பெறப்படுகின்ற விடயங்கள், வாசிப்பவரின் அனுபவக் கருத்தியல் நிலைகளின் இருப்பில் இருந்து எழும் எண்ணங்களுடன் இணைந்து மனதில் கற்பனைப் படிமங்களாக உணர்ந்து சுவைக்கப்படக் கூடியவைகளேயே இலக்கிய வாசிப்பு எனக் கூறலாம். இது இலக்கிய வடிவங்கள் சார்ந்து வெவ்வேறு துலங்கல்களைக் கொண்டிருக்கலாம்.

**நாவல்.**

நாவல் (Novel) என்பது, ஆங்கிலப் பதமாகும். தமிழில் ‘புதினம்’ என்ற பதத்தினைப் பயன் படுத்தினாலும் அது பெருவழக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை. ஆங்கிலேயரின் வருகையின் பின் ஆங்கில இலக்கிய அறிமுகத்தினால் தமிழுக்கு அறிமுகமாகிய புதிய இலக்கிய வடிவமே நாவலாகும். இதனை நெடுங்கதை என்றும் பெருங்கதை என்றும் பலரும் பல்வேறு பெயர்களில் அழைப்பதுண்டு. ‘புனைகதை’ வடிவங்களிலொன்றாகிய நாவல் ‘வாழ்வின் உணர்வுகளைப் பட்டவர்த்தனமாக வரிகளால் வடிப்பதனூடாக வாசகனோடு பேசும் வடிவமாகும்.’

- இதற்கு நீண்ட கதைப்பின்னலமைப்புக் காணப்படும்.
- பல்வேறு கிளைக் கதைகளைக் கொண்டு தொகுக்கப்படும் பாங்கு காணப்படும்.
- ஒரு சம்பவத்தினையும், சூழலையும், வீடியோ கமரா படம் பிடிப்பது போல வார்த்தைகளால் படம் பிடித்து வெளிப்படுத்தும்.
- அதிக கதாபாத்திரங்கள் பயன்படுத்தப்படும். பிரதான கதை மாந்தருடன், அப்பாத்திரங்கள் தொடர்புபட்டோ, தொடர்புபடாதோ கதையுடன் பின்னப்பட்டிருக்கும்.
- அதிக வர்ணணைகள், காட்சிகள், உணர்வுகளை மிகவிளக்கமாகச் சொல்லும் முறைமை போன்றவை காணப்படும்.
- நாடகம் உரையாடல் மூலம் நகர்த்தப்படும். ஆனால், இங்கு படர்க்கையான சொல்லாடல்கள் கதையை நகர்த்தும் இன்றியமையாத விடயங்களில் பாத்திரங்கள் பேசும் சொற்கள் தன்மையில் பயன்படுத்தப்படும்.
- நாடகத்தின் கட்டமைப்பானது பெரும்பாலும், அதன் தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சம், முடிவு என்ற முழுமையுடன் காணப்படும். ஆனால் நாவலின் கட்டமைப்பு அங்கத்துக்கு அங்கம் வளர்ச்சிக் கட்டமைப்பைக் கொண்டு காணப்படும்.
- நாடகத்தினைப் பார்க்கும் போதும் வாசிக்கும் போதும், பாத்திரங்களே கதையை நகர்த்தும் பாங்கு காணப்படும். நாவலில் சம்பவங்கள் கூறப்படும் முறைகளால் காட்சி நகரும்.
- நாவல்களை நாடகமாக்குகின்ற போக்கும் காணப்பட்டுள்ளது.

  உதாரணம்: ஸ்பாட்டக்கஸ்.

**சிறுகதை**

புனைகதை வடிவங்களிலொன்றாகிய 'சிறுகதை' யும் வரிவடிவங்களை வாசிப்பதனுடாக வரையப்படுகின்ற வடிவமாகும். இது நாவல் வடிவத்தில் இருந்து வேறுபட்டது. நாவலின் பல பண்புகள் சிறுகதைகளுக்குள் காணப்பட்டாலும் சிறுகதை கட்டிறுக்கமானது. நாவல் பல சம்பவங்களையும் பாத்திரங்களையும் உணர்வுகளையும் பிரச்சினைகளையும் கொண்ட வடிவமாக இருக்க, சிறுகதை, சிறிய ஒரு சம்பவம், அன்றேல் ஒரு பிரச்சினை ஒரு பாத்திரத்தின் நிலைப்பாடு எனத் தனி மையங்களைக் கொண்டிருக்கும். அதிக வர்ணனைகள் தவிர்க்கப்பட்டிருக்கும். மேலெழும் உணர்வினைக் கட்டமைத்திருக்கும்.

- சிறுகதையில் குறைந்தளவு பாத்திரங்களே பயன்படுத்தப்படும்.
- நாவலைப் போல் அல்லாது நாடகக் கட்டமைப்பானது இறுக்கமான தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சம், முடிவு என்ற படிநிலைகளைக் கொண்டிருக்கும்.
- நாவலைப் போல, கதை சொல்பவனால் படர்க்கையிலே நகரும் பண்பு பெரும் போக்காக காணப்பட்டாலும், அதிக உரையாடற் கூறுகள் கொண்ட சிறுகதை, தனியே கடிதமே கதையாகும் பண்பு போன்றவையும் காணப்பட்டுள்ளது.
- நாவலில் சம்பவங்கள், சூழல்கள் அதிக கற்பனைக்கு இடமின்றி வர்ணிக்கப்படும். நாடகத்தில் அவை கண்முன்பாகக் கொண்டு வரப்படும். ஆனால், சிறுகதையில் அதிகமான விடயங்கள் வாசகனின் கற்பனைக்கு விடப்படும்.
- சிறுகதைகளை நாடகமாக்குகின்ற பாரம்பரியம் நீண்டகாலமாக நிலவுகின்றது.

**கவிதை**

'கவிதை' என்பது தமிழ்ப் பாரம்பரியத்தில் செய்யுள் என்ற பெயரிலும் 'பாடல்' என்ற பெயரிலும் வழங்கி வந்தது. பிற்பட்ட காலத்திலேயே மரபுக்கவிதை, புதுக்கவிதை என அழைக்கப்படுகின்றது. கவிதை, நாடகத்துக்கான மொழியாகத் தொல்சீர் காலங்களில் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கிரேக்க நாடகங்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்கள், காளிதாசன் நாடகங்கள், எமது மரபுவழிக் கூத்துக்கள் என அனைத்தும் கவிதை மொழியிலே அமையப்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கவிதை என்பது 'உணர்வின் மொழி' என்றும் மொழியொன்றின் அதிஉச்ச வெளிப்பாடு என்றும் பல்வேறு வியாக்கியானங்கள் கூறப்படுகின்றன. கவிதைகளில் மொழி கட்டிறுக்கமாக அமைந்திருப்பதுடன் 'யாப்பு அமைதிக் கேற்பவோ' 'ஓசை ஒலிப்புக்கு ஒப்பவோ' சொல்லும் விடயத்தின் உணர்ச்சியின் லயத்துக்கு ஒப்பவோ ஒழுங்கமைந்தவையாகக் காணப்படும். நல்ல கவிதை என்பது, ஒரு சிறுகதையைப் போல இருக்கும் என்பார்கள். அதாவது கதையினூடாக ஒரு விடயம் பேசப்படும். அங்கு மனித உணர்வின் பாற்பட்ட பிரச்சினைகளோ, விடயங்களோ வெளிப்படும். அதற்குக் கவிதை மொழியில் கையாளப்படும் குறியீடுகள் எதுகை மோனை, மரபுச் சொற்கள் போன்ற பல விடயங்கள் துணைபுரியும்.

எனவே, கவிதையே ஒரு இலக்கிய வடிவமாகவும், அதேவேளை கவிதை மொழி

நாடகத்துக்கான உரையாடற் கூறாகவும் காணப்பட்டுள்ளது.

- நாடகம் ஒரு விடயத்தினைச் சொல்வதுபோலக் கவிதையும் சொல்லுகின்றது.
- நாடகத்தின் அளிக்கையினூடாக வெளிப்படும் உயிர்த்துவமான நிலை கவிதைக்கு இல்லை. ஆனால் சிறுகதை, நாவல் போன்றவற்றை விட, வாசகனிடம் உணர்ச்சியைத் தொற்ற வைக்கக்கூடிய வடிவமாகக் கவிதை காணப்படுகின்றது.
- நாடகங்களில் பயன்படுத்தப்படும் சாதாரண உரையாடல்களில் இருந்து மேம்பட்ட சொல்லாடல் திறனைக் கவிதை மொழிகளில் அனுபவிக்க முடியும்.
- கிரேக்கத்தின் அவல நாடகங்களில் 'இயாம்பிக்' கவிதைகள் உரையாடலுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஷேக்ஸ்பியர் போன்ற எலிசபெத் நாடக ஆசிரியர்கள் 'Blank Verse' இனைப் பயன்படுத்தியுள்ளனர். எமது நாடக ஆசிரியர்களான கவிஞர் இ . முருகையன், மகாகவி போன்றவர்கள் 'அகவற்பா' 'வசன கவிதை' போன்றவற்றை நாடகங்களுக்குப் பயன் படுத்தியுள்ளனர்.

எனவே, கவிதை தனியே இலக்கிய வடிவமாகவும், நாடகம், காவியம் போன்ற வடிவங்களின் பேசு வடிவமாகவும் காணப்படுகின்றது.

**கணிப்பீடு:**

- நாடகம், நாவல், சிறுகதை ஆகிய இலக்கிய வடிவங்களில் காணப்படும் ஒற்றுமைகளை ஆராய்ந்து எழுதுக.
- நாடகத்தினை, அதன் அளிக்கைப் பரிமாணத்துடன் நோக்கி நாவல், சிறுகதைகளில் இருந்து அது எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விவரிக்குக.
- மேற்கூறிய இலக்கிய வடிவங்களில் உம்மைக் கவர்ந்த இலக்கிய வடிவம் யாது என்பதனையும், அதற்கான காரணத்தையும் கூறுக.
- நாடகக் கலை, நாவல், சிறுகதை, கவிதை போன்றவையுடன் தொடர்புபடக்கூடிய சந்தர்ப்பங்களை விவரிக்குக.
- ஏற்கெனவே பிரித்த 3 குழுவினரும் தாம் சார்ந்த இலக்கிய வடிவத்தினைப் பற்றி ஒவ்வொரு விடயமாகக் கூறி, குழு நிகழ்வாகக் கணிப்பீட்டை மேற்கொள்க.

**தேர்ச்சி 1.0** : "கலை" என்பதனை விளங்கிக்கொண்டு நாடக அரங்கக்கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : நாடகத்துடன் தொழிநுட்பம் தொடர்புறும் விதத்தைப் பயில்வார்.

**செயற்பாடு 1.4** :"துணைக்கலைகளின் தொழிநுட்பங்கள் நாடகத்தின் முழுமைக்கு வலூட்டுவதை எடுத்துரைப்போம்".

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்** :

- நாடகத்தின் முழுமைக்குத் துணைக்கலைகளின் முக்கியத்துவத்தைக் கூறுவார்.
- இன்றைய உலகவாழ்வின் அம்சங்களுடன் தொழிநுட்பம் நெருங்கிய தொடர்புடையது என்பதை விளங்கியிருப்பார்.
- தொழிநுட்பத்துடன் இணைத்து, துணைக்கலைகளைக் கையாள முடியும் என்பதைக் கற்றுணர்ந்திருப்பார்.
- தொழிநுட்பத்துடன் கூடிய துணைக்கலைகளின் மூலம் நாடகத்தை வலூட்டலாம் என்பதை எடுத்துரைப்பார்.
- நாடகங்களில் புதிய புதிய தொழிநுட்ப உத்திகளைக் கையாளப்பழகுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- "Animation" படப்பிடிப்பு முறைக்காட்சிகள்.
- வேட உடை மாதிரிகள்
- DVD இசைத்தட்டுகள்
- பல்லூடக எறியி

**அறிமுகம்**

இன்றைய தொழிநுட்ப உலகின் போக்கிற்கு ஏற்பத் தம்மை இற்றைப்படுத்தும் நோக்கில் துணைக்கலைகளைத் தொழிநுட்பத்துடன் இணைத்துப் பயன்படுத்தும்போது, வலிமைமிக்க நாடகத்தைப் படைக்க முடியும் என்பதைக் கற்றுக்கொள்வதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்**

- கலந்துரையாடல். • முன்னளிக்கை முறை.

- e -learning முறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்** :

- நாளாந்த வாழ்வில் கையாளும் தொழிநுட்பங்கள் பற்றிக் கேட்டறியுங்கள்.

  உதாரணம் : குழாய் நீர்,நீர் இறைக்கும் இயந்திரம்,கையடக்கத் தொலைபேசி.

- "Animation" படப் பிடிப்பு முறைக்காட்சித் துண்டமொன்றைக் காண்பிக்கலாம்.

  உதாரணம் : "அவதார்" படப்பிடிப்பு நுட்பங்கள்.

  அன்றேல் யாதாயினும் ஒரு படத்தின் காட்சித்துண்டத்தைக் காட்சிப்படுத்தலாம்.

  உதாரணம் : "Gladiator" படக்காட்சித் துண்டம்.

- அக்காட்சியில் பயன்படுத்தப்பெற்றுள்ள தொழிநுட்பம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- அதே காட்சித்துண்டத்தினை ஒலியை நிறுத்தி மீளவும் காண்பியுங்கள்.
- இரு சந்தர்ப்பங்களின் போதான உணர்வு நிலை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பில் கருத்தூன்றிய முன்வைப்புச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

**<u>காண்பியங்களும் தொழிநுட்பமும்</u>**

- நாடகத்தில் பயன்படும் காண்பியங்களுள் ஒளி, வேட உடை, ஒப்பனை காட்சி விதானிப்பு என்பன பிரதானமானவை ஆகும்.
- நாடகம் பற்றிய புரிதல்களை இலகுபடுத்துவதற்கு இவை துணை செய்கின்றன.
- இவற்றுடன் தொழிநுட்பமும் இணையும் போது நாடகம் மேலும் மெருகூட்டப்படுகின்றது.

**எடுத்துக்காட்டு**

**ஒளி**

- மனித உணர்ச்சிகளை மிகத்துல்லியமாகக் காட்டுவதற்கும், சூழமைவுகளை நுணுக்கமாகக் காட்டுவதற்கும் ஒளித்தொழிநுட்பம் பயன்படுகின்றது.
- இலகுவாகப் பெறத்தக்க ஒளி முதல்களைக் கொண்டும் ஒளித் தொழிநுட்பத்தை மேற்கொள்ளலாம்.
- பொட்டொளி, பெருக்கொளி, வர்ணச்சில்லு, மங்கலாக்கி முதலிய ஒளியுடன் தொடர்புடைய கருவிகளைக் கொண்டு பிரமாண்டான தொழிநுட்பத்தை மேற்கொள்ளலாம்.

**வேட உடை**

- நாடகத்தின் கதைக்காலம், பாத்திர இயல்பு, பண்பாடு என்பவற்றைப் புலப்படுத்தும்.
- வேட உடையின் வர்ணம், இழைமானம் என்பவற்றைப் பொருத்தமுறத் தெரிவு செய்தவதற்குத் தொழிநுட்பம் உதவுகின்றது.
- ஏற்கெனவே இருந்த நாடகம் ஒன்றினை மறுவாசிப்புச் செய்வதற்கும் இவை உதவும்.

**ஒப்பனை**

- பாத்திரப்பண்பு, மோடி என்பவற்றைத் துல்லியமாக இனம் காட்டும்.
- நவீன ஒப்பனை முறைகள், குறியீட்டுத்தன்மை என்பவற்றை வெளிப்படுத்த உதவும்.
- வர்ணம் தீட்டுதல் ஒப்பனை முறையுடன் தொழிநுட்பம் இணைந்திருப்பதைக் காணலாம். (Body painting).
- பல்வகை வேட முகங்களின் தயாரிப்பில் தொழிநுட்பம் பெரும்பங்காற்றுகின்றது.

**காட்சி விதானிப்பு**

- நாடகக் கதைக்களம், சூழல் என்பவற்றைத் தெளிவு படுத்தும்.
- பக்கத்தட்டிகள் முதல் இயந்திரப்பொறிமுறையான காட்சித்திரைகள் வரையில் தொழிநுட்பம் பங்கு கொள்கின்றது.
- சூழலில் கிடைக்கத்தக்க பொருள்களைக்கொண்டோ அன்றேல் மிகப்பிரமாண்டமான காட்சிப்பொருள்களைக் கொண்டோ அன்றேல் மனித உடல்களைப் படிமங்களாக்கியோ காட்சியை விதானிக்க முடியும்.

**<u>கேட்பியமும் தொழிநுட்பமும் :</u>**

- நாடகத்தில் பயன்படுத்தப்பெறும் கேட்பியங்களுள் இசை, ஒலி என்பன பிரதானமாகும்
- நாடகச் சூழமைவுகளுக்குள் பார்ப்போரை ஈர்ப்பதற்கும் ஆற்றுகைக் கவர்ச்சியை உண்டு பண்ணவும் இவை உதவுகின்றன.
- காண்பியமும் கேட்பியமும் இணையும் போதே நாடகம் முழுமை பெறுகின்றது.
- இவற்றுடன் தொழிநுட்பமும் கலக்கும்போது படைப்பு வலிமை பெறுகின்றது.

**ஒலி**

- சில விசேட விளைவுகளைத் தோற்றுவிக்க உதவுகின்றது.

உதாரணம் : இடி மின்னல், மழைபெய்தல், காற்று வீசுதல், பிராணிகளின் ஒலி என்பவற்றை எழுப்பலாம்.

- சூழலில் கிடைக்கத்தக்க பொருள்களைக்கொண்டோ, மனிதக் குரலைப்பயன்படுத்தியோ அன்றேல் இசைக்கருவிகளைப் பயன்படுத்தியோ ஒலி விளைவுகளைத் தோற்றுவிக்கலாம்.
- நடிகனது குரலைப் பார்ப்போனுக்குக் கேட்கும் வகையில் பெரிது படுத்திப் புறத்தெறியச் செய்வதற்கும் ஒலித் தொழிநுட்பம் (sound system/ mic system) பயன்படுகின்றது.

**இசை**

- குறித்த சூழ்நிலையை முனைப்புறுதிக் காட்டுவதற்கு இசைத்தொழிநுட்பத்தைக் கையாள முடியும்.
- இதனை மிடற்றிசை மூலமோ வாத்தியக் கருவிகள் மூலமோ அன்றேல் சூழலில் கிடைக்கத்தக்க பொருட்களின் மூலமோ உருவாக்க முடியும்.

உதாரணம் 1 – தடிகளை ஒரு சேர, ஒரே நேரத்தில், ஒரே தாளத்தில் தட்டுவதன் மூலம் ‘‘பாண்ட்’’ வாத்திய இசையை எழுப்ப முடியும்.

- அன்றேல் வாத்தியக் கருவி மூலமும் அவ்விசையை எழுப்பலாம்.

உதாரணம் 2 – காலை நேரத்தைப் புலப்படுத்துவதற்கு வாத்தியக் கருவி மூலம் □பாள இராகத்தை இசைக்க முடியும்.

- அன்றேல் பொருத்தமான இராகத்தை மிடற்றிசை மூலமும் வெளிப்படுத்தலாம்.
- பின்வரும் அட்டவணைக்கேற்ப யாதாயினும் ஒரு சூழமைவைத் தெரிவு செய்து, அதற்குப் பொருத்தமான தொழிநுட்பம் சார் கருவிகள் அன்றேல் உபகரணங்கள் மற்றும் அவற்றால் உருவாக்கத்தக்க உணர்வுநிலை அல்லது விளைவுகளைக் கண்டறிந்து கொள்க.

**சூழமைவு – எடுத்துக்காட்டு** : இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்புக்குட்பட்டுள்ள ஒரு சமூகத்தின் அவல நிலை.

| இல | துணைக்கலைகள் | தொழிநுட்ப உபகரணங்கள் | ஏற்படக்கூடிய உணர்வு நிலைகள் |
|---|---|---|---|
| 1 | ஒளி | | |
| 2 | ஒலி | | |
| 3 | இசை | | |
| 4 | வேட உடை | | |
| 5 | ஒப்பனை | | |
| 6 | காட்சி விதானிப்பு | | |

- மாணவரை இரு குழுக்களாக்கி மேலே தாம் தெரிவு செய்து கொண்ட குறித்த சூழமைவினையே இரு குழுக்களுக்கும் வழங்குங்கள்.
- ஒரு குழு துணைக்கலைப் பயன்பாடு இன்றி நிகழ்த்திக்காட்டவும், மற்றைய குழு தொழிநுட்ப உத்திகளுடன் துணைக்கலைகளைப் பயன்படுத்தி நிகழ்த்திக்காட்டவும் வழிப்படுத்துங்கள்.
- (மாணவர் எண்ணிக்கை குறைந்த சந்தர்ப்பத்தில் குறித்த குழுவே இரு நிலைகளையும் நிகழ்த்திக்காட்டலாம்).
- இரு குழுவினதும் அளிக்கை தொடர்பான அனுபவங்கள் பற்றிக் கருத்துரைக்க இடம் அளியுங்கள்.
- சாதாரணமாகச் சூழலில் கிடைக்கத்தக்க பொருட்களை நுட்பமாகக் கையாள்வதன் மூலமும்
- துணைக்கலைகளைப் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்த முடியும் என்பதனை வலியுறுத்துங்கள்.

  உதாரணம் - சூழலில் கிடைக்கத்தக்க போத்தல், பொலித்தீன் பை போன்றவற்றில் இருந்து ஒலி எழுப்ப முடியும்.
- அவ்வொலியை ஒழுங்கு படுத்திக் குழுவாக இசைப்பதன் மூலம் அரங்கை இசையை உருவாக்கலாம்.
- நாடகத்தின் வலிமைக்குத் தொழிநுட்பம் துணை நிற்கின்றது என்பதை மீள வலியுறுத்துங்கள்.
- நாடகத்தின் உணர்வு நிலைகளை முனைப்புறுத்துவதற்கும் பார்ப்போரிடத்தே தாக்கத்தை உண்டுபண்ணவும் இவை துணை புரிகின்றன.
- மேலும் அழகியல் உணர்வை ஏற்படுத்துவதுடன் ஆற்றுகைக்கான கனதியைக் கொடுப்பதற்கும் இவை உதவுகின்றன.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாடகத் தொழில்நுட்பம் என்றால் என்ன?
- நாடகத்தில் துணைக்கலைகளின் பயன்பாட்டைக் கூறுக.
- துணைக்கலைகளைத் தொழிநுட்பத்துடன் இணைத்துக் கையாளும்போது நாடகம் வலிமையுறும் என்பதை ஏற்பீரா? விளக்கமளிக்குக.
- நாடகத்தில் தொழிநுட்பத்தைக் கையாள்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகளை முன்வைக்குக?
- நாடகத்தில் பயன்படுத்தக் கூடிய தொழிநுட்பக் கருவிகளைப் பட்டியற்படுத்துக.

- காணொளியில் நர்பார்த்த நாடகக்காட்சியை அடிப்படையாகக் கொண்டு, அக்காட்சியை வலுப்படுத்த இசைத் தொழிநுட்பம் எவ்விதம் உதவியது என்பதை முன்வைக்குக.

**உசாத்துணைகள் :**


- தொழிநுட்பக்கலைகள் (அறிமுக விளக்கம்) எஸ். மோசேஸ்
- நுட்பக்கலைகள் -கல்வி வெளியீட்டுத்திணைக்களம்
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி.மௌனகுரு, திரு.க.திலகநாதன்

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.1 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் என்பதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் பற்றிப் பயின்றவர் ஆவார். |
| **செயற்பாடு** | 2.1 | : | நாடகம் (Drama), அரங்கு (Theatre), ஆற்றுகை (Performance), பிளே (Play) என்பவை பற்றிப் பயிலுவோம். |
| **பாடவேளை** | | : | 06 |
| **கற்றற் பேறுகள்** | | : | |

- நாடகம் என்பது தொடர்பில் பல்வேறு அறிஞர்களும் முன்வைத்துள்ள கருத்துக்களை அறிந்திருப்பார்.
- அக்கருத்துக்ளை ஆராய்ந்து தம் சொந்தக் கருத்துக்களை முன் வைப்பார்.
- 'அரங்கு' என்ற பதம் எவையெவற்றை எல்லாம் குறித்து நிற்கிறது என்பதை எடுத்துரைப்பார்.
- 'அரங்கு' என்பது ஒரு பல்பரிமாண விடயம் என்பதை உணர்ந்திருப்பார்.
- நிகழ்த்திக் காட்டப் பெறுவதற்கு உரியதாகப் 'பிளே' (Play) இருப்பதனை ஏற்றுக் கொண்டிருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- அறிஞர் கருத்துக்களைத் தாங்கிய அட்டைகள்.
- 'அரங்கு' என்பதை முனைப்புறுத்தும் பல்வேறு ஒளிப்படங்கள்.
- நாடக ஆற்றுகையொன்றின் சிறு பகுதியைக் கொண்ட இறுவட்டு.
- நாடக எழுத்துருக்கள் சில.

**அறிமுகம்:**

- நாடகமும் அரங்கக் கலைகளுக்கு தளமாக நாடகம், அரங்கு, ஆற்றுகை, பிளே என்பன அமைந்துள்ளதை விளங்கிக் கொள்வதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும். அதன்பொருட்டு அவை ஒவ்வொன்றினதும் பரிமாணங்களை அறிந்து கொள்ளச் செய்வது இங்கு முக்கியம் பெறுகிறது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- விரிவுரை.
- நூல் உசாவுகை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- இங்கு முனைப்புறுத்தப் பெற வேண்டிய விடயங்களாவன.
  - 'நாடகம்' பற்றிப் பல்வேறு அறிஞர்களும் முன்வைத்த கருத்துக்கள்.
  - அக்கருத்துக்கள் தொடர்பிலான கலந்துரையாடல்.
  - 'அரங்கு' என்பது பற்றி நிலவும் வெவ்வேறு பார்வைகள்.
  - நாடகம் - அரங்கு என்பவற்றுக்கு இடையிலான தொடர்பு.

- ‘ஆற்றுகை’ என்பதற்கான விளக்கம்.
- நாடகம், அரங்கு என்பவற்றுடன் தொடர்புறுத்தி ஆற்றுகையை நோக்குதல்.
- பிளே (Play) என்பதனாற் கருதப் பெறுவது.
- நாடகம் - அரங்கு - ஆற்றுகை - பிளே என்பவற்றைத் தொடர்புறுத்துதல்.

- நாடகம் பற்றிப் பல அறிஞர்களாலும் முன்வைக்கப்பெற்ற கருத்துக்கள் கொண்ட தனித்தனி அட்டைகளை வகுப்பின் வெவ்வேறு இடங்களில் வையுங்கள்.
- அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மாணவர்களைக் குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவையும் அட்டையொன்றைத் தெரிந்தெடுக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அந்த அட்டையை மற்றவர்களுக்கும் தெரியுமாறு உயர்திப் பிடிக்கச் செய்யுங்கள்.

- “யாதேனும் ஒரு செயலைப் போலச் செய்தலே நாடகம் ஆகும்.” - அரிஸ்டோட்டில்.
- “உலக இயல்பைப் போலச் செய்தலே நாடகம் ஆகும்.” - பரதர்.
- “வாழ்க்கையின் பிரதிபலிப்பே நாடகம்; அது பழக்க வழக்கங்களைக் காட்டும் நிலைக் கண்ணாடி.” - அலடைஸ் நிக்கோல்.
- நாடகம் என்பது ‘வாழ்க்கையின் ஒரு துண்டம்’ ஆகும். - பேர்னாட்ஷா.
- “சுகம், துக்கம் என்னும் இரண்டையும் உள்ளடக்கும் வகையில் உலகு கொண்டுள்ள தன்மையை அங்க அபிநயங்கள் மூலம் காட்டுதலே நாடகமாகும்.” - பரதர்.
- கதை தழுவி வரும் கூத்தே நாடகம் - அடியார்க்கு நல்லார்.
- “சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறலே நாடகம்.” - இளம்□ரணர்.
- “நாடகம் என்பது இசை, நடனம், சொல்லாடல்கள், நடிப்பு, வேட உடை, ஒப்பனை போன்ற கலைத்துவ மூலகங்கள் மூலம் பார்ப்போரிடத்தே யாதேனும் அழகியல் அனுபவங்களை உணரச் செய்வதற்காக எடுக்கப்படுகின்ற முற்றுமுழுதாக வேறுபட்ட ஒரு கலைப்படைப்பாகும்.” - அபிநவகுப்தர்.

- அறிஞர் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, மாணவரைக் குழுநிலைக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.
- “ ‘நட்’ என்கிற வேர்நிலைச் சொல்லில் இருந்து பிறந்ததே ‘நாடக’ என்ற சொல்லாகும்” என்று குறிப்பிடுகிறார் சமஸ்கிருத நாடக வரலாறு பற்றி எழுதிய இந்துசேகர் என்பவர்.
- “ Dramnoan’ என்ற கிரேக்கச் சொல் ‘நிகழ்த்தப் பெற்றது’ என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப் பெற்றது. அதனடியாகவே Drama என்னும் ஆங்கிலச் சொல் தோன்றியது.
- மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தனித்துவமான சாதனம் நாடகமாகும். அது எல்லாக் காலங்களிலும் பிரதானமானதொரு நடத்தைசார் வடிவமாக உள்ளது.
- நாடகம் ஒரு நிகழ்த்து கலை ஆகும். அது செயல் நிலைப்பட்டது. அது ஒரு வாழ்க்கை அனுபவம். வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளை அங்கு காண முடியும். கருவுக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பெற்ற சம்பவங்களின் அழகியற்பேறாக நாடகம் அமைகிறது. நாடகத்தின்

அடிநாதமாக, ஜீவனாக அமைவது மோதுகை / முரண் ஆகும்.

- இந்த நாடகம் குறித்ததோர் அரங்க வெளியில் நிகழ்கிறது.
- நாடகம் (Drama) என்பதில் இருந்து அரங்கு (Theatre) வேறுபட்டது. எனினும் அவற்றுக் கிடையில் நெருக்கமான தொடர்புகள் உள்ளன. நாடகம் நிகழ்த்திக் காட்டப்பெறுவதுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் இணைத்துக் காட்டுவது அரங்கு (Theatre) ஆகும்.
- தியேட்டர் (Theatre) என்ற சொல் தியேட்ரோன் (Theatron) என்ற சொல்லில் இருந்து தோன்றியது. தியேட்ரோன் என்றால் பார்க்கின்ற இடம் என்பதாகும்.
- எனினும், அரங்கு என்பது வெறும் அரங்கக் கட்டத்தைக் குறிப்பதன்று. அது ஆற்றுவோர், பார்ப்போர், ஆற்றப்பெறும் இடம், ஆற்றப்பெறும் விடயம், அது எவ்வாறு, எச்சூழலில் ஆற்றப்பெறுகிறது என்பது போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதோர் விரிந்த பொருளில் கையாளப்பெறுவது.
- அரங்கு ஓர் அழகியல் வெளி; பார்ப்போரின் சிந்தனையைக் கிளர்த்தும் இடம்; ஆற்றுவோரும் பார்ப்போரும் சிந்தித்துத் தத்தம் எண்ணங்கள் உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொண்டு, தம் உறவை வேறொரு தளத்திற்கு மாற்றும் களம்; மனித வாழ்க்கை அனுபவங்கள் கட்புலனாக முகிழ்த்தெழும் இடம்; முரண்பாடுகளைத் தீர்க்கின்ற, உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற, அழகியல் அனுபவத்தைத் தருகின்ற முறைமையும் களமும் ஆகும்.
- நாடகம் என்பது நிகழ்த்திக் காட்டப் பெறுகின்ற விடயப்பொருள் ஆயின், அரங்கு என்பது அந்நிகழ்த்திக் காட்டலுடன் தொடர்புடைய அனைத்தையும் தொடர்புறுத்திக் காட்டுவது ஆகும்.
- ஆற்றுகை (Performance) என்னும் போது ஒருவருக்கு முன்னால் செய்து காட்டல் என்பதே அர்த்தமாகும். மனித வாழ்வின் பல்வேறு சிக்கல்கள் இங்கு ஆற்றப்பெறுகின்றன. இந்த ஆற்றுகை வெவ்வேறு முறைகளில் நிகழலாம். அது யதார்த்தமாக அன்றேல் மோடிமைப்படுத்தப் பெற்றதாக அமையலாம். ஆற்றுகையில் நடிகனே முதன்மையானவன். பல்வேறு நடிப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி நடிகர் சித்திரிப்பில் ஈடுபடுகிறார். நடிகனின் சித்திரிப்பு வழியாக நிகழ்வதே ஆற்றுகையாகும். ஆற்றுகை முதலில் நடிகனின் மனவெளியில் நிகழ்கிறது. அது பின்னர் நடிகனின் மெய்ப்பாடு வழியாகவும், குரல் வழியாகவும், காண்பியங்கள் வழியாகவும் பார்ப்போர் முன்னிலையில் வெளிப்படுகிறது.
- ஆற்றுகைக்கு அடித்தளமாக அமைவதும் எழுத்து வடிவில் அமைந்ததுமான இலக்கியம் பிளே (Play) ஆகும். சேக்ஸ்பியருடைய நாடகங்கள் சேக்ஸ்பியரின் Play எனக் குறிப்பிடப் பெறுவதைப் போன்று, காளிதாசன், இப்சன் போன்றோரின் நாடகங்களும் Play என்றே குறிப்பிடப்பெறும். அதாவது, நாடகமாக ஆற்றுகை செய்யப் பெறுவதற்குரியது பிளே ஆகும்.

- நாடகமும் அரங்கியலும் கற்கைக்கு நாடகம், அரங்கு, ஆற்றுகை, பிளே என்பது பற்றிய கற்கை மிக அடிப்படையானது என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- இவ்வடிப்படை எண்ணக்கரு தொடர்பில் மாணவர்களைத் தூண்டுங்கள். அதற்கு அனுசரணை யாகச் சிறிய வினாக்களை வழங்கி, வாசிப்பில் ஈடுபடுத்தி, முன்னளிக்கை செய்ய வழிப் படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- நாடகம் என்பதற்கு உள்ளுறையாக அமைந்துள்ள விடயங்கள் யாவை?
- நாடகம் என்பதற்கு விளக்கமளித்த அறிஞர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
- அவர்களால் முன்வைக்கப்பெற்ற கருத்துக்கள் யாவை?
- அரங்கு என்பதற்கு முன்வைக்கத்தக்க விளக்கங்கள் யாவை?
- ஆற்றுகை என்பதனாற் கருதப் பெறுவது யாது?
- நாடகம், அரங்கு, ஆற்றுகை, பிளே என்பவற்றுக்கு இடையிலான தொடர்பு பற்றி எடுத்துக் கூறுக.

**உசாத்துணைகள்:**

- அரங்கின் பரிமாணங்கள் - தொகுப்பு, மதுசூதனன்
- சே. இராமனுஜம் நாடகக் கட்டுரைகள் - தொகுப்பு சி. அண்ணாமலை.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர். கா.சிவத்தம்பி<br>பேராசிரியர். சி.மௌனகுரு<br>திரு.க.திலகநாதன்<br>(திருத்திய இரண்டாம் பதிப்பு)
- சமூக மாற்றத்திற்கான அரங்கு - கலாநிதி. க. சிதம்பரநாதன்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.2 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான அருஞ்சொற் பதங் களுக்குப் பொருள் விளக்கம் அளிப்பார். |
| **செயற்பாடு** | 2.2.1 | : | நாடக மூலகங்களில் ஒன்றாகிய நடிப்புப் பற்றிய எண்ணக்கருவினை விளங்கிக் கொள்வோம். |
| **பாடவேளை** | | : | 02 |

**கற்றற் பேறுகள்:**

- நடித்துக் காட்டி 'நடித்தல்' பற்றி விளக்கம் தருவார்.
- செயன்முறை ஊடாக நடிப்புக் கோட்பாட்டினைச் சுயமாக எடுத் துணர்த்துவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- ஒளிப்படங்கள்.
- ஒளிப்பேழைகள்.
- நடிப்புச் செயன்முறை.

**அறிமுகம்:**

நடிப்பானது நாடகத்தின் அடிப்படை மூலகங்களுள் ஒன்று என்பதனையும், நடிப்பே நாடகத்தின் உயிர் என்பதனையும், நடிகனும் அவனது கலையான நடிப்பும் நாடகத்தின் உணர்ச்சி நிலையினைப் பாத்திரங்களுக்கூடாக வளர்த்தெடுத்துச் செல்லும் என்பதனையும் செயன்முறை ரீதியாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். காலந்தோறும் வளர்ச்சி பெற்று வருகின்ற நடிப்புக் கோட்பாடுகள், நடிகரின் வெளிப்பாட்டு ஊடகமான நடிப்பானது பார்ப்போருடன் எவ்விதம் தொடர்புபடுகின்றது என்பதனை எண்ணக்கரு நிலையில் விளக்கம் செய்ய முற்பட்டுள்ளமையை எடுத்துரைக்க வேண்டும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- குழுமுறைக் கலந்துரையாடல்.
- செயன்முறை.
- முன்னளிக்கை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நடிப்பு என்பது அடிப்படையில் உணர்ச்சிகளின் வெளிப்பாடாகக் கொள்ளப்பெறுகின்றது.
- 'நடிப்பு' என்ற சொல்லிற்குள் ஒருவிதப் பொய்மை ஒழிந்திருக்கின்றது. நாளாந்த வாழ்வில் 'நடித்தது போதும்' 'நல்லா நடிக்கிறார்' போன்ற பதப் பிரயோகங்கள் உண்மைத்தன்மை அற்ற போலி என்பதனை எண்ண வைக்கின்றன.
- மேடையில் நடிகன் பாத்திரமாகி நிகழ்த்தும் அரங்கச் செயல்கள் யாவும் பார்ப்போரைப் பொறுத்தவரையில், 'பொய்' எனத் தெரிந்து கொண்டும் தமக்கு முன் நிகழ்பவற்றை உண்மையான நிகழ்வாக, அக்கணம் ஏற்கத் தூண்டுகின்றது. 'பொய்' எனத் தெரிந்து

கொண்டே ‘உண்மை’ என அவர்கள் ஏற்கத் தூண்டப்படுகின்றனர். நாடகத்தில் நடிகன் பாத்திரமாகப் பாவனை செய்யப் பார்ப்போரும் அப்பாத்திரமாகப் பாவனை செய்ய முற்படுகின்றனர். நடிகன் வேறு; அவர் ஏற்கும் பாத்திரம் வேறு என்பதையும் பார்ப்போர் விளங்கிக் கொள்வர். போலச் செய்யும் செயல்கள் பொய்யாக இருப்பினும் நடிகர் என்பவர் உண்மையானவரே.

- நவீன, பின்நவீனத்துவ அரங்கச் சூழலில் நடிகர், நடிப்பு வெளிப்பாடு என்பன போலிகளுக்கு இடமளிக்காத, குறித்த சம்பவம், நிகழ்வு தொடர்பான உண்மை நிகழ்வுகளை உண்மையான தமது உணர்ச்சிகளைத் தம் நிலையில் நின்று வெளிப்படுத்துவதற்கு அரங்கு ஓர் ஊடகமாகக் கையாளப் பெறுகின்றது.
- உண்மை / யதார்த்த நிகழ்வை, யதார்த்தச் சூழலில் பார்ப்போர் முன்னிலையில் வெளிப்படுத்தி சமூக மாற்றத்திற்கான செயற்பாட்டில் ஆற்றுவோரும் பார்ப்போரும் இணைந்த செயற்திட்டத்தினை வடிவமைப்பதாகவும் அமைகின்றது. ஒகஸ்தாபோலின் அரங்க நடிப்பு என்பது ‘பொய்’ என்ற அர்த்தத்திற்குச் சிறிதும் இடமற்ற ஒன்றாகி விடுகின்றது.
- மேற்குறித்தவாறான, அவற்றுடன் தொடர்புபட்டவகையிலான நடிப்புக் கோட்பாடுகள், நடிப்பில் ஈடுபடும் போது மாணவர்களுக்கு ஏற்படும் அனுபவங்கள் போன்றவற்றைக் கலந்துரையாடல்கள், விவாதங்கள் போன்றவற்றிற்கு இடமளிக்கும் வகையில் குழு நிலையில் திட்டமிடலாம்.
- மனித சமூகத்தின் தொன்மையான நடிப்பு, வேட்டை மற்றும் புணர்ச்சிக்கான அசைவுகளை அவற்றிற்கான தாளங்களைத் தமது உடல் வழியாக நிகழ்த்துவதன் மூலம் உருவாக்கப்பட்டது. ஒரு உடல் இன்னொரு உடலாக மாறுவதான செயல் நிகழ்வது சாத்தியமானது.
- நடிப்பில் உடல், குரல், மனம் போன்றவற்றின் தொழிற்பாடுகள் பாத்திரமாக வாழ்வதிலும் பாத்திரமாகச் செய்து காட்டுவதிலும் பெறும் செல்வாக்கினைக் கலந்துரையாடுமாறு மாணவர் களைத் தூண்டலாம்.
- ஸ்ரனிஸ்லவெஸ்கி, பேட்டோல் பிறெக்ட், அன்ரன் செக்கோவ், பரதர் போன்றோரின் நடிப்புத் தொடர்பான கோட்பாடுகள் முன்வைக்கும் விடயங்களைக் குழுமுறைக் கலந்துரையாடலுக்குத் தூண்டலாம்.
- மேலே குழுக்களாக இணைத்து திரட்டிய விடயங்களை முன்னளிக்கையாக வெளிப்படுத்த வழிப்படுத்தலாம்.

**பிரயோகம் –**

- நடிப்புக்கான விளக்கத்தினை / புரிந்து கொள்ளலை ஏதாவது ஒரு செயற்பாட்டின் பின்னர் மாணவர்களுடன் ஆசிரியர் கலந்துரையாடித் திரட்டல்.
- மேலைத்தேயத்தில் நடிப்பில் சொல்லாடலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம், கீழைத்தேயத்தில் உடலுக்கு / உடல் மொழிக்குக் கொடுக்கும் முக்கியத்துவமாக விருத்தி பெறுகின்றது.

நடிப்பில் - உடல்மொழி

நடிப்பில் - வார்த்தைகள்

பெறும் இடத்தினைக் கலந்துரையாடவும் அவற்றை விருத்தி செய்வதற்காக வழங்கப்படும் பயிற்சிகளைச் செய்துபார்க்கவும், கலந்துரையாடவும் வழிப்படுத்தலாம்.

**கணிப்பீடு:**

- ‘நடிப்பு’ என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- நடிப்பு என்பதற்குத் திருக்குறள், கூத்தநூல், நாட்டிய சாஸ்திரம் போன்றவைகள் முன்வைக்கும் விளக்கங்களைப் பட்டியற்படுத்துக.
- ‘அகத்திலிருந்து புறத்திற்கும், புறத்திலிருந்து அகத்திற்கும் செல்லும் பயணத்தில் மேலைத்தேய நடிப்பு முறைமையும் சந்திக்கின்றது’ இக்கூற்றை விளக்குக.
- ஸ்ரெனிஸ்லவெஸ்கி, பரதர், பேட்டோல்ட் பிறெக்ட் போன்றோரின் நடிப்பு எண்ணக்கருக்களை பட்டியற்படுத்துக.

தேர்ச்சி 2.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

தேர்ச்சி மட்டம் 2.2 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான அருஞ்சொற் பதங் களுக்குப் பொருள் விளக்கம் அளிப்பார்.

செயற்பாடு 2.2.2 : நாடக எழுத்துரு பற்றி விளக்கம் பெறுவோம்.

பாடவேளை : 02

**கற்றற் பேறுகள்:**

- நாடக எழுத்துரு என்பதற்கான விளக்கத்தைக் கண்டு பிடித்திருப்பார்.
- நாடக எழுத்துருவில் உள்ளடங்கும் விடயங்களைக் கூறுவார்.
- நாடக எழுத்துருக்கள் சிலவற்றைப் பார்வையிட்டு நாடக எழுத்துருவிற்குரிய அமைப்பைப் புரிந்து கொண்டிருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நாடக எழுத்துருக்கள்.

**அறிமுகம்:**

நாடக எழுத்துரு ஆற்றுகைக்கு மிகவும் அவசியமான ஒன்றாகக் கருதப்பெறுகின்றது. நடிகரை, நெறியாளரை, விதானிப்பாளரை, வழிநடத்துவதற்கான அடிப்படையாக அமைவது எழுத்துரு என்பதனை விளங்கிக் கொள்வது இங்கு எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- கருத்துரைகள்

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடகத்திற்குப் பொருத்தமான சம்பவங்கள் அன்றேல் அதுபோன்ற சம்பவங்கள் சிலவற்றை நடிப்பதற்குப் பொருத்தமானவாறு தாக்கவன்மையான முறையில் எழுத்து வடிவில் ஒழுங்கு படுத்தும் அருவ மூலகம் நாடக எழுத்துரு ஆகும். இது நாடகாசிரியரின் சிந்தனையின் கலாபூர்வமான வெளிப்பாடாக அமைவது.
- நாடக எழுத்துரு என்பது வார்த்தைகளின் கலையன்று வார்த்தைகளைப் பயன்படுத்தும் கலை ஆகும்.
- நாடகம் காலம் காலமாக வாழ்வதற்கான காரணம் நாடக எழுத்துருக்களே ஆகும்.
- நாடக வரலாற்றினை நோக்கும் போது எழுத்துரு பல்வேறு வகையாக வளர்ந்துள்ளது. செந்நெறி நாடக எழுத்துரு, மிகைப்பாட்டு நாடக எழுத்துரு, மனோரீதிய நாடக எழுத்துரு, யதார்த்த நாடக எழுத்துரு என அவை பலவகைப்படும்.
- நாடகத்தினை எழுதுபவர் நாடகாசிரியர் ஆவார். இவர் அனுபவப் படிநிலைகளில் இருந்து கொண்டு நாடக எழுத்துருவாக்கப் பணியினை தொடங்கி, அது மேடையேற்றப்படும் பொழுது காட்சி நிலையில் எவ்வாறு அமையும் என்பதைத் தனது மனக்கண்ணில் ஓடவிட்டுக் கொண்டு

நாடகத்தினை எழுதுவார்.

- எழுத்துருவானது நாவல், சிறுகதைகளை விட, தகவல்களைக் கூடுதலாகக் கொண்டிருக்கும். அதாவது, நாவலில் நேரடியாகச் சொல்லும் ஒன்றை நாடகத்தில் நேரடியாகச் சொல்ல முடியாது. அவை பேசும் அன்றேல், செய்யும் பாத்திரத்தின் பெயர் அவை தன்மையில் பேசும் உரையாடல், அவை புரியும் தொழிற்பாடுகள் போன்றவை எழுத்துருவில் உள்ளடங்கி யிருக்கும்.
- நாடக எழுத்துருவாக்கத்தில் மொழி முக்கியமானது. மொழி எனும் போது எத்தகைய மொழி என்பது முக்கியம். இலகுவான பேச்சு உரை நடையா? கவிதையா? செந்நெறிப்படுத்தப்பட்ட மொழியா? என்பனவற்றைக் கவனிப்பதோடு இவை தொடர்பாக எமது பண்பாட்டில் பல்வேறு வகையான எழுத்துருக்கள் உள்ளன.
எடுத்துக்காட்டாக, கவிதை நாடகம் எழுதியோராக முருகையன், அம்பி, மகாகவி போன்றோரை யும் பேச்சு வழக்கை மையப்படுத்தி நாடகம் எழுதியோராக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- நாடக எழுத்துரு ஒன்றை அமைக்கும் போது என்ன மோடியில் அமைகின்றது என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- நாடக எழுத்துருவின் மூலம், பாத்திரங்கள், காலம், துணைக்கலைகள், களம் மேடைப்பொருள்கள், கைப்பொருள்கள், மோதுகை, கரு, கதைப்பின்னல், உரையாடல் போன்றவற்றை நாம் அறிந்து கொள்ள முடியும்.
- ஆசிரியரிடமிருந்து பார்ப்போருக்கு இடைப்பட்ட நபர்கள் மூலம் பேசும் ஒரு வடிவம் எழுத்துரு ஆகும். அது பல்வேறு அரங்கக் கலைஞர்கள் ஊடாக வழங்கப்படுகின்றது.
- நாடக எழுத்துரு இலக்கியமாவது மட்டுமல்லாது நடிகரால் உயிரூட்டப்பெற்று ஆற்றுகை வடிவமாக மாறும் தன்மையுடையது.
- நடிகன் தனது பாத்திரப் பண்புகளைப் பெறுவதற்கு நாடகாசிரியர் பாத்திரம் பற்றிய தகவல்களை மிக நுட்பமாகவும் பன்முகப்பட்ட முறையிலும் வழங்குவார்.
- மேலும், நாடகத்தின் பாத்திரப் படைப்பு எனக் கூறுபவை யாவும் எழுத்துருவின் மேற்தளத்தில் தென்படாது. நாடகாசிரியர் இதனைச் சிறிய அளவில் மட்டும் காட்டுவதோடு அவற்றின் முழுமை நெறியாளரின் கைவண்ணத்தில் முழுமை பெறுவதாக அமையும்.
- எழுத்துருவின் போக்கில் என்ன விவரிக்கப்பட்டுள்ளது என்பதில் கால ஒழுங்கு முறையான தகவல்களை அது கொண்டிருப்பதோடு, அத்தகவல்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய தாகவும் இருக்கும்.
- பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாடக எழுத்துருவில் கதைப்பின்னல் காணப்பெறும். எனினும் சில சமயங்களில் அது காணப்படாமலும் இருக்கலாம்.
- நாடக எழுத்துருவானது நடிப்பதற்காகப் படைக்கப்படும் ஒன்று. ஆகையால் பார்ப்போரை நோக்கமாகக் கொண்டது. எனினும், நாடக எழுத்துருவை வாசிப்பதன் மூலம் ஒருவர் ஒரு

குறித்த அளவுக்கு ரசனையைப் பெறலாம். அந்த ரசனையானது நாடகத்தைப் பார்ப்பதால் கிடைக்கும் ரசனையை விட வேறுபட்டதாகும்.

- நாடகத்தைப் படைப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றல் நாடக எழுத்துருவில் பொதிந்திருத்தல் வேண்டும்.
- நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டே நாடகம் படைக்கப்படுதல் சிறந்தது.
- நாடக ஆசிரியர்களாக க. கணபதிப்பிள்ளை, குழந்தை ம. சண்முகலிங்கம், நா. சுந்தரலிங்கம் போன்றவர்களைக் கண்டுகொள்ளலாம்.

**கணிப்பீடு:**

- நாடக எழுத்துரு என்பதற்கு விளக்கம் தருக.
- நாடக எழுத்துருவில் உள்ளடங்கும் விடயங்களைப் பட்டியற்படுத்துக.
- நாடக எழுத்துருவின் வகைப்பாடுகளைக் குறிப்பிடுக.
- உலகில் சிறந்த நாடகாசிரியர்கள் சிலரின் பெயர்களைக் கூறுக.
- நாடக எழுத்துரு ஒன்றினை ஆக்குவதற்கு நாடகாசிரியரில் காணப்படும் சிறந்த பண்புகளைக் குறிப்பிடுக.

**உசாத்துணைகள்:**

- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
  பேராசிரியர் சி. மௌனகுரு.
  பேராசிரியர் க. திலகநாதன்.
- ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் 12 (பழைய பாடத்திட்டம்)

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.2 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான அருஞ்சொற் பதங் களுக்குப் பொருள் விளக்கம் அளிப்பார். |
| **செயற்பாடு** | 2.2.3 | : | நாடகத் தயாரிப்புப் பற்றி விளக்கம் பெறுவோம். |
| **பாடவேளை** | | : | 02 |

**கற்றற் பேறுகள்:**

- நாடகத் தயாரிப்பு என்பதற்கு விளக்கம் தந்திருப்பார்.
- நாடகத் தயாரிப்பு என்பது ஒரு கூட்டுச் செயற்பாடு என்பதை விளங்கியிருப்பார்.
- நாடகத் தயாரிப்பாளரின் பணிகளை எடுத்துரைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பிறிசில் போட்.
- பெயின்ரிங் ஸ்ரிக்.

**அறிமுகம்:**

நாடகத் தயாரிப்பு என்பது நாடக ஆற்றுகையின் அடிப்படையான செயலொழுங்கு என்பதையும், நாடக தயாரிப்பை மேற்கொள்பவர் நாடக தயாரிப்பாளர் என்பதையும் அறிந்து,அவரின் பணிகள் தொடர்பாக விளக்கம் பெறுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- கருத்துரைகள்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடகாசிரியரால் எழுதப்பெற்ற நாடக எழுத்துருவை உயிரோட்டமான ஒரு கலையாக மேடையில் படைப்பதற்கு அனைத்து விதமான செயலொழுங்குகளையும் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தும் செயற்பாடு நாடகத் தயாரிப்பு ஆகும்.
- நாடகத் தயாரிப்புத் தொடர்பில் அடிப்படையான பொறுப்பை வகிப்பவர் நாடகாசிரியர் ஆவார்.
- எழுதப்பெற்ற நாடக எழுத்துருவைக் கலையாக மேடையில் மீளப்படைக்கும் நெறியாளருக்கு உதவுபவர் தயாரிப்பாளர் ஆவார்.
- நாடகத் தயாரிப்பினை இலகுபடுத்திக் கொள்வதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பவர் தயாரிப்பாளர் ஆவார்.
- நாடகத் தயாரிப்பிற்குத் தேவையான நிதி தொடர்பான அனைத்துச் செலவுகளுக்கும் பொறுப்பானவர் நாடகத் தயாரிப்பாளர் ஆவார்.
- நாடகத் தயாரிப்பாளரின் பணிகளாவன விளம்பரம் செய்தல், நுழைவுச் சீட்டுகளை விற்பனை செய்தல், நாடக எழுத்துருவைத் தெரிவு செய்தல், நெறியாளரைத் தெரிவு செய்தல், நடிகர்களை

ஒழுங்கு செய்து கொடுத்தல் போன்றவை ஆகும்.

- நாடக ஆற்றுகை தொடர்பான அனைத்து விடயங்களையும் ஒழுங்கமைத்து முகாமை செய்பவர் நாடகத் தயாரிப்பாளர் ஆவார்.
- நாடகத் தயாரிப்பாளர்களை அடிப்படையில் மூன்று வகையாகப் பிரித்து நோக்கலாம்.
    1) தொழில்முறைத் தயாரிப்பாளர்.
    2) பயில்முறைத் தயாரிப்பாளர்.
    3) கலைத்துவத் தயாரிப்பாளர்.
- தொழில்முறைத் தயாரிப்பாளர்கள் நாடகப் பயன்பாடுள்ள அனைத்து நாடுகளிலும் உள்ளனர். இவர்கள் வர்த்தக நோக்கம் கொண்டவர்கள். இவர்களின் நோக்கம் இலாபம் பெறுவது ஆகும்.
- பயில்முறைத் தயாரிப்பாளர் எனும் போது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நாடகம் செய்பவர்கள் தொழிலுக்காக அவ்வாறு பயில்முறைத் தயாரிப்பாளராக இருப்பதைக் காணமுடிகிறது. அவர்களுக்குத் தொழில் என்பதைவிட தமது நிறுவனம் முக்கியமாகிறது.
- கலைத்துவமாகத் தயாரிப்பவர்கள் தமது கலைத்துவ ஆர்வத்துடன் நாடகங்களைத் தயாரிக்கின்றார்கள்.
- எமது பண்பாட்டில் பெரும்பாலும் நெறியாளரே தயாரிப்பாளராகவும் இருப்பார்.

**கணிப்பீடு:**

- நாடகத் தயாரிப்பு என்பதற்கு வரைவிலக்கணம் தருக.
- நாடகத் தயாரிப்பாளரின் பணிகளைக் குறிப்பிடுக.
- நாடகத் தயாரிப்புத் தொடர்பில் இலங்கையில் காணப்படும் நிலைமைகளை விளக்குக.

**உசாத்துணைகள்:**

- அரங்கு - க. திலகநாதன்.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
  பேராசிரியர் சி. மௌனகுரு.
  திரு. க. திலகநாதன்.

**தேர்ச்சி 2.0** : நாடகமும் அரங்கக்கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : கிரேக்க அரங்கிற்கான தோற்றுவாய்களையும் அதன் வளர்ச்சிக்குப் பங்களித்த காரணிகளையும் பயின்றவர் ஆவார்.

**செயற்பாடு 2.3.1** : "கிரேக்க அரங்கின் தோற்றம் பற்றிக் கற்போம்".

**கற்றற் பேறுகள்** :-

- கிரேக்க அரங்கின் தோற்றப் பின்புலத்தை விளங்கிக் கூறுவார்.
- உலக அரங்க வளர்ச்சிக்குக் கிரேக்க அரங்கு அடித்தளம் இட்டது என்பதை உணர்ந்திருப்பார்.
- கிரேக்க அரங்கின் தோற்றத்திற்கு காரணமான சடங்குப் பின்புலத்தை விளங்கி இருப்பார்.

**பாடவேளை** : 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கிரேக்க நாடக எழுத்துருக்கள்.
- கிரேக்க நாடகம் சார் ஒளிப்படங்கள்.

**அறிமுகம்** :

கிரேக்க அரங்கு தோற்றம் பெற்ற சுருக்க வரலாற்றுப் பிண்ணணியையும், உலக அரங்கு நீட்சி பெறுவதற்கு அடித்தளமாய் அமைந்த கிரேக்க அரங்கின் தோற்றப் பிண்ணணியையும் இனம் கண்டு கொள்வதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- விமர்சனம்.
- விவாதம்.
- குழுக்கலந்துரையாடல்.
- நூல் உசாவுகை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- கிரேக்க நாடக வகைகள் மற்றும் அவற்றின் தோற்றம் என்பன பற்றித் தாம் அறிந்தவை தொடர்பில் வினாவிடைப்பாங்கில் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.

- மேலும் கிரேக்க அரங்கின் தோற்றம் தொடர்பாகப் பின்வரும் அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கிரேக்க அரங்கு சடங்குப்பின்புலத்தினூடு தோற்றம் பெற்றது.
- டயோனீசஸ் சடங்குடன் தொடர்புடைய இரட்டைப் புல்லாங்குழல் வாசிப்புடன் நிகழ்த்தப்படுகின்ற ஆடல், பாடல் இணைந்த டித்திராம் பாடலில் இருந்து கிரேக்க திறஜெடி தோன்றிற்று என்பர்.
- டித்திராம் பாடலின்போது டயோனீசஸின் உருவம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும்.
- ஊர்வலத்தின்போது சில இடங்களில் தரித்து நின்று பாடுவர், இது ஸ்ரசிமன் எனப்படும்.
- கூட்டாக ஆடிப்பாடுவோர் (குரவைப்பாடகர்) கோரஸ் என அழைக்கப்பட்டனர்.
- கோரஸில் இருந்தே பிற்காலத்தில் திரஜெடி விருத்தி பெற்றது.
- கொமெடி, சற்றயர் என்பனவும் டயோனீஸியஸ் சடங்குடன் தொடர்புடைய விழாக்களினூடு தோற்றம் பெற்றவையே.
- வைன், கருவளத்திற்குரிய கடவுளாகக் கருதப்பட்ட டயோனீஸியஸ் வழிபாடு தியோசிஸ் எனும் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.
- இதனது வளர்ச்சியே காலப்போக்கில் நாடகத்தோற்றத்திற்குக் காரணமானது.
- கிரேக்க அரங்கின் அடித்தளத்திற்கு தெஸ்பிசின் பிரதான பணி வலுச்சேர்த்தது
- கிரேக்க அரங்குசார் தகவல்களைத் திரட்டுவதற்கு உதவும் சான்றாதாரங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**பின்வரும் அம்சங்களை மீள வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.**

- கிரேக்கத்தில் நம்பிக்கையின் அடிப்படையில் பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்பட்டன.
- விதி, சாபம் என்பன மனிதனில் இருந்து பிரிக்கமுடியாதவை என கிரேக்கர்கள் பெரிதும் நம்பினர்.
- டயோனிஸியஸ் சடங்குடனான டித்திராம் ஆற்றுகை.
- ஊர்வலப்பண்புடன் நிகழ்த்தப்பட்ட ஆற்றுகை.
- பலியிடுதல் பண்பு ஆரம்ப காலத்தில் நரபலியும் பின்னர் மிருக பலியும்.
- குறித்த இடத்தில் ஆற்றுகை செய்யும் மரபு.
- ஆரியோனின் செழுமைப்பாட்டு மொழிக்கையாள்கை.

**கோரசும் நடிகரும்**

- முரண்பாடுகள் குறைந்த கூட்டுச் சமூகப் பண்பு நிலவிய புராதன காலத்தில் கிரேக்கத்தில் கோரஸ் கூட்டாக ஆற்றுகை நிகழ்த்தியது.
- முரண்பாடுகள் தோன்றி வலுப்பெற, தனிமனிதப் பிரச்சினைகள் மேலோங்கியதன் விளைவாகக் கிரேக்க அரங்கில் முதலாம், இரண்டாம், மூன்றாம் நடிகர் தோற்றம் பெற்று திரஜெடி விருத்தி அடைந்தது.

**கணிப்பீடு**

- கிரேக்க அரங்கின் தோற்றம் பற்றிக் கூறுக.
- கிரேக்க அரங்கின் அடிப்படைகளை மீள நினைவுபடுத்திக் கூறுக.
- கிரேக்க அரங்கின் தோற்றம் பற்றிப் பத்திரிகைக்கான கட்டுரை வரைக.
- கிரேக்க அரங்கு பற்றி அறிய உதவும் சான்றாதாரங்களைப் பட்டியற்படுத்துக.
- சான்றாதாரங்களின் உதவியுடன் கிரேக்க அரங்கத் தோற்றம் பற்றிய தகவல்களைத் திரட்டுக.

**உசாத்துணைகள்:**

- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி.
- அரங்கு – க.திலகநாதன்.
- கவிதையியல் - அரிஸ்டோட்டில் (மொழிபெயர்ப்பு அ.அ.மணவாளன்).
- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு – கோகிலா மகேந்திரன்.
- அன்டிகனி –மொழிபெயர்ப்பு குழந்தை ம.சண்முகலிங்கம்.

**தேர்ச்சி 2.0** : நாடகமும் அரங்கக்கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : கிரேக்க அரங்கிற்கான தோற்றுவாய்களையும், அதன் வளர்ச்சிக்குப் பங்களித்த காரணிகளையும் பயின்றவர் ஆவார்.

**செயற்பாடு 2.3.2** : "கிரேக்க அரங்கில் நடிகனின் பங்கு பற்றிக் கற்போம்".

**கற்றற் பேறுகள் :**

- கிரேக்க அரங்கில் நடிகனின் தோற்றத்தையும் அதில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளையும் எடுத்துரைப்பார்.
- கிரேக்க அரங்கில் நடிகனின் முக்கியத்துவத்தை விளங்கியிருப்பார்.
- நடிகனின் நடிப்புப்பாணி பற்றி அறிந்திருப்பார்.

**பாடவேளைகள் : 02**

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கிரேக்க நாடக எழுத்துருப் பகுதிகள்.
- you tube காணொளிக் காட்சித்துண்டங்கள்..
- Mp3 Player.
- ஒலிப்பேழை.

**அறிமுகம்**

கிரேக்க அரங்கில் நடிகனின் தோற்றப் பிண்ணணியையும் அரங்க வளர்ச்சியில் அதன் முக்கியத்துவத்தையும் பற்றிக் கற்றலே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- முன்னளிக்கைகள்.
- கலந்துரையாடல்கள்.
- விரிவுரை.
- நூல் உசாவுகை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- கிரேக்க திரஜெடி நாடக ஆற்றுகையின் காட்சித்துண்டம் ஒன்றினைக் காட்சிப்படுத்துங்கள்.

- அன்றேல், ஒலிப்பேழையின் உதவியுடன் சொல்லாடல்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள். (ஈடிப்பஸ் மன்னன் அல்லது அன்ரிகனி) அதில் இடம்பெற்ற கோரஸ், நடிகரது சித்திரிப்புப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**கிரேக்க அரங்கில் நடிகனின் தோற்றம்**

- டயோனீசியஸ் தெய்வத்தைப் போற்றிப் பாடப்பெற்ற டித்திராம் பாடல்கள் 50 பேர் கொண்ட கோரஸ் பாடகர்களால் ஆரம்ப காலங்களில் பாடி ஆடப்பெற்று வந்தன.
- பின்னர் செழுமை மிகு பாடல்களை இணைத்து டித்திராமின் இலக்கியத்தரத்தைச் சில கவிஞர்கள் உயர்த்தினர். அவர்களுள் அரியோன் (Arion) குறிப்பிடத்தக்கவர்.
- டித்திராம் நடனத்திற்கு வட்டவடிவம் கொடுத்தவரும் அவரே எனக் கூறப்படுகின்றது.
- தொடர்ந்து, விடய உள்ளடக்கம் பொதிந்த கவிதைகளைப் புகுத்தி டித்திராம்பில் பெரிய மாற்றங்களைச் செய்தவர் தெஸ்பிஸ் (Thespis) ஆவார்.
- உலகின் முதல் நடிகனும் அவரே ஆவார்.
- பாத்திரம் ஒன்றினைக் கோரசின் தலைவனுக்கு அவர் வழங்கினார்.
- அத்தலைவன் “கிப்போகிரைட் (Hipokrite) என அழைக்கப்பட்டான்.
- ஆங்கிலத்தில் இதன் பொருள் பாசாங்கு செய்பவன் என்பதாகும்.
- பின்னர் இது நடிகன் என்றபொருளில் வழங்கப்பெற்றது.
- கிரேக்கத்தில் இதற்கு இரு கருத்துக்கள் நிலவுகின்றன.
- பதில் சொல்பவர் (Answers)
- வியாக்கியானிப்பவர் (interpreter)
- கோரசின் முதல் நடிகன் ஆரம்பத்தில் முகத்தில் வெள்ளை □சியும் பின்னர் சிறு கோடுகளை இட்டும் அதனைத் தொடர்ந்து வேடமுகம் (Mask) அணிந்தும் தன்னை வேறுபடுத்திக்காட்டினான்.
- கோரஸ் குழுவின் தலைவனுக்கும் கோரஸ் குழுவினருக்கும் இடையிலான வினாவிடையில் அமைந்த சொல்லாடலினூடே கிரேக்க திரஜெடி விருத்தி பெற்றது என்பர்.
- உலகிற்குச் சித்திரிப்பை முதன் முதலில் அறிமுகம் செய்தவர் தெஸ்பிஸ் ஆகையால் பிற்காலத்தில் நடிகரைத் தெஸ்பியன்ஸ் (Thespians) என அழைக்கும் மரபு உருவாயிற்று.

. அவர்களுள் அரியோன் (யுசழைெ) குறிப்பிடத்தக்கவர்.

- தெஸ்பிசைத் தொடர்ந்து ஈஸ்கலஸ் இரண்டாவது நடிகரையும் சோபோகிளிஸ் மூன்றாவது நடிகரையும் தோற்றுவித்து அரங்க வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர்.
- அரங்க வரலாற்றுத் தொடர்ச்சியைக் குறிக்கும் சொற்றொடராகத் தெஸ்பிசின் வண்டி (the card of thespis) என்பது பயன்படுத்தப்படுகின்றது.
- கிரேக்க அரங்கில் கோரஸ் உட்பட அனைத்துப் பாத்திரங்களும் ஆண் நடிகர்களாலேயே சித்திரிக்கப்பெற்றன.
- மேடையில் ஒரு சந்தர்ப்பத்தில் உச்ச அளவாக இரண்டு அன்றேல் மூன்று நடிகரே நடிப்பில் ஈடுபட்டனர். இதனால் ஒரு நடிகர் ஒன்றுக்கு மேற்பட்ட வகிபாகங்களை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
- அனைவரும் வேடமுகம் அணிந்து நடித்தனர்.
- வேடமுகத்தின் வாய்ப்பகுதியில் புனல் போன்ற அமைப்பும் காலில் உயரமான பாதணி வகையும் தலையில் கொண்டையும் அணிந்திருந்தனர்.

**கணிப்பீடு**

- கிரேக்க அரங்கில் நடிகனின் தோற்றத்திற்குப் பங்களித்த நிலைமைகளை எடுத்துக் கூறுக.
- கிரேக்க அரங்கில் நடிகனது முக்கியத்துவம் பற்றி விளக்கம் அளிக்குக.
- கிரேக்க அரங்கில் நடிகனது நடிப்புக்கு உதவிய அம்சங்களை முன்வைக்குக.
- கிரேக்க அரங்கில் கோரசினது முக்கியம் பற்றி மேடைப்பேச்சொன்றை நிகழ்த்துக.

**உசாத்துணைகள்:**


- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி.
- நாடக வழக்கு – தொகுப்பு க.ஸ்ரீகணேசன்.
- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - கோகிலா மகேந்திரன்.
- அரங்கியலுக்கான ஆற்றுப்படை - இரா.ஜெகநாதன்.

**தேர்ச்சி 2.0** : நாடகமும் அரங்கக்கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : கிரேக்க அரங்கிற்கான தோற்றுவாய்களையும் அதன் வளர்ச்சிக்குப் பங்களித்த காரணிகளையும் பயின்றவர் ஆவார்.

**செயற்பாடு 2.3.3** : “கிரேக்க அரங்கவெளியின் கட்டமைப்பை இனங்காண்போம்”.

**கற்றற் பேறுகள் :**

- கிரேக்க அரங்கவெளியின் அமைப்பை வரைந்து காட்டுவார்.
- அரங்க வெளியின் பகுதிகளை இனங்காண்பார்.
- அரங்க வெளியின் பண்புகளைக் கூறுவார்.
- ஆற்றுகையில் அரங்க வெளியின் செல்வாக்கை உணர்ந்திருப்பார்.

**பாடவேளைகள்** : 02

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- கிரேக்கப் பேரரங்கின் ஒளிப்படங்கள்(புராதனம், பிற்காலம்).
- கிரேக்க திறஜெடி நாடகக் காணொளிகள், சலனப்படங்கள்.

 உதாரணம் : Antigone full movie (You Tube).

**அறிமுகம் :**

- கிரேக்க அரங□க வெளியின் கட்டமைப்பையும் ஆற்றுகையில் அரங்க வெளியின் தாக்கத்தையும் கற்றுக் கொள்ளலே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்** :

- முன்னளிக்கை முறை.
- கண்காட்சி அன்றேல் காட்சிப்படுத்தல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடகக் கலை படிப்பதற்கு மட்டுமன்றி நடிப்பதற்குமுரிய கலையாகும்.
- எனவே, ஆற்றுகை செய்வதற்கு ஒரு வெளி அன்றேல் களம் அவசியம்.
- இக்களம் வெறுமனே நடிப்பிடமாக மட்டுமன்றி கலைஞரது இயக்கத்தினூடு பார்ப்போர் ரசானுபவம் பெற்றுக் கொள்வதற்கான நிலைக்களனாயும் அமைகிறது.

- அவ்வாறான களமே "அரங்கு" எனப்படும்.
- உலக அரங்க வரலாற்றின் முதற்காலகட்டமான கிரேக்கத்தின் தொல்சீர் காலத்தில் நாடகங்கள் திறந்தவெளிகளில் நிகழ்த்தப்பெற்றன.
- டயோனீசஸ் ஆலயமுன்றலில் எளிமையாக ஆரம்பித்த அரங்கு பின்னர் விரிவடைந்து கி.மு 5ம் நூற்றாண்டளவில் ஏறத்தாழ 15 000 பார்ப்போரைக் கொண்ட வட்டப்பேரரங்காக வளர்ச்சி கண்டது. (Amphi theatre).
- ஆற்றுவோர் எண்ணிக்கை, பார்ப்போர் தொகை, களம் என்பவற்றின் அடிப்படையில் நோக்கும்போது இதனைத் திருவிழா அரங்கு எனலாம்.

  உதாரணம்: எப்பிரோடஸ்.
- அரங்கு மலையடிவாரமாக இருக்கும். அதன் தளத்திலே கிட்டத்தட்ட 65 அடி விட்டம் உள்ள வட்ட வடிவ ஆடுகளம் இருக்கும். இது ஓர்கஸ்டா (Orchestra) எனப்பட்டது.
- அதன் மையப்பகுதியில் பலிபீடம் (Alter) எனும் அமைப்பு காணப்படும். மலைச்சரிவுகளில் அரைவட்டத்திற்கும் சற்று அதிகமான பரப்பை உள்ளடக்கியதான, வரிசை வரிசையாய் அமைக்கப்பெற்ற படிக்கட்டுக்களில் இருந்து பார்ப்போர் நாடகத்தைப் பார்த்தனர்.
- இது குதிரைக்குளம்பு வடிவானது.
- பிற்காலத்தில் ஸ்கெனே (Skene) எனப்படும் பின்சுவர் ஒன்று அமைக்கப்பட்டது(காட்சி இல்லம்).
- அது ஒப்பனை அறையாகவும் நாடகத்திற்கான காட்சிப்பின்னணியாகவும் பயன்பட்டது.
- ஸ்கெனே கட்டடத்தின் மத்தியில் உள்ள 3 கதவுகளுள் நெடுங்கதவின் ஊடாகவே "பெரியக்ரோய்□ எனப்படும் (Periactoi) முக்கோணக் குறியீட்டுக்காட்சி பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
- பொறிக்கதவின் ஊடாக சிலவிசேட நிலமைகளைக் காட்டுவதற்காகப் பொறிகள் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

  உதாரணம்: Due – Ex – machinae – தெய்வம் தருகருவி.
- EkkyKlemma - இறந்தோர்உடல் காவும் பொறி.
- புறொசீனிய அமைப்பை ஒத்த நீள் சதுர மேடையொன்று பிரதான நடிப்பிடமாகப் பயன்படுத்தப்பெற்றது.

- ‘‘ஸ்கெனே’’ இனது இரு அண்டங்களுக்கு இடைப்பட்டதும் பார்ப்போர் கூடத்தின் இரு அந்தங்களுக்கும் இடைப்பட்டதுமான நிலப்பகுதி பரடொஸ் (Parados) எனப்பட்டது.
- இப்பகுதியின் ஊடாகவே கோரஸ் ஆடுகளத்தினுள் பிரவேசித்தது.
- நாடகம் பகலில் நிகழ்த்தப்பட்டது.

**பின்வரும் அம்சங்களை மீள வலியுறுத்திக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்பலாம்.**

- வெறுமனே பௌதீக நிலைப்பட்ட அம்சங்களைஉள்ளடக்கியது மட்டும் அரங்கு அல்ல.
- மரபார்ந்த ஆற்று அரங்கில்
- ஆற்றுகை செய்யும் இடமாக மேடை (Stage).
- இதில் ஒருபகுதியாக நடிப்பிடம் (Acting Area)
- மற்றொரு பகுதியாக வேடம் புனைதலுக்கான பின்மேடை (Back Stage).

2. பார்ப்போர் கூடம் (Auditorium) ஆகிய இவ்விருபகுதிகளையும் (மேடை, பார்ப்போர் கூடம்) உள்ளடக்கியதே நாடக அரங்காகும்.

- சூழல், பண்பாடு மற்றும் காலமாற்றத்திற்கு ஏற்ப அரங்க மரபுகளிலும் அரங்க அமைப்புகளிலும் மாற்றம் நிலவுவது நியதி.
- அரங்க வெளியின் தன்மை ஆற்றுகையில் மிகப்பெரும் செல்வாக்குச் செலுத்தி நிற்கும். உதாரணம்: கிரேக்கப் பேரரங்கில் பெரும் தொகைப் பார்ப்போரைக் கருத்தில் கொண்டு நீண்ட மேல் அங்கி, குதி உயர்ந்த பாதணி, வாயில் புனல் போன்ற அமைப்பு, தலையில் கொண்டை என்பன பயன்படுத்தப்பெற்றன.
- மேலும் பெருந்தொகையினரான கோரஸ், பெருங்காட்சிப்பண்பு, அரங்கப்பொறிகள் என்பவற்றைக் கையாண்டமை.
- நாடகம் சூரிய ஒளியில் நிகழ்த்தப்பெற்றமை.

**பின்தொடர் செயற்பாடு**

- ‘‘கிரேக்க அரங்கவெளியின் அமைப்பும் அதன் பகுதிகளும்’’ எனும் தலைப்பில் சுவர் மாட்டியொன்றைத் தயாரித்து (15 X□ 10) அளவு / அதற்குமேல்) காட்சிப்படுத்தி முன்னளிப்புச் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளித்தல். வசதியேற்படின் பாடசாலை மட்டத்தில் கண்காட்சி ஒன்றினை ஒழுங்கு செய்யலாம்.

**கணிப்பீடு**

- கிரேக்க அரங்க வெளியின் அமைப்பை வரைந்து பகுதிகளைப் பெயரிடுக.
- கிரேக்க அரங்க வெளியின் பண்புகளைக் கூறுக.
- ‘‘அரங்கவெளி என்பது வெறுமனே பௌதிக நிலைப்பட்ட அம்சமன்று’’ என்பதன் பொருத்தப்பாட்டை விளக்குக.
- கிரேக்க அரங்கவெளி ஆற்றுகையில் செலுத்திய செல்வாக்குப் பற்றிக் கலந்துரையாடுக.

**உசாத்துணைகள்**


- பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி.
- அரங்கக் கட்டுமானம் - திரு.க.திலகநாதன்.
- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு – கோகிலா மகேந்திரன்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.3 | : | கிரேக்க அரங்கிற்கான தோற்றுவாய்களையும், அதன் வளர்ச்சிக்குப் பங்களித்த காரணிகளையும் பயின்றவராவார். |
| **செயற்பாடு** | 2.3.4 | : | கிரேக்க நாடகாசிரியர்கள் பற்றிக் கற்போம். |
| **பாடவேளை** | | : | 06 |

**கற்றற் பேறுகள்:**

- கிரேக்க நாடகாசிரியர்கள் பற்றிக் கற்றிருப்பார்.
- கிரேக்க நாடக எழுத்துருக்களை அறிந்திருப்பார்.
- கிரேக்க அரங்க வளர்ச்சிக்குக் கிரேக்க நாடகாசிரியர்களின் பங்களிப்புப் பற்றி விவரிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கிரேக்க நாடகாசிரியர்களின் ஒளிப்படங்கள்.
- கிரேக்க நாடக எழுத்துருக்கள்.

**அறிமுகம்:**

கிரேக்க அரங்கின் வளர்ச்சிக்குக் கிரேக்க நாடகாசிரியர்களின் பங்களிப்புப் பற்றிக் கற்றலே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- நூல் உசாவுகை.
- விரிவுரை முறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- பின்வரும் அம்சங்கள் தொடர்பில் தகவற்கோவை அன்றேல் ஒப்படையைத் தயாரிக்க வழிப் படுத்துங்கள்.

திறஜெடி, கொமெடி நாடகாசிரியர்கள்.

(1) ஆசிரியர் அறிமுகம்.

(2) நாடகங்கள்.

(3) பங்களிப்புக்கள் / நாடகப் பண்புகள்.

**திறஜெடி நாடகங்கள்**

- மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ள ஒரு விசேட தொடர்பு பற்றிக் கிரேக்கர் கொண்டிருந்த எண்ணக்கருவே திறஜெடியின் அடித்தளமாக விளங்கியது.
- கிரேக்க திறஜெடி கவிதையிலேயே எழுதப்பட்டது. இதனைச் செந்நெறிக்கால அவலச்சுவை/ தொல்சீர் அவலச்சுவை என்பர்.
- இது காலப்போக்கில் சில விதிகளையும், முறைமைகளையும் உள்வாங்கி இறுகிவிடுகிறது.

- அரங்கு என்பது சமூக, சமயப் பண்பாட்டினால் எழுந்து, பின் அதே சமூக, சமயப் பண்பாட்டை மேம்படுத்தும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் கிரேக்க திறஜெடியும் சமூகப் பண்பாட்டுப் பயனாக நின்று நிலைத்திருக்கிறது.

**திறஜெடி நாடகாசிரியர்கள்**

- **ஈஸ்கிலஸ்** (Aeschylus கி.மு 525 - 456)
  - கிரேக்கத்தின் மூத்த நாடகாசிரியர்.
  - தொண்ணூறு நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.
  - 13 வருடங்கள் தொடர்ந்து நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்றார்.
  - 7 திறஜெடி நாடகங்கள் மட்டும் கிடைத்துள்ளன.
  - Satyr நாடகம் எழுதுவதிலும் பிரபலம் பெற்றிருந்தார்.
  - ஐரோப்பிய நாடகத்தின் தந்தை எனவும் அழைக்கப் பெறுகிறார்.
  - முக்கூட்டுத் தொகுதி நாடகங்களை எழுதியுள்ளார்.

**இவரது நாடகங்கள்**

த பேர்சியன்ஸ் - The Persians

த சப்ளையன்ற் வுமன் - The Suppliant Woman

புறமீதியஸ் பௌண்ட் - Prometheus bound

தீபிசிற்கு எதிராக எழுவர் - Seven against Thebes.

- இவரது நாடகங்களில் இன்று முழுமையாகக் கிடைக்கும் முக்கூட்டுத் தொகுதி ஒறெஸ்ரியா (Orestia) ஆகும்.

  அதில் இடம்பெறும் மூன்று நாடகங்களாவன:-

  அகமெம்னன் - Agamemnon

  த சோபோறி - The Choephori

  த இயூமெனைட்ஸ் The Eumenides

**நாடகப் பண்புகள்**

கோரஸ் உடன் தனி ஒரு நடிகர் சேர்ந்து நிகழ்த்தி வந்த பாடலை, இரண்டாவது நடிகரைச் சேர்த்து நாடகமாக ஆக்கிய பெருமை இவரையே சாரும்.

- கோரஸின் எண்ணிக்கையைப் பன்னிரண்டாகக் குறைத்தார்.
- சமகால விடயங்களை மையப்படுத்தியும் நாடகங்கள் எழுதியமை.

  உதாரணம்: - The Persians
- ஐரோப்பிய நாடக வரலாற்றின் மிகப் பழமையான எழுத்துரு இவரது The Suppliant Woman ஆகும்.
- கொலை, பழிவாங்கல், அதற்கான துக்கம், துக்கத்தில் காணப்படும் மறக்க முடியாத சோகம் என்பன இவரது நாடகத்தில் விரவிக் காணப்பட்டன.
- ஐதிகக் கதைகளை மட்டுமன்றிச் சமகால விடயப் பொருள்களையும் படைக்கும் நிலையைத்

தோற்றுவித்தார்.

- இரண்டாவது நடிகனைத் தோற்றுவித்ததன் மூலம் திறஜெடியின் அடுத்த கட்ட வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளார்.

**சோபோகிளிஸ்** (Sophocles கி.மு 496 - 406)

- கிரேக்க திறஜெடி நாடகாசிரியர்களின் கொடுமுடி என சிறப்பிக்கப்பெறுபவர்.
- நூறு நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.
- 7 திறஜெடி நாடகங்களும் ஒரு Satyr நாடகப் பகுதியும் கிடைக்கப்பெற்றுள்ளன.
- 18 முறை நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்.

**இவரது திறஜெடி நாடகங்கள்**

- அஜாக்ஸ் - Ajax

அன்ரிகனி - Antigone

ரக்கினே - Trackiniae

ஈடிப்பஸ் மன்னன் - Oedipus Rex

எலெக்ரா - Electra

பிலொக்ரெரிஸ் - Philoctetes

ஈடிப்பஸ் அற்கொலோனஸ் - Oedipus at Colonus

Trackars - இவரது Satyr நாடகமாகும்.

**நாடகப் பண்புகள்**

- அரிஸ்டோட்டில், தனது கவிதையியலில் திறஜெடியின் கொள்கைகள் பற்றிக் கூறும்போது சோபோகிளிசின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதியதாகக் கருதப்படுகிறது.
- மேடையில் மூன்றாவது நடிகனை இணைத்தவர்.
- ஈஸ்கிலஸைவிடச் சிக்கலான சூழ்வுகளைத் தெரிவு செய்தார்.
- கோரஸின் தலையீட்டைக் குறைத்து, காட்சிகளுக்கிடையில் விமர்சனம் செய்து, பார்ப்போர் மத்தியில் உணர்வு மாற்றங்களை ஏற்படுத்தும் அம்சமாக அதனைக் கையாண்டார்.
- கோரஸ் எண்ணிக்கையைப் பதினைந்தாக உயர்த்தினார்.
- இவரது பிந்திய நாடகங்களில் நாலாவது நடிகர் ஒருவரையும் சேர்த்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. (ஈடிப்பஸ் அற் கொலோனஸ்)
- காட்சி மாற்றங்களைக் காட்டுவதற்காக (Periaktoi) ‘பெரியக்ரோய்’ எனும் உபகரணத்தைப் பயன்படுத்தினார்.
- மனித குலத்தின் மீது அதிக அக்கறை கொண்ட செல்நெறியில் தனது நாடகங்களை வளர்த்துச் சென்றார்.
- எனவேதான், ஈஸ்கிலஸின் எளிமையான நாடகங்களுக்கும் யூரிபிடிஸின் உளவியல்சார் நாடகங்களுக்குமிடையில் கிரேக்கத்தின் அதி உன்னத கால நாடகங்களாக இவரது நாடகங்கள் மிளிர்வதாகக் கூறப்படுகிறது.

- கிரேக்க திறஜெடி நாடகத்துக்குரிய கட்டிறுக்கமான கட்டமைப்புக்கொண்ட நாடகங்கள் உருவாவதற்குக் காரணமாயமைந்தார்.
- மூன்றாவது நடிகனின் தோற்றமானது சிக்கலான கதைச் சூழ்வுகளைக் கட்டியமைப்பதற்கு வழிசமைத்தது.
- சேக்ஷ்பியர் காலத்துத் திறஜெடி நாடகங்களின் விருத்திக்கு அடித்தளமிட்டது சோபோகிளிஸின் திறஜெடி நாடகங்களேயாகும்.
- தெய்வங்களுக்கும் மனிதருக்குமிடையிலான முரண்நிலைகளை விதி, சாபத்தின் தளத்தில் நின்று இவரது படைப்புக்கள் சுட்டிக் காட்டின.

**யூரிபிடிஸ்** (Euripides கி.மு 484 - 406)

- 92 நாடகங்கள் எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது.
- 17 திறஜெடி நாடகங்களும் ஒரு Satyr நாடகமும் கிடைக்கப்பெற்றுள்ளன.
- ஐந்து போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார்.

**இவரது நாடகங்கள்**

| | | |
|---|---|---|
| • மீடியா | - | Medea |
| ஹிப்போலிட்டஸ் | - | Hippolytus |
| எலெக்ரா | - | Electra |
| ஹெலென் | - | Helen |
| இபிஜீனியா இன் ரோறிஸ் | - | Iphigenia in Tauris |
| த பக்கே | - | The Bacchae |
| இபிஜீனியா இன் ஒலிஸ் | - | Iphigenia in Aulis |
| அல்செஸ்ரிஸ் | - | Alcestis |
| ரோஜனத்துப் பெண்கள் | - | The Trojan Women |

The Cyclops - (Satyr நாடகம்)

**நாடகப் பண்புகள்**

- இவரது நாடகங்கள் தனி மனித உளவியல் மீது அக்கறை கொண்டிருந்தன.
  கிரேக்க திறஜெடியின் மிக இறுக்கமான கட்டமைப்பை உடைக்கத் தொடங்கியவர் இவரே.
- முன்னர் நடைபெற்றதைப் பாரப்போருக்கு விளக்குவதற்குப் பாயிரத்தைப் (Prologue) பயன் படுத்தினார்.
- உரோம அரங்கில் செனேக்காவிலும் கிரேக்கத்தின் புதிய மகிழ்நெறியிலும் கூட இவரது தாக்கத்தைக் காணலாம்.
- ஈஸ்கிலஸ் போலவோ சோபோகிளிஸ் போலவோ அல்லாது, நாடகப் பொருளாக எடுத்துக் கொண்ட ஐதிகங்களில் விமர்சனப் பார்வையை வைத்துக்கொண்டார்.
- பெரும்பாலும் தனிமனித உளவியல் மீது அக்கறை செலுத்தியமையால் தனிமனித உணர்வுகளைத் தனது சூழ்வாக எடுத்துக் கொண்டார்.

- யுத்தம், அரசியல் போன்றவை தொடர்பான வாதங்களை எழுப்பினார்.
- இவரது சில நாடகங்கள் திறஜெடியின் இலக்கணத்தை மீறும் வகையில் மகிழ்நெறி மற்றும் கற்பிதவாத மூலகங்களை இணைத்துப் படைக்கப்பட்டன. (Alcestis)
- இவரது பிற்கால நாடகங்களில் நாடகத்தின் மையப் பாத்திரமாக - அவலநாயகிகளாகப் - பெண்களே படைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மிகச் சிக்கலான நிலைமைகளில் படைக்கப் பட்டிருந்தனர்.

**கிரேக்க கொமெடி நாடகங்கள்**

- கோமுஸ் எனும் கேளிக்கைப் பாடல் மற்றும் இலிங்கப் பாடல்களிலிருந்து கொமெடி தோன்றிற்றென்பர்.
- ஆரம்ப காலங்களில் விசித்திரம், முரட்டுத்தனம், கொச்சைத்தனம் கொண்டு செம்மைத் தன்மை குறைவானதாகத் தோன்றிய கொமெடி நாடகங்கள், காலப்போக்கில் செழுமையான கவிதை இலக்கியச் சுவை நிரம்பிய வடிவமாகச் செம்மை பெற்றது.

**கொமெடி நாடகாசிரியர்கள்**

**அரிஸ்ரோபேன்ஸ்** (Aristophones கி.மு 448 - 380 )

- பழைய கொமெடி நாடகாசிரியர்
- 40 இற்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதியவர்.
- 11 மட்டுமே கிடைக்கப் பெற்றது.

**இவரது நாடகங்கள்**

| | | |
|---|---|---|
| த அக்காரியன்ஸ் | - | The acharians |
| த நைட்ஸ் | - | The Knights |
| த கிளவுட்ஸ் | - | The Clouds |
| த வாஸ்ப்ஸ் | - | The Wasps |
| பீஸ் | - | Peace |
| த பேட்ஸ் | - | The Birds |
| லைஸ்ராற்ரா | - | Lysistrata |
| த புறொக்ஸ் | - | The Frogs |
| த பார்ளிமென்ட் ஒவ் வுமன் | - | The Parliament of Weman |
| எக்கிளிசியா சூசே | - | Ecclesia Zusae |
| புளூட்டஸ் | - | Plutus |

**நாடகப் பண்புகள்**

- ஆரம்பத்தில் எளிமையான கதைச் சூழ்வுகளைக் கையாண்டார். பிற்கால நாடகங்களில் சூழ்வு விரிவானதாக அமைக்கப்பட்டது.
- ஆரம்பகால நாடகங்களில் கோரஸ் பிரதான பங்கு வகித்த போதும், பிற்காலத்தில் கோரஸின்

முக்கியத்துவத்தைக் குறைத்தார்.

- அக்காலத்து அரசியற் கொள்கைகளையும், அரசியல்வாதிகளையும் கேலியும் கிண்டலும் செய்யும் நிலை காணப்பட்டது.
- கோரஸின் பாத்திரப் பண்பு பல நாடகங்களின் தலைப்பாக அமைந்தது.
- 'பரபாஸிஸ்' (Parabasis) எனும் பகுதியில் குறிப்பிட்ட விடயம் தொடர்பாகத் தனது சொந்தக் கருத்துக்களை நாடகாசிரியர் அவைக்கு முன்வைப்பதான ஒரு உரை அமையும்.
- தனது சமகால மக்களின் குற்றங்குறைகளைக் கண்டித்து, தனக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தோரின் உயர்ந்த பண்புகளைப் போற்றினார்.
- கற்பனை விடயங்களும், சமகால விடயங்களும் நாளாந்த நிகழ்ச்சிகளோடு கலந்து கூறப்பட்டன.
- சமூக அன்றேல் அரசியல் பாதிப்பு ஒன்றினால் கஷ்டப்படும் பிரதான பாத்திரம், அக்கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்ள முற்படும் போது எழும் வினோதமே நாடகமாகியது.
- தனிமரமாகி நிற்கும் மனிதனை வினோதம், சூழ்ச்சி, அற்புதம் என்பன மூலம் வாழ்வில் அவன் இழந்தவற்றை அரங்கில் வெற்றி கொள்வதான உணர்வை ஏற்படுத்துவதே இவரது பணியாகும்.
- அரசின் அதிகாரத் தன்மை மாற்றமடையப் பாரதூரமான சமூக விடயங்களைப் பற்றிப் பேசாது தனிமனிதர்கள் பற்றிப் பேசும் நிலைமை உருவானது.
- இதனால் கற்பனை அழகும், மொழிவளமும் நிறைந்து, தனிப்பட்ட மனிதர் மீதான வசைமாரி குறைந்திருந்திருந்தது.
- இந்நிலைமை புதிய மகிழ்நெறி தோன்றுவதற்கு அடித்தளமிட்ட இடைக்கால மகிழ்நெறி எனலாம்.
- சிறுவயதிற் காணாமற் போய்ப் பின்னர் கண்டுபிடிக்கப்படும் பிள்ளைகள், கற்பிதக் காதல் என்பன புதிய மகிழ்நெறிக்கு இவரால் அறிமுகப்படுத்தப் பெற்ற முன்னோடிக் கதைப்பொருள் களாக அமைந்தன.

**மெனாண்டர்** (Menander கி.மு 343 - 292 )

**இவரது நாடகங்கள்**

- புதிய மகிழ்நெறி நாடகாசிரியர்
- இவரது ஐந்து நாடகங்களின் பகுதிகளும் ஒரு முழுமையான நாடகமும் கிடைக்கப் பெற்றுள்ளன.
- இவர் புதிய மகழ்நெறியின் தந்தை எனப் போற்றப்பெறுகிறார்.

| | | |
|---|---|---|
| தெஸ்மோ போரியா சூசே | - | Theso Phoria Zusae |
| ஹீரோ | - | (Hero) |
| சாமியா | - | (Samia) |
| த எபிற்றேபொன்ரிஸ் | - | (The Epitrepontes) |

| | | |
|---|---|---|
| பெரிசிறோமின் | - | (Periciromene) |
| த மான்புறொம் சிசியோன் | - | (The man from Sicyon) |
| த டைஸ்கொலொஸ் | - | (The Dyskolos) - முழுமையாக கிடைக்கப்பெற்ற நாடகம். |

**நாடகப் பண்புகள்**

- ஆழமான கேலி, கிண்டல் அற்றவை.
- கட்டிறுக்கம் கொண்டவை.
- தனிநபர் மீதான கிண்டல், கேலி மறைந்து, மத்தியதர வர்க்க மக்களின் அன்றாட வாழ்வு பேசப்பட்டது.
- ஹாஸ்யம் விரவியிருந்த போதிலும் பாத்திரப் படைப்பு, உணர்வு ஆகியவற்றில் ஒரு பண்பட்ட தன்மை பரவியிருந்தது.
- யதார்த்தச் சிந்தனை நிறைந்த மனித நடத்தைக் கோலங்கள் சித்திரிக்கப்பெற்றன.
- ஆடல், பாடல் இணைந்த இடைநிகழ்வைத் தருபவர்களாகக் கோரஸ் படைக்கப்பட்டிருந்தது.
- நகர்சார் சமூக விடயங்கள் கற்பிதவாத முன்னெடுப்புடன் கையாளப்பட்டன.
- நுட்பமும் மென்மையும் கொண்ட நாடகவாக்கப் பண்புடன் அரங்கினை ஒரு தத்துவார்த்த சாதனமாகக் கையாண்டார்.
- அரிஸ்ரோபேன்ஸின் அதிதீவிரக் கற்பனைகள் மறக்கப்பட்டு, யதார்த்தப் பண்பு நிறைந்த மோடியில் படைக்கப்பட்டது.
- ஒருவகையான அவல மகிழ்நெறி இவருக்கூடாகத் தோற்றம் பெற்றது.
- நவீன நாடகத்தின் பண்புகளான நடத்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தல், இன்பமும் துன்பமும் கலந்து தோன்றுதல், பாத்திரப் பண்பு படிப்படியாக வளர்த்தெடுக்கப்படுதல், ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே ஒழுக்கக் கோவை வலியுறுத்தப்படுதல், ஒரே கருத்தை மையமாகக் கொண்டு நாடகம் முழுவதையும் வடிவமைத்தல் போன்றன இவரது நாடகங்களின் சிறப்பம்சங்களாகும்.
- இவரது நாடகங்களை பிரச்சினைகளை ஆராயும் நாடகங்கள் (Problem plays) எனக் கருத முடியும் என்பது சில விமர்சகர்களின் கருத்தாகும்.
- உரோம மகிழ்நெறி ஆசிரியர்களான ரெறென்ஸ், புளோட்டஸ் என்போரில் இவரது தாக்கத்தைக் காணமுடியும்.
- எனவேதான், உரோம அரங்கினுக்கு ஐரோப்பிய அரங்க வரலாற்றில் மிக முக்கிய தாக்கம் விளைவித்த ஒருவராக இவர் பேசப்படுகிறார்.

**கணிப்பீடு:**

- கிரேக்க திறஜெடி, கொமெடி நாடகாசிரியர்களின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்துக.
- கிரேக்க திறஜெடி நாடக ஆசிரியர்களது நாடகங்களை அட்டவணைப்படுத்துக.

- கிரேக்க கொமெடி நாடகங்களைப் பட்டியலிடுக.
- கிரேக்க அரங்க வளர்ச்சிக்கு, கிரேக்க நாடகாசிரியர்களது பங்களிப்புப் பற்றி விவாதிக்குக.

**உசாத்துணைகள்:**

- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - கோகிலா மகேந்திரன்.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
  பேராசிரியர் சி. மௌனகுரு.
  திரு. க. திலகநாதன்.
- நாடக அரங்கியலுக்கான ஆற்றுப்படை - இரா. ஜெகநாதன்.
- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - கா. சிவத்தம்பி.

| | | | |
|---|---|---|---|
| **தர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.4 | : | கிரேக்க அரங்குடன் தொடர்புடைய கொள்நெறி அடிப்படைகளைக் கற்பார். |
| **செயற்பாடு** | 2.4.1 | : | கிரேக்க நாடக வகைகளையும் அவற்றின் பண்புகளையும் பற்றிக் கற்போம். |
| **பாடவேளை** | | : | 06 |

**கற்றற் பேறுகள்** :

- கிரேக்க நாடக வகைகளை அறிந்திருப்பார்.
- திறஜெடி, கொமெடி நாடகக் கட்டமைப்புக்களை இனங்கண்டிருப்பார்.
- கிரேக்க நாடகக் கட்டமைப்புக்கள் ஆற்றுகையின் முழுமைக்குத் துணைசெய்யுமாற்றை விளக்குவார்.
- கிரேக்க நாடக எழுத்துருக்களை வாசிப்பதனூடு அவற்றின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- நல்ல நாடகங்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கிரேக்க நாடக எழுத்துருக்கள்.
- கிரேக்க நாடகாசிரியர்களது ஒளிப்படங்கள்.
- கிரேக்க அரங்கு மற்றும் வேடமுகங்களின் ஒளிப்படங்கள்.
- You tube - Video Clips.

**அறிமுகம்:**

மேற்குலகச் சிந்தனையின் தொட்டில் எனப் போற்றப்படும் கிரேக்கம், அனைத்துத் துறைகளிலும் உச்சத்தைத் தொட்டு நின்றது. அரங்கு அதற்கு விதிவிலக்கன்று. ஆகையால் உலக அரங்கின் தோற்றுவாயான கிரேக்கத்தின் நாடக வகைகளையும் அவற்றின் பண்புகளையும் பற்றிக் கற்பதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- செய்து காட்டல்.
- நூல் உசாவுகை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- கிரேக்க திறஜெடி மற்றும் கொமெடி நாடகக் காட்சித் துண்டங்களை வகைக்கொன்றாகக் காணொளியில் காட்சிப்படுத்தி, அது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

**கிரேக்க நாடகங்கள்**

- கிரேக்க மரபில் ஹோமர் காலத்திற்குப் பின்னர் திறஜெடி நாடகம், கொமெடி நாடகம் எனும் இருவகை மரபுகள் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. இவற்றுடன் சற்றயர் (Satyr)

எனும் வகையும் பின்னர் தோற்றம் பெறலாயிற்று.

**திறஜெடி நாடகங்கள்**

- கிரேக்க நாடகக் கலையின் பிரதான நாடக வகை இதுவாகும். இது டயோனிசஸ் வழிபாட்டுடன் தொடர்புடைய பாத்திரம் (Dithyramb) பாடலிலிருந்து தோற்றம் பெற்றதென்பர்.
- Tragedy என்பதைக் குறிக்கும் கிரேக்க மொழிச் சொல் Tragodia ஆகும்.
- ஆரம்ப காலத்தில் 'டித்திராம்ப்' பாடல்களை ஓதிவந்த கோரஸ் (Chorus) எனப்படும் கூட்டுப் பாடகர் குழுவிலிருந்து நாடகம் தோன்றியதென்பார் அரிஸ்டோட்டில்.
- திறஜெடி என்பது துன்பமான முடிவைக் கொண்ட நாடகம் எனப் பொருள்படுவதில்லை. ''நலமார்ந்த ஒன்று பாழ்பட்டுப் போதல்'' என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது அதாவது வெறுமனே நல்லதுக்கும் கெட்டதுக்குமிடையிலான மோதலில் நல்லது அழிந்து போவதால் விளையும் பயமும் பரிவுமல்ல. நல்லவை இரண்டுகிடையிலான மோதலில் இரண்டுமே அவலமாக அழிந்து போவதால் விளையும் ஒன்றாகவே பெரும்பாலான கிரேக்க திறஜெடி நாடகங்கள் அமைந்துவிடுகின்றன.
- இவை தமக்கென ஒரு கட்டமைப்பினைக் கொண்டிருந்தன.

**திறஜெடி நாடகக் கட்டமைப்பு**

1) பாயிரம் / முற்சொல் (Prologue)
   நாடகத்தை அறிமுகம் செய்யும் முற்சொல்.
2) பரடொஸ் (Parados)
   கோரஸ் முதன்முதலில் ஆடுகளத்திற்குட் பிரவேசிப்பது.
3) எபிசோடியா / காட்சிகள் (Episodia)
   சம்பவங்கள் காடசிகளாக நிகழ்த்தப்பெறுவது.
4) ஸ்ரசிமா / இசைப்பா (Stasima / Stasimon)
   கூட்டுப்பாடல்.
5) இசைப்பா முகாரி (Lyrical / lament)
   நாடகத்தின் உணர்வுபூர்வமான கட்டங்களில் கோரஸ் இசைப்பா முகாரியை இசைக்கும்.
6) செய்தியாளன் (Messenger)
   நாடகத்தின் பிரதான செய்திகள் செய்தியாளர் மூலம் கூறப்படும்.
7) வெளியேறுகை (Exodos)
   கோரஸ் ஆடுகளத்தினின்று வெளியேறுதல்.

**திறஜெடி நாடகப் பண்புகள்**

- தெய்வங்களுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள முரண் கூறப்படுவது.
- மனிதனோடு விதியும் சாபமும் பிரிக்க முடியாத பிணைப்பை உடையன.
- துன்பம், பயங்கரம் என்பவற்றை அடித்தள உணர்வாகக் கொண்டு எழுந்த திறஜெடி மனிதன் தெய்வங்களை மகிழ்வுடன் வைத்திருக்கத்தவறின் அவை மனிதனைத் துன்புறுத்தும் என்ற

நம்பிக்கையையும் கொண்டிருந்தது.

- துன்பம் மலிந்த வாழ்வைத் துணிவோடு வாழும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துவதே திறஜெடி நாடகங்களின் நோக்காக அமைந்தது.
- பாயிரம் (Prologue) உடன் ஆரம்பிக்கும் நாடகம், (Exodos) வெளியேறுகை உடன் நிறைவடையும்.
- நாடகம் முழுவதிலும் விரவிக் கிடக்கும் பீதி, சோகம், பரிவு / கழிவிரக்கம் ஆகிய உணர்ச்சி களைக் கொண்டு பார்ப்போரிடத்தே உணர்ச்சிக் கிளர்வை ஏற்படுத்துகிறது. அவ்வாறு ஏற்படும் உணர்ச்சி வெளிக்கொணர்கையையே அரிஸ்டோட்டில் கதாசிஸ் என்கிறார்.
- திறஜெடி நாடகங்கள் கதைப்பின்னல், பாத்திரம், சொல்லாடல், சிந்தனை, இசை, காட்சி ஆகிய ஆக்கக்கூறுகளைத் தம்மகத்தே கொண்டிருக்கும்.
- கதைப்பின்னலானது காலம், இடம், செயல் எனும் ஒருமைப் பண்பைப் பேணி நிற்கும்.
- நலமார்ந்த ஒன்றின் நலிவுக்கான 'அவலத்தவறு' (Hamartia) ஒன்று அதனிடையே இழையோடி யிருக்கும்.
- அவலப் பாத்திரத்தினுடைய வல்லமைகள் அனைத்துக்கும் இடையே அதனை அழிக்க முனையும் அந்தக் காரணியும் இருந்து கொண்டே இருப்பது தான் (Tragic flow) திறஜெடியின் நயம்.
- கூட்டுச் சமூகப் பண்பை வெளிப்படுத்தும் கோரஸ் பிரதான பங்கு வகிக்கும்.
- ஆற்றுகை வெளியின் பண்புக்கமைய வேடமுகப் பயன்பாடு, நீளமான மேலங்கி, கொண்டை, குதியுயர்ந்த பாதணிகள், புனல் போன்ற அமைப்பு போன்றன ஆற்றுகையில் கடைப்பிடிக்கப் பட்டன.
- கிரேக்க திறஜெடி நாடகங்கள் எப்போதும் கவிதை வடிவிலேயே எழுதப்பெற்றிருந்தன. திறஜெடி நாடகங்களுக்கு உதாரணம் :- அன்ரிகனி, ஈடிப்பஸ் மன்னன், ட்ரோஜனத்துப் பெண்கள்.

**மகிழ்நெறி நாடகங்கள்**

- டயோனிசியஸ் விழாவோடு தொடர்புடைய லெனேயஸ் விழாவிலிருந்து தோன்றியதென்பர்.
- அதாவது, கேளிக்கை நிறைந்த 'பாலிக் பாடல்கள்' (Phallic songs) எனப்படும் இலிங்கப் பாடல்களிலிருந்து தோன்றின என்பார் அரிஸ்டோட்டில்.
- இவை சிரிப்பினூடே உலகை ஆய்வு செய்வன.
- Comedy எனும் சொல் ' Komos' எனும் கிரேக்கச் சொல்லிருந்து தோன்றியது.
- Komos என்பதன் பொருள் ஆர்ப்பரித்தல் / சந்தோச ஆரவாரம் செய்தல் என்பதாகும்.
- "உண்மையான மகிழ்நெறி என்பது ஒரு தேசிய இனத்தின் மடைமைகளையும் குறைபாடு களையும் பேசுகின்ற சித்திரம்" என்பார் வோல் டயர்.
- கிரேக்க மகிழ்நெறி நாடக வகையினை அதன் வரலாற்று அடிப்படையில் மூன்று பிரிவுகளாக நோக்குவர்.

1) பழைய மகிழ்நெறி.

2) மத்திய / இடைக்கால மகிழ்நெறி.

3) புதிய மகிழ்நெறி.

- பழைய மகிழ்நெறி விசித்திரம், முரட்டுத்தனம், கொச்சைத்தனம், பாலியல்சார் கேளிக்கை, கூர்மையான குத்தற் பேச்சு, செழுமையான கவிதை அனைத்தும் நிரம்பியது.
- அக்கால அரசியல் நிலைமைகளைக் கிண்டல் செய்தது.
- அரசியல் ஸ்திரத்தன்மை வலுவடையத் தனிமனிதர்களைக் கிண்டல் செய்யும் அதிக ஆழமற்ற ஹாஸ்ய முறைமை வளரத் தொடங்கியது.
- இந்த நிலைமாறு கால நாடகங்கள் இடைக்கால / மத்திய மகிழ்நெறி நாடகங்களாயின.
- பழைய மகிழ்நெறி, மத்திய மகிழ்நெறி நாடகாசிரியராக அரிஸ்ரோபேன்ஸ் கருதப்படுகிறார்.
- ஆழமான கிண்டல், கேலி அற்றவையும், பெரிதும் கட்டிறுக்கம் கொண்டவையுமாக அமைந்த பிற்கால நாடகங்கள் புதிய மகிழ்நெறியைச் சார்ந்தவை.
- இவை மெனாண்டரின் நாடகங்களுடன் ஆரம்பமாகின்றன.
- கிரேக்க, திறஜெடி நாடகங்களைப் போலவே பழைய மகிழ்நெறி நாடகங்களுக்கும் ஒரு கட்டமைப்பு இருந்துள்ளது.
- மகிழ்நெறி நாடக கட்டமைப்பு

1. Prologue. - பாயிரம்.
2. Parados - பரடொஸ்.
3. Agon - போட்டி.
4. Parabasis - முன்னோக்கிச் செல்லல்.
5. Episodes - காட்சிகள்.
6. Exodos - வெளியேறுகை.

**மகிழ்நெறி நாடகப் பண்புகள்**

- எளிமையான, சிக்கலான கதைச் சூழ்வைக் கொண்டமை.
- சமகால மக்களின் குறை குற்றங்களை வெளிப்பத்தியமை.
- கற்பனையைச் விட சமகால விடயங்களுக்கு முக்கியத்துவமளித்தமை.
- கேலி, கிண்டலினூடே அரசியல் நிலைமைகளை விமர்சித்தமை.
- கற்பனை அழகும், மொழிவளமும் நிறைந்தமை.
- கட்டிறுக்கம் கொண்டமை.
- பிற்கால மகிழ்நெறி நவீன நாடகப் பண்புகளைக் கொண்டமைந்தமை.
- பாத்திரப் பண்புக்கு முக்கியத்துவமளித்தமை.
- மத்தியதர வர்க்க மக்களது வாழ்க்கை நிலைமைகளையும் பேசுபொருளாகக் கொண்டமை.
- எளிமையான, சிக்கலான கதைச் சூழ்வைக் கொண்டமை.
- யதார்த்தப் பண்பு நிறைந்த மோடியிலும் அமைந்திருந்தமை.

மகிழ்நெறி நாடகங்களுக்கு உதாரணம்:-

The Frogs, The Clouds, Hero, Samia

**சற்றயர் நாடகங்கள்** (Satyr)

- சற்றயர் என்பது அங்கதச் சுவையுடைய நாடக வகையாகும்.
- இது 'வனதேவதை நாடகம்' எனவும் அழைக்கப்படுகிறது.
- 'Satyr' என்பது பாதி மனிதனையும் பாதி குதிரையையும் கொண்டதொரு பிராணி ஆகும்.
- அதாவது, பாதி மனிதப் பண்பும் பாதி மிருகப் பண்பும் கொண்ட ஒரு பாத்திரமாகும்.
- கிரேக்க நாடக விழாக்களில் மூன்று திறஜெடி நாடகங்கள் நிகழ்த்தப்பட்ட பின்னர், நான்காவதாக 'சற்றயர்' நாடகம் ஒன்று நிகழ்த்தப்பட வேண்டுமென்பது வழக்கமாயிருந்தது.
- திறஜெடியினுடைய காத்திரமான, கனதியான உணர்வுகளில் இருந்து விடுபட்டு, ஒரு கலகலப்பான சூழலுக்குப் பார்ப்போரை இட்டுச் செல்வதற்கு இது உதவியிருக்கலாம்.
- எனவேதான் கிரேக்க திறஜெடி நாடகாசிரியர்கள் மூவரும் சற்றயர் நாடகங்களை எழுதியுள்ளனர் போலும்.
- ஈஸ்கிலஸ் சற்றயர் நாடகங்களை எழுதுவதில் பிரபலம் பெற்றிருந்தார் எனக் கூறப்படுகிறது.
- கிரேக்கத்தின் தலைசிறந்த திறஜெடி நாடகாசிரியரான சோபோகிளிசினால் எழுதப்பெற்ற ஒரு Satyr நாடகமும், யூரிபிடிஸினினால் எழுதப்பெற்ற ஒரு Satyr நாடகமும் கிடைக்கப் பெற்றுள்ளன.

  உதாரணம்: Trackers - சோபோகிளிஸ்

  The Cyclops - !ரிபிடிஸ்

**கணிப்பீடு:**

- கிரேக்கத்தின் பிரதான நாடக வகைகள் மூன்றையும் குறிப்பிடுக.
- திறஜெடி நாடகங்களின் பிரதான பண்புகளைப் பட்டியற்படுத்துக.
- கொமெடி மற்றும் சற்றயர் நாடகங்களுக்கிடையிலான வேறுபட்ட இயல்புகளைக் கூறுக.
- திறஜெடி, கொமெடி நாடகங்களின் கட்டமைப்பை ஒப்பிட்டாராய்க.
- கிரேக்க திறஜெடி நாடகம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு உலக அரங்க வரலாற்றில் கிரேக்க நாடகங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

**பின்தொடர் செயற்பாடு:**

பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாகப் பக்கப்புரட்டி ஒன்றினைத் தயாரித்து அளிக்கை செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

- கிரேக்க நாடகங்கள் - அறிமுகம்.
- கிரேக்க நாடக வகைகள்.
- நாடகக் கட்டமைப்புக்கள்.
- நாடகப் பண்புகள்.
- கிரேக்க நாடகங்களின் முக்கியத்துவம்.

**உசாத்துணைகள்:**


- கவிதையியல் - அரிஸ்டோட்டில்.
  மொழிபெயர்ப்பு - அ. அ. மணவாளன்.
- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - கோகிலா மகேந்திரன்.
- நாடக வழக்கு - குழந்தை ம. சண்முகலிங்கம்
  (தொகுப்பு - க. ஶ்ரீ கணேசன்)
- அரங்கு - திரு. க. திலகநாதன்.
- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
- நாடக அரங்கயிலுக்கான ஆற்றுப்படை - இரா. ஜெகநாதன்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.4 | : | கிரேக்க அரங்குடன் தொடர்புடைய கொள்நெறி அடிப்படைகளைக் கற்பார். |
| **செயற்பாடு** | 2.4.2 | : | அரங்கு தொடர்பிலான அரிஸ்டோட்டிலியக் கருத்து நிலை பற்றிக் கற்போம். |
| **பாடவேளை** | | : | 10 |

**கற்றற் பேறுகள்:**

- அரிஸ்டோட்டிலை அறிமுகம் செய்வார்.
- அரிஸ்டோட்டிலின் கவிதையியலில் அரங்கு பற்றிக் கூறப்பட்டுள்ள அம்சங்களை முன்வைப்பார்.
- கதாசிஸிஸ் என்பதனைக் கிரேக்க திறஜெடி நாடகத்துடன் தொடர்புறுத்தி விளக்குவார்.
- மூன்றன் ஒருமை என்பது காலம், இடம், செயல் (இயக்கம்) என்பதைக் குறிப்பதாகும் என்பதை எடுத்துரைப்பார்.
- காலம், இடம், செயல் என்பவற்றைத் திறஜெடி நாடகம் ஒன்றுடன் (ஈடிப்பஸ்) தொடர்புறுத்தி விளக்குவார்.
- மேலைத்தேய அரங்கிற்கான அடித்தளமாகக் கிரேக்க அரங்கக் கட்டமைப்பு இருப்பதனை உணர்ந்திருப்பார்.
- அரங்கு பற்றிய அரிஸ்டோட்டிலியர் கருத்தை விமர்சிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கிரேக்க திறஜெடி நாடக எழுத்துருக்கள்.
- திறஜெடி நாடக இறுவட்டுக்கள்.
- காணொளிக் காட்சித் துண்டங்கள்.
- அரிஸ்டோட்டிலின் கவிதையியல் (மொழிபெயர்ப்பு அ. அ. மணவாளன்)

**அறிமுகம்:**

உலகின் தொல்சீர் நாடக மரபாகிய கிரேக்க திறஜெடி அரங்கு பற்றிய அரிஸ்டோட்டிலியக் கருத்து நிலை அம்சங்களை இனங்கண்டு கற்றுக்கொள்வதுடன் அவற்றின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதும் அவை மீதான விமர்சனங்களை நோக்குவதும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- குழுக் கலந்துரையாடல்கள்.
- முன்னளிப்புக்கள் (Presentation).
- சிந்தனைக் கிளறல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- கிரேக்க திறஜெடி நாடகக் காட்சித் துண்டம் ஒன்றினைக் (ஈடிப்பஸ் அன்ரிகனி) காட்சிப்படுத்தி அது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

**அரிஸ்டோட்டியலிய மரபு**

- திறஜெடி நாடகத்தின் இலக்கணங்களுக்கு அடிப்படையாக அரிஸ்டோட்டிலினால் முன்வைக்கப் பட்ட அம்சங்களாவன:-
  - திறஜெடியின் ஆக்கக் கூறுகள் / மூலக் கூறுகள்
  - மூன்றன் ஒருமை
  - ஹமாஷியா
  - கதாஸிஸ் ஆகியவற்றை உள்ளடக்கி முன்வைக்கப்பட்ட கோட்பாடே அரிஸ்டோட்டிலியக் கருத்துநிலையாகும்.
- அரிஸ்டோட்டில் பற்றியும் அவரது கவிதையியல் பற்றியும் அறிமுகம் செய்யுங்கள்.
- மாணவர் தொகைக்கேற்பக் குழுக்களாகவோ அன்றேல் தனியாகவோ, பின்வருவன தொடர்பில் தகவல்களைச் சேகரித்துத் தொகுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

  (திறஜெடி நாடக எழுத்துருக்கள் மற்றும் கவிதையியலின் துணை கொண்டு).

**திறஜெடியின் மூலக்கூறுகள்**

1. * கதைப்பின்னல்
2. * பாத்திரம்
3. * சிந்தனை
4. * சொல்லாடல்
5. * இசை
6. * காட்சி

- **மூன்றன் ஒருமை**

1. காலம் 2. இடம் 3. செயல்

- ஹமாஷியா
- கதாஸிஸ்

- சேகரிக்கப்பெற்ற தகவல்களினடிப்படையில் முன்னளிக்கைகள், கலந்துரையாடல்களுக்கு இடமளியுங்கள்.
- மேலதிக விளக்கங்களுக்காக 'Power Point' வழியாக முன்வைப்புச் செய்யலாம்.

**அரிஸ்டோட்டிலும் கவிதையியலும்**

- பிளேட்டோவின் சிறந்த மாணவனான அரிஸ்டோட்டில் கி.மு 384 இல் பிறந்தார்.
- அரசியல் முதல் அறிவியல் வரை ஆராய்ந்து தெளிந்து தெரிவிக்கும் தத்துவஞானியே அரிஸ்டோட்டில் ஆவார்.
- கலை, தத்துவம், விஞ்ஞானம், மானிடவியல், வானசாஸ்திரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் நிபுணத்துவம் பெற்ற பல்துறை ஆளுமையாளன்.
- இவரது அற்புதமான படைப்புக்களுள் கவிதையியலும் ஒன்றாகும்.
- இலக்கியத் திறனாய்வுத்துறையில் தோன்றிய முதற் பெரு நூலாகக் 'கவிதை இயல்' (Poetics) கருதப்பெறுகிறது.

  கி.மு 4 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இம்முதல் நூல், பின்னர் பல மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பெற்றது.

- இதில் கவிதையின் தோற்றம், வளர்ச்சி, கவிதையின் வரலாறு, நாடக வகைகள், திறஜெடி நாடகக் கூறுகள், திறஜெடி நாடகச் சிறப்பு, சொல்லாட்சி என்பன பற்றித் தெளிவுற முன்வைக்கப்பெற்றுள்ளன.

**கதாஸிஸ் (Catharsis)**

- கதாசிஸ் எனப்படுவது தூய்மைப்படுத்துதல் / புனிதப்படுத்துதல் (Purification) எனப் பொருள் படுகிறது.
- இரங்குமிடத்து இரங்கி, அஞ்சவேண்டுமிடத்து அஞ்சி, வாழவேண்டியதற்கான பயிற்சியையும், வாய்ப்பையும் திறஜெடி நாடகம் வழங்குகிறது.
- ஆழ்ந்த அவலத்தின் பாற்பட்டு நின்று, பரிவும் பயமும் கொண்ட நிலையில் கிடந்த உணர்ச்சிகள் வெளியேற்றப்பட்டு மனவெழுச்சி சமநிலை பெறும் நிலையே கதாசிஸ் எனப்படுகிறது.
- இந்த உணர்ச்சி வெளிக்கொணர்கை ஆறுதலையும் நம்பிக்கையையும் தருவதால் இது 'உணர்ச்சிச் செப்பம்' என அழைக்கப்பெறுகிறது.

**மூன்றன் ஒருமை (Unity of Three lines)**

திறஜெடியின் ஆக்கக்கூறுகளுள் தலையாயது கதைப்பின்னலே என்கிறார் அரிஸ்டோட்டில் அக்கதைப்பின்னல் காலம், இடம், செயல் (இயக்கம்) ஆகியவற்றின் ஒருமைப்பாட்டுடன் படைக்கப் பெறவேண்டியது அவசியம். காலம் என்பது, நாடகத்தில் நிகழ்வு / சம்பவம் நடைபெற்ற காலப்பகுதியாகும். இடம் என்பது குறித்த நிகழ்வு இடம்பெற்ற களமாகும். பொருத்தப்பாடான இயக்கங்கள் (Action) செயல்களாகும். ஒரு நாடகத்தில் காலம், இடம், செயல் மூன்றும் இணைந்து வரும்போதே காத்திரமானதான வலுப்பெற்றதான ஒரு படைப்பாக அது வெளிப்படும். ஏறக்குறைய ஒரேநாளில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளை திறஜெடி நாடகம் பொருளாகக் கொண்டிருந்தது.

- கிரேக்க நாடகங்கள் காலையில் தொடங்கி மாலையில் முடியுமளவிற்கு நீண்டிருந்தன. உதாரணமாக: சோபோகிளிஸ், யூரிபிடிஸ் ஆகியோரின் நாடகங்களைக் குறிப்பிடலாம். ஒருநாள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் பன்னிரண்டு மணி நேரமே திறஜெடி நாடகக் கதைப்பின்னலுக்கு உரியதாகத் தோன்றுகிறது.

**ஹமாஷியா (Hamartia)**

- ஹமாஷியா எனும் கிரேக்கச் சொல்லின் பொருள் 'குறிதவறு' என்பதாகும்.
- தலைமகன் ஒருவன் இழைக்கும் தவறை இது சுட்டுகிறது.
- தலைமகனின் அவல முடிவுக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைவதால் இது அவலப் பிழை / அவலத்தவறு என அழைக்கப்பெறுகிறது.
- கதைப்பின்னல் எதிர்த்திருப்பமுறுவதற்கும் தலைவன் வீழ்ச்சியுறுவதற்கும் இந்த அவலத்தவறே காரணமாக அமைகிறது.

**திறஜெடியின் மூலக்கூறுகள்**

- திறஜெடி ஆறுவகை உறுப்புக்களைக் கொண்டது.

  அவை: - கதைப்பின்னல்
  - பாத்திரம்
  - சிந்தனை
  - சொல்லாடல்
  - காட்சி
  - பாடல் என்பனவாகும்.

**கதைப்பின்னல் (Plot)**

- அரிஸ்டோட்டில் கூறும் திறஜெடியின் ஆக்கக்கூறுகளுள் மிகப் பிரதானமானது கதைப்பின்னல் ஆகும். கதை நிகழ்ச்சி காரண காரிய முறைப்படி செறிவாகக் கட்டமைக்கப்பட்டிருத்தலே கதைப்பின்னலாகும்.
  - அதாவது: மனித செயற்றிறன்களை முறைப்படி கோர்த்து அவற்றால் மனிதனுக்கு ஏற்படும் விளைவுகளைப் படைத்துக் காட்டுதலாகும்.
  - கதைப்பின்னல் (1) நிறை கதைப்பின்னல் (Complex Plot)
    (2) குறை கதைப்பின்னல் (Simple Plot)

    என இரு வகைப்படும்.
  - நிறை கதைப்பின்னல் தன்கத்தே பிரதான இருகூறுகள் / அம்சங்களைக் கொண்டது.
    (1) எதிர்த்திருப்பம் (Peri pety).
    (2) தெளிவு (Anagnorisis / Discovery).

- குறை கதைப்பின்னலில் சம்பவங்களின் சிக்கற்தன்மை இழிவளவாகக் காணப்படும். பெரும்பாலும் தலைமைப் பாத்திரத்திற்கு நேரிடுவதாகக் காட்டப்படும் அழிவுச் செயலாகிய துயரம் (Calamity), மூன்றாவது கூறாகக் கருதப்படுகிறது. இவ்வகைத் துன்புறுத்தலால் பாத்திரம் அடையும் துயரத்தைக் காண்போரும் உணருமாறு படைத்துக் காட்டுவதாகும்.

**பாத்திரம் (Character)**

- திறஜெடியின் மூலக்கூறுகளுள் அடுத்து முக்கியமானது பாத்திரம்.
- நாடகத்தின் மோதுகை, செயல்கள் என்பன பாத்திரங்களுக்கூடாகவே வளர்த்தெடுக்கப்படு கின்றன.
- பார்வையாளரிடத்தே உணர்ச்சி வெளிக்கொணர்கையை உண்டு பண்ணுவது பாத்திரச் சித்திரிப்பினூடேயே.

**சிந்தனை (Thought)**

- மூன்றாவதாகக் கருதத்தக்கது. கருத்து அன்றேல் சிந்தனை ஆகும்.
- காலமும் இடமும் பொருந்துமாறு நாடகச் சம்பவங்களைப் பாத்திரச் சொல்லாடல் மூலம் வெளிப்படுத்தும் திறனே சிந்தனை ஆகும்.

உதாரணம்:- கிரயன் :- வெவ்விதியை தாங்குதலும்

வெய்ய தணியா இடர்ப்பாடே....

- இது பாத்திர சொல்லாடல் மற்றும் பாடல் மூலம் வெளிப்படுத்தப்படும்.

  உதாரணம்: தைரீசியஸ் :- கரிய வினைப் பலன்கள் உம்மீது விழும்.

  குழு: - .... ஆற்றல் நிறைந்த கொடுவிதியின் ஆட்சி இதுதான் அறிமகளே!

**சொல்லாடல்**

- நான்காவது உறுப்பு சொல்லாட்சி / சொல்லாடல் ஆகும்.
- சொற்களின் பொருள் உணர்த்தும் திறன் அறிந்து பாத்திரங்களின் கருத்தை வெளிப்படுத்தும் திறனே சொல்லாட்சி எனப்படும்.
- செய்யுள், உரைநடை ஆகிய இரண்டு வடிவிலும் சொல்லாட்சியின் திறன் வெளிப்பட வாய்ப்புண்டு.
- சொல்லாடலும் அதன் தன்மையும் பாத்திரத் தன்மைகளை வெளிப்படுத்தும்.
- நாடகத்தின் அடிப்படைப் பொருளை வெளிக்கொணர்வதும் இச்சொல்லாடல் தான். இதுவே லயத்தையும் தீரமானிக்க உதவும்.

  உதாரணம்:-

  அன்ரிகனி :- தேவர்களின் நீதியைப் போல்

  தேசத்து வேந்தனின் வாய் விதிக்கும் சட்டம்

  வலிமை உடையதல்ல.

**பாடல்**

- கிரேக்க அரங்க மரபில் பாடல் முக்கியம்.
- இதனைக் கோரஸ் மூலம் கிரேக்க அரங்கில் வெளிப்படுத்தினர்.
- காட்சிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்கும், காட்சி பற்றிய மீள வலியுறுத்தல் மற்றும் அபிப்பிராயம் கூறல் என்பன கோரஸ் மூலம் நிகழ்த்தப் பெற்றது.
- இசையில் விளையும் இன்பம் அவல நாடகத்தால் விளையும் துணையின்பங்களுள் மிகச் சிறந்தது என்பார் அரிஸ்டோட்டில்.

**காட்சி**

- நாடக அரங்கில் பயன்படுத்தப்பெறும் ஆடையணி, வேடப்புனைவு, மேடை, நடிகர் அனைத்தும் காட்சிகள் / காண்பியங்கள் எனப்பெறும்.
- இக்காட்சி நாடகச் சம்பவங்களுக்குரிய சூழலைத் தோற்றுவித்து, பார்ப்போர் மனங்களில் காட்சி பற்றிய பருவரையை ஏற்படுத்தும்.
- காட்சி / மேடையமைப்பு நாடகத்திற்குக் கவர்ச்சியளிப்பது.

**கணிப்பீடு:**

- அரிஸ்டோட்டிலிய அரங்கு என்பதன் எண்ணக்கருவை விளக்குக.
- திறஜெடியின் ஆக்கக் கூறுகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுக.

- திறஜெடி நாடகம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு மூன்றன் ஒருமையின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.
- மேலைத்தேய அரங்கப் போக்கில் கிரேக்க அரங்கின் செல்வாக்கு பற்றி விவரிக்குக.
- அரிஸ்டோட்டிலியக் கருத்து நிலையானது பாரப்போரின் சுயாதீனத்திற்கு எவ்வகையில் இடமளிக்கிறது என்பது பற்றி கருத்துரைக்குக.

**பின்தொடர் செயற்பாடு:**

திறஜெடி நாடகம் ஒன்றின் காட்சித் துண்டம் ஒன்றை ஆற்றுகை செய்ய வழிப்படுத்துக.

**உசாத்துணைகள்:**

- கவிதையியல் - அரிஸ்டோட்டில்.
  மொழிபெயர்ப்பு - அ. அ. மணவாளன்
- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - கோகிலா மகேந்திரன்.
- அரங்கு - திரு. க. திலகநாதன்.
- நாடக அரங்கியலுக்கான ஆற்றுப்படை - இரா. ஜெகநாதன்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.4 | : | கிரேக்க அரங்குடன் தொடர்புடைய கொள்நெறி அடிப்படைகளைக் கற்பார். |
| **செயற்பாடு** | 2.4.3 | : | கிரேக்க திறஜெடி மற்றும் மகிழ்நெறியின் வளர்ச்சிப் போக்கினைக் கற்போம். |
| **பாடவேளை** | | : | 06 |

**கற்றற் பேறுகள்:**

- கிரேக்க திறஜெடி நாடகங்களின் வளர்ச்சிப் போக்கின் முக்கிய கட்டங்களை அறிந்திருப்பார்.
- கிரேக்க மகிழ்நெறி வளர்ந்த முறைமையை விவரித்துக் கூறியிருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கிரேக்க திறஜெடி நாடக எழுத்துருக்கள்.
- கிரேக்க அரங்கு பற்றிய கட்டுரைகள்.
- நூல்கள் மற்றும் சஞ்சிகைகள்.

**அறிமுகம்:**

கிரேக்க திறஜெடி மற்றும் மகிழ்நெறி நாடகத்தின் வளர்ச்சிப் போக்கினை அறிதலே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

விவாதம்

- குழுக் கலந்துரையாடல்கள்.
- விரிவுரை.
- நூல் உசாவுகை.
- முன்வைப்புக்கள்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

பின்வரும் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுங்கள்.

- உலகளாவிய ரீதியில் சடங்கினடியாகவே நாடகம் தோற்றம் பெற்றதென்பர்.
- கிரேக்கத்திலும் சடங்கினடியாகவே நாடகம் தோன்றிற்று.
- கிரேக்கத்தில் திறஜெடி, கொமெடி எனும் இருவகை நாடகங்கள் சிறந்து விளங்கின.

**திறஜெடி நாடகத்தின் வளர்ச்சிப் போக்கு**

- டயோனிசியஸ் சடங்கின் ஆடல் பாடல் நிறைந்த 'டித்திராம்' இலிருந்து தோன்றியது.
- கூட்டுப் பக்திப் பாடல் பாடிய கோரஸ் ஊர்வலமாகச் சென்று, இடையிடையே தரித்து நின்று பாடி ஆடியது.
- கூட்டாகப் பாடுதல் , பலியிடுதல், ஊர்வலப் பண்பு என்பன நிறைந்து காணப்பெற்றன.
- காலப்போக்கில், ஓரிடத்தில் நின்று ஆற்றுகை செய்யும் நிலைமை தோற்றம் பெற்றது.

- ‘தெஸ்பிஸினால்’ முதலாவது நடிகன் தோற்றம் பெற்றமையும், கோரஸிலிருந்து அவன் வேறு பிரித்துக் காட்டப் பெற்ற முறைமையும்.
- ‘அரியோன்’ (Arion) என்பவர் பங்களித்த முறைமை.
- ஈஸ்கிலஸ், இரண்டாவது நடிகனைத் தோற்றுவித்தமையும், கோரஸின் எண்ணிக்கையைக் குறைத்தமையும். அது திறஜெடியில் ஏற்படுத்திய மாற்றங்களும்.
- மேலும், சமகால விடயப்பொருளை உள்ளடக்கி நாடக எழுத்துருக்களை எழுதியமை.
- சோபோக்கிளிசினால் மூன்றாவது நடிகன் தோற்றுவிக்கப்பட்டமையும், சிக்கலான சூழ்வுகளைப் பின்னிக் கதை வளர்க்கப்பட்டமையும் பாரிய வளர்ச்சிக்கு வழிகோலியது.
- கோரஸின் எண்ணிக்கையைப் பதினைந்தாக உயர்த்திய போதிலும், கோரஸின் தலையீட்டைக் குறைத்து விமர்சனப் பாங்கில் கையாண்டமை.
- ‘கதாஸிஸ்’ எனும் உணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தியமை.
- அரங்கப் பொறிகளின் பயன்பாடு, காட்சி மாற்றத்துக்கும் அரங்கில் காட்ட முடியாதவற்றைக் காட்டுவதற்கான உத்தியாகவும் பயன்பட்டமை.
- தனக்கென ஒரு கட்டமைப்பினைக் கொண்டு திறஜெடி நாடகங்கள் வளர்ச்சி பெற்றமை.
- காலப்போக்கில் யூரிபிடிசினால் இறுக்கமான கட்டமைப்பு உடைக்கப்பட்டு தனிமனித உளவியல் மீது செல்வாக்குச் செலுத்தியமை.
- எலிசபெத் காலத்தில் ஷேக்ஸ்பியரால் திறஜெடி பிறிதொரு பரிமாணத்திற்கு இட்டுச் செல்லப் படுவதற்குக் கிரேக்க திறஜெடி நாடகங்கள் காலாக அமைந்தமை.

**கொமெடி நாடகத்தின் வளர்ச்சிப் போக்கு**

- டயோனிசியஸ் சடங்கோடு தொடர்புடைய ‘லெனே’ விழாவிலிருந்து தோன்றியது.
- Phallic Song எனப்படும் இலிங்கப் பாடல்களிலிருந்து தோன்றியது.
- ஆரம்ப காலங்களில் முரட்டுத்தனம், பாலியல்சார் கொச்சைத்தனம் நிறைந்திருந்தது.
- காலப்போக்கில் இலக்கியச் சுவை நிரம்பிய செழுமையான கவிதை மூலம் செம்மை பெற்றமை.
- ஆரம்பத்தில் எளிமையான கதைச்சூழ்வையும், காலப்போக்கில் விரிவான கதைச் சூழ்வையும் கொண்டிருந்தமை.
- ஆரம்பத்தில் பிரதான பங்கு வகித்த கோரஸின் முக்கியத்துவம் பிற்காலத்தில் குறைக்கப் பட்டமை.
- தனிநபர் வசமாரி குறைந்து, கற்பனை அழகு, மொழிவளம் நிறைந்தமை.
- மத்தியதர வர்க்கப் பிரச்சினைகள் பேசப்பட்டமை.
- பாத்திரப்படைப்பு, மென்நய உணர்வு, யதார்த்தச் சிந்தனை மேலோங்கியமை.
- பிரச்சினையை ஆராயும் நாடகங்களாக உருப்பெற்றமை.
- உரோம ஆசிரியர்களினூடு, ஐரோப்பிய அரங்கில் தாக்கம் விளைவித்தமை.

**செயற்பாடு:–**

"ஐரோப்பிய அரங்க வரலாற்றில் கிரேக்க திறஜெடி மற்றும் கொமெடி நாடகத்தின் வளர்ச்சிப் போக்குகளும் அவற்றின் முக்கியத்துவமும்" எனும் தலைப்பில் கட்டுரை வரைவதற்கு வழிப்படுத்துங்கள். அன்றேல் Power Point மூலம் முன்வைப்புச் செய்வதற்கும் அது பற்றிய விவாதக் களத்தை நிகழ்த்துவதற்கும் சந்தர்ப்பமளிக்கலாம்.

**கணிப்பீடு:**

- கிரேக்க திறஜெடி நாடகங்களின் பிரதான வளர்ச்சிக் கட்டங்களைக் குறிப்பிடுக.
- கிரேக்க கொமெடி நாடகங்களின் வளர்ச்சிப் போக்கினைச் சுருக்கமாக விளக்குக.
- கிரேக்க திறஜெடி நாடகங்களின் முக்கியத்துவத்தினைக் கூறுக.
- ஐரோப்பிய அரங்க வரலாற்றில் கிரேக்க நாடகங்களின் முக்கியத்துவம் பற்றிச் சிறு உரை நிகழ்த்துக.
- கிரேக்க திறஜெடி, கொமெடி நாடகங்களின் வளர்ச்சிக்குப் பின்னணியாகச் செயற்பட்ட நிலைமை களைச் சுருக்கமாகக் கூறுக.

**உசாத்துணைகள்:**

- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - கோகிலா மகேந்திரன்.
- நாடக வழக்கு - குழந்தை ம. சண்முகலிங்கம்.
  - தொகுப்பு - க. ஸ்ரீகணேசன்.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
  பேராசிரியர் சி. மௌனகுரு.
  திரு. க. திலகநாதன்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.5 | : | பிரதான அரங்க மோடிகள் பற்றியும் அவற்றுக்கிடையிலான வேறு பாடுகள் பற்றியும் பயின்றவர் ஆவார். |
| **செயற்பாடு** | 2.5.1.1 | : | அரங்கில் கற்பித / மனோரதியவாத முறைமையின் வகிபாகத்தைப் இனங்காண்போம். |
| **பாடவேளை** | | : | 11 |

**கற்றற் பேறுகள்:**

- பிரதான அரங்க மோடிகளை யதார்த்தவிரோதம், யதார்த்தம் சாரா என வேறுபடுத்துவார்.
- யதார்த்தம் சாரா அரங்காக கற்பித / மனோரதிய நாடகங்கள் இருப்பதற் கான சான்றாதாரங்களை முன்வைத்திருப்பார்.
- கற்பித / மனோரதிய நாடகங்களின் நடிப்பு முறையின் பிரதான அம்சங்களை அறிந்திருப்பார்.
- கற்பித / மனோரதிய நாடகவியலாளர்களின் பெயர்களையும் அவர்களால் எழுதப் பெற்ற நாடகங்களையும் கூறுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கற்பித / மனோரதியவாத நாடகவியலாளர்களின் ஒளிப்படங்கள்.
- கற்பித / மனோரதிய நாடகச் சொல்லாடல்கள் அடங்கிய பிரதிகள்.
- அரங்கில் நடிகன் உடலை வைத்திருக்கும் நிலை பற்றிய ஒளிப்படங்கள்.

**அறிமுகம்:**

15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற கற்பித / மனோரதியவாதத்தை அரங்கு உள்வாங்கிய விதத்தையும் அது நடிப்பில் கொண்டுவந்த மாற்றங்களையும் அறிந்து கொள்வது இங்கு முக்கியமானது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- நூல் உசாவுகை.
- தேடியாய்வு.
- விரிவுரை.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- ஐரோப்பாவில் கற்பித / மனோரதியவாத அரங்க மோடியின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்த புறச்சூழல்.
- கற்பித / மனோரதியவாதம் என்பதனை விளங்கிக் கொள்ளுதல்.
- கற்பித / மனோரதியவாத அரங்க மோடி கொண்டிருந்த பிரதான பண்புக் கூறுகள்.
- கற்பித / மனோரதியவாத நடிப்பு முறை.
- ஐரோப்பாவில் கற்பித / மனோரதிய அரங்க மோடியை வளர்த்துச் சென்றோரும் அவர்தம்

நாடகங்களும்.

- தமிழ்ப் பண்பாட்டில் இவ்வரங்க மோடி நிலைப்பட்டதாய்த் தடம்பதித்த நடிகர்கள்.
ஆகிய விவரங்கள் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் இடம்பெற வேண்டியவை.
- மனிதனுடைய செயல்களை வழிநடத்துவது அவனிடம் இயல்பாகவே உள்ள உள்ளுணர்வே யாகும். அத்தகைய தனிமனிதனே முதன்மையானவன். அவனுடைய வாழ்வை இலட்சியப்படுத்த வேண்டும். உலகை வெல்லக்கூடிய மனிதனாக அவன் இருக்க வேண்டும் என்ற சிந்தனையின் அடிப்படையில் அமைந்ததே கற்பித / மனோரதியவாதம் என்ற கோட்பாடாகும்.
- ''சிறந்த கலை என்பது கட்டுப்பாடுகள் எதுவுமற்ற நிலையில் பிறப்பது. அதுவே கற்பனையும் மனவெழுச்சித் தன்மையும் மிக்க படைப்பாக்கத்திற்கு வழிவகுக்கும்'' என்பது இக்கோட்பாட்டின் முக்கியமான அம்சமாகும்.
- Romanticism என்னும் சொல் 'Romance' எனும் சொல்லின் அடிப்படையில் உருவானது. Romance என்பது யதார்த்தத்தைப் பொருட்படுத்தாத காதல் ஆகும்.
- யதார்த்த வாழ்விற்குச் சற்றும் பொருத்தமற்ற வகையில், தனிமனிதன் ஒருவன் தன் உள் மன உந்துதல் காரணமாக எல்லாத் தடைளையும் துவம்சம் செய்து வெற்றியீட்டுபவனாகக் காட்டப்பெறுவான்.
- 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்று, 19ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி வரை செல்வாக்குச் செலுத்திய ஒரு கோட்பாடு இதுவாகும். அதன் தோற்றத்திற்குப் பின்வருவன தளமாக அமைந்தன.
  - கிரேக்கத்தில் இருந்து பின்பற்றப் பெற்ற அரங்க முறையின் தாக்கம்.
  - மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலி, ஸ்பானிஸ் போன்ற நாடுகளில் ஏற்பட்ட அரங்கு சார் மாற்றங்கள், குறிப்பாக இத்தாலியில் 'கொமடியா டெல் ஆர்த்தே' யின் செல்வாக்கும். ஸ்பானிய நாடக மேடையில் 'லோப்போ டிபேக்கா' ஏற்படுத்திய தாக்கங்களும்.
  - பிரான்சில் நெப்போலியனின் எழுச்சி 'வெல்லப்பட முடியாதவன்' என்ற விம்பத்தைத் தோற்றுவித்தமை.
- இந்தச் செல்வாக்குகள் காரணமாகச் செம்மையான மகிழ்நெறி நாடகங்களும் 'ஒபேரோ' எனப்படும் பாடலரங்கும் தோற்றம் பெற்றது.
- வாழ்வை இலட்சிய நோக்கில் பார்க்கின்ற மனோரதிய நாடகங்கள் உருவாகின.
- கவர்ச்சிகரமான உரையாடல்களுக்கு முதன்மையளிக்கப் பெற்றது.
- கற்பனைவாதத் தன்மை வாய்ந்த காதல் மற்றும் வீரம் போன்றன முன்னிலைப்படுத்தப் பெற்றன.
- நாடகக் கதை புனைவுத்தன்மை வாய்ந்ததாகவும் கதாநாயகன் வெல்லப்பட முடியாதவனாயும் படைக்கப்பட்டான்.
- வீரத்தையும் தியாகத்தையும் உணர்வெழுச்சி நிரம்பிய நிலைமைக்கு உட்படுத்தினர்.

- நடிப்பில் ஒருவகை போலித்தனம் பின்பற்றப்பட்டது.
  - உடலைக் கவர்ச்சிகரமாய் மேடையில் நிறுத்துதல்.
  - உணர்ச்சி வெளிப்பாட்டைக் காட்டிலும் வெளித் தோற்றப்பாட்டில் அதிக கவனம் செலுத்துதல்.
- கவர்ச்சிகரமான நீண்ட உரையாடல்கள்.
  - மூச்சு விடாமற் பேசி முடித்தல்.
  - ஆர்ப்பாட்டம் மிக்க நடிப்பு.
  - பிரபுத்துவத்துடன் இணைந்த காதலுடன் தொடர்புடைய கதைக்கரு.
- ஜேர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் இவ்வரங்க மோடி பின்பற்றப் பட்டது. ஒபேரா மரபிலும், ஸ்பெஷல் நாடக மரபிலும் இதன் தாக்கத்தை உணர முடியும்.
  - நடிப்புத்திறனிலும் பார்க்கப் பாடும் திறனுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
  - அதற்கூடாக வெளிப்படுகின்ற மிகையுணர்ச்சி.
  - பாத்திரப் பொருத்தத்திற்கும் உருவத்திற்கும் தொடர்பில்லாதிருத்தல்.
  - S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள், M. K. தியாகராஜபாகவதர், P. V. சின்னப்பா போன்றோர் ஸ்பெஷல் நாடக மிகையுணர்ச்சி நாடக நடிப்பிற்குப் பெயர்போனவர்கள்.
- அதேசமயம் நடிப்பையும் பாடலையும் அற்புதமாக இணைத்த வி. வி. வைரமுத்து போன்றவர் களையும் விதந்துரைக்க முடியும்.
- ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கதே இனது Faust, அலெக்சாண்டர் டூமா இனது The Court of Mantechristo, Three Musketeers, ஷில்லர் இன் Two Robbers மற்றும் Don Carlos, லெங்கின் ஷ்லார்ட்ஸ் இனது Dragon போன்ற நாடகங்கள் கற்பித / மனோரதிய பாணியில் அமைந்தவை ஆகும்.

**கணிப்பீடு:**

- கற்பித / மனோரதிய வாதத்தின் தோற்றத்திற்குக் காரணமாய் இருந்த விடயங்களை முன்வைக்குக.
- கற்பித / மனோரதிய வாதத்தின் முதன்மையான பண்புகளைக் கூறுக.
- கற்பித / மனோரதிய அரங்க மோடி சார் நடிப்பு முறையில் காணப்பெற்ற பிரதான அம்சங்களை எடுத்துரைக்குக.
- கற்பித / மனோரதிய வாத அரங்க மோடியின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, சத்தியவான சாவித்திரி அன்றேல் வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகத்தை ஆராய்ந்து, அதன் கற்பித / மனோரதியப் பண்புகள் குறித்த சுவரொட்டியைத் தயாரிக்குக.

**உசாத்துணைகள்:**


- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர். கா. சிவத்தம்பி
  திருத்திய இரண்டாம் பதிப்பு (2014) பேராசிரியர். சி. மௌனகுரு.
  திரு. க. திலகநாதன்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி (2010) - தேசிய கல்வி நிறுவகம்.
  நாடகமும் அரங்கக் கலைகளும், க.பொ.த (உயர்தரம்)

**தேர்ச்சி** 2.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.5 : பிரதான அரங்க மோடிகள் பற்றியும் அவற்றுக்கிடையிலான வேறு பாடுகள் பற்றியும் பயின்றவர் ஆவார்.

**செயற்பாடு** 2.5.1.2 : அரங்கில் மிகைப்பாட்டுவாதத்தின் வகிபாகத்தைப் புரிந்து கொள்ளுவோம்.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :

- மிகைப்பாட்டு வாதத்தின் தோற்றப் பின்புலத்தை அறிந்திருப்பார்.
- மிகைப்பாட்டு வாதத்தைக் கற்பித, மனோரதியவாதத்துடன் ஒப்பிட்டுக் கருத்துரைப்பார்.
- மிகைப்பாட்டுவாத நாடக மோடியின் பிரதான அம்சங்களை முன்வைப்பார்.
- மிகைப்பாட்டுவாத நாடகவியலாளர்களை அறிந்து வைத்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மிகைப்பாட்டுவாத நாடகவியலாளர்களின் ஒளிப்படங்கள்.
- மிகைப்பாட்டுவாத நாடகப் படைப்புக்கள் சில.

**அறிமுகம்:**

ஐரோப்பாவில் மிகைப்பாட்டுவாதம் தோன்றியமைக்கான பின்னணியை விளங்கிக் கொண்டு அதனடியாகத் தோன்றிய அரங்கின் பண்புகளை விளங்கிக் கொள்வதே இப்பாட விடயத்தின் எதிர்பார்ப்பாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- நூல் உசாவல்.
- தேடியாய்வு.
- விரிவுரை.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- இங்கு பின்வரும் விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.
  - மிகைப்பாட்டுவாதத்தின் தோற்றத்திற்குப் பின்புலமாய் அமைந்த விவரங்கள்.
  - மிகைப்பாட்டுவாதம் முன்வைக்கும் முக்கிய விடயங்கள்.
  - மிகைப்பாட்டுவாத பாணியிலான நடிப்பு முறை.
  - மிகைப்பாட்டுவாத நாடக ஆசிரியர்கள்.
- மிகைப்பாட்டுவாதம் (Melo Dramatic) தோன்றுவதற்குப் பின்னணியாய் அமைந்தவை பற்றி எடுத்துரைத்துக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
  - கற்பித / மனோரதிய வாதம் ஐரோப்பாவில் நிலவிய அதே காலப்பகுதியில் பயில் நிலையில் இருந்த இன்னொரு கொள்நெறியே மிகைப்பாட்டுவாதம் ஆகும். ஆனால்

அன்றைய ஐரோப்பியச் சூழல் இரு பாணிகளுக்கும் பொதுவாய் அமைந்திருந்தது.

- அமெரிக்கா, இங்கிலாந்து போன்றவற்றில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியும், அதனுடனான இயந்திரமயமாக்கலும் ஐரோப்பியச் சிந்தனையை மாற்றியமைத்தமை.
- பொழுதுபோக்குடன் கூடிய மகிழ்வளிப்புத் தன்மை மேலோங்கியமை.

- இவற்றிற்கு ஊடாகப் பிறந்த மிகைப்பாட்டுவாதம் அரங்கிற்குக் கொண்டு வந்த விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - கடுமையான ஒழுக்கப் பண்பு.
  - நீதியைக் கடைப்பிடித்தல்.
  - நல்லவர் நன்மை பெறுவார். தீயவர் தண்டனை பெறுவார் என்ற அடிப்படைச் சிந்தனை.
- மிகைப்பாட்டுவாத நாடகமோடி கொண்டிருந்த முக்கிய அம்சங்கள் பற்றி நூல் உசாவல் செய்ய வசதி செய்யுங்கள். அதிலிருந்து கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
  - உணர்ச்சி முனைப்புடைய இன்ப முடிவு நாடகம்.
  - பல்லியங்களின் பின்னணி இசையுடன் கூடிய பாடல்கள் விரவப்பெற்ற நாடகம்.
  - பார்ப்போரை வியப்பிற்கு உள்ளாக்கும் கதைப்போக்கு.
  - கையிருப்புப் பாத்திரங்களைக் கொண்டிருத்தல்.
  - கதாநாயகன், கதாநாயகிக்கு, வில்லன், வில்லி, கோமாளி என்போர் இங்கு முக்கிய பாத்திரங்கள்.
  - கதாநாயகன், கதாநாயகிக்கு ஏற்படும் துன்பம், வில்லனின் சூழ்ச்சி, கதாநாயகன் சினத்துடன் செயற்பட்டுத் தீமையை அழித்தல் என நாடகக் கதைப்பின்னல் பார்ப்போரை நாடகத்துடன் கட்டிவைத்திருக்கும் தன்மை கொண்டது.
  - ஆடலும் பாடலும் முக்கிய இடம்பெற்றது.
  - அதிகளவு உணர்ச்சிகளைக் கொண்டு நடித்தல்.
  - மிகைப்படுத்தப் பெற்ற அசைவுகள், செயல்கள்.
  - பாடுவதன் வழியாக மிகையான பாத்திரப் பண்பைக் கொண்டு வருதல்.
  - மேடையில் கவர்ச்சிகரமான அசைவுகளைச் செய்தல்.
  - பெருங்காட்சிப் பண்புகள், அரங்கை அலங்கரிக்கும் வர்ண ஜோடனைகள்.
  - ஒரு வகை வீர நடிப்பு முறை.
  - குரலை அதிகம் பாவித்தல், பேச்சினை மெல்ல மெல்ல உயர்த்திச் சென்று உச்சத்திற்குக் கொண்டு செல்வது.
- மெலேடிராமாவில் நடிகன் அன்றேல் நடிகையே பிரதானமானவர். அதனால் இந்நாடகம் வழியாகத் தனிப்பட்ட நடிகர்களே பிரபல்யம் பெற்றனர். பார்ஸி வழி நாடகங்கள், இலங்கையின் ஸ்பெஷல் நாடகம், பம்மல் சம்பந்த முதலியார் மற்றும் கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோரின் நாடகங்கள் யாவும் மிகையுணர்ச்சி நாடக மேடி சார்ந்தவையே.
- மிகையுணர்ச்சி நாடக ஆசிரியர்களில் றெலே கல்பேட் டிபிசறிக்கோட், விக்டர்குகோ,

அலெக்சாண்டர் டுமாஸ், அல்பிரட் வீகனி. அல்பிரட்டி முஸ்ஸெற் போன்றோர் முக்கிய மானவர்கள்.

**கணிப்பீடு:**

- மிகையுணர்ச்சிவாத நாடகங்களின் அடிப்படையான பண்புகளை எடுத்துரைக்குக.
- மிகையுணர்ச்சி நாடகமொன்றில் இருந்து யாதேனும் நாடகச் சொல்லாடலைச் சித்திரித்துக் காட்டுக.
- மிகையுணர்ச்சி நாடக ஆசிரியர்களின் பெயரப்பட்டியலைத் தயாரிக்குக.
- கலையரசு சொர்ணலிங்கம் பாணி நாடகமொன்றில் இருந்து மிகையுணர்ச்சி நாடகப் பண்புக் கூறுகளை எடுத்துக் காட்டுக.

**உசாத்துணைகள்:**

- அரங்கியல் - பேராசிரியர். சி. மௌனகுரு.

**தேர்ச்சி 2.0** :நாடகமும் அரங்கக்கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.5:**பிரதான அரங்க மோடிகள் பற்றியும் அவற்றுக்கிடையிலதன வேறுபாடுகள் பற்றியும் பயின்றவர் ஆவார்.

**செயற்பாடு 2.5.2** :இயற்பண்புவாத, யதார்த்தவாத அரங்க மரபுகள் பற்றிக் கற்றறிவோம்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

• ஜரோப்பாவில் இயற்பண்பு வாதத்தின் தோற்றத்திற்குப் பின்புலமாய் இருந□த விடயங்களை முன்வைத்திருப்பார்.

• இயற்பண்புவாத, யதார்த்தவாத அரங்க மரபுகளின் உருவாக்கத்திற்குக் காரணமான நிலைமைகளை அறிந்திருப்பார்.

• இயற்பண்பு வாதத்திலிருந்து யதார்த்த வாதம் மேற்கிளம்பியமை பற்றி ஆராய்ந்திருப்பார்.

• நன்கமைந்த நாடகங்கள் யதார்த்தவாத அரங்க மரபில் வகித்த செல்வாக்கை இனங்கண்டிருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

• எமிலிசோலா,ஹென்றிக் இப்சன் ஆகியோரது ஒளிப்படங்கள்.

• இப்சனின் ஒரு பாவையின் வீடு நாடக எழுத்துரு.

**உசாத்துணை நூல்கள்.**

**அறிமுகம்:**

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்பண்புவாத, யதார்த்தவாத அரங்க மரபுகளின் தோற்றத்திற்குக் காரணமான நிலைமைகளை ஆராய்வதனூடாக அம்மரபுகள் வளர்ச்சியடைந்த முறைமை பற்றி நோக்க வேண்டும்.இப்சனின் ஒரு பாவை வீடு நாடகத்தில் யதார்த்த வாத அரங்க மரபின் செல்வாக்கு இடம்பெற்றிருக்கும் விதத்தை ஆராய்ந்தறிய வேண்டும்.

**கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்:**

• தேடியாயவு.

• நூல் உசாவுகை.

• விரிவுரை.

கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

• 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜரோபபாவில் வாழ்க்கை பற்றிய சிந்தனை மாற்றமடைந்தமை பற்றியும் அதற்குப் பின்புலமாய் இருந்து செயற்பட்ட காரணிகளைத் தேடியறியவும் மாணவர்களைத் தூண்டுங்கள்.

• கைத்தொழிற் புரட்சியின் விளைசுகள்.

• நகரமயமாக்கம்.

• வேலையினமை.

• குழந்தைத் தொழிலாளரின் உருவாக்கம்.

• நோய்,துன்பம், வறுமை.

• சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கை.

• நெப்போலியனின் வீழ்ச்சி.

• கற்பனா உலகில் சஞ்சரித்துக் கொணடிருந்த ஜரோப்பியரை யதார்த்த வாழ்வை நோக்கித் திருப்புவதற்கு இந்தப் பின்னணி காரணமாய் அமைந்த விதத்தை மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்யுங்கள்.

• யதார்த்த வாதச் சிந்தனைகளை நிராகரித்து, உண்மையான வாழ்வியல் அம்சங்களை இரத்தமும் சதையுமாக அதிக உண்மைத்தன்மையுடன் வெளிப்படுத்தல், என்ற சிந்தனைத் தெளிவு உருவானமை, இயற்பண்புவாத, யதார்த்தவாத அரங்க மரபுகளின் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்ததைப் புரிந்து கொள்ளச் செய்யுங்கள்.

• யதார்த்தவாதம் என்ற பரந்த அருவியில் உள்ளடங்கியிருக்கும் ஒரு சிறிய நீரோட்டமே இயற்பண்புவாத் ஆகும். இது வெளிப்படையாகக் காணும் வாழ்வின் ஒரு துண்டத்தை, உள்ளதை உள்ளவாறே எதுவித ஒளிவு மறைவுகளுமின்றி மேடையேற்ற முனைந்தது.சமூகத்தின் பிரச்சினைகளை ஆய்வு செய்து, வாழ்வையும் மனிதனையும் உள்ளவாறே மேடைக்குக் கொண்டுவந்நது.உயர் சமூகத்தின் மறைக்கப்பட்ட போலித்தன்மை நிறைந்த வாழ்க்கையை, அந்தரங்கக் குறைபாடுகளை வெளித் தெரியச் செய்வதாக, சாதாரண வாழ்வின் துன்பங்களை வெளிப்படுத்துவதாக இயற்பண்புவாத நாடகங்களின் மையப்பொருள் அமைந்திருந்தது.ஆகிய விடயங்களை அறிந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.

• இயற்பண்பு வாதத்தின் வீழ்ச்சிக்குரிய காரணிகளைக் கண்டறிய மாணவர்களைத் தூண்டுங

• ஒன்றையே மாற்றமில்லாது திரும்பத் திரும்ப நிகழ்த்தியமையால் ஏற்பட்ட சலிப்பு.

• கலைத்துவமற்ற தன்மை.

• அரங்கு ஒரு செய்தியைச் சொல்லவேண்டும் எனக் கருதியமை.

• தெரிவு, தொகுப்பிற்கு இடமளிக்கவேண்டும் என்ற எண்ணம்.

யதார்த்தவாத அரங்க மரபிற்கான தோற்றத்திற்கான காரணிகளை விளங்கிக்கொள்ளச் செய்யுங்கள்.

• இயற்பண்புவாதத்தின் வீழ்ச்சி.

• உள்ளதை உள்ளவாறு சித்திரிக்கும்போது தெரிவு, தொகுப்பு, கலைத்துவ வியாக்கியானம் என்பவற்றிற்கு இடமளிக்க முற்பட்டமை.

• சமகால வாழ்க்கை நிலைமைகளில் இருந்து கலைக்கான மையப்பொருள் எடுக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை.

• உரத்துப் பேசுகின்ற நன்கமைந்தஅநாடகங்களுக்குப் பதிலாக (றுநடட- ஆயனந ீடயலள) புதுவகையான நடிப்புத் தேவைப்பட்டமை.

• பேச்சைக் கடத்தும் முறையிலும் அசைவியக்கங்களிலும் மாற்றத்திற்கான தேவைப்பாடு உணரப்பெற்றமை.

• நன்கமைந்த நாடகங்களின் கூறுகளை யதார்த்தவாதம் உள்வாங்கியமை பற்றி அறிந்துகொள்ளச் செய்யுங்கள்.

• நிலைமையும் பாத்திரமும் நன்கு விளக்கப்பெறுதல்.

• எதிர்கால நிகழ்விற்குக் கவனமாக ஆயத்தமாதல்.

• எதிர்பாராத ஆனால் காரண காரியத் தொடர்புடைய பின்னடைவுகள்.

• தொடர்ச்சியானதும் உயர்ந்து செல்வதுமான என்ன நடக்குமோ என்ற அங்கலாண்ப்பு நிலை.

• இவற்றுக்குச் சார்பாக நின்று உதவும் காட்சி விதானிப்பு.

• காரண காரியத் தொடர்□டாக வருவதும் நம்பகத் தன்மை உடையதுமான முடிவு.

• ஹென்றிக் இப்சனின் ஒரு பாவையின் வீட நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட விடயங்களை ஆய்வு செய்யத் தூண்டுங்கள்.

**கணிப்பீடு:**

• இயற்பண்பவாத, யதார்த்தவாத நாடக மரபுகளின் தோற்றத்திற்குப் பின்புலமாய் அமைந்த காரணிகளை முன்வைக்குக.

• இப்சனின் ஒரு பாவையின் வீடு நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு யதார்த்தவாதம் என்பதற்கு விளக்கம் தருக.

**தேர்ச்சி 2.0** :நாடகமும் அரங்கக்கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.5** :பிரதான அரங்க மோடிகள் பற்றியும் அவற்றுக்கிடையிலதன வேறுபாடுகள் பற்றியும் பயின்றவர் ஆவார்.

**செயற்பாடு 2.5.3** :யதார்த்தவிரோத அன்றேல்மோடிமை அரங்க மரபுகள் பற்றிப் பயில்வோம்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- யதார்த்தவிரோத அரங்கின் தோற்றத்திற்குக் காரணமான அம்சங்கள் பற்றி எடுத்துக் கூறுவார்.
- யதார்த்தவிரோதத்தினூடாக வளர்ந்து சென்ற பல்வேறு அரங்கப் போக்குகளை அறிந்திருப்பார்.
- யதார்த்தவிரோத அரங்க மோடியின் பண்புகளை உணர்ந்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

- யதார்த்தவிரோத அரங்கவியலாளரின் ஒளிப்படங்கள்.
- யதார்த்த விரோத அரங்குகளின் அட்டவணை.

**அறிமுகம்:**

- யதார்த்தவாதத்தின் வீழ்ச்சிக்குரிய காரணங்களை அறிந்துகொண்டு அது யதார்த்தவிரோத அரங்க மரபின் தோற்றத்திற்குக் காரணமானதை விளங்கிக்கொள்வதும் யதார்த்தவாத அரங்குகளாக மேற்கிளம்பியவை பற்றி அறிந்துகொள்வதும் இங்கு முக்கியமானதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- விரிவுரை.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- **20ஆம் நுற்றாண்டில்** யதார்த்தவாதம் சந்தித்த வீழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து யதார்த்தவிரோத அரங்க முறைமையின் எழுச்சியும் உருவானமை குறித்த தகவல்களைச் சேகரிக்கச் செய்யுங்கள்.
- இயல்பான கால மாற்றங்கள்.
- விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்.
- சிக்மன்ட் புரொயிட் போன்ற உளவியல் அறிஞர்களின் தோற்றம்.
- மனிதனின் ஆழ்மன நிலைக்கும் நடைமுறை வாழ்வுக்கும்

- இடையிலானமுரண்பாடுகண்டறியப்பெற்றமை.
- இரண்டாம் உலக மகா யுத்தமும் அதன் விளைசுகளும்.
- போன்ற காரணிகள் யதார்த்தவாதம் குறித்த வினாக்களை எழுப்பி அதனை விமர்சனத்திற்குட்படுத்தியமை.
- இந்தப் பின்னணியில் இருந்து யதார்த்த விரோத அரங்க முறைமை பற்றிய சிந்தனைகள் தோற்றம் பெற்றன.
- இந்த விவரங்களின் வெளிச்சத்தில் புதிய கொள்நெறிகளாகத் தோந்நம் பெற்ற யதார்த்த விரோத அரங்க மரபுகள் குறித்துக் கவனஞ் செலுத்தத் துஸண்டுங்கள்.

• குறியீட்டுவாதம், வெளிப்பாட்டுவாதம், காவிய அரங்கு, கட்டமைப்பு வாதம் போன்ற சிந்தனைகள் அரங்கில் மேற்கிளம்பியமையும் அது ஏற்படுத்திய செல்வாக்குகளும் பற்றி மேலோட்டமாகக் கற்றுக்கொள்ளத் தூண்டுங்கள்.

- தனிமனிதனுக்குப் பதிலாக சமூக மதனிதனை முதன்மைப்படுத்தியமை.
- மனித இருப்பின் சாரத்தைக் குறியீடுகளால் சித்திரித்தல்.
- பார்ப்போனை அரங்கில் இருந்து துன்பத்துடன் வெளியேறாமற் செய்தல்.
- குறியீட்டு தன்மையான காட்சியமைப்புக்கள், ஒப்பனை, ஒளிவதானிப்புக்கள்.
- படச்சட்ட அரங்கின் எல்லைகளை உடைத்துக்கொண்டு வெளிவருதல்.
- காட்சித் திரைகளின் நீக்கம்.
- எடுத்துரைப்பு முறைமையின் அறிமுகம்.
- அரங்கை ஓர் இயந்திர இயக்கமாக்கல்.
- உடலுக்கு முதன்மையளித்தல்.

• போன்றவை படைப்பாளியின் கற்பனைக்கு அதிக இடம் அளித்தமையும் அதன் விளைவாகப் புதிய வகையிலான நாடக மோடி உருவானமை தொடர்பில் விளக்குங்கள்.

• உலக மகா யுத்தங்கள் ஏற்படுத்திய கீழ்க்காணும் சீர்குலைவுகள் யதார்த்தத்தின் பெதமையை உணர்த்தின.

- இறப்பு வீத அதிகரிப்பு.
- அங்கவீனர்களின் பெருக்கம்.
- சுதேச வளங்களின் அழிவு.
- விதவைகளின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு.
- நோய்களின் தோற்றம்.
- உணவுத்தட்டுப்பாடு.
- மருத்துவ வசதிகள் இன்மை.
- யப்பானில் வீசப்பட்ட அணுகுண்டு ஏற்படுத்திய பேரதிர்ச்சி.
- மேற்குறித்த விடயங்கள் தோற்றுவித்த வெறுமையும் விரக்தியும் அரங்கில் புதிய பரிசோதனை
- முயற்சிகளின் தேவைப்பாட்டை உணர்த்தியது.இந்த முயற்சிகள் பெரிதும் மோடியுற்றவையாக

இருந்தன. குறிப்பாக-

அபத்த அரங்கு.

காவிய அரங்கு.

வறுமை அரங்கு.

குரூர அரங்கு.

ஆவண அரங்கு.

சூழல் அரங்கு.

எண்ணக்கரு நெறியாள்கை அரங்கு.

• என்பவற்றைக் குறிப்பிடலாம்.இவற்றுள் பல அரங்குகள் இணைந்து நவவேட்கைவாத அரங்காக மேற்கிளம்பியது.

• மேற்படி விடயங்கள் தொடர்பில் ஆய்வு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க மாணவர்களைத் தூண்டுங்கள்.

**கணிப்பீடு:**

• உலக மகா யுத்தங்களின் விளைவாக உருவாகிய பரிசோதனை அரங்க முயற்சிகள் யாவை?

• யதார்த்த விரோத அரங்கின் தேவைப்பாட்டைத் தூண்டிய காரணிகள் யாவை?

• யதார்த் விரோத அரங்கின் பண்புகளாக மேற்கிளம்பிய விடயங்கள் யாவை?

**உசாத்துணைகள்:**


• விக்கிபீடியா.

• அரங்கியல் - சி.மௌனகுரு.

• ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தேசிய கல்வி நிறுவகம்.

• நாடகமும் அரங்கியலும் - தரம் 13(பழைய பாடத்திட்டம்).

**தேர்ச்சி** **2.0** : நாடகமும் அரங்கக்கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.6**: சமஸ்கிருத நாடகக்கலை தொடர்பான செல்நெறி அடிப்படைகளைக் கற்றவர் ஆவார்.

**செயற்பாடு 2.6.1.1** :"சமஸ்கிருத நாடகக் கதைப்பின்னல், கட்டமைப்புப் பற்றிக் கற்போம்".

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- சமஸ்கிருத நாடகமொன்றில் கதை பின்னப்பெற்றுள்ள முறையைக் கூறுவார்.
- சமஸ்கிருத நாடகம் கட்டமைக்கப்பெறும் விதத்தை முன்வைப்பார்.
- கதைப்பின்னலையும் கட்டமைப்பையும் ஒப்பு நோக்குவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல் அட்டைகள்.
- சமஸ்கிருத அரங்கு தொடர்பான கட்டுரைகள்.
- டிமைன் தாள்.
- மாக்கர்.
- சமஸ்கிருத நாடகமொன்றின் சில பிரதிகள்.

**அறிமுகம்**

- சமஸ்கிருத நாடகத்தின் கதைப்பின்னல், கட்டமைப்புப் பற்றி அறிந்துகொள்வதே இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கபபெறுகின்றது.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- விரிவுரை.
- சிந்தனைக் கிளறல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- அவத்தைகள், அர்த்தப்பிரகிருதிகள் என எழுதப்பெற்ற சொல்லட்டைகள் இரண்டையும் காட்சிப்படுத்தி, இச்சொற்களுடன் தொடர்புடைய பிறிதொரு சொற்களைக் கூறுமாறு மாணவரிடம் வினவுங்கள்.

- மாணவர்கள் கூறும் விடையினை அடிப்படையாகக் கொண்டு கதைப்பின்னல் , கட்டமைப்புப் பற்றிக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுங்கள்.
- சமஸ்கிருத நாடகத்தில் கதைப்பின்னல் அர்த்தப்பிரகிருதிகள் எனவும் கட்டமைப்பு அவத்தைகள் எனவும் அழைக்கப்பெறுகிறது.

· கதைப்பின்னல் (Plot) என்பது நிகழ்வுகளின் தொகுப்பு.'. நாடகத்தின் செயல்.'. வினைநிகழ்ச்சியின் அமைப்பு முறை.

- கட்டமைப்பு (structre) என்பது நாடகக்கதையின் சட்டகம் போன்றது. கதையின் ஆரம்பம் - நடு - முடிவு என்பவற்றுடன் தொடர்பு பட்டுச்செல்வது.
- மாணவர்களை இரு குழுக்களாக்கி குழு 1 சமஸ்கிருத நாடக்கதைப்பின்னல் பற்றியும் குழு 2 சமஸ்கிருத நாடகக் கட்டமைப்புப் பற்றியும் எழுதி முன்னளிக்கை செய்ய வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் விடயங்களை விளங்கிக்கொள்ளும் வகையில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுங்கள்.**

- வடமொழி நாடகத்தின் கதைப்பின்னல் அர்த்தப்பிரகிருதிகள் என அழைக்கப்படுகின்றது. இவை பின்வரும் ஐந்து கூறுகளைக்கொண்டமைந்திருக்கும்.
- பீஜ - நாடகப் பொருளுக்கு விதை போன்றது. உதாரணமாக: துறவிகளின் வேண்டுகோளைக் குறிப்பிடலாம். ஏனெனில் துறவிகளின் வேண்டுகோளினாலேயே துஸ்யந்த மன்னன் கண்ணுவ முனிவரின் ஆச்சிரமத்தை அடையவும், அங்கே சகுந்தலையைக் காணவும் ஓர் அரிய வாய்ப்பு ஏற்படுகின்றது.
- பிந்து – கதைத் தலைவன் தன் குறிக்கோளை நிறைவேற்றுவதில் ஏற்படும் தடைகளை எதிர்கொண்டு பயனடையத் துணையாய் நிற்பது. உதாரணமாக, ஏழாம் அங்கத்தில் தபஸ்வினியின் வேண்டுகோள்.
- பதகா – நாடகத் தலைவனின் நோக்கம் வெற்றிபெற வேறு ஒருவர் துணைபுரிவதாகக் கற்பனை செய்யப்படும் வரலாறு. உதாரணம்: விதூசகன் பிரியம்வதை, அனசீயா ஆகியோர் குறித்த நிகழ்வுகள்.

பிரகரி –தனக்குப் பயன் ஏதும் இன்றி தலைவனின் விருப்பத்திற்காகக் கற்பனை செய்யப்படும் வரலாறு. உதாரணம்: ஆறாம் அங்கத்தில் இடம்பெற்ற செம்படவன் காவலர்களை உள்ளடக்கிய நிகழ்வு.

- கார்ய – பலனை அடையப் பயன்படுவது கார்ய எனப்படுகிறது. உதாரணம் துஸ்யந்தனும் சகுந்தலையும் மீண்டும் ஒன்று சேர்கின்றனர். இந்திரனின் வேண்டுகோள் இதற்கு துணை நிற்பதைக் குறிப்பிடலாம்.

**வடமொழி நாடகக் கட்டமைப்பு**

- சமஸ்கிருத நாடகங்களின் கட்டமைப்பானது அவத்தைகள் என அழைக்கப்படுகின்றது. இது ஐந்து வளர்ச்சிப் படிநிலைகளைக் கொண்டது. இவ்வளர்ச்சிப் படிநிலைகள் ஒவ்வொன்றும் செயலின் முடிவு அன்றேல் நோக்குநிலைகளை ஏற்றுக்கொள்வதாய் அமையும்.

- ஆரம்ப – நாடகச் செயலின் நோக்கம். உதாரணம்: தூஸ்யந்தன் சகுந்தலையைக் கண்டு காதல் கொள்ளுதல்.

- பிரயத்தன – விரும்பிய அப்பொருளை அடையக் கதாநாயகன் முயலுதல். உதாரணம்: சகுந்தலையை அடைவதற்காக அரசன் உபாயம் காணுதலைக் குறிப்பிடலாம். (துஸ்யந்தனுக்கு அன்னையின் அழைப்புக் கிடைத்தும் சகுந்தலையை அடையும் நோக்கினால் தனக்குப் பதிலாக அன்னையிடம் விதூசகனை அனுப்புதல்).

- பிரத்தியாச – நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நம்பிக்கை உண்டாகுதல். இது பிரதிகூலமாக அன்றேல் அனுகூலமாக அமையும். உதாரணமாக துருவாசர் இட்ட சாபம் நீங்கியதைத் தொடர்ந்து சகுந்தலை துஸ்யந்தனிடம் சேரலாம் என்ற நம்பிக்கை உண்டாவதைக் குறிப்பிடலாம்.

- நியதாப்தி – எதிர்ப்படும் துன்பங்களை நீக்குவதால் குறிக்கோள் நிறைவேறும் என்ற துணிவு பிறத்தல். உதாரணமாக அரசனுடைய கணையாழி மீனவன் ஊடாகக் கிடைக்கப்பெற்றதும் சாபம் நீங்கி சகுந்தலையைப் பற்றிய நினைவுகள் மன்னனிடத்தே தோன்றுவதைக் குறிப்பிடலாம்.

- பலாகம – நோக்கம் நிறைவேறிப் பலனடைதல். உதாரணமாக துஸ்யந்தன் சகுந்தைலையுடன் சேருவதைக் குறிப்பிடலாம்.

- மேற்படி சமஸ்கிருத நாடகக் கட்டமைப்பை ஆதரித்து நாடகத்தை வளர்த்துச் செல்ல ஐந்து சந்திகள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் தொடர் நிகழ்வுகள் அன்றேல் நிகழ்வுகளின் இணைப்புக்கள் ஆகக் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றினூடாகவும் ஓர் இலக்கு இறுதியாக அடையப்பெறும். அவை:.

- முகசந்தி – நாடகச்செயலின் ஆரம்பம். உதாரணமாக, முதலாம் அங்கம் தொடக்கம் இரண்டாம் அங்கத்தில் சேனாதிபதி புறப்படும் வரையுமுள்ள பகுதியைக்குறிப்பிடலாம்.

- பிரதிமுக சந்தி – செயலின் வளர்ச்சி. உதாரணமாக, தனது காதலை அரசன் விதூசகனிடம் சொல்வது முதல் மூன்றாம் அங்கம் முடியும் வரையான பகுதியைக் குறிப்பிடலாம்.

- கர்ப்ப சந்தி – நாடகச் செயலின் நோக்கம். உதாரணமாக, நான்காம் ஐந்தாம் அங்கங்களில் பரந்து, கௌதமி சகுந்தலையின் முகத்திரையைக் கழற்றுவது வரையான பகுதியைக் குறிப்பிடலாம்.

- விமர்சக சந்தி- நாடகத்தின் நோக்கத்தால் உண்டாகும் நெருக்கடி. உதாரணமாக, சகுந்தலை அரண்மனைக்குச் சென்று தன்னை அரசனுக்கு வெளிப்படுத்தியபோதும் துருவாசரின் சாபத்தால் அவளை ஏற்றுக்கொள்ளாது நினைவின்றி இருத்தல்.

- நிர்வ□ன சந்தி – காரியம் என்னும் நோக்கம் நிறைவேறி நாடகம் நிறைவடைவதனைக் குறிப்பிடலாம்.

- மேற்குறிப்பிட்ட சமஸ்கிருத நாடகக் கதைப்பின்னல், மற்றும் கட்டமைப்பினை நோக்குமிடத்து, கதைப்பின்னல் துணைப் பாத்திரங்களுடனும் கட்டமைப்பு பிரதான பாத்திரங்களுடனும் தொடர்பு பட்டிருப்பதை அறியமுடிகின்றது.

- கதைப்பின்னல் என்பது நாடகத்துக்கெனத் தேர்ந்தெடுத்த கதையின் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பெற்ற விதத்தைக் குறிக்கும் எனவும் கட்டமைப்பு என்பது ஆற்றுகையின் போது கதை நகர்ந்து செல்லும் செயல் ஒழுங்கினைக் குறிக்கும் எனவும் அரங்கவியலாளர் கருதுவர்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சமஸ்கிருத நாடகக் கதைப்பின்னல், கட்டமைப்பு என்றால் என்ன?
- சமஸ்கிருத நாடகக் கதைப்பின்னலை உதாரணங்களுடன் எடுத்துக் கூறுக.
- சமஸ்கிருத நாடகக் கட்டமைப்பினை உதாரணங்களுடன் முன்வைக்குக.
- சமஸ்கிருத நாடகக் கதைப்பின்னல் மற்றும் முன்கட்டமைப்பை ஒப்பு நோக்குக.

**தேர்ச்சி 2.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகக் கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் - 2.6** : சமஸ்கிருத நாடகக்கலை தொடர்பான செல்நெறி அடிப்படைகளைக் கற்றவர் ஆவார்.

**செயற்பாடு – 2.6.1.2** : "சமஸ்கிருத நாடக பாணிகள் பற்றிக் கற்போம்".

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- சமஸ்கிருத மரபு குறிப்பிடும் நாடக பாணிகள் பற்றி அறிந்திருப்பார்.
- நாடக பாணிகளிற்கிடையேயான வேறுபாடுகளைக் கூறுவார்.
- நாடக பாணி நுட்பங்களை ஆற்றுகையில் பிரயோகிப்பார்.
- ஆற்றுகையில் நாடக பாணிகளை இனங்காண்பதில் ஆர்வம் காட்டுவார்.
- வெவ்வேறு நாடக பாணிகளைக் கொண்ட ஆற்றுகைகளை நயப்பதில் ஈடுபாடு காட்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- வேறுபட்ட நாடக பாணியை வெளிப்படுத்தும் நாடக இறுவட்டுகள் / ஒளிப்படங்கள் (ஒருபாவையின்வீடு, அபிக்ஞான சாகுந்தலம்)
- டிமைன் தாள்.
- நிறப்பேனாக்கள்.

**அறிமுகம்** :

- சமஸ்கிருத நாடக பாணிகள் பற்றி மாணவர்கள் அறிந்துகொள்வது இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்
- விரிவுரை
- செய்முறை

### விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்

- மாணவர்களைப் பொருத்தமான இடத்தில் ஒன்று கூட்டி நாட்டிய தர்மி, லோக தர்மியை வெளிப்படுத்தக் கூடிய இறுவட்டுகளைக் காண்பித்து, அவற்றுள் நாட்டிய தர்மி லோகதர்மிக்குரிய நாடகக் காட்சிகளை மாணவர் அடையாளங் காணச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவர்களை இரு குழுக்களாக்கி

  குழு 1 லோகதர்மி

  குழு 11 நாட்டிய தர்மி

- ஆகிய தலைப்புக்களை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கி மாணவர்கள் இறுவட்டில் பார்வையிட்ட நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு லோகதர்மி, நாட்டிய தர்மியின் இயல்புகள் பற்றி முன்னளிக்கை செய்ய வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் முன்னளிக்கை செய்யும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு லோகதர்மி, நாட்டியதர்மி குறித்த மேலதிக விளக்கத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- லோகதர்மி (உலக நடையைச் சார்ந்தது).
- உலக இயற்கையைப் பின்பற்றி வருவது.
- நடைமுறை வாழ்வியலை ஒத்திருக்கும்.
- பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் காட்டுவது.
- இயல்பான அபிநயங்களை வெளிப்படுத்துவது.
- உலக மக்களின் இருப்பைச் சித்திரிப்பது.
- போலித்தனம் அற்றது.
- லலித அங்க அசைவுகள் அற்றது.
- சமஸ்கிருத நாடகங்களில் வெளிப்பாட்டு வாசகங்கள் போன்ற அடிப்படையான உரையாடல்கள் பெரும்பாலும் லோகதர்மி மரபுக்குரிய அமைவாகவே முன்வைக்கப்பெற்றன. அதாவது பொதுவான உரையாடல்கள், இரகசியமாகக் பேசுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

உதாரணமாக.∵.

- பிரியம் வதை (அப்புறமாய்) எடி அனசூயே, சகுந்தலை அந்த ராஜரிசியைக் கண்ட நாள் முதல் மனக்கவலை கொண்டது போல் இருக்கின்றாளே. இவளுக்கு உண்டான இவ்வருத்தம் அவரை முன்னிட்டு வந்ததாய் இருக்கலாமோ?

  - அனசூயை : தோழி என் உள்ளமும் அப்படித்தான் ஐயம் உறுகின்றது. நல்லது நான் அவளைக் கேட்டுக்கொள்கின்றேன்.
  - கற்பனை மிக்க வியப்புத் தரும் நிகழ்ச்சிகள் அற்றது.
  - உலோக தர்மி என்பது அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயஙகள், நம்பிக்கைகள், அவர்களது எண்ணஙகள் சிந்தனைகளை அதற்கே உரிய மரபுக்குள் நின்று கொண்டு எளிமையாகவும் இயல்பான வகையிலும் மேற்கொள்ளும் அபிநயமாகும். இது உலகத்தில் உள்ள வழமையான செயற்பாடுகளைப் பெரிதும் தழுவியிருக்கும்.
  - லோகதர்மியில் அரங்கப் பொருள்கள் பெருமளவில் பயன்படுத்தப்பெறும்.
  - நாட்டியதர்மி (மரபு பற்றி வந்த நடிப்பு).
  - கவி தன் அனுபவத்தால் சூழலில் பெற்றுக்கொண்டவை, கேட்டறிந்தவை, பார்த்த விடயங்களை அறிவாற்றலால் கற்பனை செய்த வியப்புத் தரும் நிகழ்ச்சிகள் நாட்டிய தர்மியில் அடங்கும்.
  - ஆயினும் நாட்டிய சாஸ்திர மரபுக்குட்பட்டதாகி அமைந்திருக்கும்.
  - சாதாரணமாக, இயல்பாக நிகழவேண்டிய நிகழ்ச்சிகளைப் பாத்திரங்கள் அசைவுகளோடு, தாள லயங்களுக்கேற்ப நடந்து செல்வது, அபிநயிப்பது என்பன இதிலடங்கும்
  - அரங்கில் நேரடியாகக் கொணரமுடியாதவற்றை அபிநயம் மூலம் சித்திரிப்பதும் நாட்டிய தர்மிக்குரியதாகும்.

உதாரணமாக:-

- அபிக்ஞான சாகுந்தலத்தில் துஸ்யந்த மன்னன் மானைத் துரத்திச் செல்லும்போது தேரில் செல்வதாக அபிநயிப்பதனைக் குறிப்பிடலாம்.

நாட்டிய தர்மியானது.∵.

- இயல்பற்ற உரையாடல், இயல்பற்ற நடிப்பு, இயல்பற்ற பாவங்கள்,உணர்ச்சி வெளிப்பாடுகள், லலிதம் கலந்த அங்க அசைவுகளைக் கொண்டிருக்கும்.

- இன்ப துன்பங்களைக் காட்டும் செயல்களை உள்ளடக்கியதாய், உலகின் தன்மைகளை ஆங்கிக அபிநயம் மூலம் வெளிப்படுத்தும்.
- அரங்கைப் பல்வேறு அர்த்தப்பாடுகளுடன் வெவ்வேறு களங்களாகக் குறித்த இடத்தையே பயன்படுத்துவதாக அமையும்.

உதாரணமாக:-

- அபிக்ஞான சாகுந்தலத்தை ஆற்றுகை செய்யவேண்டின் குறித்த அரங்கின் தளமானது ஆச்சிரமமாக, துஷ்யந்தனின் அரண்மனையாக, மாரிச முனிவரது மலைச்சாரலாக பல்வேறு களங்களை உரையாடலுக்கூடாகவும் நடிப்பிற்கூடாகவும் வெளிப்படுத்தி நிற்கும்.
- சகல அபிநயங்களையும் அழகிய உடலசைவுகளால் வெளிப்படுத்தும் முறைமையைக் கொண்டிருக்கும். உதாரணமாக.: சகுந்தலையும் தோழிகளும் நீர்க்குடங்களை இடுப்பில் சுமந்தபடி நடந்து வருவதும் செடிகளுக்கு நீர் ஊற்றுவதுமான செயற்பாட்டை லலிதமான அங்க அசைவுகளுக்கூடாக மேற்கொள்வதனைக் குறிப்பிடலாம்.
- நாட்டிய தர்மி மரபுக்குட்பட்டதாகவே ஒப்பனை, வேடஉடைகள், காட்சி அலங்காரங்களைக் கொண்டிருக்கும்.
- அபிக்ஞான சாகுந்தல நாடக பாடத்தில் வெளிப்படும் லோகதர்மி, நாட்டிய தர்மி பாணி வெளிப்படும் சந்தர்ப்பங்களை மாணவர்கள் இனங்காண வாய்ப்பளியுங்கள்.
- லோகதர்மி, நாட்டிய தர்மியை வெளிப்படுத்தத்தக்க பொருத்தமான நாடகக் காட்சித் துண்டங்களை அன்றேல் மேற்சொன்ன உதாரணங்களுக்காக முன்வைக்கப்பெற்ற பகுதிகளை வழங்கி, மாணவர்கள் செயன்முறை சார்ந்த நடிப்புமுறையை உணர்ந்து கொள்ள வழிப்படுத்தலாம்.

கணிப்பீடு

- நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் இருவகை நடிப்புப் பாணிகளும் எவை?
- லோகதர்மி என்பது யாது?
- நாட்டிய தர்மி என்றால் என்ன?
- நாட்டிய தர்மி, லோகதர்மிக்கிடையேயான வேறுபாடுகளைப் பட்டியற்படுத்துக.
- நாட்டிய தர்மி, லோகதர்மியை வெளிப்படுத்தும் படங்களைக் கோவைப்படுத்துக.

**தேர்ச்சி 2.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : சமஸ்கிருத நாடகக்கலை தொடர்பான செல்நெறி அடிப்படைகளைக் கற்றவர் ஆவார்.

**செயற்பாடு 2.6.1.3** : "சமஸ்கிருத அரங்கக் கட்டுமானம் பற்றிக் கற்போம்".

**பாடவேளை** : 02.

**கற்றற்பேறுகள்** :

- சமஸ்கிருத அரங்க மரபு பற்றி அறிந்தவற்றைக் கூறுவார்.
- சமஸ்கிருத அரங்க வகைகள் பற்றி விளக்கியிருப்பார்.
- சமஸ்கிருத அரங்கின் ஆற்றுகை முறைமை பற்றிக் கூறுவார்.
- சமஸ்கிருத அரங்கினை வரைந்து காட்டுவார்.
- சமஸ்கிருத அரங்கினை ஏனைய அரங்குகளுடன் ஒப்பு நோக்குவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சமஸ்கிருத அரங்கு, ஏனைய அரங்கு தொடர்பான பாடங்கள்.
- அரங்க மாதிரிகள்.
- சமஸ்கிருத அரங்கக் கட்டுமானம் குறித்த கட்டுரைகள்.
- A4 தாள்.
- டிமைன் தாள்.
- மாக்கர்.

**அறிமுகம்**

- சமஸ்கிருத நாடகத்தின் அரங்கக் கட்டுமானம் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல், கண்டறி முறை, விரிவுரை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- சமஸ்கிருத அரங்க ஒளிப்படங்கள், ஏனைய அரங்க ஒளிப்படங்கள் / அரங்க மாதிரிகள் என்பவற்றைக் காட்சிப்படுத்தி, அவற்றுள் சமஸ்கிருத அரங்கினை மாணவர்கள் இனங்காண வாய்ப்பளியுங்கள்.
- மாணவர்கள் இனங்கண்ட அரங்க மாதிரிகள் / அரங்க ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் குறித்து அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- சமஸ்கிருத நாடக மரபில் அதன் வடிவம் குறித்து மூன்று வகையான அரங்க வெளி பற்றிப் பேசப்படுகின்றது.
- விகிருஸ்ட (செவ்வக அரங்கு).
- சதுஸ்ர (சதுர அரங்கு).
- திரியஸ்ர (முக்கோண அரங்கு).
- மேற்படி ஒவ்வொரு வகையான அரங்க வடிவங்களும் அதன் அளவுப் பிரமாணங்களுக்கமைய மேலும் மூன்று வகையாக வகுக்கப்படுகின்றன.
- ஜேஸ்ட (பெரியது).
- மத்திமம் (நடுத்தரமானது).
- அவரம். (சிறியது)
- இதனடிப்படையில் சமஸ்கிருத அரங்க மரபில் ஒன்பது வகையான அரங்குகள் காணப்பட்டன.
- சமஸ்கிருத அரங்க வடிவத்தின் மாதிரியாகத் தற்போது இந்திய ஆலயங்களில் காணப்படும் கூத்தம்பலத்தினைக் குறிப்பிடலாம்.

உதாரணமாக.:.

- கேரளாவில் - குருவா!ர் கோவில், வடக்கு நாதர் கோயில்,
- தமிழ் நாட்டில் - சிதம்பரம் ஆகிய கோவில்களில் இக்கூத்தம்பலம் அமைக்கப்பட்டுள்ளது.
- மாணவர்களை மூன்று குழுக்களாக்கி,

குழு 1 – விகிருஸ்ட அரங்கு.

குழு 11 – சதுஸ்ர அரங்கு.

குழு 111 – திரியஸ்ர அரங்கு பற்றிய விடயங்களை வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னளிக்கை செய்ய வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் விடயங்கள் குறித்து மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் கலந்துரையாடுங்கள்.**

- நாட்டிய மண்டபம் அதன் வடிவமைப்புக்கேற்ப மூன்று வகைப்படும்.
- விகிருஷ்ட - (செவ்வக அரங்கு) நீளம் அதிக அளவிலும் அகலம் குறைவாகவும் காணப்படுவது.
- சதுஸ்ர - (சதுர அரங்கு) நீளமும் அகலமும் சரிசமமாகக் காணப்பெறுவது.
- திரியஸ்ர - (முக்கோண அரங்கு) மூன்று பக்கமும் சமனானதும் முக்கோண வடிவில் அமைந்ததுமாகும்.
- இவற்றுள் ஜேஸ்டம் (அளவில் பெரியது) தேவதைகளுக்கேற்றது.
- மத்தியமம் (நடுத்தரமானது) மன்னர்களுக்கேற்றது.
- அவரம் (அளவில் சிறயது) பொதுமக்களுக்கேற்றது.
- இவற்றுள் மத்தியமம் (நடுத்தரமானது) சிறப்பானதாகக் கூறப்பெறுகின்றது. ஏனெனில் நாட்டிய மண்டபம் அளவில் பெரயதாக இருந்தால் நடிகர்களது உரையாடல் சார்ந்த குரலின் ஏற்றத்தாழ்வுகளால் அறியத்தக்க நுட்பமான பொருள் கேட்பவர்களுக்குத் தெளிவற்றதாக இருக்கும். மேலும் நடிகர்களது முகத்தோற்றம் நன்கு புலப்படமாலும் முக அபிநயத்தால் அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களை அறிந்து கொள்ள இயலாதிருக்கும். ஆனால் ''மத்தியமம்'' அரங்கில் நிகழ்த்தப்படும் நிகழ்வின் பாட்டும், உரையாடலும் மண்டபத்திற்குள் இருக்கும் எல்லோருக்கும் நன்கு கேட்கக் கூடியதாக இருக்கும்.
- மேற்குறிப்பிட்ட மூன்று வகையான அரங்க வடிவங்களும் வடிவத்திலும் அளவுப் பிரமாணத்திலும் வேறுபட்டிருப்பினும் அடிப்படையில் அதன் கட்டமைப்பு ஒருமித்ததாகவே காணப்பட்டன.
- இவை ஒவ்வொன்றும் அவற்றுக்கென வகுக்கப்பட்ட விதிமுறைக்கமைய கட்டப்பெறவேண்டும் என்பது சமஸ்கிருத அரங்க வழக்ககாக் காணப்பெற்றது. செவ்வ அரங்கே அரங்கப்பயன்பாட்டிற்குப் பெரிதும் விரும்பத்தக்கது.
- ரங்கசீர்யம் என்பது நடிகர்கள் வேடம் புனைந்து நேபத்திய கிரகத்திலிருந்து வெளிவந்து ரங்கபீடத்திற்கு (ஆடல் அரங்கத்திற்கு) வரத்தக்க நேரம் பார்த்து நிற்கும் இடமாகும். இது 8ஒ22 □ஸ்தங்கள் அளவுள்ள நீள் சதுரம். அதன் நடுவில் 8ஒ8 □ஸ்தங்கள் அளவுள்ள மேடை அமைக்கப்பெற வேண்டும். இம்மேடையின் மேல் ஒலிக்கருவிகளை இசைப்பவர்களும் வாய்ப்பாட்டுக் காரர்களும் அமர்ந்திருப்பர். ரங்கசீர்யவில் இசைக்கலைஞர்களின் தளமாகப் பயன்படுத்தப்பட்ட மையப்பகுதியைத் தவிர்ந்த இருபக்கங்களிலும் கலைஞர்களது வரவிற்கும்

வெளியேறுகைக்குமான வாயில் காணப்படும். ரங்கசீர்யவிற்குப் பின்புறம் அமையப்பெற்ற பகுதி உடைமாற்றுதல், ஒப்பனை மேற்கொள்வதற்குப் பயன்படுகின்றது.

- நேபத்திய கிருகத்திலிருந்து அரங்கத்திற்குள் எந்த வழியால் பிரவேசித்ததோ அதேவழியாலே அரங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் என்பது மரபு.
- ரங்கபீடம் என்பது ஆடல் அரங்கமாகும். நடிகர்கள் தமது அபிநயத்தைப் பிரயோகிக்கும் இடம் (Stage). இது 8x32 □ஸ்தங்கள் அளவுள்ள நீள்சதுரமாகும். இங்கு 8x16 அளவுள்ள இதன் மத்திய பகுதியே அரங்கமாகும். மற்றைய பகுதி இரு பக்கங்களிலும் 8x8 அளவுள்ள மத்தவராணிகள் அமையப்பெற்றிருக்கும். மத்தவராணிகள் நடிப்பிடமான மத்திய பகுதியைக்காட்டிலும் 1.5 முழ உயரத்தில் அமைந்திருக்கும். பார்ப்போரின் கண்பார்வை மட்டமும் இவ்வுயரத்திற்குச் சம அளவில் அமைந்திருத்தல் வேண்டும். மத்தவராணி ஆனது உட்புறக் காட்சித் தளத்தினை (வீடு, அரண்மனை போன்றவற்றை) நிகழ்த்தும் தளமாகப் பயன்படுத்தப்பட்டன.
- முன்மேடையின் மையத்தளம் வெளிப்புறக் காட்சிகளான தெரு, மலை, கடல், □ங்கா போன்ற காட்சிப் படிமங்களை நிகழ்த்தும் தளமாகப் பயன்படுத்தப்பட்டன.
- சமஸ்கிருத அரங்கில் காட்சிகள் ஆனது வெற்றுவெளியை அடிப்படையாகக் கொண்டதாகிப் பெருமளவில் சொற்களுக்கூடாகவே பார்ப்போர் மனவெளியில் உருவாக்கப்படுகின்றன.
- இவ்வரங்கில் நால்வகை வர்ணத்தாருக்குரிய (பிராமணர், சத்திரியர், வைஸ்சியர், சூத்திரர்) நான்கு தூண்களும் நாட்டப்பெறும். இங்கு பார்ப்போர் தமக்கென ஒதுக்கப்பெற்ற இடங்களில் அமர வேண்டும்.
- அதாவது.'.
- பிரமாணர் - தென்கிழக்கு மூலை - வெள்ளைத்தூண்.
- சத்திரியர் - தென்மேற்கு மூலை – சிவப்புத் தூண்.
- வைஸ்சியர் - வடமேற்கு மூலை – மஞ்சள் தூண்.
- சூத்திரர் - வடகிழக்கு மூலை – கறுப்புத் தூண்.
- தூணின் நிழல் அரங்கின்மீதும், அவையின் மீதும் சாயாதாவாறு விளக்கு வைக்கப்படும். இவ்விளக்கு நிழல் விளக்கு என அழைக்கப்படும்.
- நாட்டிய மண்டபமானது அதிக காற்றோட்டம் இல்லாமல் சிறிய ஜன்னல்களைக்கொண்டும் நடிகரது குரல் தெளிவாகக் கேட்கும் படியும் அமைக்கப்பெறவேண்டும்.

- நாட்டிய சாலை மலைக்குகை போன்ற தோற்றத்தைத் தரவேண்டும் என்பதால் மேற்கூரை நடுப்பகுதியில் உயர்ந்து, ஓரங்கள் சற்றுத் தாழ்வாக இருக்கவேண்டும். இதனால் நாட்டிய மண்டபத்துள் நிகழும் நிகழ்வினது ஒலி நன்றாகக் கேட்கும்.
- நாட்டிய மண்டபம் மட்டுமன்றி அம்மண்டபம் கட்டுவதற்கேற்ற நிலத்தைத் தெரிவு செய்தல், மண்டபம் கட்டத் தொடங்குவதற்கு முன்பாக மேற்கொள்ளப்படும் சடங்குகள், கடைக்கால் அமைத்தல், சதுர்வர்ண ஸ்தம்பம் அமைத்தல் என்பன வகுக்கப்பட்ட விதிமுறைக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படுகின்றன.
- நாட்டிய மண்டபம் கட்டுவதற்கு ஏற்ற நிலமாகக் கருநிறம் அன்றேல் சாம்பல் நிறம் கொண்ட மண் பொருத்தமானதாகும். நிலத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கயிறு திடமானதாகக் காணப்படவேண்டும். ஏனெனில் அளவிடும் கயிறு∴
- பாதியில் அறுந்தால் மண்டப உரிமையாளருக்கு மரணம் நிகழும்.
- மூன்றில் ஒரு பங்கில் கயிறு அறுந்தால் மன்னனின் சினத்திற்கு ஆளாக நேரிடும்.
- நாலில் ஒரு பங்கு அறுத்தால் நாடகம் நடத்துபவருக்குக் (Producer) கேடு விளையும் என்று நம்பப்பட்டது.

நாட்டிய மண்டபத்தில் மேற்கொள்ளப்படும் இசை குறித்து பிரம்மா தேவர்களை நோக்கிக் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

- “....... அரங்கத்திற்குரிய இசையைச் செய்யாது நாட்டியத்தைப் பிரயோகம் செய்தால் அவர்களின் அறிவு பயனற்றதாகி விடும். ஆடலரங்கத்துத் தெய்வங்களை வழிபடுவது வேள்விக்கு ஒப்பானது.
- ஆகவே நடிப்பவர்களும், நடத்துபவர்களும்(Both producers and actors) முயன்று இப்□சையைச் செய்யவேண்டும்.

## கணிப்பீடு

- சமஸ்கிருத மரபு குறிப்பிடும் அரங்குகள் எவை?
- சமஸ்கிருத அரங்க வடிவங்கள் குறித்து முன்னளிக்கை செய்க.
- சமஸ்கிருத அரங்க வடிவங்களை வரைக.
- சமஸ்கிருத அரங்க நிர்மாணத்தின் போது கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகளைப் பற்றிக் கூறுக.
- சமஸ்கிருத அரங்க வடிவங்கள் தொடர்பான படங்களைக் கோவைப்படுத்துக.

**தேர்ச்சி 2.0** : நாடகமும் அரங்கக்கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.6** : சமஸ்கிருத நாடகக்கலை தொடர்பான செல்நெறி அடிப்படைகளைக் கற்றவர் ஆவார்.

**செயற்பாடு** : 2.6.1.4 "ரஸக் கோட்பாடு பற்றிக் கற்போம்".

**கற்றற் பேறுகள்** :

- ரஸம் என்றால் என்ன என்பதை அறிவார்.
- பரதர் குறிப்பிடும் ரஸக்கோட்பாடு பற்றி விளங்கியிருப்பார்.
- சமஸ்கிருத நாடகத்தில் "ரஸத்தின்" பயன்பாடு பற்றி உணர்ந்திருப்பார்.
- சமஸ்கிருத நாடகத்தில் ரஸத்தின் பியோகம் குறிந்து இனம்காண்பார்.
- நாடகங்களில் வேறுபட்ட ரஸங்களின் செல்வாக்குத் குறித்து தேடுவதில் ஆர்வம் காட்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- ரஸங்களை வெளிப்படுத்தும் ஒளிப்படங்கள்.
- சொல்லட்டைகள்.
- A4 தாள்.
- டிமைன் தாள்.
- நிறப்பேனாக்கள்.
- அபிஞ்ஞான சாகுந்தலம். (நாடகபாடம்).

**அறிமுகம்**

- பரதர் குறிப்பிடும் ரஸக்கோட்பாடு பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வது இவ்வலகினூடாக எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல், கண்டறிமுறை, விரிவுரை முறை, முன்வைத்தல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- வகுப்பில உள்ள மாணவர்கள் எட்டுப்பேரை எழுமாற்றாகத் தெரிவு செய்து எண்வகை ரஸங்களும் தனியே எழுதப்பட்ட சொல்லட்டைகளைத் திருவுளச்சீட்டு அடிப்படையில்

தெரிவுசெய்யச் சந்தர்ப்பமளித்து, ஒவ்வொரு மாணவரும் தமக்கான ரஸங்களை உறைநிலையில் வெளிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் இனங்கண்ட ரஸங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.
- ரஸம் எனும் சொல் ‘‘ரஸ்□ எனும் சமஸ்கிருத வினையடியால் பிறந்தது.
- ரஸம் என்பது பார்ப்போர் நிலைப்பட்ட உணர்ச்சித் தோற்றுகை.՚. கலைஞன் அனுபவித்த மெயப்பொருள் அனுபவம்.
- ரஸம் என்பதனைத் தமிழில் ‘‘சுவை□ என்பர். தொல்காப்பியர் இதனை ‘‘மெய்ப்பாடு□ என்பார். கிரேக்கத்தில் ‘‘கதாசிஸ்□ என்பர்.
- அரங்கத்தில் ஆற்றப்படும் நிகழ்வினைக் கண்டு லயித்து நிற்கும் பார்ப்போர் மனதில் தோன்றும் உணர்ச்சியே ‘‘ரஸம் என அழைக்கப்படுகின்றது.
- உதாரணமாக.՚. ஆச்சிரமத்தில் வண்டு துரத்தும்போது அச்சமடைந்து ஓடும் சகுந்தலையைப் பார்த்திருக்கும் பார்ப்போர் மனதில் ‘‘பயானகம்□ எனும் ரஸம் தோன்றுகின்றது.
- பார்ப்போரிடத்தில் ரசானுபவத்தை ஏற்படுத்துவதில் அடிப்படையாய் அமைவது பாவம் ஆகும். பாவம் என்பது மனநிலை. பார்ப்பவர் மனதில் சுவையை உண்டாக்கும் சாதனம். இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டது. இதனால் பரதமுனிவர் பாவத்தினை உடலாகவும் ரஸத்தினை உயிராகவும் காண்கின்றார். பாவங்களின் எண்ணிக்கை 49 ஆகும். இப்பாவம் மூன்று வகைப்படும்.
- ஸ்தாயிபாவம் - எட்டு.
- சஞ்சாரி பாவம் ∴ வியபிச்சாரி பாவம் - முப்பத்து மூன்று.
- சாத்விக பாவம் -எட்டு.
- விபாவம், அனுபாவம், வியபிச்சாரி பாவத்தின் சேர்க்கையால் ரஸம் தோன்றுகின்றது. பரதர் இதனை.՚.
- ‘‘விபாவானுபாவ வியபிச்சாரி ஸம்யோகாத் ரஸநிஸ்பதி□ என்கின்றார்.
- அதாவது ஸ்தாயி பாவத்தினை விபாவம் தூண்டும்போது அனுபாவம் வெளிப்படுத்தப்படுகின்றது. அவ்வாறு வெளிப்படுத்தப்படும் அனுபாவத்துடன் வியபிச்சாரி பாவம் இணைகின்றபோது ரஸம்

உருவாகின்றது. இது பார்ப்போரைச் (சமஸ்கிருதத்தில் ச□ர்தயர்) சென்றடையும் போது முழுமையடைகின்றது.

- ஸ்தாயி பாவத்தினைத் தூண்டுகின்ற விபாவமானது 2 வகைப்படும்.
- ஆலம்பன விபாவம் (கதாபாத்திரங்கள்).
- உத்தீபன விபாவம் (நிலம், பொழுது, சூழ்நிலை).

உதாரணமாக.ஃ.

- ஆச்சிரமத்தில் துஷ்யந்தன் சகுந்தலையைக் காண்கின்றான். இங்கு துஷ்யந்தன், சகுந்தலை ஆகிய இருபாத்திரங்களும் ஆலம்பன விபாவமாகும்.
- அழகிய ஆச்சிரமமும் காட்டுச் சூழலும் அதனுடன் இணைந்த இயற்கைக் காட்சிகளும் உத்தீபன விபாவமாகும்.
- நாடகச் சூழமைவு தருகின்ற ஆச்சிரமமும் அதுசார்ந்த இயற்கைக் காட்சிகளும் துஸ்யந்தன், சகுந்தலை ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கின்றதுமான விபாவச் சூழல் தருகின்ற நிலைமை.ஃ. சகுந்தலையின் உடலில் மயிர் கூச்செறிதல், கடைக்கண் நோக்கு, முகம் சிவத்தல் போன்ற பௌதிக ரீதியான மாற்றங்கள் ஏற்பட ஏதுவாகின்றது. இதனையே பரதர் அனுபாவம் என்கின்றார்.
- இவ்வாறு வெளிப்படுத்தப்படும் அனுபாவத்துடன்.ஃ. சகுந்தலை, துஸ்யந்தனிடத்தே தோன்றும் செயலற்றுப்போதல், மனதுக்குள் சர்ச்சை செய்து கொள்ளுதல் ஆகிய சஞ்சாரி பாவங்கள் (வியபிச்சாரி பாவம்) இணைகின்ற போது ‘‘ரதி□ எனும் ஸ்தாயி பாவம் இப்பாத்திரங்களிடையே மேற்கிளம்புகின்றது.
- இந்நிலைமையைப் பார்த்திருக்கும் பார்ப்போரது உடல், உளமானது ஆத்மீக ரீதியாக ஆற்றுகையின் உணர்வுகளுடன் ஒன்றிணைகின்றபோது ஒத்த உணர்ச்சி ஆற்றுவோரில் இருந்து பார்ப்போருக்கு ஊடுகடத்தப்படுகின்றது. இது பார்ப்போரிடத்தில் சிருங்கார ரஸத்தைத் தோற்றுவிக்க ஏதுவாகின்றது. இந்த அனுபவமே ரசானுபவமாகும். இந்தநிலையில் பார்ப்போன் ச□ர்தயனாகின்றான்.
- சமஸ்கிருத அரங்கு எண்வகை ரசங்களை முன்வைக்கின்றது.
- ரஸம் ஸ்தாயிபாவம்
- சிருங்காரம்ஹாஸ்யம்ரௌத்திரம்பீபத்ஸபயானகஆச்சர்யகருணாவீரம்
- திஹாஸ்யம்குரோதம்ஜீருப்ஸைபயம்விஸ்மயம்கருணைஉற்சாகம்

- தற்போது ஒன்பதாவது ரஸமாகச் ‘‘சாந்தம்□ அபிநவகுப்தரால் குறிப்பிடப்படுகின்றது.
- தொல்காப்பியர் இதனை நடுவுநிலைமை என்கின்றார்.

**மேலதிக விளக்கக் குறிப்பு**

**அனுபாவம்**

- அனுபாவம் என்பது ஸ்தாயி பாவத்தினை விபாவம் தூண்டும் பொழுது மேற்கிளறப்படும் உணர்வுகள். அதாவது சுவை உண்டாகும் போது உடம்பிலே தோன்றும் வேறுபாடுகள். இது இரண்டு வகைப்படும்.

1.நடிகர்களிடத்தே தானே தோற்றம் பெறும் உணர்வு நிலை. இது ஸாத்வீக பாவம் என அழைக்கப்படுகின்றது. அவை.ு.

- மூர்ச்சையுறுதல்.
- ஸ்தம்பித்து நிற்றல்.
- மயிர்கூச்செறிதல்.
- வியர்வை.
- கண்ணீர் விடுதல்.
- நடுக்கம்.
- நிறமாற்றம்.
- குரல் மாற்றம்.

2.நடிகர் தானே தோற்றுவிக்கும் உணர்வு.

- கண்சிமிட்டுதல்.
- கடைக்கண்நோக்கு.
- புருவத்தை நெரித்தல்.
- பற்களை நறுமுதல் போன்றவை.
- சஞ்சாரிபாவம் / வியபிச்சாரி பாவம்
- இவை நிலையற்ற உணர்வுகள். அடிக்கடி தோன்றி மறைபவை. கடலில் அலைகள் தோன்றி மறைவது போன்று இது தோன்றி மறைகின்றது.

உதாரணமாக.ு.

- நிர்வேதம் (ஆசையற்றநிலை).
- சங்கை (ஐயப்பாடு).
- ஸ்மிருதி – நினைவாற்றல்.
- நித்ரா - உறக்கம்.
- ஜடதை – (செயலற்றுப்போதல்).
- விதர்க்கம் - (மனதுக்குள் சர்ச்சை செய்து கொள்ளுதல்) போன்றன.
- சஞ்சாரி பாவம் அடிக்கடி தோன்றி மறைந்தாலும் நிலையான ரஸத்தைச் சுவைஞன் அனுபவிக்கத் துணைபுரிகின்றது.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, அபிஞ்ஞான சாகுந்தலத்தில் வெளிப்படும் ரஸம் குறித்து மாணவர்கள் இனங்கண்டு முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அபிஞ்ஞான சாகுந்தலத்தில் பிரதான சுவையாக சிருங்□ாரம் விளங்குகின்றது.
- நாடக ஓட்டத்தை வளர்த்துச் செல்வதில் ஏனைய ரஸங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

உதாரணமாக

- வீரம் - துஸ்யந்த மன்னன் மானைத்துரத்திச் செல்லல்.
- நகை – விதூஷகனுக்கூடாக வெளிப்பட்டு நிற்கின்றது.
- அச்சம் - வண்டினைக் கண்டு சகுந்தலை வெருண்டோடுவது.
- சோகம் - சகுந்தலை, கண்ணுவர் ஆச்சிரமத்தில் இருந்து விடைபெற்றுச் செல்வது.
- ரௌத்திரம் - துர்வாச முனிவருக்கூடாக வெளிப்பட்டு நிற்கின்றது.
- அற்புதம் - சோதிப் பிழம்பாகத் தோன்றிய சானுமதி சகுந்தலையைத் தூக்கிச் செல்லுதல்.

**கணிப்பீடு**

- ''ரஸம்'' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
- பாரதர் குறிப்பிடும் ரஸக்கோட்பாடு குறித்து முன்னளிக்கை செய்க.
- சாகுந்தல நாடகத்தில் இனங்காணும் ரஸம் வெளிப்படும் சந்தர்ப்பங்களைப் பட்டியற்படுத்துக.
- சாகுந்தல நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு ரஸங்களிற்கேயான சிறு காட்சித் துண்டங்களைத் தனியாகவோ அன்றேல் குழுவாகவோ நிகழ்த்திக்காட்டுக.
- பரதர் குறிப்பிடும் ரசங்களை வெளிப்படுத்தத்தக்க நாடகப்படங்களை கோவைப்படுத்துக.

**தேர்ச்சி 2.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.6** : சமஸ்கிருத நாடகக்கலை தொடர்பான செல்நெறிகள் பற்றிக் கற்போம்.

**செயற்பாடு 2.6.1.5** :"சமஸ்கிருத நாடகத்தின் இலக்கணங்கள் பற்றிக் கற்போம் ".

**பாடவேளை** : 02

**கற்றற்பேறுகள்**

- சமஸ்கிருத அரங்க மரபு பற்றி அறிந்திருப்பார்.
- சமஸ்கிருத நாடகத்தின் இயல்புகள் பற்றி விளிங்கியிருப்பார்.
- சமஸ்கிருத நாடகங்களில் நாட்டிய சாஸ்திரம் கூறும் நாடக இயல்புகளை இனங்காணுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சமஸ்கிருத அரங்கு தொடர்பான கட்டுரைகள்.
- டிமைன் தாள்.
- மாக்கர்.

**அறிமுகம்**

- சமஸ்கிருத நாடகத்தின் இயல்புகள் பற்றி மாணவர்கள் அறிந்துகொள்வது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- கண்டறிமுறை.
- விரிவுரை முறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- வெவ்வேறு மரபுகளினடியாக எழுதப்பெற்ற நாடக நூல்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றுள் சமஸ்கிருத நாடக மரபுக்குட்பட்ட நாடக நூல்களை மாணவர்கள் தெரிவு செய்ய வாய்ப்பளியுங்கள்.

- பின்வரும் விடயம் தெடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- ஒவ்வொரு நாடக மரபும் தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டு விளங்குகின்றது.

- அதாவது சமஸ்கிருத நாடகத்துக்கெனத் தனித்துவமான மரபு இருப்பது போல் மேலைத்தேய நாடகங்களிற்கும் தனித்துவமான மரபுண்டு.

- சமஸ்கிருத நாடகங்கள் பெரும்பாலும் நாட்டிய சாஸ்திரம் கூறும் இலக்கணங்களைப் பின்பற்றியே எழுச்சி பெற்றுள்ளன.

- இதனடிப்படையில் காளிதாசரால் எழுதப்பெற்ற அபிக்ஞான சாந்தலமும் நாட்டிய சாஸ்திரம் கூறும் நாடக மரபுகளைப் பற்றியே எழுதப்பட்டது.

- மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவும் ஏற்கெனவே தாம் சேகரித்து வந்த சமஸ்கிருத நாடக மரபு தொடர்பான தகவல்கள், கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு சமஸ்கிருத நாடக இயல்புகளைக் கண்டறிந்து முன்னளிக்கை செய்ய வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் முன்வைத்த விடயங்களை அடிப்படையாக கொண்டு பின்வரும் விடயங்களை மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- வடமொழி நாடகத்தின் இயல்புகள்

- நாட்டிய சாஸ்திரமானது வடமொழி நாடகத்தின் ஆரம்ப அறிமுகமாகப் □ர்வாங்கத்தினைக் குறிப்பிடுகின்றது. □ர்வாங்கம் என்பது நாடகம் அரங்கேறுவதற்கு முன்பாக அவ்வரங்க நிகழ்வானது இடை!று இன்றி நிகழக் கடவுளை வேண்டிப்பாடும் சடங்குடன் தொடர்புபட்ட ஒரு நிகழ்வாகக் கொள்ளப்பெறுகின்றது. இப்□ர்வரங்கம் பத்தொன்பது வகையான உறுப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வுறுப்புக்கள் அனைத்தும் அதன் நிகழ்த்துகை முறைமை சார்ந்து திரைமறைவில் நிகழ்தப்பெறுபவை, திரைவிலகிய பின் நிகழ்த்தப்படுபவை என இருவகையாக அமைந்துள்ளன. அவை.'.

- திரைமறைவில் செய்யத்தக்க ர்வரங்க விதிகள் -

உதாரணமாக.'.

- வக்த்ரபாணி:- வலதுபக்கம், இடதுபக்கம் எனக் கருவிகளின் பங்கங்களைக் சீராகச்செய்து கொள்வது.

- பரிகட்டனா:- வீணை முதலான கருவிகளின் பொருளற்ற ஒலியைக் கிளப்புதல்.

- ஸம்கோடனா:- லயத்திற்கு ஏற்ப மத்தளம் முதலான கருவிகளைச் சரிப்படுத்திக்கொள்வது.

- மார்க்காஸாரிதம்:- வீணை முதலான கம்பிகளால் ஒலிக்கும் இசைக்கருவிகளும், முரசும் (மத்தளம்) முதலான தாளக்கருவிகளும் ஒன்றிணைந்து ஒலி செய்யும்படி அந்தந்த இசைக்கருவிகளை ஒலிக்கச்செய்வது.

- திரைவிலகியதும் செய்யத்தக்க □ர்வரங்க விதிகள் -

உதாரணமாக.'.

- கீதவிதி - இறைவணக்கத்திற்கு உரிய கீதத்தைப்பாடுதல்.

- ரங்கத்வாரம் - சொல்லாலும் உறுப்புக்களை அசைத்தலாலும் நிருத்தியம் செய்ய ஆரம்பித்தல்.

- சாரி – சிருங்கார சுவைக்கு உரிய அபிநயங்களைச் செய்தல்.

- ம□ாசாரி - ரௌத்ர ரஸத்திற்கு உரிய அபிநயம் ம□ாசாரி எனப்படும்.

- நாட்டிய சாஸ்திர மரபு பத்தொன்பது உறுப்புக்களைக் கொண்டு விளங்கும் புர்வரங்கத்தினை அறிமுகப்படுத்தியபோதும் வடமொழி ஆசிரியர்கள் தமது நாடகங்களில் மிகச் சுருக்கமானதாகவே புர்வரங்கத்தினைக் கையாண்டுள்ளனர். இது ''பிரஸ்தாபனை□ என அழைக்கப்பெறுகின்றது. இப்பிரஸ்தாபனை இரண்டு உறுப்புக்களை மட்டும் கொண்டதாகக் காணப்பெறுகின்றது. அவை.'.

- நாந்தி.

- சுதாபன ∴ ஆமுக.

- நாந்தி

- நாடகாசிரியர் தான் விரும்பிய கடவுளினை வாழ்த்தி வணங்குவதாக நாந்தி அமைந்திருக்கும். ''நாந்தி□ எனும் கடவுள் வாழ்த்தானது ஒன்று அன்றேல் இரண்டு, மூன்று செய்யுட்களைக் கொண்டதாகி நாடகத்தின் ஆரம்பத்தில் இடம்பெறும். வடமொழி நாடகாசிரியர்களுள் பாசரைத்தவிர காளிதாசர், சூத்திரகர், பவ□தி ஆகியோர் தமது நாடகங்களில் சிவனை வேண்டிப்பாடுவதனை அவர்களது நாடகங்கள் ஊடாக அறிய முடிகின்றது. காளிதாசர் தமது அபிக்ஞான சாகுந்தலத்தில் சிவனை வேண்டிப் பாடுவதனை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- சுதாபன ∴ ஆமுக

- சுதாபன ∴ ஆமுக என்பது சூத்திரதாரனுக்கும் துணைநடிகன் ∴ துணைநடிகைக்கும் இடையிலான நாடகத்தின் அறிமுகம் சார்ந்து இடம்பெறும் உரையாடலாகும். இது நாந்தியைத் தொடர்ந்து இடம்பெறும். சூத்திரதாரனுக்கும் துணைநடிகனுக்குமான இவ்வுரையாடல் பார்ப்போர்,

நாடகாசிரியர்பெயர், நாடகத்தின் பெயர், நாடகத்தின் நோக்கம், ஆற்றுகைக்குகந்த காலம், நேரம் ஆகிய நாடகம் சார்ந்த அறிமுகத்தை உள்ளடக்கியதாகக் காணப்பெறும்.

உதாரணமாக.˙.

- காளிதாசரின் அபிக்ஞான சாகுந்தலத்தில் இடம்பெறும் சுதாபன ∴ ஆமுகத்தில் நோக்குவோமானால் ‘‘நங்காய் கல்வியால் நிரம்பியவர்கள் கூடியது இச்சபை. இன்று காளிதாசன் இயற்றிய அபிக்ஞான சாகுந்தலம் என்ற புதிய நாடகத்தை நடத்தவேண்டும்..........
- ‘‘............இச்சபையின் காதுகுளிர இதோ தோன்றியிருக்கும் இன்பமான முதுவேனிற் காலத்தைப் பற்றிப் பாடு. இக்காலத்தில் தெளிந்த நீரில் முழுகுதல் இனிமை தரும். பாதிரி மலரளைந்து வரும் காகைக் காற்று நறுமணம் வீசும். அயர்ந்து நித்திரை கொள்ளச் செய்யும் மரநிழல், பகல் முதிர்ந்து கனிந்தால் உண்டாகும் அழகிய மாலைக்காலம் ஆனந்தமூட்டும்□. எனக் கூறும் சூத்திரதாரனின் கூற்றுக்களில் இருந்து பின்வரும் விடயங்களை அறியமுடிகின்றது.
- பார்ப்போர் - கற்றறிந்தோர்.
- நாடகாசிரியர் - காளிதாசன்.
- நாடகத்தின் பெயர் - அபிக்ஞான சாகுந்தலம்.
- நாடகத்தின் நோக்கம் - மகிழ்வளித்தல்.
- காலம் - முதுவேனிற்காலம்.
- நேரம் - மாலைக்காலம்.
- வடமொழி நாடகங்களின் பெயர் ∴ தலைப்பு பெரும்பாலும் தலைவன் அன்றேல் தலைவி பெயரைக் கொண்டதாக அன்றேல் தலைவன், தலைவி ஆகிய இருவரது பெயர்களையும் உள்ளடக்கியதாக அமையும்.

உதாரணமாக.˙.

- காளிதாசரின் ‘‘அபிக்ஞான சாகுந்தலம் கதைத் தலைவியான சகுந்தலையின் பெயரைக் கொண்டமைந்தது.
- ஹர்சரின் இரத்னாவளி கதைத்தலைவியான இரத்தினாவளியின் பெயரைக்கொண்டமைந்தது.
- பவ□தியின் மாலதிமாதவம் கதைத்தலைவியான மாலதியின் பெயரையும் கதைத்தலைவனான மாதவனின் பெயரையும் கொண்டமைந்தது.

- விதிவிலக்காக சூத்திரகரின் மிருச்சகடிகம் (மண்ணியல் சிறுதேர்) எனும் நாடகத்தில் உயிரற்ற பொருளான தேர் நாடகத்திற்கான பெயராய் அமைந்தது.
- வடமொழி நாடகங்களின் கதைவளர்ச்சியில் அடையாளச் சின்னங்கள் அன்றேல் உயிரற்ற பொருட்கள் என்பன முக்கிய பங்குவகிக்கும்.

உதாரணமாக.·.

- காளிதாசரின் அபிக்ஞான சாகுந்தலத்தில் கணையாளி கதை நிகழ்வின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது.
- வடமொழி நாடகத்தின் பிரதான பொருளாக காதல் இடம்பெறும்.
- உதாரணமாக.·.
- அபிக்ஞான சாகுந்தலத்தில் துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் இடையான காதல் பிரதான பொருளாக இடம்பெறுகின்றது.
- வடமொழி நாடகங்களில் கதை வளர்ச்சி கருதி பறவைகள், விலங்குகள் என்பன நாடகாசிரியால் பயன்படுத்தப்பெறுவதுண்டு. உதாரணமாக.·. அபிக்ஞான சாகுந்தல கதை வளர்ச்சியில் மான், குதிரை, யானை, சிங்கக்குட்டி, வண்டி, மயில் என்பன பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன.
- வடமொழி நாடகங்களில் இடம்பெறும் வஸ்து எனும் பொருளானது அனைவராலும் அறியப்பட்டதாகவோ இதிகாசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டதாகவோ காணப்படும். எனினும் ஆசிரியரின் கற்பனையும் இணைந்ததாக அமையலாம்.

  உதாணரமாக.·.

- காளிதாசரது அபிக்ஞான சாகுந்தலத்தில் இடம்பெறும் வஸ்து வானது இதிகாசங்களில் ஒன்றாகக் கொள்ளப்படும் மகாபாரதத்தில் இருந்து பெறப்பட்டதான துஸ்யந்தன் சரித்திரத்தை மூலமாக கொண்டும், ஆசிரியர் தனது கற்பனைக் கேற்பத் துருவாசர் சாபம், கணையாளி தவறிப்போதல், துஷ்யந்தன் நினைவிழத்தல் என்பவற்றுடன் மீனவர், தோழியர், விதூசகன் ஆகிய பாத்திரங்களைப் பிரதான கதையுடன் இணைத்தும் ஏழு அங்கங்களை உடைய நாடகமாக ஆக்கப்பட்டுள்ளது.
- நாடகங்களுக்காக ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் வஸ்து ஆனது தன் இயல்புநிலை கருதி ஆதிகாரிகம், பிராஸங்கிகம் எனும் இரு பிரதான பிரிவுகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

- ஆதிகாரிகம் - ஆதிகாரிகம் என்பது சிறப்பான பலனை விளைவிக்கக்கூடிய வகையில் சிறந்த வரலாற்றினை முதன்மையாகக் கொண்டமையும் நாடகத்தின் கதையாகும். ஆதிகாரிகம் கதாநாயகன் கதாநாயகியுடன் தொடர்புடையது.

- ஆதிகாரிகம் ஆரம்ப, பிரயத்தன, பிரத்தியாச, நியதாப்தி, பலாகம எனும் ஐந்து வளர்ச்சிப் படிநிலைகளைக் கொண்டுள்ளது. இவ்வளர்ச்சிப் படிநிலைகளை ஆதரித்து நாடகக் கதையை வளர்த்துச் செல்ல ஐந்து சந்திகள் காணப்படுகின்றன. அவை முகசந்தி, பிரதிமுகசந்தி, கர்ப்பசந்தி, விமர்சக சந்தி, நிர்வ□ணசந்தி என்பன.

- பிராஸங்கிகம் - பிராஸங்கிகம் என்பது பிரதான கதையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகப் பிரதான கதைக்குத் துணையாக ஆசிரியர் தனது கற்பனைகளையும் இணைத்துப் புனையப்படும் துணை வரலாறு ஆகும். பிராஸங்கிகம் கதாநாயகன், கதாநாயகியுடன் தொடர்புடையது.

- ஏனைய பாத்திரங்களுடன் தொடர்புடையதாகிக் கதையை வளர்த்துச் செல்வதாக அமையும்.

- பிராஸங்கிகம்.:. பீஜ, பிந்து, பதகா, பிரகரி, கார்ய எனும் ஐந்து கூறுகளைக் கொண்டுள்ளது. இவை கதைப்பின்னலின் பகுதிகளாகக் கொள்ளப்பெறுகின்றன.

- வடமொழி நாடகங்களின் இயல்புகளுள் ஒன்றாக நாடகத்தின் பிரதானசுவையாகச் சிருங்□ாரமும் வீரமும் இடம்பெறும்.

உதாரணமாக.:.

- அபிக்ஞான சாகுந்தலத்தில் சிருங்கார ரஸமானது மேலோங்கிய ரஸமாகக் காணப்பெற்றாலும் வீரம், நகை, அச்சம், சோகம், ரௌத்திரம், அற்புதம் ஆகிய ரஸங்களும் நாடகத்தின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்துகின்றன.

- வடமொழி நாடகங்களில் நகைச்சுவையை ஏற்படுத்தும் பொருட்டு விதூஷகன் எனும் பாத்திரம் அரங்கில் தேன்றுவது மரபாகக் காண்படுகின்றது. அதாவது கதைத்தலைவர்கள் பிரிவாற்றாமையால் வருந்தும்போது தனது வேடிக்கை வினோதங்கள் மூலம் அவர்களது வருத்தத்தைத் தணித்து மகிழ்ச்சி பெறச் செய்கின்றான்.

- உதாரணமாக.:. அபிக்ஞான சாகுந்தலத்தில் விதூஷகன் - ஓ தோழா, என் கால் கைகளை அசைக்க முடியவில்லை. வாக்கால் மட்டும் உங்கள் வெற்றியைக் கூறுகின்றேன்.

- அரசன் - உனக்கு எதனால் உடல் நோவு?

- விதூஷகன் : நீங்களே கண்ணைக் குத்திவிட்டுக் கண்ணீரின் காரணம் கேட்கிறீர்கள்.

- அரசன் - உனக்கு எதனால் உடல் நோவு?

- விதூஷகன் - நீங்களே கண்ணைக் குத்திவிட்டு கண்ணீரின் காரணம் கேட்கிறீர்கள்.
- அரசன் - எனக்குப் புரியவில்லை
- விதூஷகன் : தோழா, பிரம்புக் கொடி கோணங்கி ஆட்டம் போடுவது தன் ஆற்றலினாலா? அல்லது நதியின் வேகத்தினாலா?
- வடமொழி நாடகங்களின் மொழிப் பயன்பாடானது பிரதான பாத்திரம் சமஸ்கிருதத்திலும் பிற பாத்திரங்கள் பிராகிருத மொழியிலும் பேசுவதாய் அமையும். இம்மொழி சொற்றிறம் மிக்கதாகக் காணப்பெறும். பாத்திரப் பண்புகளிற்கேற்பப் பிராகிருத மொழி வேறுபட்டிருக்கும். உதாரணமாக.்.
- அபிக்ஞான சாகுந்தலத்தில்
- விதூஷகன் : நேற்று எங்களை விட்டுப்பிரிந்து வேட்டை ஆடுகையில் ஆச்சிரமத்தில் பிரவேசித்த அரசன் கண்ணில் சகுந்தலை என்ற தாபசக்கன்னி எனும் அதிஸ்டத்தினாள் தென்பட்டு விட்டாள் .....
- செம்படவன் : ஒரு ரோ□த மீனை ஒரு நாள் பிடித்தேனுங்க. அதைக் கண்டம் போடும்போது தன்வயிற்றில் இந்த மணிச்சுடர் மோதிரம் இருந்தீங்க......
- ஒரு நாளில் இயற்கையாக நடக்கத்தக்க சம்பவங்களையே ஓரங்கத்தில் உள்ளடக்குவது வடமொழி நாடகங்களின் மரபாகக் கருதப்பெறுகின்றது. இதனடிப்படையில் இதிகாசக் கதையின் பல வருடங்களில் நிகழ்வதை ஒரு வருடத்தினுள் நிகழ்வதாக மாற்ற வேண்டும். இதனால் இடைப்பட்ட காலத்து நிகழ்ச்சிகளைச் சபையோருக்கு உணர்த்தப் பின்வரும் உத்திகள் கையாளப்படுகின்றது.

  அவை்.

- விட்கம்பம், பிரவேஷக.
- அந்தர சந்தி.
- அபவாரிதம்.
- சுவாதகம்.
- ஆகாஷபாஷிசம்.
- நாடகத்தின் முடிவு மகிழ்சியானதாய் அமைய வேண்டும் என்பது வடமொழி நாடகத்தின் மரபாகும். அபிக்ஞான சாகுந்தலம் நாடகத்தின் இறுதியில் துஷ்யந்தன், சகுந்தலை,

மகன் ஆகியோர் இணைகின்ற மகிழ்வான செய்தியுடனும் மங்கள கீதம் எனும் பரத வாக்கியத்துடனும் நிறைவு பெறுகின்றது.

- இது தவிர சமஸ்கிருத அரங்கு, அரங்கில் காட்டக் கூடாத அம்சங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது.

உதாரணமாக.'.

- ஆடை உடுத்திக்கொள்ளுதல் .
- குளியல், மெய்ப்புச்சுக்களைப் புசிக்கொள்ளுதல்.
- படுக்கையறைக்காட்சி.
- முத்தமிடுதல், தழுவுதல்.
- இடையில் உள்ள ஆடை நழுவுதல்.
- உணவு உட்கொள்ளுதல்.
- நீராடுதல்.
- காண்போர் வெட்கப்படும்படியான காதல் செய்கைகள் போன்றன.
- சமஸ்கிருத அரங்கில் மொழியானது அரங்கின் அனைத்து மூலவளங்களையும் பேசுகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வரங்கில் காட்சி விதானிப்புக்கள் மேடையில் சித்திரித்துக் காட்டுவதைத் தவிர்த்து மொழியின் ஊடாகவே அனைத்தும் பேசப்படுகின்றது. கற்பனைக்கே அதிக இடமளிக்கப்பெறுகின்றது.

உதாரணமாக.'.

- அபிக்ஞான சாகுந்தலத்தின் ஊடாக நோக்கின் -
- புவியியல் தோற்றம் - பாதை மேடு பள்ளமாக இருத்தல்.
- பாத்திரச் செயலியக்கம் - கடிவாளத்தை இழுத்துப் பிடித்தோரின் வேகத்தைக் குறைத்தேன்.
- கதைக்களம் - இதுவே ஆச்சிரம வாசல்.
- பாத்திரத்தின் பௌதிக குணாம்சம் - அபடிசகுந்தலை நவமல்லிகைப் புப்போல் மெல்லியளாயினும்.....
- வேட உடை – அவள் வடிவினுக்கு மரவுரி ஏற்றதல்ல.
- ஒப்பனை – காதிலிருக்கும் மலரால்.... அவிழ்ந்த கூந்தலை ஒரு கையால் கட்டியதால் தலைமயிர் கலைந்திருக்கிறது.

கணிப்பீடு

- சமஸ்கிருத நாடக இலக்கணங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
- சமஸ்கிருத நாடக இலக்கணங்களை அபிக்ஞான சாகுந்தல நாடக எழுத்துருவைத் துணையாகக் கொண்டு முன்னளிக்கை செய்க.
- சமஸ்கிருத நாடகக் காட்சி விதானிப்பில் மொழியின் செல்வாக்கைக் குறித்துக்காட்டுக.
- சமஸ்கிருத நாடகத்தில் சுவை குறித்து அபிக்ஞான சாகுந்தலத்தை அடிப்படையாகக் கொண்டு எடுத்துரைக்க.
- சமஸ்கிருத நாடகங்கள், அவை சார்ந்த படங்களைச் சேகரித்துக் கோவைப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப் படைகள் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.7 | : | சமஸ்கிருத நாடகங்கள் பற்றிப் பயின்றவராவார். |
| **செயற்பாடு** | 2.7.1 | : | சமஸ்கிருத அரங்கின் தோற்றம் பற்றி அறிந்து கொள்வோம். |
| **பாடவேளை** | | : | 02 |

**கற்றற் பேறுகள்:**

- சமஸ்கிருத அரங்கின் தோற்றம் பற்றி விளக்கியிருப்பார்.
- சமஸ்கிருத அரங்கின் படிமுறை வளர்ச்சியினை அறிந்திருப்பார்.
- சமஸ்கிருத அரங்கின் தோற்றத்திற்கு ஏதுவாக அமைந்த ஐதிகக் கதையைக் கூறுவார்.

**அறிமுகம்:**

சமஸ்கிருத அரங்கின் தோற்றம் தொடர்பான ஐதிகக் கதையைத் தெரிந்து கொள்வதுடன் அதற்கூடாக அரங்கின் படிமுறை வளர்ச்சியினை அறிந்து கொள்வதும் இங்கு எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- நூல் உசாவுகை.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடகக் கலையின் தோற்றம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடலை வளர்த்துச் செல்வதன் ஊடாகச் சமஸ்கிருத அரங்கின் தோற்றம் பற்றிக் கருத்துரையுங்கள்.
- நான்கு குலத்தவர்களும் இரசிக்கக் கூடியவாறு ஒரு இலக்கியத்தினைப் படைக்குமாறு தேவர்கள் பிரம்மதேவனிடம் வேண்டுகோளை விடுத்தனர்.
- பிரம்மதேவர், இவ்விலக்கியத்தினைப் படைப்பதற்காக இருக்கு வேதத்தில் இருந்து உரையையும், சாமவேதத்தில் இருந்து இசையையும் யசுர் வேதத்தில் இருந்து நடிப்பையும் அதர்வண வேதத்தில் இருந்து சுவையையும் பெற்று நாடகத்தைப் படைத்தார்.
- வேதங்களில் இருந்து பெற்றுக்கொண்ட விடயங்களைச் செய்து காட்டுவதற்குரிய நிகழ்வாகத் தேவர்கள், அசுரர்கள் போன்றோரைத் தொடர்புபடுத்தி அமிர்ததகனம் எனும் நாடகத்தினை மேடையேற்றினார். இதற்கான மேடையினைத் தேவதச்சன் அமைத்துக் கொடுத்தான்.
- நாடக மேடையேற்றத்தில் அசுரர்களால் இம்மேடை உடைத்தெறியப்பட்டது. பின்னர் நிகழ்விற்கான மேடையில் விஸ்வகர்மாவினால் அமைக்கப் பெற்றது. இவ்வரங்கானது படிமுறையான வளர்ச்சியினைக் கொண்டமைந்ததைக் காணலாம்.
- ஆரம்பத்தில், தற்காலிக அரங்காகவும் பின்னர் நிரந்தரமான அரங்காகவும் பொதுமக்களுக்கான அரங்காக 64 முழ நீளமும் 32 முழ அகலமும் உடையதும் அரங்க நிர்மாணி என அழைக்கப்படும் விஸ்வகர்மாவினால் அமைக்கப்பட்டது.

- நாடகத்திற்கான கதை, பாத்திரங்கள் இசை, நடிப்பு போன்றவை முறையாக ஒழுங்கு படுத்தப்பட்டது.
- சமஸ்கிருத நாடகத்தின் ஊடாகப் பெண்கள் நடிப்பில் பங்களிப்புச் செய்தனர். இது அக்கால சமூகத்தின் மாற்றத்திற்கு ஏதுவாக அமைந்தது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சமஸ்கிருத அரங்கு சார்ந்த நூல்கள்.
- $A_4$ தாள்கள்.

**கணிப்பீடு:**

- சமஸ்கிருத அரங்கின் படிமுறை வளர்ச்சியினைக் குறிப்பிடுக.
- சமஸ்கிருத அரங்கின் தோற்றத்திற்கு ஏதுவாக அமைந்த ஐதிக நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
- வேதங்களில் இருந்து அரங்கிற்குப் பெற்றுக் கொண்ட விடயங்கள் எவை?

**உசாத்துணைகள்:**

- நாட்டிய சாஸ்திரம்

  பரதக்கலைக் கோட்பாடு - பத்மா சுப்பிரமணியம்

**தேர்ச்சி 2.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி அடிப்படைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.7 : சமஸ்கிருத நாடகங்கள் பற்றிப் பயின்றவர் ஆவார்.

**செற்பாடு 2.7.2** : சமஸ்கிருத நாடக ஆசிரியர்கள் பற்றி அறிந்துகொள்வோம்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்** :

- சமஸ்கிருத நாடகாசிரியர் பற்றித் தெரிந்திருப்பார்.
- சமஸ்கிருத நாடகாசிரியர் நாடகத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை அறிந்திருப்பார்.
- சமஸ்கிருத நாடகாசிரியர்களின் உருவத்தோற்றத்தினை தெரிந்திருப்பார்
- சமஸ்கிருத நாடக எழுத்துருக்களைச் சேகரித்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :-

- நாடகாசிரியர்களின் படங்கள்.
- சமஸ்கிருத நாடக எழுத்துருக்கள்

**அறிமுகம்** :

- சமஸ்கிருத நாடக வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த பாசர், காளிதாசர், ஶ்ரீகர்சன், சூத்திரகர் ஆகியோரையும் அவர்களின் படைப்புக்களையும் தெரிந்து கொள்வது இங்கு எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- சமஸ்கிரு நாடகாசிரியர்களான பாசர், ஶ்ரீஹர்சர், சூத்திரகர், காளிதாசர் ஆகியோரின் உருவத்தைக் கொண்ட படங்களைக் காட்சிப்படுத்தி அவர்கள் தொடர்பாகக் கருத்துக்களைக் கலந்துரையாடல் மூலம் கட்டியெழுப்புங்கள். அவற்றின் ஊடாக அவர்கள் பற்றிய பின்வரும் விடயங்களைக் கருத்துரையுங்கள்.

பாசர் :

- பாசரின் நாடகப் படைப்புக்கள் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
- வீரகாவியம், புராணக் கதைகள் மற்றும் கதைத்தொகுப்புக்கள் சார்ந்த படைப்புக்கள்.

சுய படைப்புக்கள்

- பாசரின் 13 நாடகங்கள் பற்றிக் கணபதி சாஸ்திரி (கி.பி 1912 – 1915) தனது திருவந்தரம் எனும் நூல் வரிசையில் குறிப்பிட்டுள்ளார்.
- கி.மு 5ம் நூற்றாண்டிற்கும் கி.பி 2ம் நூற்றாண்டிற்கும் இடையில் வாழந்தவர் எனக் கூறப்படுகின்றது.
- ஓரங்க நாடகங்களையும் எழுதியுள்ளார்.
- இவரது ஸ்வப்ன வாசவதத்த நாடகம் சிறந்த படைப்பாகும்.
- சமஸ்கிருத நாடக ஆசிரியர்களில் சிறந்தவராகக் காணப்படுகின்றார்.

காளிதாசர்

- சமஸ்கிரு நாடக ஆசிரியர்களில் மிகச் சிறந்தவராகக் காணப்படுகின்றார்.
- இவரது நாடக வடிவங்களாக அபிக்ஞான சாகுந்தலம், மாளவிகாக்னி மித்திரம், விக்கிர மோர்வசியம் என்பன காணப்படுகின்றன.
- இவரது படைப்புக்களில் சிறந்த படைப்பு அபிக்ஞான சாகுந்தலம் ஆகும். இதனை கவிஞர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். காவியங்களுள் சிறந்தது நாடகமாகும்.∵. நாடகத்துள் சிறந்தது சாகுந்தலமாகும். அதிலே சிறந்தது நான்காவது அங்கமாகும். அதிலும் சிறந்தது நான்கு சுலோகங்களாகும்.
- நாடகமானது கவிதைப்பாணி சார்ந்தது ஆகும். தலைமைப் பாத்திரங்கள் வீரதீரப்பண்புகளைக் கொண்டனவாகும்.
- இயற்கைக்கும் மனிதரின் இயல்புகளுக்கும் இடையிலான பரஸ்பர தொடர்புகள் வெளிக்காட்டப்படும்.
- இவரது படைப்புகளில் சிருங்கார ரசம் மேலோங்கிக் காணப்படும்
- நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்ட நாடக இலக்கணங்களை உள்வாங்கி இவர் நாடகங்களை உருவாக்கினார் எனக் கூறப்படுகின்றது..

சூத்திரகர்

- பிராமணகுலத்தைச் சேர்ந்த இவர் வேதத்தில் தேர்ந்தவர்.∵. பற்பல அறிவியல்களில் துறைபோன திறமைமிக்க ஒரு எழுத்தாளர் ஆவார்.
- இவர் வாழந்த காலம் காளிதாசருக்கு முற்பட்ட காலம் ஆகும்.

- இவரது படைப்புக்கள் வலிமையான, உயிரோட்டமான நாடக மொழிப்பிரயோகங்கள் மூலம் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது.
- நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களின் ஊடாகச் சமகால நிகழ்வுகள் சித்திரிக்கப்படுகின்றமை.
- பாத்திரச் சித்திரிப்பு மிக முனைப்பானது.
- இவர் எழுதிய மிருச்சகடிகம் எனும் நாடகத்தின் ஊடாக நாடக விதியை இனங்காண முடிகிறது.
- சிருங்காரம், கருணை, இலேசாக இழையோடும் நகைச்சுவை என்பன முனைப்பாக வெளிப்படுத்தப்படும்.
- பல்வேறு வகைப்பட்ட சொல்லாடற் பகுதிகள் கையாளப்படுவதுடன் நாடகத்தின் கதைக்களத்திற்குப் பொருத்தமான கதைப்பகுதிகளைச் சமகால விடயங்களுடன் தொடர்பு படுத்திப் பேசுவதற்குப் பல்வேறு வகைப்பட்ட செல்லாடற் பாங்குகளைக் கையாண்டமை இவரது சிறந்த நாடகவாக்க உத்தியை எடுத்துக்காட்டுகின்றது.

**ஸ்ரீஹர்சர்**

- இவரது படைப்புக்கள் ரத்னாவளி, பிரியதர்சிக்கா, நாகாநந்தம் போன்றனவாகும்
- அரசசபைச் சூழலைப் பின்புலமாகவும் காதல் கதைகளை மூலமாகவும் கொண்டு எழுதப்பட்ட நாடகங்கள் என்ற வகையில் நாடக இலக்கியத்தில் இவை சிறப்பிடம் பெறுகின்றன.
- ஸ்ரீஹர்சர் எளிமையான நாடக எழுத்துப்பாணியைப் பயன்படுத்தியுள்ளார்.
- இலேசாக இழையோடும் நகைச்சுவையை வெளிப்படுத்தும் வகையில் எழுதுவதில் இவர் வல்லவர் ஆவார்.
- இயற்கை அழகை வர்ணிப்பதற்காக நீண்ட வாக்கியங்களைப் பயன்படுத்துவது ஸ்ரீஹர்சரின் சிறப்புக்களில் ஒன்றாகும்.
- இவர் பிரசித்தி பெற்ற புரூரவக் கதைகளிலிருந்தே நாடகத்திற்கான கதைக்கருக்களைப் பெற்றுக்கொண்டார்.

**முதன்மைப் பதங்கள்**

- வீரகாவியம்.
- புராணக்கதைகள்.
- ஓரங்க நாடகம்.

**கணிப்பீடு**

- சமஸ்கிருத நாடகாசிரியர்கள் சிலரைக் குறிப்பிடுக.
- காளிதாசரின் படைப்புகளைக் குறிப்பிடுக.
- சமஸ்கிருத நாடகாசிரியர்களின் நாடகப்பணிகளை மதிப்பிடுக.
- சமஸ்கிருத நாடகாசிரியர்களின் படைப்புகளில் மேலோங்கி இருக்கும் ரஸங்கள் பற்றி எடுத்துக் கூறுக.

**உசாத்துணைகள்**


- சாகுந்தலம் - மறைமலை அடிகள்.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி
  - பேராசிரியர் மௌனகுரு
  - க.திலகநாதன்
- பரத சாஸ்திரம் - - ஸ்ரீராமதேசிகர்

**தேர்ச்சி** 3.0 :நாடகமும் அரங்கக் கலைகளுக்கும் அடித்தளமாக அமைகின்ற கொள்நெறிகள் நிலைப்பட்ட படைப்பாக்கங்களைக் கட்டியெழுப்புவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.1 : தெரிந்தெடுக்கப் பெற்ற நாடக எழுத்துருவில் உள்ள காட்சி யொன்றினைப் படைப்பாக்கம் செய்வார்.

**செயற்பாடு** 3.1.1 : எந்தையும் தாயும் நாடக எழுத்துருவை வாசித்துச் சொல்லாடுவோம்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்:**
- எந்தையும் தாயும் நாடக எழுத்துருவை வாசித்திருப்பார்.
- நாடக எழுத்துருவை வாசிப்பு நுட்பங்களுடன் வாசித்திருப்பார்.
- நாடக எழுத்துருவைப் பாத்திர உணர்வுடன் வாசித்திருப்பார்.
- பாத்திரங்கள் சொல்லாடும் முறைமையை எடுத்துரைப்பார்.

**தர உள்ளீடுகள்** :
- எந்தையும் தாயும் நாடக எழுத்துரு.
- வாசிப்பு நுட்பங்கள் அடங்கிய அட்டை.
- சொல்லாடல் தொகுதிகள்.

**அறிமுகம்:**

எந்தையும் தாயும் நாடகத்தை வாசித்து அந்நாடகத்தில் வரும் சொல்லாடல்களின் தன்மையை உணர்ந்து கொள்வதே இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப் பெறுவதாகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**
- வினாவுதல்.
- கலந்துரையாடுதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**
- இந்நாடகம் சமகால ஈழத்து நாடகப் புரட்சியின் தாய் என வர்ணிக்கப்படும் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பெற்றதாகும்.
- 1990 களில் ஈழத்து நாடக வரலாற்றில் முக்கியமான நாடகமாக இது கருதப்பெறுகிறது..
- 1990 களில் யாழ்ப்பாணத்தில் நிலவிய உண்மையான நிலையை எடுத்துக் காட்டுகிறது.
- மூன்று குடும்பங்களினூடாக அக்காலத்து வாழ்க்கை நிலை எடுத்துக் காட்டப் பெறுகிறது.
- வழமையான படச்சட்ட அரங்கிலோ, திறந்த வெளியிலோ நாடகத்தை நிகழ்த்தாது முதலில் ''நாற்சார் அரங்கில் நிகழ்த்தினர்''
- அக்காலத்துப் புகழ்பூத்த நாடகக் கலைஞர்கள் இந்நாடகத்தின் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்திருந்தனர். அவர்கள்:
  - பிரான்சிஸ் ஜெனம்.
  - எஸ். ரி. அரசு.
  - நல்லை சுந்தரலிங்கம்.

**மற்றும் பயில்முறை நடிகர்கள்.**

- வி. கமலா.
- க. லோசனா.
- பூ. செந்தில்நாதன்.

- இது நாடக அரங்கக் கல்லூரியால் தயாரிக்கப் பெற்றது.
- வைத்திய கலாநிதி சிவயோகன் இந்நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தார்.
- இந்நாடகம் பலதடவை நாற்சார் அரங்கிலும் பின்னர் படச்சட்ட அரங்கிலும் தமிழக 'நாராய் நாராய்' பயணத்திலும் அரங்கேற்றம் கண்டது. இத்தகைய பின்னணியை மனதில் வைத்துக் கொண்டு, நாடக பாடத்தை ஆசிரியரும் மாணவரும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இதன் பின்னர் வசதிக்கேற்ப மாணவர்களை 4 அன்றேல் 5 குழுக்களாகப் பிரித்து வாசிக்க விடுங்கள். அன்றேல் வசதிக்கேற்றவாறு மூன்று குழுக்களாகப் பிரித்து மூன்று குடும்பங்களிற்கும் மாறி மாறி வாசிக்கலாம்.
- வாசிப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி வாசியுங்கள். (குரலில் ஏற்ற இறக்கம், தொனி வேறுபாடு, கவர்ச்சி, அழகு, நெகிழ்ச்சி, குரலைப் புறத்தெறிதல், நிறுத்தற் குறிகளை அவதானித்து வாசித்தல்.
- இரண்டாம் கட்டமாகப் பாத்திரங்களின் இயல்புகளை அறியுங்கள்.
- மூன்றாம் கட்டமாக, பாத்திரங்களின் உணர்வுகளுடன் வாசியுங்கள்.
- நாடகத்தின் கதை, கரு, விடயப்பொருள் என்பன புலப்படுமாறு சொல்லாடுங்கள்.
- சொல்லாடல்கள் நாடகத்தன்மை வாய்ந்தனவாக இருக்கும்.
- பாத்திரத்திற்கேற்பச் சொல்லாடல்கள் வேறுபட்டுக் காணப்படும்.
- சொல்லாடல்கள் யதார்த்தப் பாங்கில் அமைந்திருக்கும்.
- ஒவ்வொரு பாத்திரமும் தத்தம் உள மாற்றங்களைச் சொல்லாடல் மூலம் வெளிப்படுத்துவார்.
- சங்கரப்பிள்ளையும் செல்வரட்ணமும் ஒரே வகையான உணர்வினைக் கொண்ட பாத்திரமாக இருந்த போதிலும் சொல்லாடற் பாணி வேறுபடும்.
- ஐயாத்துரையின் ஆதங்கமும் இயல்பாக உள்ள உணர்ச்சிகளும் காத்திரமான சொல்லாடல் மூலமாக வெளிப்படும்.
- ஒவ்வொரு பாத்திரமும் வகை மாதிரியானவை. யாழ்ப்பாணப் பண்பாட்டின் - தமிழ்ப் பண்பாட்டின் குறிகாட்டியாகத் திகழ்பவர்.
- தனிமனித உணர்வுகள் வெளிப்படும் முறையில் சொல்லாடல் அமைந்திருக்கும்.
- குழுக்களின் முன்வைப்பைக் கவனித்து வழிகாட்டவும்.

**முதன்மைப் பதங்கள்.**

- படச்சட்ட அரங்கு.
- திறந்த வெளி அரங்கு.
- நாற்சார் அரங்கு.

**கணிப்பீடும்:**

- நாடக எழுத்துரு வாசிப்பின் போது கவனிக்க வேண்டிய நுட்பமுறைகள் யாவை?
- நாடக எழுத்துரு ஒன்றில் அடங்கியுள்ள சொல்லாடல் முறையின் முக்கியத்துவம் யாது?
- சங்கரப்பிள்ளை என்ற பாத்திரத்தின் சொல்லாடல்களை வெளிப்படுத்தும் போது எவை எவற்றைக் கருத்திற் கொள்வீர்?

**தேர்ச்சி 3.0:** நாடகமும் அரங்கக் கலைகளுக்கும் அடித்தளமாக அமைகின்ற கொள்நெறிகள் நிலைப்பட்ட படைப்பாக்கங்களைக் கட்டியெழுப்புவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** தெரிந்தெடுக்கப் பெற்ற நாடக எழுத்துருவில் உள்ள காட்சி யொன்றினைப் படைப்பாக்கம் செய்வார்.

**செயற்பாடு 3.1.2 :** ம.சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் நாடகத்தின் பாத்திரங்கள், மோதுகை, மோடி என்பவற்றை அறிந்து, நாடகத்தின் காட்சியொன்றை நடித்துக் காட்டுவோம்.

**பாடவேளை :** 05

**கற்றற் பேறுகள்:**

- எந்தையும் தாயும் நாடகத்தின் பாத்திரங்களை எடுத்துரைப்பார்.
- நாடகத்தின் மோதுகையை அறிந்து கூறுவார்.
- நாடகத்தின் மோடியை இனங்காண்பார்.
- நாடகச் சொற்களின் நேரடியான, மறைமுகமான அர்த்தங்களை கண்டறிந்திருப்பார்.
- மேடைக்குறிப்புக்களை நாடகமாக்கலுக்குத் துணையாகப் பயன்படுத்துவார்.
- நாடகக் காட்சியொன்றை நடித்துக் காட்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- எந்தையும் தாயும் நாடக எழுத்துரு.
- எந்தையும் தாயும் நாடக காணொளிகள் அன்றேல் இறுவட்டுக்கள்.
- எந்தையும் தாயும் நாடக விமர்சனங்கள்.
- .இவை சாத்தியக் கருவிகள், வேட உடைகள், ஒப்பனைகள்.

**அறிமுகம்:**

எந்தையும் தாயும ்நாடகத்தின் கரு, மோதுகை, மோடி, பாத்திரங்கள், மேடைக்குறிப்புகள் என்பவற்றைக் கற்றறிந்து நாடகத்தின் ஒரு சிறு பகுதியை நடித்துக்காட்டுவதே இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப் பெறுவதாகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- வாசிப்பு முறை
- கலந்துரையாடல்
- வினாக்கேட்டல்
- செய்முறை

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- இப்பாடத்தின்போதுஏற்கனவே எந்தையும் தாயும் நாடத்தை வாசித்து நாடகத்தின் பின்னணி காலம் எழுதியவர் தெடர்பாக அறிந்திருந்தவற்றை மீட்டுக்கொள்க
- நாடகத்தின் கரு பிள்ளைகளைப்பிரிந்திருக்கும் பெற்றோரின் மனநிலை என்பதாகும்.

- நாடகத்தின் மோடி யதார்த்த மோடியில் எழுதப்பபெற்றதாகும். மோடிமைப்படுத்தப்பட்ட தன்மையும் உள்ளதைக்காணலாம்.

உதாரணம் தொலைபேசி உரையாடல்

- நாடகத்தின் மோதுகை எனக்குறிப்பிடும்போது தமது பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டு தனித்திருக்கும் பேற்றோரின் ஏக்கங்களிற்கும் அவர்களின் ஏக்கங்கள் பிள்ளைகளால் தீர்க்கப்படமுடியாது போகின்றன தன்மையும் சுட்டிக்காட்டப்படுவதைக் காணலாம். குறிப்பாக சொல்லப்போகின் இங்கிருக்கும் பெற்றோர் பிள்ளைகளுடன் சந்தோசமாக இருப்பதும் வெளிநாட்டுக்கு அனுப்பியோர் துன்பப்படுவதாயும் சுட்டிக்காட்டலாம்.
- இந்நாடகத்தின் சொற்கள் யதார்தமானவை சொல்லாடல்கள் நாடகத்தின் வளர்ச்சியில் காத்திரமான தாக்ககத்தை ஏற்படுத்தியுள்ளன.
- பாத்திரங்களின் உயிரோட்டமான ஊடாட்டத்திற்கு சொல்லாடல்கள் முதன்மை இடம் வகிக்கின்றன. செல்லாடல்களை பயன்படத்தும்போது உணர்ச்சிகள் வெளிக்கொணரப்படும்.
- உணர்ச்சி வெளிப்பாட்டுடன் சொல்லாடல்களை கட்டியெழுப்பும்போது பாத்திரப்பண்பு வெளிக்கொணரப்படும்
- செல்லாடல்களின் பேர்து நேரடியான மறைமுகமான அர்த்தங்களைக்கண்டுகொள்ளலாம்

உதாரணம் -

வசந்தி - அப்பா! பெரியையாவுக்கு <u>சாப்பாடு</u>

ஐயாத்துரை சாப்பாடோ? பெரியையாவுக்கு <u>சாப்பாடு</u> வந்துட்டுது. இனிவோறொருத்தற்ற <u>சாப்பாடும்</u> அவருக்கு தேவையில்லை வேணுமெண்டால் அவற்ற சாட்டில திரவச்சு நாங்கள் சாப்பிடலாம்

வசந்தி என்னப்பா செல்லுறிங்கள்?

இங்கு ஐயாத்துரை பேசும்போது சாப்பாடு வந்துட்டுது எனக்கூறும்போது சா..... பாடு வந்துட்டுது என்பார். அதேபோல

சங்கரப்பிள்ளை - இன்னும் எத்தின நாளைக்கு ........ (சிரித்துக்கொண்டு)

ஐயாத்துரை - பெரியைய்யா <u>இறப்பில</u> கயிறு தொங்கு அபசகுணமா எல்ல கிடக்கு.

சங்கரப்பிள்ள - நீ பயப்படாத ஐயாத்துரை நான் கடைசிவர கயித்தில தொங்க மாட்டன் (சிரித்துக்கொண்டு) இருக்கும் வர உன்ர கையிலதான் தொங்குவன்.

இங்கு நாடக இறுதியில் சங்கரப்பிள்ளை <u>இறந்து</u> போவதைக்காணலாம்.

இவ்வாறு சொல்லாடல்கள் நேரடியான, மறைமுகமான அர்தங்களைப் புலப்படுத்துவதைக்காணலாம்.

இந்தநாடகத்தில் ஆறு பாத்திரங்கள் முதன்மையானவை

சங்கரப்பிள்ளை - 75 வயது

ஐயாத்துரை - 50 வயது

செல்வரட்ணம் - 65 வயது

மகேஸ்வரி - 60 வயது

வசந்தி - 25 வயது

கண்ணன் 20 வயது

சங்கரப்பிள்ளை - 75 வயதான தளர்ந்த உள்ளமும் உடலும் கொண்டவர். நாடகம் முழுமையும் வியாதித்திருக்கும் பாத்திரம். இப்பாத்திரமாகும். இப்பாத்திரத்தைச் சூழவே நாடகம் கட்டியமைக்கப்பட்டமையை அவதானிக்கலாம். யாழப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த ஓய்வு பெற்றவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் பதினொரு பிள்ளைகளைப்பெற்று அவர்களை வெளிநாடு அனுப்பி விட்டு தனியே இருப்பவர் பிள்ளைகளுக்காக ஏங்குபவர். மனித மாண்பு நிறைந்தவர்.

செல்வரட்ணம் - மகேஸ்வரி - பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு அவர்களின் கடிதங்களிலும் படங்களிலும் அன்பு செலுத்தி வாழ்பவர் பிள்ளைகளின் பாசத்திற்காக ஏங்குபவர்கள்.

தங்களுக்குள் பிணைப்புடையோர் ஏனையோரிடத்திலும் அன்புடையோர்.

ஐயாத்துரை - 50 வயதுடையவர், மனைவியை இழந்தவர், கண்ணன் வசந்தி ஆகியோருடன் அன்பாக பழகும் தந்தை. சிறிய காஸ்யம் இழையோடும் வித்தில் பேசுபவர் சமூகத்தை விமர்சனம்

செய்வது அவர்களின் இயல்பான குணங்களில் ஒன்று சங்கரப்பிள்ளையின் நெருங்கியநண்பர்.

வசந்தி - கண்ணன் ‧ ஐயாத்துரையின்பிள்ளைகள் வசந்தி வயது வந்தும் திருமணம் ஆகாதவள். பெரியைய்யாவை (சங்ரப்பிள்ளை) அன்புடன் பார்த்துக்கொள்பவள். கண்ணன் உயர்தரம் படிக்கும்

மாணவன். தந்தையின் நக்கல் நளினம் கொண்டவன். உற்றார் ஊரவரிடம் அன்பு கொண்டவன்.

இந்நாடகத்தில் இந்நாடக ஆசரியர் எழுத்துருவின் ஊடாக பலமேடைக்குறிப்புகளை பயன்படுத்துவதைக் காணலாம். நாடகத்தின்ஆரம்பத்தில் வரும் குறிப்புகளைக் கவனிக்க.

திரைவிலக எனத்தொடங்கும் இவ்விடத்து அரங்கப்பொருட்கள் இடங்கள் பாத்திரங்களின் நிலைகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

அவர் எழுந்து சங்கரப்பிள்ளையின் வீடு நோக்கிச் செல்கிறார். மூன்று வீடுகளினதும் வாயிற்புறம் முன்மேடைப்பகுதியில் தான் உள்ளதாக பாவனைபண்ணிக்கொள்வது நல்லது. முன்மேடைப்பகுதியில் வலது இடதாக ஒரு தெரு அன்றோல் ஒழுங்கை செல்வதாக மேடை அசைவுகளின் மூலம் நடிகர் பார்வையாளருக்கு உணர்த்தலாம்.

இவ்வாறு பலமேடைக்குறிப்புகளைப் பயன்படுத்துவதை எழுத்துரு முழுவதும் கண்டுகொள்க.

இத்தகைய விளக்கங்களை அளித்தபின்னர் மாணவர்களை மூன்று பேர் கொண்ட குழுவாக தேவைக்கேற்றவாறு பிரியுங்கள். எந்தையும் தாயும் நாடகத்தில் வரும்

தொலைபேசி உரையாடல்

சங்கரப்பிள்ளை ஐயாத்துரை முதல் சந்திப்பு

மகேஸ்வரி செல்வரட்ணம் உரையாடல்

போன்ற காட்சிகளை நடித்துக்காட்ட வழிப்படுத்துங்கள் பின்னர் தெரிவு செயப்பபெற்ற மாணவர்களைக்கொண்டு ஏதாவது ஒரு காட்சியை நடித்துக்காட்ட சந்தர்ப்பம் அளியுங்கள் ஆற்றுகையின் போது வசதியாயின் வேட உடை வேடப்புனைவு செய்யலாம்.

நாடகத்திற்குரிய காட்சியமைப்பை மேற்கொள்ளலாம்.

இறுதியாக கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

முதன்மைப் பதங்கள்

காட்சியமைப்புக் குறிப்புகள்

மேடைக்குறிப்புகள்

**கணிப்பீடு**

- எந்தையும் தாயும் நாடகத்தில் கரு .மேடி, மோதுகை என்பவற்றை எடுத்துக் கூறுக?
- எந்தையும் தாயும் நாடகத்தின் பாத்திரங்களின் இயல்புகளை எடுத்துரைக்க?
- எந்தையும் தாயும் நாடகத்கதின் மேடைக்குறிப்புகள்ட மூன்றினைச்சுட்டிக்காட்டுகங்கள்?
- எந்தையும் தாயும் நாடகத்தில் இருந்து சிறுபகுதி ஒன்றை நடித்துக்காட்டுக?

**உசாத்துணை**


- எந்தையும் தாயும் - ம.சண்முகலிங்கம்
- ஆசிரயர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் 10 (பழைய பாடத்திட்டம்)

**தேர்ச்சி 3.0 :** நாடகமும் அரங்கக் கலைகளுக்கும் அடித்தளமாக அமைகின்ற கொள்நெறிகள் நிலைப்பட்ட படைப்பாக்கங்களைக் கட்டியெழுப்புவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2.1 :** நடிப்பாற்றலை விருத்தி செய்து கொள்வார்.

**செயற்பாடு 3.2.1 :** போலச் செய்தலை (Imitation) மேற்கொள்வோம்.

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள்:**

- போலச் செய்தல் என்றால் என்னவென விளங்கியிருப்பார்.
- போலச் செய்தலின் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களை எடுத்துரைப்பார்.
- போலச் செய்தலுடன் பரதருடைய அனுகரத்தை ஒப்பிட்டு விளக்க மளிப்பார்.
- பல்வேறு போலச் செய்தற் செயற்பாடுகளை நிகழ்த்திக் காட்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நூல்கள்.
- காணொளி இறுவட்டு.
- சொல்லட்டைகள்.
- அரங்கு சார் கட்டுரைகள்.
- செய்து காட்டல்கள்.
- கோடை நாடக எழுத்துருப் பிரதி.
- ஈடிப்பஸ் நாடக எழுத்துருப் பிரதி.
- இராவணேசன் நாடக எழுத்துருப் பிரதி.

**அறிமுகம்:**

விதந்துரைக்கப்பெற்றுள்ள நாடக எழுத்துருக்களில் இடம்பெற்றுள்ள பாத்திரங்களைச் சித்திரிப்பதற்கு உதவக்கூடிய பல்வேறு போலச் செய்தல்களைப் பயில்வதும் அதன் வழியாகப் பாத்திரக் குணாம்சங்களைக் கட்டியெழுப்புதல் தொடர்பிற் கலந்துரையாடுவதுமே இவ்வலகில் எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்:**

- கண்டறிகை.
- குழுமுறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- போலச் செய்தல் பற்றிக் கீழ் வகுப்புக்களில் கற்றதை நினைவுபடுத்தல்.
- பல்வேறு போலச் செயல்களையும் நினைவுபடுத்துதல். அன்றேல் அறிமுகம் செய்தல்.
    - இயற்கை.
    - மனிதர்.
    - வாகனங்கள், இயந்திரங்கள்.

- ஒலிகள்.
- சூழமைவுகள்.

- விதந்துரைக்கப்பெற்றுள்ள நாடக எழுத்துருக்களில் இடம்பெற்றுள்ள பாத்திரங்களுக்குச் சமமான வேறு பாத்திரங்களைப் போலச் செய்ய வழிப்படுத்தவும்.

  உதாரணம்: - நாதஸ்வர வித்துவான்.
  - விதானையார்.
  - அதிகாரம் நிறைந்த அரசியல்வாதி.
- போலச் செய்தலுக்கு உதவியாகப் பாத்திரக் குணாம்சம் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- மாணவரது சித்திரிப்பிற்கும் எழுத்துருவில் உள்ள பாத்திரத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்துக் கலந்துரையாடுதல்.
- போலச் செய்தலுக்கு நால்வகைச் சித்திரிப்புக்கள் உதவும் விதம் பற்றிக் கலந்துரையாடுதல்.

**கணிப்பீடு:**

- "போலச் செய்தல்" என்றால் என்ன?
- போலச் செய்தலின் போது கவனிக்க வேண்டியவை யாவை?
- யாதேனும் ஒரு பாத்திரத்தை போலச் செய்து காட்டுக.
- போலச் செய்தல் குறித்த பரதரின் கருத்து யாது?

**உசாத்துணைகள்:**

- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர். கா. சின்னத்தம்பி,
  பேராசிரியர். சி. மௌனகுரு.
  திரு. க. திலகநாதன்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தேசிய கல்வி நிறுவகம்.
  நாடகமும் அரங்கியலும் - 2010.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **3.0** | **:** | நாடகமும் அரங்கக் கலைகளுக்கும் அடித்தளமாக அமைகின்ற கொள்நெறிகள் நிலைப்பட்ட படைப்பாக்கங்களைக் கட்டியெழுப்புவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **3.2** | **:** | நடிப்பாற்றலை விருத்தி செய்து கொள்வார். |
| **செயற்பாடு** | **3.2.2** | **:** | பாத்திரமொன்று வெவ்வேறு வகிபாகங்களை (Role play) ஏற்கும் என்பதனை அறிந்து கொள்வோம். |
| **பாடவேளை** | | **:** | 04 |

**கற்றற் பேறுகள்:**

- 'வகிபாகம்' என்றால் என்னவென விளங்கியிருப்பார்.
- ஒரு பாத்திரம் பல வகிபாகங்களை வெளிப்படுத்தும் என்பதை அறிந்திருப்பார்.
- சித்திரிப்புக்களின் பங்களிப்புடன் பல்வேறு வகிபாகங்களை இனம் கண்டிருப்பார்.
- வகிபாகங்களை ஏற்றுச் சித்திரிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நூல்கள்.
- அரங்கு சார் கட்டுரைகள்.
- கோடை நாடக எழுத்துரு.

**அறிமுகம்:**

பாத்திரமொன்றின் பல்வேறு வகிபாகங்களையும் அவற்றுக்கே உரித்தான குணாம்சங்களையும் அறிந்து, அவற்றைச் சித்திரிப்பதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்:**

- நூல் உசாவுகை.
- கலந்துரையாடல்.
- வகிபாகச் சித்திரிப்பு.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- வகிபாகச் சித்திரிப்பில் சமயம், சமூகம், பொருளாதாரம் செல்வாக்குச் செலுத்தும் என்பதைக் கலந்துரையாடுங்கள்.
- பாத்திரமொன்று வகிபாகங்களை ஏற்கும் போது தனியாள் மனப்பாங்கு, நடத்தைக் கோலங் களுக்கு ஏற்ப வேறுபடுமென்பதை விளக்குங்கள்.
- பாத்திரமொன்று வகிபாகம் தாங்கும் போது உடல், உளம், குரல் சார்ந்தும் அகம், புறம் சார்ந்தும் வேறுபட்ட வகையில் குணாம்சங்களை வெளிக்காட்டுவதை விவரியுங்கள்.
- பாத்திரமொன்றின் வகிபாகங்களை இனம்கண்டு கூற மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இனம்காணப்பட்ட வகிபாகங்களின் குணாம்சங்களை முன்வைக்கச் செய்யுங்கள்.
- மாணவர்கள் வகிபாகங்களைச் சித்திரிக்குமாறு செய்யுங்கள்.
- சித்திரித்தவற்றை மாணவர்கள் கலந்துரையாடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- 3.2.1 செயற்பாட்டில் போலச் செய்தல் பற்றிப் பார்த்தவற்றை நினைவுபடுத்துங்கள்.
- விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களில் வரும் பாத்திரங்களின் உடல், உளவியல், சமூகக் குணாம்சங்களை விதந்துரைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- விதானையார் எனும் பாத்திரம், மக்கள் முன்னிலையிலும் தம் மேலதிகாரி (பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர்) முன்னிலையிலும் பெறும் வகிபாகத் தன்மை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- விதானையார் எனும் பாத்திரம் தந்தை, தம்பி என்ற நிலையில் உடல், உளம், குரல், சார்ந்தும் அகம், புறம் சார்ந்தும் வேறுபட்ட குணாம்சங்களை வெளிப்படுத்தச் செய்யுங்கள்.
- பாத்திரமொன்றைச் சித்திரிப்பதற்குப் போலச் செய்தல், நினைவாற்றல் என்பன அவசியம் என்பதை வலியுறுத்துங்கள்.
- வகிபாகமேற்பவரின் உடல், உளம், குரல் என்பவற்றிற்கு உரிய பயிற்சிகள் இன்றியமையாதவை என்பதை விளக்குங்கள்.

**கணிப்பீடு:**

- வகிபாகம் என்றால் என்ன?
- பாத்திரமொன்றினால் வகிக்கக்கூடிய பல்வேறு வகிபாகங்களை இனம்கண்டு கூறுக.
- பாத்திரமொன்றின் பல்வேறு வகிபாகங்களைச் சித்திரிக்குக.

**உசாத்துணைகள்:**

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி. - தேசிய கல்வி நிறுவகம்.
  நாடகமும் அரங்கியலும் - 9. 2010.

**தேர்ச்சி 3.0 :** நாடகமும் அரங்கக் கலைகளுக்கும் அடித்தளமாக அமைகின்ற கொள்நெறிகள் நிலைப்பட்ட படைப்பாக்கங்களைக் கட்டியெழுப்புவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** நடிப்பாற்றலை விருத்தி செய்து கொள்வார்.

**செயற்பாடு 3.2.3 :** ஊமச் (Mime) செயற்பாட்டை நிகழ்த்துவோம்.

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள் :**

- 'ஊமம்' என்பது பேசாப் பாவனை நாடகம் என்பதை அறிந்திருப்பார்.
- ஊம நாடகம் சைகைகள், குறியீடுகள், மெய்யசைவுகள் மூலம் வெளிப்படும் என்பதை விளங்கியிருப்பார்.
- உரையாடல் நாடகங்களிலிருந்து ஊம நாடகங்கள் வேறுபடும் விதத்தை முன்வைப்பார்.
- தனி மற்றும் கூட்டுமச் சித்திரிப்பில் ஈடுபடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நூல்கள்.
- காணொளி இறுவெட்டு.
- சொல்லட்டைகள்.
- செய்து காட்டல்கள்.
- கோடை நாடக எழுத்துரு.
- ஈடிப்பஸ் நாடக எழுத்துரு.

**அறிமுகம்:**

ஊமச் சித்திரிப்பு ஒரு செயலாகவும் (Mime Action) ஒரு காட்சியாகவும் (Mime Scene) ஒரு முழுமையான நாடகமாகவும் (Mime Play) அமையுமாற்றை அறிதலும் அது தொடர்பில் பயிற்சி பெறுதலும் இங்கு எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- நூல் உசாவுகை.
- கலந்துரையாடல்.
- செய்முறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- அரங்க வெளியில் ஆற்றுகை ஒன்றை நிகழ்த்துகையில் நடிகரின் உடல், குரல், உணர்ச்சி வெளிப்பாடு என்பன பிரதானம் பெறுகின்றன.
- ஆற்றுகை வடிவங்களாக;
  - உடலை முதன்மைப்படுத்தும் வடிவங்கள் :- பலே, கதகளி, ஊமம், பரதநாட்டியம்.
  - குரலை முதன்மைப்படுத்தும் வடிவங்கள் :- இசை நாடகம், வாசகப்பா.
  - உடலையும் குரலையும் முதன்மைப்படுத்தும் வடிவங்கள் :- கூத்து, நாடகம்.

- குரலைப் பிரதானப்படுத்தாது உடலை முதன்மைப்படுத்தும் வடிவம் :- ஊமம்.

- ஊமம் சார்ந்த நிகழ்வுகள்;
  - ஊமச் செயல்கள்.
  - ஊமக் காட்சிகள்.
  - முழுமையான நாடகம்.

  என்ற வகையில் தனியாகவும் கூட்டாகவும் இடம்பெறும்.
- ஊமச் செயல்கள்:
  - மாலை கட்டுதல்.
  - களை பிடுங்குதல்.
  - அரிவி வெட்டுதல்.
  - உடுப்புக் கழுவுதல்.
- ஊமக் காட்சிகள்:
  - கோயில் திருவிழா.
  - தவில் கச்சேரி.
  - வலைப் பந்தாட்டம்.
- முழுமையான நாடகம்.

  திருமறைக் கலாமன்றத்தினால் நெறியாள்கை செய்யப்பட்ட நாடகங்கள்: புறம், அசோகா, யுத்தத்தின் தொட்டில், தர்சனா, ஒமேகாவும் அல்வாவும்.

  ஊமத்தின் வரலாறு கிரேக்கத்திலிருந்து தோன்றுகின்றது. ஆரம்பத்தில் ஊமம் பேசாமொழியாக இருந்து, ஆதிவாசிகளின் தொடர்புகொள் சாதனமாகியது. பின்னர், அது மகிழ்வளிக்கும் கலையாக வளர்ந்தது. கிரேக்கத்தைப் பொறுத்தவரை ஊமம் என்பது மெய்யசைவுகளைப் பெரிதுபடுத்திக் காட்டப் பயன்பட்டது. கிரேக்கத்தின் பலவிடயங்களை ரோம அரங்கில் காட்டினர். அதாவது, கிரேக்க திறஜெடி (Tragedy), கொமடி (Comedy) என்பதனை வெளிக்காட்ட ரோமர்கள் ஊமத்தை ஓர் ஊடகமாகக் கொண்டனர். ரோம சாம்ராஜ்யத்தின் ஓகஸ்டஸ் (Augustas) என்பவரூடாகவே ஊமம் வெற்றிகரமாக வளர்த்தெடுக்கப்பட்டது என்பர். அடுத்த கட்டத்தில் மத்திய காலத்திற்கு வரும் போது, அவர்கள் தமது சமயக் கருக்களை விளக்கத் திருமறை ஒழுக்கப்பண்பு நாடகங்களில் ஊமத்தைப் பயன்படுத்தினர். மறுமலர்ச்சிக் காலத்தில் (Commedia del Arte) கொமடியா டெல் ஆர்த்தேலில் சரியாக ஊமத்தைச் செயற்படுத்தினர். அது சந்தைகளிலும் வீதிகளிலும் தமது அளிக்கையைச் செய்தது. இத்தகைய மறுமலர்ச்சியூடாகப் பிரான்சிற்கு ஊம நாடகம் சென்றது. நவீன மரபின் 1ஆம் உலகமப் போருக்குப் பின் யக்குஸ் கோப்பா (Tacques Capea) ஊம நாடக முறைமைக்கு அத்திவாரமிட்டார். 2ஆம் உலகம் போருக்குப் பின் மார்சல் மாஸ்யூ (Marcel Marceau) ஊமத்திற்கெனப் புதிய பாத்திரங்களை உருவாக்கினார். சினிமா உலகைப் பொறுத்தவரை

சிறந்த ஊம நடிகனாகச் சார்லி சாப்பிளினைக் கருதலாம். ஆகவே, ஊமத்திற்கென ஒரு வரலாறு செயலாகவும் உத்தியாகவும் வடிவமாகவும் உள்ளது.

- ஊமச் செயற்பாடுகளை மாணவர்கள் தொகுத்துப் பட்டியலிடுதல்.
- ஒவ்வொரு மாணவரும் தாம் தேர்வு செய்த ஊமச் செயற்பாட்டுக்குரிய குணாம்சங்களை நினைவுறுத்துதல்.
- தனியாக / கூட்டாக மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபடுதல்.
- மாணவர்கள் செய்த ஊமச் செயற்பாட்டைக் கலந்துரையாடச் சந்தர்ப்பமளித்தல்.
- இச் செயற்பாட்டில் எந்தவொரு பொருளும் தேவைப்படாது என்பதைக் கலந்துரையாடுதல்.
- ஊமச் செயற்பாடுகளை உடல் அங்கங்களின் அசைவுகளால் வெளிப்படுத்தலாம் என்பதை விளக்குதல்.
- ஊமக் காட்சிகளை மாணவர்கள் இனம்கண்டு கூறுதல்.
- மாணவரைக் குழுக்களாக்கி, இனம்காணப்பட்ட காட்சிகளை வழங்குதல்.
- மாணவர் குழு கலந்துரையாடச் சந்தரப்பமளித்து மாணவர் செயற்பாட்டில் ஈடுபடுதல்.
- செயற்பாட்டைக் கலந்துரையாடச் சந்தர்ப்பமளித்தல்.

  உதாரணம்: வலைப்பந்தாட்டம்.
- பந்தின் அளவு பாரம் பொருள் எனப் பல விடயங்கள் தெரியும் வகையில் நிகழ்த்த வேண்டும். ஏனெனில், பார்ப்போர் நேரடியாகப் பொருளைப் பார்க்க மாட்டார்கள். நடிகரின் செய்கை ஊடாகவே கண்டு கொள்வர் என்பதை வலியுறுத்துதல்.
- உயிருள்ள, உயிரற்ற உருவத்தைக் கையாளுகையில் அதன் தன்மைக்கேற்பக் கையாள்வது பற்றி விளக்குதல்.
- ஊமத்தை நிகழ்த்துவோர், பார்ப்போர் விளங்கிக் கொள்ளும் வகையில் செயல்களை நிகழ்த்துவது பற்றிக் கலந்துரையாடுதல்.
- ஊம நாடகம் பற்றி மாணவர்கள் கலந்துரையாடுதல்.
- மாணவர்கள் தம் கற்பனைக்கேற்ப ஒரு நாடகத்தைத் தயாரித்துச் சித்திரித்தல்.
- நாடகம் பற்றி மாணவர்கள் கலந்துரையாடச் சந்தர்ப்பமளித்தல்.
- உடல், அங்கங்கள், சைகைகள் அசைவுகளுடன் ஒலி, ஒளி, உடை, ஒப்பனை, இசை போன்ற துணைக்கலைகள் இணைதல் பற்றி விளக்குதல்.

**கணிப்பீடு:**

- ஊமம் (Mime) என்றால் என்ன?
- ஊம நாடகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கூறுக.
- பின்வருவனவற்றைத் தனியாக / கூடடுமமாகச் சித்திரிக்குக.
  - ஊமச் செயற்பாடு,
  - ஊமக் காட்சி.
  - ஊம நாடகம்.

**உசாத்துணைகள்:**

- அரங்கு - க. திலகநாதன்
- மெய்ப்பாடு - வெளியீடு, வெறுவெளி அரங்கக் குழு.

**தேர்ச்சி 3.0** : நாடகமும் அரங்கக் கலைகளுக்கும் அடித்தளமாக அமைகின்ற கொள்நெறிகள் நிலைப்பட்ட படைப்பாக்கங்களைக் கட்டியெழுப்புவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : நடிப்பாற்றலை விருத்தி செய்து கொள்வார்.

**செயற்பாடு 3.2.4** :பாகமாடுதல், மறுதலைப்பாகமாடுதல் நுட்பங்களைக் கற்றுக்கொள்வோம்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- நடிகரின் நடிப்பாற்றலை விருத்தி செய்வதற்கான நுட்பங்களில் ஒன்றான மறுதலைப்பாகமாடுதல் பற்றி எடுத்துரைப்பார்.
- தமது கற்பனை ஆற்றலை வெளிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நேராகவும் மறுதலையாகவும் பாகமாடுவார்.
- பாத்திர உணர்ச்சிகைளை வெளிப்படுத்துவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- செயற்பாட்டு அட்டைகள்.
- பாத்திரங்கள் அடங்கிய செயலட்டைகள்.
- இறுவட்டுக்கள் ( இராவணேசன், ஈடிபஸ மன்னன், கோடை).

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்**

- கலந்துரையாடல்.
- செயற்பாட்டு முறை.
- சிந்தனைக்கிளறல்.

**அறிமுகம்**

- பாகமாடுதலின் இன்னொரு வகையான நுட்பம் மறுதலைப்பாகமாடுதல் ஆகும்.
- இது கற்றல் கற்பித்தல் நுட்டபமாகவும் பயன்படுத்தப்படுகின்றது.
- ஏற்கெனவே பாகமாடுதலில் (Role Play) பங்குகொண்ட பாத்திரங்கள் தம்மைப் பற்றிப் பாகமாடுதல் ஆகும்.

- ஆசிரியர் - மாணவர் எனில் ஆசிரியராக நடித்தவர் மாணவராகவும் மாணவராக நடித்தவர் ஆசிரியராகவும் வகிபாகமாடுவார்.

பாடத்திட்டம் தொடர்பான அறிவுறுத்தல்கள்.

- வகிபாகமாடுதல் பற்றி ஏற்கெனவே கற்றது பற்றி நினைவுபடுத்திக் கலந்துரையாடுகங்கள்.
- வகிபாகமாடுதலுடன் தொடர்புடையது மறுதலைப்பாகமாடுதல் ஆகும்.
- ஏற்கெனவே வகிபாகமாடியவர்களை அழைத்துத் தமது பாகங்களை ஆடுமாறு கேளுங்கள்.
- அதுபற்றி விளக்கமளியுங்கள்.
- தமது சாதாரண நிலையில் நின்று அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.

செயலொழுங்கு

- மாணவர்களை இரண்டிரண்டு பேராகச் சேரச் சொல்லுங்கள்.
- தந்தை – மகன்.
- தாய் - மகள்.
- ஆசிரியர் - மாணவர்.
- வங்கி அதிகாரி – வாடிக்கையாளர்.
- வியாபாரி – நுகர்வோர்.
- முதலாளி – தொழிலாளி.
- நெறியாளர் - நடிகர்.
- அதிபர் - ஆசிரியர்.

போன்ற மேலும் பல பாத்திரங்களை வழங்கலாம். அந்தந்தப் பாத்திரங்களைத் தற்போது சித்திரிக்குமாறு கேளுங்கள்.

- அனைவரும் வகிபாகமாடிய பின்பு சோடிக்குள் மாறிப் பாகங்களை நடிக்குமாறு கேளுங்கள்.
- இது மறுதலைப்பாகமாடுதல் எனப்படும்.
- மறுதலைப்பாகமாடுதலின் நோக்கம் ஒருவரின் நிலையைப்பற்றி மற்றவர் அறிந்துகொள்வதாகும், அத்துடன் இரண்டு பாத்திரம் பற்றிய அறிகையுமாகும்.
- இனங்காணப்பட்ட வகிபாகங்களின் இயல்புகளை முன்வைக்குமாறு வழிப்படுத்துங்கள்.

- முன்வைத்த வகிபாகங்கள் பற்றியும் மறுதலைப்பாகமாடுதலின் போது அதன் இயல்பில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் கலந்துரையாடச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இச்செயற்பாடுகளின் போது ஏற்கெனவே செய்த போலச்செய்தல், வகிபாகமாடுதல் போன்ற விடயங்களையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.
- மறுதலைப்பாகமாடுதலின் போது வயது, பால், இனம் என்பன நோக்கப்படமாட்டாது, வெளிப்பாட்டுத்திறனே முக்கியமானதாகும்.
- மறுதலைப்பாகமாடுதலின் வழியாக அறிவு, திறன்கள், பலங்கள் செயலூக்கம், பொறுப்புணர்வு என்பன ஏற்படுகின்றன.
- வகுப்புகளில் மாணவர்கள் தாம் விரும்பியவாறு மறுதலைப்பாகமாடுதலில் ஈடுபடலாம்.
- நிறைவாக ஆசிரியர் தொகுத்து விளக்கலாம்.

**கணிப்பீடு**

- நடிபாகமாடுதலின் நுட்பமாக மறுதலைப்பாகமாடுதல் அமைந்துள்ள முறையைக் கண்டறிக.
- மறுதலைப்பாகமாடுதல் பற்றிய விளக்கத்தை எடுத்துரைக்க.
- செயல்முறை ரீதியாக மறுதலைப் பாகமாடுதலைச் செய்து காட்டுக.
- நடிப்பு நுட்பத்தின் ஒரு பகுதியாக மறுதலைப்பாகமாடுதலின் பணி அல்லது பணிகள் யாவை?

**உசாத்துணைகள்**

Role Play – Practical techniques for improving learning – morry ran ments.

**தேர்ச்சி 4.0** : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.1:** நாடகத்தின் தோற்றத்தையும் அதனோடிணைந்த சமூகப் பின் புலத்தையும் ஆராய்வார்.

**செயற்பாடு 4.1.1 :** சடங்கு தொடர்பான எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வோம்.

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள்:**

- சடங்கு தொடர்பாகப் பல்வேறு அறிஞர்கள் முன்வைத்த கோட்பாடு களை அறிந்திருப்பார்.
- உள்நாட்டுச் சடங்கின் பண்புகளைத் தேடியறிந்திருப்பார்.
- வேறு பண்பாடுகளில் காணப்பெறும் சடங்குகளின் ஆற்றுகை முறையினைத் தேடியறிந்திருப்பார்.
- பல்வேறு பண்பாடுகளிலும் சடங்கு நம்பிக்கை சார்ந்து உருவாகியமையை விளங்கியிருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சடங்கு தொடர்பான காணொளிப் பேழைகள்.
- ஒளிப்படங்கள்.
- தட்டுமுட்டுக்கள்.

**அறிமுகம்:**

நாடகம் தொடர்பான எண்ணக்கருக்களைக் கற்றுக் கொண்டு, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் காணப்பெறும் சடங்குகளையும் அறிந்து கொள்வதே இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்:

- கலந்துரையாடல்.
- தேடியறிதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- மாணவர் தம் சூழலில் ஆற்றப்பெறும் சடங்குகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குத் தூண்டுங்கள்.
- சடங்கு தொடர்பாக அறிஞர்கள் முன்வைத்த கருத்துக்களை மாணவர்கள் அறிய வழிப்படுத்துங்கள்.
  - சடங்கு என்பது கூட ஒரு நடைமுறைதான். ஆனால், அது உழைப்புப் போக்கிலிருந்து வேறுபட்டது. பேராசிரியர் ஜோர்ஜ். தொம்சன்
  - புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பு சடங்காகும். - பக்தவச்சல பாரதி.
  - தன் வாழ்க்கைப் போரில் இயற்கைச் சக்திகளையும், பருவகால மாற்றங்களையும் தன் வயப்படுத்த மனிதன் கையாண்ட சில நடைமுறைகளே சடங்குகளாகின.

- பேராசிரியர் சி. மௌனகுரு.

- சடங்குகள் நம்பிக்கை காரணமாகச் செய்யப்படுபவை.

- பேராசிரியர் கா. சிவத்தம்பி.

இது போன்று வேறுபல அறிஞர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் மாணவர்கள் தேடிப் பெற்றுக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

- மட்டக்களப்பில் ஆற்றப்பெறும் வேடுவச் சடங்கு, மலையகத்தில் ஆற்றப்பெறும் காடேறித் திருவிழா ஆகிய சடங்குகளின் காணொளியின் சில பகுதிகளை, ஒளிப்படங்களை மாணவர்கள் பார்க்க வசதி செய்யுங்கள்.
- சடங்கு ஆற்றப்பெறும் முறையினையும், அதன் பண்புகளையும் மாணவர்களுக்கு விளக்குங்கள்.
  - களம் தயார் செய்தல், அலங்கரிதல்.
  - ஆள்மேற்கொள்ளல், தெய்வமேறி ஆடுதல்.
  - நம்பிக்கை காணப்படுதல்.
  - பாடல், ஆடல், இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுதல்.
  - செய்கைகள்.
  - தட்டுமுட்டுச் சாமான்களின் பயன்பாடு.
  - ஆரம்பம், முரண்பாடு, தீர்மானம் என்ற கட்டொழுங்கு.
- அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துகள், கோட்பாடுகள் இச்சடங்குகளில் பொதிந்திருப்பதை விளக்குங்கள்.
- மேற்படி சடங்குகளில் காணப்பெறும் அடிப்படைப் பண்புகளை மாணவர்கள் இனங்காண வழிப்படுத்துங்கள்.
  - நம்பிக்கை, சடங்கிற்கான சந்தர்ப்பம், கலந்து கொள்வோர், காலம், தொடர்பு கொள்ளல், மீளச் செய்தல், ஐதிகம் ஒன்றிணைதல், ஆரம்பம், முரண்பாடு, தீர்மானம், வேடப்புனைவு, ஆடல், பாடல், பாவனை செய்தல் ஊர்வலம். எடுத்துக்காட்டாக;

**நம்பிக்கை** - வேடுவச் சடங்கில் இறந்த தம் முன்னோர் வந்து ஆசீர்வதிப்பதும், காடேறித் திருவிழாவில் காடேறி வந்து தோட்டத்தைக் காக்கும் என்பதும் நம்பிக்கை.

**சந்தர்ப்பம்** - வேடுவச்சடங்கு குறித்த இனக் குழுமத்தினால் தீர்மானிக்கப்படும் ஒரு காலத்திலும் (ஆண்டுகொரு முறை) காடேறித் திருவிழா, கோவில் திருவிழாவில் ஒரு நாள் விழாவாகவும் இடம்பெறும்.

**கலந்துகொள்வோர்** - வேடுவச் சடங்கில் ஏழு குடிகளைச் சேர்ந்தோரும், ஏனைய பார்வை யாளர்களும் (பக்தர்கள்) கலந்துகொள்ள, காடேறித் திருவிழாவில் ஊரே கலந்து கொள்ளும். இரண்டிலும் பூசாரி, தெய்வமேறி ஆடுவோர், பக்தர்கள் (ஆற்றுவோராகவும், பார்ப்போராகவும்) கலந்து

கொள்வர்.

**ஆரம்பம், முரண்பாடு, தீர்மானம் என்ற கட்டொழுங்கு.**

வேடுவச் சடங்கில் பந்தலிட்டு அலங்கரித்தல், முதலாம் இரண்டாம் நாள் சடங்குகள் ஆரம்பமாகவும், ஏழாம் நாட் சடங்கு நிகழ்வுகள் முரண்பாடு, உச்சநிலையைக் காட்டுவதாகவும் இறுதியாகக் கோவில் வாசலில் நடைபெறும் செயற்பாடுகள் தீர்மானமாகவும் அமையும். அதேபோல, காடேறித் திருவிழாவில் பந்தலிடுதல், காடேறித் தெய்வத் திற்கு ஒருவரைத் தெரிவு செய்தல், சுடலை மண் எடுத்தல் என்பன ஆரம்பமாகவும் கோயிற் திருவிழாவில் ஒருநாள் நடைபெறும் காடேறித் திருவிழாவில் நடைபெறும் செயற்பாடுகள் முரண்பாட்டினை வெளிப்படுத்துவதாகவும் காளி கோவிலில் நடைபெறும் செயற்பாடுகள் தீர்மானமாகவும் அமையும்.

- இதேபோல, ஏனைய பண்புகளும் இச்சடங்கில் காணப்பெறும் முறையினை விளக்குங்கள்.
- வேறுபண்பாடுகளில் காணப்பெறும் சடங்குகளின் ஆற்றுகை முறை, சடங்குப் பண்புகளையும் மாணவர்கள் தேடியறிய வழிப்படுத்துங்கள்.
- சடங்குகள் நம்பிக்கை சார்ந்தே உருவாகியுள்ளமையைப் பல்வேறு பண்பாடுகளிலும் காணப்பெறும் சடங்குகளின் அடியாகத் தேடியறிய வழிப்படுத்துங்கள். உதாரணமாக;

**தைநீராடல்** - பெண்கள் தாம் விரும்பிய கணவரை அடைதல்.

குளிர்த்திச் சடங்கு,

**கழிப்புச் சடங்கு, வெறியாட்டு** - நோய்தீர்த்தல், கொம்பு முறித்தல் - மழைவளம்.

**ரட்டயக்கும** - பெண்களின் மலட்டுத் தன்மை நீங்குதல். கர்ப்பிணிகளைப் பாதுகாத்தல், சுகப் பிரவசம்.

இதுபோன்று பல்வேறு பண்பாடுகளிலும் ஆற்றப்பெறும் சடங்குகளில் காணப்பெறும் நம்பிக்கைகளைத் தேடியறிய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- சடங்கு என்றால் என்ன?
- நீர் வாழும் சமூகத்தில் ஆற்றப்பெறும் சடங்கொன்றின் ஆற்றுகை முறையினைத் தருக.
- பல்வேறு பண்பாடுகளிலும் காணப்பெறும் சடங்குகளையும் அச்சடங்குகளிற்குக் காரணமான நம்பிக்கைகளையும் பட்டியற்படுத்துக.
- சடங்கிற்கு அடிப்படையாக அமைகின்ற பண்புகளை எடுத்துரைக்குக.

**உசாத்துணைகள்:**

- அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.
- பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - கார்த்திகேசு சிவத்தம்பி.

- பண்பாட்டு மானிடவியல் - பக்தவத்சல பாரதி
- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - கலாநிதி. சி. மௌனகுரு.
- நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12. (2009) - தேசிய கல்வி நிறுவகம்.

**தேர்ச்சி** 4.0 : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம்** 4.1 : நாடகத்தின் தோற்றத்தையும் அதனோடிணைந்த சமூகப் பின் புலத்தையும் ஆராய்வார்.

**செயற்பாடு** 4.1.2 : சடங்கின் சமூகவியல், மானுடவியற் பண்புகளை அறிந்து கொள்வோம்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- பல்வேறு பண்பாடுகளிலுமுள்ள சடங்குகளை அறிந்திருப்பார்.
- உள்நாட்டுச் சடங்கின் பண்புகளைத் தேடியறிந்திருப்பார்.
- சமூகவியல். மானுடவியற் பண்புகள் சடங்கில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதை மனதிற் பதித்திருப்பார்.
- சடங்குகள் மனித வாழ்வைப் பண்படுத்தும் என்பதை ஏற்றுக் கொள்வார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சடங்குசார் ஒளிப்பேழைகள்.
- ஒளிப்படங்கள்.

**அறிமுகம்:**

சடங்குகளின் நிகழ்த்துகையையும் அதற்கு ஆதாரமாக உள்ள சமூகவியல், மானுடவியற் பண்புகளையும், சடங்குகளின் தேவைகளையும் அறிந்து கொள்வது இப்பாடப்பரப்பின் ஊடாக எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடுதல்.
- கண்டறிமுறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- செயற்பாடு 4.1.1 இல் கற்ற விடயங்கள் தொடர்பாகச் கலந்துரையாடுவதன் மூலம் சடங்குகள் ஆற்றப் பெறும் முறையினையும், அதன் பண்புகளையும் மீட்டுப் பார்க்கத் தூண்டுங்கள்.
- சடங்கினை ஆற்றுகை செய்யும் சமூகத்தின் சமூகவியல், மானிடவிற் பண்புகள் அச்சடங்கில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதை விளக்குங்கள். அதாவது, அச்சமூகங்களின் நம்பிக்கைகள், வழக்காறுகள், தொழில்முறைகள் போன்றன சடங்கில் செல்வாக்குச் செலுத்தியிருக்கும். உதாரணமாக:
  - வேடுவச் சடங்கு, தேன் எடுத்தல், பூச்சி குத்துதல் போன்ற செயற்பாடுகளையும், அச்சமூகத்தால் பேணப்படும் சாதிப்பிரிப்பு குடிப்பிரிப்பைப் பின்பற்றுவதையும், மூதாதையர்கள் வந்து ஆசீர்வதிப்பதால், இவ்வழிபாட்டின் மூலம் நோய் தீர்க்கும், நம்பிக்கையினைக் கொண்டிருப்பதனையும், ஆலயத்தின் முக்கிய பகுதியில் வில்லு, அம்பு போன்ற சமூகத்தின்

தொழில்சார் பொருள்கள் வழிபடப்படுவதனையும், கைப்பொருளில் ஒன்றாகக் கோடரி பயன்படுத்தப்படுவதனையும் நோக்கலாம்.

- காடேறித் திருவிழாவில் உருவமற்ற கல்வழிபாடு, தேயிலைச் செடி இலையை எரித்த கரியையே ஒப்பனைக்காக பயன்படுத்துதல். உரு குறையும் போது சுடலையில் இருந்து எடுத்து வந்த மண்ணைச் சாப்பிடுவதால் தெய்வ சக்தி கூடும்; காடேறித் தெய்வம் வந்து தோட்டத்தைக் காக்கும் என்ற நம்பிக்கை என்பனவும் காணப்படுகின்றது.

- வேறுபல சடங்குகளிலும் சமூகவியல், மானிடவியற் பண்புகள் செல்வாக்குச் செலுத்தி யிருப்பதைத் தேடியறிய வழிப்படுத்துங்கள்.
- சடங்குகள் மனித வாழ்வைப் பண்படுத்துகின்றது என்ற மனப்பாங்கு மாணவரிடத்திற் பதிய நெறிப்படுத்துங்கள்.
  - வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தும்.
  - செய்பவருக்கு உணர்வுபூர்வமான திருப்தியை அளிக்கும்.
  - சமூகப் பிணைப்பை வலுப்படுத்தும்.
  - பங்கு கொள்வோர் அனைவரையும் ஒன்றுபட வைக்கும்.
  - கருத்து வேறுபாடுகளை மறக்கச் செய்யும்.
  - சமுதாயக் கட்டமைப்பை, கூட்டமைப்பை வலுப்படுத்தி நிலைநிறுத்தும்.
  - சமூகத்தின் கலை, பண்பாடு என்பவற்றைப் பேண உதவும்.
  - மனிதனின் தகுதியை வெளிக்காட்டும்.
- காடேறித் திருவிழா மற்றும் வேடுவர் சடங்கை ஆதாரமாகக் கொண்டு, மேற்குறித்த பண்புகள் ஆராயப்படுதல் வேண்டும்.

**கணிப்பீடு:**

- உமது சூழலில் ஆற்றப்படும் சடங்கொன்றின் ஆற்றுகை முறையினை விவரிக்குக.
- அச்சடங்கு ஆற்றப்பெறும் சமூகத்தின் சமூக, பண்பாட்டு அம்சங்கள், அச்சடங்கில் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் முறைமையினை விளக்குக.
- சடங்கு அச்சமூக ஒழுங்கமைப்பிற்கு எவ்வாறு உதவுகின்றது என்பதை எடுத்துரைக்குக.
- உமது சூழலில் ஆற்றப்பெறும் சடங்கொன்றிற்கும், வேட்டுவச் சடங்கு / காடேறித் திருவிழாவிற்கும் இடையிலான ஆற்றுகை முறை, சடங்குப் பண்புகளை ஒப்பிட்டாராய்க.

**உசாத்துணைகள்:**

- பண்பாட்டு மானிடவியல் - பக்குவத்சல பாரதி.
- அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.

**தேர்ச்சி** 4.0 : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம்** 4.1 : நாடகத்தின் தோற்றத்தையும் அதனோடிணைந்த சமூகப் பின் புலத்தையும் ஆராய்வார்.

**செயற்பாடு** 4.1.3 : சடங்கிற்கும் அரங்கிற்கும் இடையிலான தொடர்பை அறிந்து கொள்வோம்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- சடங்கு என்பதற்கு விளக்கமளிப்பார்.
- அரங்கின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- சடங்கிற்கும் அரங்கிற்கும் இடையிலான தொடர்பை ஆராய்ந்து விளக்கம் அளிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சடங்குப் பண்புடைய நாடக ஒளிப்பேழைகள்.
- நாடகப் பண்புடைய சடங்குகளின் ஒளிப்பேழைகள்.

**அறிமுகம்:**

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்படுகின்ற சடங்குகள் நாடகங்களை இனங்கண்டு அவற்றுக்கிடையிலான தொடர்புகளை அறிந்து கொள்வதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- தேடியறிதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- 4.1.1, 4.1.2 ஆகிய செயற்பாடுகளில் கற்ற பல்வேறு சடங்குகளின் பண்புகளையும், ஆற்றுகை முறைகளையும் மீள நினைவுபடுத்துங்கள்.
- தேர்ச்சிமட்டம் 2.1 இல் கற்ற, அரங்கு தொடர்பான எண்ணக்கருக்களை நினைவில் கொள்ள வழிப்படுத்துங்கள்.

  மேலும்,

  - ஆற்றுவோர், பார்ப்போர், வெளி என்பனவற்றின் இணைப்பு அரங்காகும்.
  - அரங்கு என்பது நாடக நிகழ்ச்சி கட்புலனாக முகிழ்ந்து எழும் இடத்தைக் குறிக்கும்.
  - ஆற்றப்படுவதைப் பார்த்து ரசிப்பதற்கான அழகியல் வெளி அரங்கு.
  - ஆரம்பம், முரண்பாடு, தீர்மானம் என்ற ஒழுங்கு காணப்படும்.
  - பல கலைஞர்களும் பல கலைகளும் ஒன்றினையும் இடம் அரங்காகும்.
- சடங்கு, நாடகம் என்பவற்றின் காட்சித் துண்டங்கள், ஒளிப்படங்களை மாணவர்கள் பார்ப்பதற்கு நெறிப்படுத்துங்கள்.

- அவற்றிடையே காணப்படும் ஒற்றுமைப்பாங்கான விடயங்களை விளக்குங்கள். உதாரணமாக:.
  - ஆற்றுவோர், பார்ப்போர், ஆற்றுகை வெளி ஒன்றிணைதல்.
  - ஆள்மேற்கொள்ளல்.
  - மீள நிகழ்த்துகை.
  - ஆடல், பாடல், ஊமம், பேச்சு / உரையாடல் காணப்படும்.
  - ஊர்வலப் பண்பு.
  - வேட உடை, ஒப்பனை, வேடமுகப் பயன்பாடு.
  - சமூக ஒருமைப்பாடும், சமூகத்தை ஒன்று கூட்டுதலும்.
  - சேர்ந்து கருமமாற்றுதல்.
  - தொடர்பு கொள்ளல்.
- இதுபோன்று வெவ்வேறு பண்பாடுகளிலும் காணப்பெறும் சடங்கு, அரங்கு என்பவற்றிற்கு இடையிலாக தொடர்பைக் கேட்டறிய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- சடங்கிற்கும் அரங்கிற்கும் இடையேயான ஒற்றுமைப் பண்புகளைப் பட்டியற்படுத்துதல்.
- பல்வேறு பண்பாடுகளிலும் ஆற்றப்பெறும் சடங்குகளை இனங்கண்டு அவற்றில் காணப்பெறும் நாடகப்பண்புகளை விளக்குக.
- காடேறித் திருவிழா மற்றும் வேடுவச் சடங்கில் காணப்பெறும் அரங்கியற் பண்புகளைத் தருக.

**உசாத்துணைகள்:**

- அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.
- சிங்களப் பாரம்பரிய அரங்கு - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - கார்த்திகேசு சிவத்தம்பி.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர். கா. சிவத்தம்பி.
  -திருத்திய இரண்டாம் பதிப்பு பேராசிரியர் சி. மௌனகுரு.
  க. திலகநாதன்.

தேர்ச்சி 4.0 : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : நாடகத்தின் தோற்றத்தையும் அதனோடிணைந்த சமூகப் பின் புலத்தையும் ஆராய்வார்.

**செயற்பாடு** 4.1.4 : சடங்கு அரங்காக மாற்றமுறும் விதத்தை ஆராய்ந்தறிவோம்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- சடங்குப் பண்புடைய நாடகங்களை இனங்கண்டு பட்டியற்படுத்தி யிருப்பார்.
- நாடகப் பண்புடைய சடங்குகளை இனங்கண்டு பட்டியற்படுத்தியிருப்பார்.
- சடங்கில் இருந்து நாடகம் உருவான தொடர்ச்சிப் போக்கை ஆராய்ந்து விளக்கம் அளிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நாடகப் பண்படைய சடங்கு.
- சடங்குப் பண்புசார் நாடகங்கள் அடங்கிய ஒளிப்பேழை.
  சடங்குப் பண்புசார் நாடகங்கள் அடங்கிய ஒளிப்படங்கள்.

**அறிமுகம்:**

உலகெங்கிலும் வாழும் மனிதன் தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் செயற்பாட்டின் ஒரு பகுதியாகச் சடங்குகளைச் செய்தான். இச்சடங்குகளில் இருந்தே நாடகம் தோற்றம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- தேடியறிதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- சடங்கு, அரங்கு தொடர்பாக ஏற்கெனவே கற்ற விடயங்களை நினைவுபடுத்துங்கள்.
- ‘‘சடங்கில் இருந்து நாடகம் தோன்றியது’’ என்ற அறிஞர்களின் கருத்துக்களை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
  - புராதன மனிதனுடைய சமயச் சடங்கிலேதான் நாடகத்தின் மூலவேர் உள்ளது.
    - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
  - சமயக் கரணங்கள் நாடக அம்சங்களைக் கொண்டுள்ளன. இதிலிருந்து ‘‘மக்கள் அரங்கு’’ தோன்றியருக்க வேண்டும். - ஜோன் .ஹறீசன்.
  - இந்திய நாடகம் சமயத் தொடர்புடையது. இதற்கான மூலவேர்களை இருக்கு வேதத்தில் காணலாம். - கீத்.
  - வீர வழிபாடுகளே திறஜெடியின் தோற்றத்துக்குக் காரணம் - றிட்ஜவே.

- ஒரு காலம் சடங்காக இருந்த ஒன்று, சமயச் சார்பற்ற நிலையை எய்துகின்ற பொழுது நாடகமாகும். - பேராசிரியர் கா. சிவத்தம்பி.
- இலங்கை நாட்டார் நாடகங்களும் சமயச் சடங்கின் அடியாகத் தோன்றியவை.
  - பேராசிரியர். சரத் சந்திரா
  A. J. குணவர்த்தனா.
- வடக்கு கிழக்கு நாட்டுக் கூத்துக்கள் சமயத் தொடர்புடையன.
  - பேராசிரியர். சி. மௌனகுரு.

• சடங்கில் இருந்து நாடகம் உருவான தொடர்ச்சிப் போக்கை மாணவர்கள் அறிய நெறிப் படுத்துங்கள்.
  - வேட்டையில் அதிக மிருகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வேட்டையாடிய சமூகத்தினால் செய்யப்பட்ட ஆரம்பகாலச் செயற்பாடுகள்.
  - அக்குழுவில் இருந்து ஒரு தலைவன் உருவாகினான்.
  - காலப்போக்கில் அவனே மதகுருவானான்.
  - மதகுருவாகவும் நடிகனாகவும் ஒருவனே இருந்த நிலை மாறி, மதகுருவின் பணியை ஒருவனும், நடிகனின் பணியை இன்னொருவனும் செய்யும் நிலை ஏற்பட்டதும் மதச் சடங்குகளின்றும் நாடகம் பிரியத் தொடங்கியது.

• சடங்கு நாடகமாகும் நிலையை பேராசிரியர் சி. மௌனகுரு 04 முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கிறார்.

1. மதகுருவே தெய்வமாக அபிநயித்து ஆடுகின்ற சமயச் சடங்கு.
2. மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக அபிநயித்து ஆடுகின்ற சமயச் சடங்கு.
3. ஐதிகக் கதைகளை உள்ளடக்கிய சமயச் சடங்கு.
4. நாடக நிகழ்ச்சிகள் தனியாகப் பிரியத் தொடங்கிய சமயச் சடங்கு.

• பல்வேறு பண்பாடுகளிலும் நாடகம் சடங்கிலிருந்தே தோன்றியது. உதாரணமாக;

| | | |
|---|---|---|
| கிரேக்கம் | - | டயோனீசியஸ் விழா |
| மத்திய கால ஐரோப்பா | - | ஈஸ்டர் வழிபாடு |
| ஜப்பான் | - | சம்போசா சடங்கு |
| தமிழகம் | - | களவேள்வி, வெறியாட்டு. |

• பல்வேறு பண்பாடுகளிலும் இவ்வாறான மூலகங்களைத் தேடியறிய வழிப்படுத்துங்கள்.
• இன்னும் நாடகங்கள் சடங்குத் தேவைகளுக்காக மேடையேற்றப்படுவதைத் தேடி அறிய நெறிப்படுத்துங்கள். எடுத்துக் காட்டாக, வடக்கு கிழக்கில் கூத்துக்கள், திரௌபதி நாடகம், கோவலன் கூத்து, நவசந்திச் சடங்குகளில் ஆட்டம், காத்தவராயன் கூத்து.

**கணிப்பீடு:**

• ஈழத்தில் பயில் நிலையில் உள்ள சடங்கொன்றின் ஆற்றுகை முறையினை விவரிக்குக.

- உமது சூழலில் ஆற்றுகை செய்யப்பெறும் சடங்குப் பண்புடைய நாடகங்களைப் பட்டியற்படுத்துக.
- வெவ்வேறு பண்பாடுகளிலும் நாடகத் தோற்றத்திற்குக் காரணமாகவிருந்த சடங்குகளை இனங்கண்டு பட்டியற்படுத்துக.

**உசாத்துணைகள்:**

- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - கார்த்திகேசு சிவத்தம்பி.
- அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.
- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - கலாநிதி. சி. மௌனகுரு.
- சிங்களப் பாரம்பரிய அரங்கு - காரை செ. சுந்தரம்பிள்ளை.

**தேர்ச்சி 4.0** : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வர்

**தேர்ச்சி மட்டம்** 4.1: நாடகத்தின் தோற்றத்தையும் அதனோடிணைந்த சமூகப் பின்புலத்தையும் ஆராய்வர்

**செயற்பாடு** 4.1.5 : சடங்கை நோக்கிய நவீன அரங்கின் தேடல்கள் பற்றி விளங்கிக் கொள்வோம்

**படவேளை** : 2

**தர உள்ளீடுகள்**

- சடங்கும் அரங்கும் தொடர்பான நூல்கள், கட்டுரைகள்
- நவீன அரங்கியலாளர்கள், அரங்கக் கோட்பாடுகள் தொடர்பான நூல்கள், கட்டுரைகள்
- சடங்கு ஆற்றுகை, நவீன ஆற்றுகை தொடர்பான ஒலி, ஒளிப் பேழைகள்

**கற்றற் பேறுகள்**

- சடங்கிற்கும் நாடகத்திற்கும் இரடையிலான தொடர்பினை அறிந்து சடங்கில் காணப்பெறும் அரங்கியல் பண்புகளை இனங்கண்டு கொள்வர்.
- சடங்கியலில் காணப்பெறும் அரங்க மூலங்களை நவீன அரங்கில் பயன்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்து முன்வைப்பர்
- நவீன அரங்க முயற்சிகளில் சடங்கு தொடர்பிற் செலுத்தப்படும் கரிசனைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைத்திருப்பர்

**அறிமுகம்**

- நவீன அரங்கியலாளர்கள் தமது அரங்க அறிக்கை முயற்சிகளுக்கும் சடங்கரங்கை நோக்கிச் செல்கின்றனர் என்பதனை விளங்கிக்கொள்ள வைப்பதே இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.
- சடங்கிற்குரிய அடிப்படையான பண்புகளுடன் நவீன அரங்கைப் படைக்கவேண்டும் என்ற எண்ணப்பாட்டுடன் மேற்கொள்ளப்பெற்றுவரும் முயச்சிகளை ஆராய்ந்தளிப்பது இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் முறைகள்**

- நூல் உசாவுகை

- கலந்துரையாடல் முறை
- காண்பிய ஊடகங்களைப் பயன்படுத்தல்

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- மாணவர்களைக் குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குறோட்டொவ்ஸ்கி, அன்ரனியோ ஆர்த்தே, பீற்றர் புறூக், அகஸ்தாபோல், றிச்சார் செக்னல், க.சிதம்பரநாதன், போன்ற நவீன நாடகவியலாளர்களின் அரங்க ஆற்றுகை முறைமைகள் பற்றிய தகவல்களை திரட்டிக் கொள்வாதற்கு வழிப்படுத்துங்கள்
- நவீன அரங்கவியலாளர்களின் ஆற்றுகை முறைமைகளில் இனங்காணத்தக்க சடங்கரங்க மூலகங்களையும் பட்டியற்படுத்துவதற்கு சந்தர்ப்பமளியுங்கள்
- குறொட்டவொவ்ஸ்கி தனது ஆற்றுகை மூலகங்களை விவிலியப் பாடங்களிலிருந்து பொது வணக்கப் பாடல்களில் இருந்தும் பெற்றுக்கொண்டார் என்பதை தெளிவு படுத்துங்கள்
- ஆன்ரோனியோ ஆர்த்தே தனது அரங்க ஆற்றுகை சமய அனுபவம் போல எல்லோருக்கும் உண்மையை விளக்க வேண்டும் எனும் முறைமையில் ஆற்றுகை செய்தார் என்பதை விளக்கிக் கூறுங்கள்
- பீற்றர் புறூக் தமது அரங்கிற்கான அடிப்படைகளை சடங்களுக்குமான அடிப்படை அமைகின்ற இதிகாசங்களில் இருந்து பெற்றுக்கொண்டார் என்பதை விளக்கிக் கூறுங்கள்.
- அகஸ்தாபோல் பார்ப்போரை சென் முறைப்பானவர்களாக அரங்கில் தொழிற்பட வைக்கவும் அரங்கை சமூகத்தளை, உளவியல் தளை நீக்கத்திற்கான ஒன்றாக வடிவமைக்கவும் சடங்கியல் மூலகங்களையே அடிப்படையாக கொண்டார்ஏ ன்பதை தெளிவு படுத்துங்கள்
- றிச்சார் செக்னர் தனது சூழலியல் அரங்கை ரம்லீலா எனும் சடங்கினை முறையைப் பயன்படுத்தினார் என்பதைன வலியுறுத்துங்கள்
- திரு கலாநிதி.க.சிதம்பரநாதன் சமூகம் சார்ந்த அரங்கியல் சார்ந்த பண்பாட்டு நிலை சார்ந்த ஒடுக்கப்ட்ட உணர்வுகளை மனம் திறந்து வெளிப்படுத்துவற்காதன ஒரு சாதனமாக அரங்கை கட்டமைப்பதற்கு சடங்காற்றுகை முறைமையையே அடிப்படையாக கொண்டார் என்பதனை தெளிவு தெளிவு படுத்திக் கூறுங்கள்
- தெருவெளி அரங்கவியலாளர்கள் சமூகக் குழும அரங்கவியலாளர்கள் பாண்டவர் வனவாசம் சூரன் போர்சடங்கு வேட்டைத்திருவிழா போன்ற சடங்கரங்குகளையும் அடிப்படையாக கெண்டார்கள் எனபதனை விளக்கிக் கூறுங்கள்

**கணிப்பீடு**

- நவீன அரங்க முயற்சிகளில் சடங்கு தெடர்பிற் செலுத்தப்படும் கரிசனைகள் பற்றிய விபரங்களை பகுப்பாய்வு செய்க

**உசாத்துணைகள்**

- அரங்கியல் - பேராசிரியர் சி.மௌனகுரு
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி, போராசிரியர் சி.மௌனகுரு, திரு.க.திலகநாதன்
- அரங்கியலுக்கான ஆற்றுகை -திரு.இரா.யெகநாதன்
- மெயப்பாடு - யாழ் பல்லைக்கழக பொதுவெளி வெளியீடு

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | : | சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | | : | தமிழகத்தில் அரங்கினது வளர்ச்சிப் போக்கையும் அதற்குப் பின்புலமாய் அமைந்த காரணிகளையும் ஆராய்ந்து பார்ப்பார். |
| **செயற்பாடு** | **4.2.1** | : | தமிழ் அரங்கினது சமூக வளர்ச்சிப் படிநிலைகளை அறிந்து கொள்வோம். (கி.பி 1800 இற்கு முன்பும் பின்பும்). |
| **பாடவேளை** | | : | 02 |
| **கற்றற் பேறுகள்** | | : | |

• தமிழ் அரங்கிற்கும் சமூக வளர்ச்சி நிலைகளுக்கும் இடையிலான தொடர்பைக் கண்டறிந்திருப்பார்.

• கரணம் சார்ந்த ஆற்றுகைகளை முன்வைத்திருப்பார்.

• சோழர் காலத் தமிழக அரங்கின் நிலையை எடுத்துரைத்திருப்பார்.

• ஐரோப்பியர் வருகை அரங்கில் ஏற்படுத்திய மாற்றங்களை அறிந் திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- அட்டைப் படங்கள்.
- வீடியோ.
- ஓடியோ.
- கணினி.

**அறிமுகம்:**

கி.பி 1800 இற்கு முன்பிருந்து தற்போது வரையில் தமிழக அரங்கிற்குப் பின்புலமாய் அமைந்த சமூக வளர்ச்சிப் போக்கைப் புரிந்து கொள்வதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- கண்டறிதல்.
- நூல் உசாவல்.
- விரிவுரை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- பார்த்து ரசித்த அன்றேல் அறிந்த நாடகங்களைக் கூறுமாறு கோருங்கள். அவர்கள் குறிப்பிடும் நாடகங்களைப் பட்டியற்படுத்துங்கள். பின்னர் படைப்புக்கள் அனைத்தும் ஏதோ ஓர் சமூகப் பின்புலத்தின் அடிப்படையில் படைக்கப்படுகின்றன என்பதை எடுத்துக் கூறுங்கள். அரசியல், மதம், மொழி, நம்பிக்கை போன்ற காரணிகள் இவற்றில் தாக்கம் செலுத்துவதைக் கூறுங்கள். பின்னர், மாணவர்களது எண்ணிக்கைக்கு ஏற்பக் குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் அவர்களால் கூறப்பட்ட நாடகங்கள் அடங்கிய பட்டியல்களைப் பகிர்ந்தளியுங்கள். அந்நாடகங்கள் படைக்கப்பட்ட பண்பாட்டுப் பின்புலத்தினைப் பட்டியற்படுத்துமாறு வழிப் படுத்துங்கள். மாணவர்கள் வெளிப்படுத்திய பின்னணி பற்றிக் கலந்துரையாடுவதன் மூலம்,

ஒவ்வொரு நாடகங்களும் பண்பாட்டுப் பின்புலத்தைப் அடிப்படையாகக் கொண்டு படைக்கப் படுகின்றன என்பதை வலியுறுத்துங்கள். அவ்வாறே தமிழ் நாடக வரலாறும் அதன் வரலாற்றுப் பண்பாட்டுப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டு வந்திருக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

- தமிழக நாடக வளர்ச்சி இருகால கட்டமாக வகுத்து நோக்கப்படுகின்றது என்பதை எடுத்துக் கூறுங்கள்.
  - கி. பி 1800க்கு முற்பட்ட கால அரங்க வளர்ச்சி.
  - கி. பி 1800க்கு பிற்பட்ட கால அரங்க வளர்ச்சி.
- சங்க இலக்கியம் கூறுகின்ற குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்கின்ற திணைக்கோட்பாட்டு நிலையில் வேட்டுவ நிலையில் நின்று, மந்தை மேய்க்கும் நிலைக்குமாறி, நிலையான இடத்திலிருந்து விவசாயம் செய்யும் நிலைக்குச் சென்று, கடல் கடந்து வாணிபம் செய்யும் நிலைக்குத் தமிழ்ச் சமூகம் வளர்ந்த வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியினை சுருக்கமாக எடுத்துக் கூறுங்கள்.
  - குழுக் குழுவான ஆட்சி.
  - குழுக்களுக்கிடையிலான சண்டை.
  - குறுநில மன்னர்களின் தோற்றம்.
  - பெருநில மன்னர்களின் தோற்றம்.
  - அரசுக்கும் மக்களுக்குமான தொடர்பு.
- மேற்குறிப்பிட்ட சமூக வளர்ச்சியானது சமூகத்தின் உள்ளார்ந்த வளர்ச்சியினால் ஏற்பட்டது என்பதையும் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள். இவ்வளர்ச்சி நிலையின் வெளிப்பாடாகவே அரங்க அளிக்கைகளும் முனைப்புப் பெற்றுள்ளன. கரணம் சார்ந்த ஆற்றுகையில் களவேள்வி, வெறியாட்டு, தைநீராடல், வாடாவள்ளி எனத் தொடங்கப்பட்டு அரசனது புகழையும் வீரத்தையும் புகழ்ந்து பாடுவதற்குக் கோடியர், வைரியர், கண்ணுளர், அகவுணர், பொருநர், பாணர், பாடினி, விறலியர் எனக் கூத்தர் குழாத்தினர் உருவாக்கம் பெற்று, நிலப்பிரபுக்களையும், அரசர்களையும் மகிழ்விப்பதற்காகப் பாலியல்சார்ந்த களிப்பூட்டற் பண்புடைய அளிக்கை முறைகள் தோன்றலாயின. இந் நிலையானது தொழில்முறை சார்ந்த ஆற்றுகை முறையினை அறிமுகப்படுத்தியது. இதன் உச்சக்கட்ட வளர்ச்சியாக அமைவதே மாதவியின் அளிக்கை முறையாகும்.
- தமிழ்நாட்டில் பின்னர் ஏற்பட்ட வெளிச் சமூகத்தினரின் ஆதிக்கம் சிதைவை ஏற்படுத்தியது. இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்ட களப்பிலரது வருகை, சமண பௌத்த மதத்தினது செல்வாக்கினையும், வணிகக் குழுக்களின் மேலாண்மையினையும் அறநெறிக் கொள்கையினையும் வலியுறுத்தலாயின. இந்நிலை அரங்க வளர்ச்சியிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. நாடகம் ஒழுக்கச் சீர்கேட்டைப் போதிக்கின்றது என்ற கருத்து நிலை முதன்மைப்படுத்தப்பட்டது. ஆடல் நங்கையான மாதவியினது மகள் மணிமேகலை, சமண

மதத்திற்கு மாறியது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- இதனைத் தொடர்ந்து பாண்டிய பல்லவர் என்கின்ற அந்நியர்கள் தமிழ் நாட்டை ஆளத் தொடங்கினர். தமிழ் நாட்டின் வடபகுதியைப் பல்லவரும், தென்பகுதியைப் பாண்டியர்களும் ஆளலாயினர். இவர்களுக்கிடையிலான ஓயாத போர், சமூக பொருளாதார நிலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவ்வாறிருந்தும் சைவ, வைணவ மதங்களின் வளர்ச்சி அரங்க நிகழ்த்துகைகளிலும் வெளிப்பட்டது. பக்தி இலக்கியங்கள் முதன்மை பெற்றமை, வட மொழிவளர்ச்சி, கலைகளுக்கு அரச ஆதரவு கிடைத்தமை போன்றன இக்கால சாதக நிலைமைக்குக் காரணமாகியது. இறைவனை ஆடற்கலைஞன், நடராசர் எனக் குறிப்பிட்டு இறைவனோடு இணைத்து பார்க்கின்ற நிலை ஆடற் கலைக்கு ஏற்பட்டது. பரத்தையர் என ஆடல் நங்கையை அழைப்பதற்கு மாறாகப் பதியிலார், கோயில் பினாப்பெண்டுகள் என அழைக்கும் வழக்கம் காணப்பட்டது.
- பல்லவர் காலத்து ஆட்சியினைத் தொடர்ந்து சோழர்கள் தமிழ் நாட்டை ஆளத் தொடங்கினர். பலதுறைகளிலும் உச்சம் அமைந்த பொற்காலமாக இக்காலம் விளங்கியது.
  - அரசியல் பூசல் அற்ற நிலை.
  - பொருளாதார வளர்ச்சி.
  - சமூக அரசியல் உறவு.
  - இலக்கியங்களில் வளர்ச்சி.
  - கலைகளின் வளர்ச்சிக்கு அரச ஆதரவு.
  - கலைஞர்கள் மதிக்கப்படல்.
  - வடமொழி இலக்கிய வளர்ச்சி.
- மேற்குறிப்பிட்ட சாதக நிலைமைகள், அரங்கியல் வளர்ச்சியிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதனை மாணவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். குறிப்பாக, வடமொழிக் கலப்பானது ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, சாந்திக் கூத்து, சாக்கைக் கூத்து என நால்வகைக் கூத்துக்களை அறிமுகப்படுத்திருந்தமையும், இராஜராஜ நாடகம், திருமூலர் நாடகம், பூம்புலியூர் நாடகம் எனப் பல நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டு இருந்தமையும், ஆடற் கலைஞர்களுக்கு நிலம், பொன் பரிசாக வழங்கப்பட்டமையும், நானாவித நாடகசாலை அமைக்கப்பட்டிருந்தமை யும் அரங்க வளர்ச்சியினையே வெளிப்படுத்தி நிற்கின்றன. கலைஞர்களுக்குக் கௌரவம் அளிக்கப்பட்டதுடன் சதுரி, தனிக் கூத்திகள், தளிக் சேரிப்பெண்டுகள் என ஆடல் நங்கையினை அழைக்கும் வழக்கமும் காணப்பட்டது.
- அரச பெண்டுகள் மட்டுமன்றி அரசர்களும் ஆடல் நிகழ்த்துகையில் ஈடுபட்டிருந்தனர். ஆடற் கலைஞனைத் திருவளவன் எனவும் நாடகமையன், நிருத்தப்பேரயன் என்ற பட்டங்கள் வழங்கப்பட்டமையும் இக்கால அளிக்கை கலைஞர்களுக்கு இருந்த உயர் இடத்தினைச் சுட்டுகின்றது.

சோழரது ஆட்சியினைத் தொடர்ந்து, விஜய நகர மன்னர்களது ஆட்சி முதன்மைப் படுத்தப்படுகின்றது.

- சாதகமற்ற அரசியல் நிலை.
- ஓயாத போர்.
- அரசு ஆதிக்க நிலைப்பாடு.
- அரசியல், சமூக உறவின் வீழ்ச்சி.
- பொருளாதார வீழ்ச்சி.
- கலைஞர்கள் மதிக்கப்படாமை.
- பிறமத பின்பற்றல்.

போன்ற சாதகமற்ற சூழல் அரங்கியல் வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாயிற்று. இதுவரை காலமும் முன்னணியிலிருந்த உயர்நிலைக் கலைவடிவங்கள் பின்நிலைக்குச் சென்று, அடிநிலை மக்களிடையே நிகழ்த்தப்பட்ட பள்ளு, குறவஞ்சி, நொண்டி போன்ற கலைவடிவங்களைக் கதை கூறும் முறையில் எடுத்துச் செல்லும் போக்கு உருவானது. இவற்றை விட ஒருவரது, வரலாற்றினை எடுத்துக்கூறும் கீர்த்தனை நாடக மரபும் தோன்றியது. இராம நாடக கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்பவற்றை இவற்றுக்கு உதாரணம் எனலாம்.

19ஆம் நுற்றாண்டுக் காலப்பகுதியில் தமிழ் நாட்டில் ஐரோப்பியர் வருகை சமூக, பொருளாதார அரசியல் ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

- புதிய நிர்வாக முறை.
- கிறிஸ்தவ மதத்தின் ஆதிக்கம்.
- ஆங்கில மொழி முதன்மைப்படுத்தப்படல்.
- மத்தியதர வர்க்கத்தின் தோற்றம்.
- அச்சு இயந்திரங்களின் வருகை.
- புதிய ரசனை முறை.
- மிசனறிக் கல்வி முறை.

மேற்குறிப்பிடப்பட்ட புதிய மாற்றங்கள் அரங்கியல் வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக, விக்டோரியா காலத்து அளிக்கை முறைகள் உள்வாங்கப்படும் நிலை தோன்றியது. இதுவரை ஆடலையும், பாடலையும் அளிக்கை முறையாகக் கொண்ட மரபு மாற்றதுற்று, சொல்லாடல் சார்ந்த மரபு முதன்மை பெற்றது. விலாசம், சபா, டிறாமாமோடி, வாசகப்பா போன்ற புதிய அரங்க வடிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் பார்ஸி நாடகக் மழ்பணிகளால் அறிமுகப்படுத்தப்பெற்ற பார்ஸி நாடக மரபும் உருவாக்கம் பெற்றது. மத்திதர வர்க்கத்தினரது ரசனையினைத் திருப்திப்படுத்த அளிக்கை முறையில் புதிய பண்புகள் உள்வாங்கப் பெற்றன.

பாலாமணி அம்மையார், சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தமுதலியார்,



மாற்றமானது ஐரோப்பியர்களின் வருகையினால் ஏற்பட்டனதாகும். படச்சட்ட அரங்கு,

நேரச்சுருக்கம், அளிக்கையில் செம்மை, பகட்டான காட்சி சோடனைகள், பெண்கள் பங்குபற்றல், உரையாடல் பாங்கு போன்றன இவற்றுள் சிலவாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்தமையினாற் தொடர்ந்து பிரதேச தனித்துவங்கள் சமூக தனித்துவங்கள் முதன்மைப்படுத்தப்பெற்றமையினால் அவற்றை வெளிப்படுத்தும் சமூக சீர்திருத்த நாடகங்கள் உருவாகும் நிலை எழுந்தது. அதனைத் தொடர்ந்து, புதிய பரிசோதனை அரங்க முயற்சிகளும், நவீன உத்திமுறைகளை இணைத்துக் கொண்டு அளிக்கை செய்யும் போக்கும் எழுந்தன.

**முதன்மைப் பதங்கள்**

- போக்கு.
- பரிசோதனை.
- அணுகுமுறை.
- மாற்றம்.
- ரசனை.
- மத்தியதர வர்க்கம்.

**கணிப்பீடு:**

- தமிழகத்தில் 1800க்கு முற்பட்ட காலப்பகுதியின் அரங்க வளர்ச்சியினைக் குறிப்பிடுக.
- தமிழகத்தில் 1800க்கு பிற்பட்ட காலப்பகுதியின் அரங்க வளர்ச்சியினைக் குறிப்பிடுக.
- தமிழகத்தின் ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஏற்பட்ட அரங்க வளர்ச்சியின் மாற்றங்களைப் பட்டியற்படுத்துக.

**உசாத்துணைகள்:**

- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - கார்த்திகேசு சிவத்தம்பி.
(தமிழாக்கம் அம்மன்கிளி முருகதாஸ்)
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி
பேராசிரியர். சி. மௌனகுரு.
திரு. க. திலகநாதன்.
- பண்டைத் தமிழ் நாடகங்கள் - பா. ரகுவரன்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 4.0 | : | சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | 4.2 | : | தமிழகத்தில் அரங்கினது வளர்ச்சிப் போக்கையும் அதற்குப் பின்புலமாய் அமைந்த காரணிகளையும் ஆராய்ந்து பார்ப்பார். |
| **செயற்பாடு** | 4.2.2 | : | தமிழ் அரங்க ஆற்றுகையின் நோக்கத்தினை அறிவோம். (கி.பி 1800க்கு முன்பும் பின்பும்) |
| **பாடவேளை** | | : | 02 |

**கற்றற் பேறுகள்:**

- கி.பி 1800க்கு முன்னிருந்து சமகாலம் வரை அரங்க ஆற்றுகை நிகழ்த்தப் பெற்றமைக்கான காரணங்களை ஒப்பிட்டு நோக்குவார்.
- கி.பி 1800க்கு முன்னிருந்து சமகாலம் வரை தமிழக அரங்க ஆற்றுகையில் ஏற்பட்ட மாற்றங்களை ஒப்பிட்டு அறிந்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- அட்டைப் படங்கள்.
- வீடியோ.
- கணினி.

**அறிமுகம்:**

கி. பி 1800 இற்கு முன்பிருந்து தற்காலம் வரையிலான தமிழக அரங்க ஆற்றுகை வளர்ந்து வந்துள்ள முறைமையினையும், அவ்வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்த விடயங்களையும் அறிந்து கொள்வதே இவ்வலகின் எதிர்பார்ப்பாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- நூல் உசாவுகை.
- கண்டறிகை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- சமூக வரலாற்றுப் பின்புலத்தின் அடிப்படையிலேயே அரங்க வளர்ச்சிப் போக்கு முனைப்புறுகின்றது என்பதனை மீள ஞாபகப்படுத்திக் கற்பித்தலை தொடரலாம். மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள். காலகட்டத்தின் அடிப்படையில் உருவாக்கம் பெற்ற அரங்க வடிவங்களின் பட்டியல்களை வெவ்வேறு இடங்களில் காட்சிப்படுத்துங்கள்.

  குழு -1 - கி. பி. 600 முற்பட்ட காலம்

  குழு -2 - கி. பி. 600 - 1300.

  குழு -3 - கி. பி. 1300 - 1800.

  குழு -4 - கி. பி. 1800 - 1947.

  குழு -5 - கி. பி. 1947 இற்குப் பிற்பட்ட காலம்.
- மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு குழுவும் தமது குழுவில் காட்சிப்படுத்தப்பெற்ற அரங்க வடிவங்கள்

நிகழ்த்தப்பட்டமைக்கான காரணங்களைத் தமது குழுக் கலந்துரையாடல்கள் மூலம் பட்டியற் படுத்த வழிப்படுத்துங்கள். ஆற்றுகைக்கான நோக்கங்களை அறிந்து கொள்வதற்காகத் தமிழக அரங்க வரலாற்றுப் புத்தகங்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், கையேடுகள் போன்றவற்றை வழங்கி வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் பட்டியற்படுத்திய ஆற்றுகைக்கான நோக்கங்களை எடுத்துக்கூற வழிப்படுத்துங்கள். பின்னர், ஒவ்வொரு குழுக்களும் முன்வைத்ததன் அடிப்படையில் காலகட்ட ரீதியாக நிகழ்த்துகைகளை ஒழுங்குபடுத்த வழிப்படுத்துங்கள்.

**வீரயுக காலம்**

- களவேள்வி, வெறியாட்டு, தைநீராடல், வாடாவள்ளி என்பன முக்கிய சடங் காற்றுகைகளாக மேற்கிளம்பியமை.
- போர்க்கள வீரம் நிகழ்த்தப் பெற்றமை.
- யுத்த களத்தில் வேள்வி செய்தால் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை.
- பேய் மகளீரை மகிழ்விக்க சடங்கு நிகழ்த்தியமை.
- பேய்களே நோயைப் பரப்புகின்றது. அவற்றிலிருந்து விடுபட்டு நோய் குணமடையவும்.
- மகிழ்விற்காகவும்.
- தலைவன், தலைவிக்கு இடையிலான ஊடல் தணிக்கவும்.
- காதலில் வெற்றி கிடைக்கவும்.
- வீரம் மேன்மைப்படுத்தப்படவும்.
- குறி கேட்கவும்.
- குடும்ப உறவை மேம்படுத்தவும்.
- நல்ல கணவன் கிடைக்கவும்.
- திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் நடைபெறவும்.
- காதல் தேவை நிறைவு பெறவும்.

இச் சடங் காற்றுகைகள் நடைபெற்றமை குறித்து விவரித்தல்.

**நிலப்பிரபுத்துவ காலம்**

- பொழுது போக்கிற்காகவும்.
- நிலப் பிரபுக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காகவும்.
- பரத்தையர்கள் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும்.
- மகிழ்வுக்காகவும்.
- தமது குலமரபுத் தொழிலை முன்னெடுப்பதற்காகவும்.
- தமது சாதி அமைப்பை முனைப்புறுத்துவதற்காகவும்.
- பிரபுக்களைத் தம்பக்கம் கவரப் பண்ணுவதற்காகவும்.
- அவர்களது சிறப்பு, வீரத்தினை புகழ்வதற்காகவும்.

- பரிசு, பட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும்.
- தொழில்முறைப் போட்டியினை வெளிப்படுத்துவதற்காகவும்.

இக் காலத்தில் அரங்காற்றுகைகள் நிகழ்த்தப்பெற்றன.

**வணிகயுக காலம்**

வணிகயுக காலத்தில் வேத்தியல் சார்ந்த மரபிற்குள் மாதவியின் 11 ஆடல்களான கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல், துடி, குடை, குடம், மரக்கால், பாவை, பேடி, கடையம் என்பன உள்ளடங்கப்படுகின்றது. பொதுவியல் மரபிற்குள் வேட்டுவ வரி, குன்றக் குரவை, ஆச்சியார் குரவை என்பன உள்ளடக்கப்படுகின்றன.

- வேந்தர்களை மகிழ்விப்பதற்காகவும்.
- தமது நாட்டியத் திறமையை வெளிப்படுத்தவும்.
- வருமானத்தைப் பெற்றுக்கொள்ளவும்.
- தமது குலமரபின் அடையாளத்தை மேம்படுத்தவும்.
- புராண இதிகாசக் கதைகளின் உள்ளடக்கத்தை எடுத்துக்கூறவும்.
- கடவுளர்களது பெருமைகளை எடுத்துக்கூறவும்.
- அளிக்கையின் தரத்தினை மேம்படுத்தவும்.
- விதிமுறைகளைப் பின்பற்றிக் கலைகளை வளர்த்தெடுக்கவும்.

ஆற்றுகைகள் நிகழ்த்தப் பெற்றன.

**கோயிற் பண்பாட்டுக் காலம்**

இக்காலப் பகுதியில் வேத்தியல், பொதுவியல் சார்ந்தும், கோயில் மரபு சார்ந்தும் அரங்க நிகழ்த்துகைகள் நிகழ்த்தப்பட்டன.

- மதப் பிரச்சாரங்களை முன்னெடுக்கவும்.
- மக்களது வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தவும்.
- இறைபக்தியினைத் தூண்டவும்.
- சமூகக் கட்டமைப்பினைப் பேணவும்.
- பண்பாட்டினை வளர்த்தெடுக்கவும்.
- கலைகளை வளர்த்தெடுக்கவும்.
- மன்னர்களை மகிழ்விக்கவும்.
- மன்னர்களது வரலாற்றைக் கூறவும்.
- விஷேட தினங்களைச் சிறப்பிக்கவும்.
- தனிப்பட்டவர்களது வரலாற்றினைக் கூறவும்.
- புராண, இதிகாச தத்துவக் கதைகளை மக்களுக்குப் போதிக்கவும்.
- வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளவும்.
- பட்டம், பரிசுகளைப் பெறுவதற்காகவும்.

- ஆலய பூசைகளைச் சிறப்பிக்கவும்.
- சமூக உளவினைப் பேணவும்.
- நடன மாந்தர்களின் திறமைகளை மேம்படுத்தவும்.
- தலைவர், தலைவியின் புகழ்பாடவும்.
- தலைவன் தலைவியினைச் சாந்தப்படுத்தவும்.
- பிரச்சினைகளுக்குச் தீர்வுகாணவும்.
- ஆலய வரலாறுகளை எடுத்துக் கூறவும்.
- அடியார்களினதும், தனிப்பட்டவர்களினதும் வரலாறுகளை எடுத்துக்கூறவும்.
- வடமொழிக் கல்வியினை மேம்படுத்தவும்.

ஆற்றுகைகள் நிகழ்த்தப் பெற்றன.

**விஜயநகர நாயக்கர் காலம்**

இக்காலப் பகுதியில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, கீர்த்தனை போன்ற அளிக்கை முறைகள் முதன்மை பெறலாயின.

- அடிநிலை மக்களின் வாழ்க்கை முறையினை வெளிக்காட்டல்.
- அடிநிலைச் சமூகத்தை முதன்மைப்படுத்தல்.
- சாதி முறையினை வலுவிழக்கச் செய்தல்.
- குடும்ப உறவு முறைகளை வெளிக்காட்டல்.
- தனிமனித, அரச வாழ்க்கை வரலாற்றினை எடுத்துக்கூறல்.
- இறை பக்தியினை வெளிப்படுத்தல்.
- மனிதனின் போலித்தனங்களை அம்பலப்படுத்தல்.

போன்றவை இக்கால அரங்கிற்குப் பின்புலமாய் இருந்தன.

**ஐரோப்பியர் காலம்**

- வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளல்.
- தமது தேவையினை நிறைவேற்றல்.
- ஐரோப்பியரின் விக்டோரியா அரங்கப் பண்பினை வெளிக்காட்டல்.
- மத்தியதர வர்க்கத்தினது ரசனையை மேம்படுத்தல்.
- ஐரோப்பியரது ஆதிக்கத்தினை முதன்மைப்படுத்தல்.
- கிறிஸ்தவ மதத்தினை நிலைநிறுத்தல்.
- தொழில்சார்ந்த கலைஞர்களை முனைப்புறுத்தல்.
- ஆடற் கலைஞர்களது உடல், உள, குரல் வளத்தினை மேம்படுத்தல்.
- புதிய இசைமெட்டுக்களை அறிமுகப்படுத்தல்.
- தொழில்முறை நாடக மரபினை மேம்படுத்தல்.
- சமூக ஒழுக்கச் சீர்கேடுகளைப் போக்கல்.
- உள்ளூர்க் கதைகள், பண்டைய புராணக் கதைகளை மக்களிடம் எடுத்துக்கூறல்.

- புதிய ரசனையினை ஏற்படுத்தல்.

என்ற இக்கால ஆற்றுகைக்கான தேவைப்பாடுகளாக இருந்தன.

**1947க்குப் பிற்பட்ட காலம்**

- விடுதலை உணர்வினை முதன்மைப்படுத்தல்.
- பிரதேச தனித்துவங்களை வெளிப்படுத்தல்.
- கட்சியினது கொள்கைகளை மக்களிடையே பரப்பல்.
- நாடகத்தைப் பிரசார ஆயுதமாகப் பயன்படுத்தல்.
- சமூக சீர்திருத்தக் கருவியாக நாடகத்தைப் பயன்படுத்தல்.
- ஆரிய, திராவிட தனித்துவங்களை வெளிப்படுத்தல்.
- மூடநம்பிக்கையை எதிர்த்தல்
- அரசியற் கருத்துக்களை வெளிப்படுத்தல்.
- கலை உணர்வினை மேம்படுத்தல்.
- தனிமனிதர்களை, அரசியலை, உயர்நிலை சமூகத்தினரை விமர்சித்தல்.
- சரித்திர வரலாற்று விடயங்களைக் கூறல்.
- தமிழரின் தனித்துவ அடையாளங்களை மேம்படுத்தல்.
- சமூக அமைப்பின் மாற்றங்களை வலியுறுத்தல்.
- புதிய நாடக வடிவங்களைச் சமூகத் தேவைக்காக அறிமுகப்படுத்தல்.
- மக்களை விழிப்புணர்வூட்டல்.
- பாரம்பரிய கலை மரபின் தனித்துவத்தைப் பேணல்.
- அடிநிலை மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறல்.

போன்றவற்றை நோக்காகக் கொண்டு இக்கால ஆற்றுகைகள் நிகழ்த்தப்பெற்றன.

**முதன்மைப் பதங்கள்**

- ஒப்பீடு
- கரணம்.
- நிலப்பிரபுத்துவம்.
- வேள்வி.

**கணிப்பீடு:**

- கி. பி 1800க்கு முற்பட்ட காலத்தில் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டமைக்கான காரணங்களைக் கூறுக.
- கி. பி 1800க்கு பிற்பட்ட காலத்தில் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டமைக்கான காரணங்களைக் கூறுக.
- 1800க்கு முன்பும் பின்பும் தமிழக அரங்க நிகழ்த்துகையில் ஏற்பட்ட மாற்றங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுக.

**உசாத்துணைகள்:**


- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - கார்த்திகேசு சிவத்தம்பி.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி
  பேராசிரியர் சி. மௌனகுரு.
  திரு. க. திலகநாதன்.
- பண்டைத் தமிழர் நாடகங்கள் - பா. இரகுவரன்.

**தேர்ச்சி** **4.0** : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம்** **4.2** : தமிழகத்தில் அரங்கினது வளர்ச்சிப் போக்கையும் அதற்கு பின்புலமாய் அமைந்த காரணிகளையும் ஆராய்ந்து பார்ப்பார்.

**செயற்பாடு** **4.2.3** : தமிழகத்தின் அரங்க ஆற்றுகை முறைமைகளை அறிந்து கொள்வோம். (1800க்கு முன்பும், பின்பும்)

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- 1800க்கு முன்பும் பின்பும் தமிழக வரலாற்றில் இடம்பெறும் ஆற்றுகை முறை பற்றி விளங்கியிருப்பார்.
- 1800க்கு முன்பும் பின்பும் தமிழக வரலாற்றில் இடம்பெறும் ஆற்றுகை முறைமைகளைப் பட்டியற்படுத்தியிருப்பார்.
- 1800க்கு முன்பும் பின்பும் தமிழக வரலாற்றில் இடம்பெற்ற ஆற்றுகை முறைமைகளின் இயல்புகளை முன்வைத்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- அட்டைப் படங்கள்.
- வீடியோ.
- கணினி.
- நூல்கள்.
- சஞ்சிகைகள்.

**அறிமுகம்:**

தமிழக வரலாற்றில் அரங்க ஆற்றுகை முறையில் காலத்துக் காலம் ஏற்பட்டு வந்த மாற்றங்களை ஏற்பதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவது ஆகும்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்:**

- நூல் உசாவல்.
- கலந்துரையாடல்.
- கண்டறிகை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- முன்னைய செயற்பாடுகளில் கற்ற 1800க்கு முன்பும் பின்பும் சமூக வரலாற்றுக்கும் அரங்கிற்கும் இடையலான தொடர்புகளையும், ஆற்றுகை நோக்கங்களையும் மீட்டுக் கொண்டு இப்பாடத்தை ஆரம்பியுங்கள்.
- காலத்துக்குக் காலம் அரங்க முறைமைகள், ஆற்றுகை முறைமைகள் மாற்றம் கண்டு வந்துள்ளன. உதாரணம்: கிரேக்கம், ரோம்.
- ஆற்றுகை முறைமைகளே ஆற்றுகையின் பெறுமதியினை எடுத்துக் காட்டுவன.

- ஆற்றுகை முறைமைகளை வைத்துக்கொண்டு தான் அரங்க வரலாறு எழுதப்பட்டுள்ளது.
- ஆற்றுகை முறைமைகள் ஒவ்வொரு காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளது.
- சங்க காலத்தில் களவேள்வி, தைநீரால் வேலன் வெறியாடல் போன்றன நிகழ்த்தப்பட்டன.
- இவற்றில் களவேள்வி புறநிலை சார்ந்த சடங்காகவும், வெறியாட்டு, தைநீராடல், வாடாவள்ளி என்பன அகநிலை சார்ந்த சடங்குகளாகவும் ஆற்றுகை செய்யப்பட்டன. வட்டவடிவமான இடத்தில் பார்ப்போர் சுற்றிவர அமர்ந்திருந்து நிகழ்த்துகையினைப் பார்க்கும் வகையில் வெறியாட்டு இடம் பெற்றது. பிரதான நடிகராக வேலனும் நோய்வாய்ப்பட்ட பெண்ணும், பாடகர்களாக ஏனைய பெண்களும் இணைந்து கொண்டனர். களவேள்வி போர்க்களத்திலும் தைநீராடல் ஊரினையே அரங்காகக் கொண்டும் ஆடப்பட்டன.

இதேபோன்று, கூத்தர் குழுவினர்களான கோடியர், வைரியர், பொருநர், அகவுணர், விறலியர், பானர் போன்றோரது ஆற்றுகைகள் ஊரின் பொது இடங்களிலும் அரச சபையிலும் தெருக்களிலும் நிகழ்த்தப்பெற்றன. இந் நிகழ்த்துகையில் ஆடலும். பாடலுமே முதன்மை பெற்றிருந்தது. நிகழ்வுகளில் பெண்களும் இணைந்திருந்தனர். பாடினி, விறலியர் என்போரும் இவற்றினுள் அடங்குவர். அரசனது சிறப்புக்கள் ஆற்றல்கள் தொகுத்து எடுத்துரைக்கப்பட்டன. கோடு, முடிவு, வலியர், கிளை, தடாரி, பதளை, ஆகுளி, தட்டை, தும்பு, பாண்டில், எல்லரி போன்ற இசைக்கருவிகளின் பயன்பாடும் முதன்மை பெற்றிருந்தன.

சடங்குசார் நாடகங்களின் அடுத்தபடியாக, நிலப்பிரபுத்துவ காலத்தில் கலித்தொகை, தொல்காப்பியம், பரிபாடல், திருக்குறள் போன்ற நூல்களினூடாக, இக்கால ஆற்றுகை முறை எடுத்துரைக்கப்படுகின்றன. முல்லை நிலத்திலிருந்து மருத நிலத்திற்குச் சமூகம் மாறிய நிலையும் அதன் ஆற்றுகை முறையும் இதன் மூலம் கூறப்படுகின்றது.

கலித்தொகையின் அமைப்பு நாடக ஆற்றுகைக்குரியது. தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்பன இதற்குச் சான்றாகும். சொல்லாடல்கள், துள்ளல் ஓசையை உடைய ஆடல் பாடல்கள் போன்றன ஆற்றுகையில் முதன்மை பெற்றன. தொழில்முறைப் போட்டியின் நிமித்தம் அங்க அசைவுகள், பாவ வெளிப்பாடு, அபிநய வெளிப்பாடு, மெய்ப்பாடுகள் என்பன முனைப்புறும் போக்கு மேலெழுந்தது. கூனி, குறளன், கிழப் பிராமணன், பாணன், பரத்தை, தோழி போன்ற பாத்திரங்கள் முதன்மை பெற்றிருந்தன.

தொல்காப்பியத்தின் பிரதான ஆற்றுகை இடமாகப் 'பண்ணை' குறிப்பிடப்படுகின்றது. பெண்கள் விளையாடுகின்ற இடமாகவும் சுவையான ஆடல் நிகழ்வுகளை வழங்கும் இடமாகவும் இது கருதப்படுகின்றது. காமச்சுவையினை வெளிப்படுத்தும் ஆற்றுகை முறையே இங்கு முதன்மைப்படுத்தப் பெற்றிருந்தது.

திருக்குறள், 'ஆடுகளம்' என ஆற்றுகை இடத்தினைக் குறிப்பிடுகின்றது. ஆற்றுகை முறையின் தரத்தினை உவமை வாயிலாக எடுத்துரைக்கின்றது.

வீரயுக காலத்தில், வேட்டை ஆடி வாழ்ந்து, நிலப் பிரபுத்துவ காலத்தில் நிலையாக

இருந்து வேளாண்மை செய்து வாழ்ந்த மனிதன், வணிகயுக காலத்தில் கடல் கடந்து வியாபாரம் செய்யத் தொடங்கினான். இந்நிலை அவனது வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியதோடு அரங்க ஆற்றுகை முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

சிலப்பதிகார காலத்தில் வேத்தியல், பொதுவியல் என்ற இரு மரபுகளை அடியொற்றி ஆற்றுகை முன்வைக்கப்படலாயிற்று. கரண நிலைப்பட்ட ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டு வரி ஒரு புறமாகவும் மாதவிக்கூடாக வளர்க்கப்பட்ட ஆற்றுகை முறைகள் இன்னொரு புறமாகவும் வளரலாயிற்று. இவற்றில் ஒன்று அடிநிலை மக்களுக்கான ஆற்றுகை முறையாகவும் மற்றயது அரசர்கள், நிலப்பிரபுக்களுக்கான ஆற்றுகை முறையாகவும் வளர்ச்சி பெற்றது.

மாதவி பிரபுக்களையும் அரசர்களையும் மகிழ்விப்பதற்காக நடனம் ஆடினாள். 11 ஆடல் களும் உயரிய அரங்க ஆற்றுகையாக அளிக்கை செய்யப்பட்டன. சாஸ்திரிய விதி முறைகளுக்கு அமைய, அரங்கு அமைக்கப்படல், அளிக்கை செய்யும் முறை என்பன பிரமாண்டானதாக அமைந்திருந்தன. ஏழு கோல் அகலம் எட்டுக் கோல் நீளம், ஒரு கோல் உயரம் கொண்டன வாகவும் அரங்கு அமைக்கப்பட்டிருந்தது வன்பால், மென்பால், இடைப்பால் நிலங்களில் இடைப்பால் நிலமே தேர்வு செய்யப்பட்டிருந்தது. அரங்கில் மாந்தர்கள் உட்புகவும் வெளியே செல்லவும் இரண்டு வாயில்கள் இருந்தன. இவற்றோடு கூத்தர்கள் மறைந்து செல்லுமிடமும், அவர்கள் தங்கியிருக்க குடிசைப் பள்ளியும், எதிரே மன்னர் சுற்றத்தோடிருக்க அவையரங்கமும் ஏனைய பொதுமக்கள் தங்கியருக்கக் குடிசைப் பள்ளியும் அமைக்கப் பட்டிருந்தன.

அரங்கில் திரைகள், எண்ணை விளக்குகளின் பயன்பாடுகள் போன்றனவும் முதன்மை பெற்றிருந்தன. இவற்றைவிட இசை ஆசிரியன், குழலாசிரியன், தண்ணுமை ஆசிரியன், யாழ் ஆசிரியன், புலவன், ஆடல் ஆசிரியன், தோரிய மடந்தையர் எனத் தேர்ச்சி பெற்ற கலைஞர்களின் பங்களிப்பும், விதிமுறைகளுக்கு அமைய ஆடல் அளிக்கை செய்யப் பட்டமையும் ஆற்றுமையின் தரத்தை வெளிப்படுத்தி நின்றன.

பொதுவியல் குறிப்பிடும் கரண நிலைப்பட்ட நிகழ்த்துகைகள் மலைக்குன்றுகளிலும், பொது இடங்களிலும், எரு மன்றங்களிலும், சமதள அரங்கிலும் நிகழ்த்தப்பட்டன. வேட உடை, ஒப்பனை, கைப்பொருள்களின் பயன்பாடு, ஆடல், பாடல், எடுத்துரைப்பு, ஓதுதல், ஊம அசைவுகள், மடை கொடுத்தல், பலியிடல் போன்றன ஆற்றுகை முறையில் முக்கியம் பெற்றன.

600 க்குப், பின்னரான ஆற்றுகை மரபானது அரங்கை இன்னொரு தளத்திற்கு இட்டு செல்வதாக அமைந்திருந்தது. சமூக, பொருளாதார, அரசியல் மாற்றமே இவற்றுக்கு அடிப்படைக் காரணம் எனலாம். சைவ வைணவத்தின் எழுச்சி, பக்தி இயக்கம் போன்றன ஆற்றுகை முறையில் தாக்கம் செலுத்தியது. இறைவனையும் அரசனையும் முனைப்புறுத்து வதாகக் கோயில் சார்ந்த ஆட்ட மரபுகளும், அரசசபை சார்ந்த ஆட்ட மரபுகளும் அமைந்தன.

கோயில்களிலும், அரசசபைகளிலும் ஆற்றுகைகள் இடம்பெற்றன.

தனியொரு பெண் பல பாத்திரங்களைச் சித்திரிக்கும் மரபும், பலர் சேர்ந்து வெவ்வேறு பாத்திரங்களைச் சித்திரிக்கும் மரபும் ஆற்றுகையில் முதன்மை பெற்றன. நானாவித நாடகசாலைகள் ஆற்றுகைக்கான இடமாக அமைக்கப்பட்டிருந்தன. ஆரியக் கூத்து, சாந்திக் கூத்து, தமிழ்க் கூத்து, சாக்கை கூத்து என பலப் வகைக் கூத்துக்கள் நிகழ்த்தப் பெற்றன. வேட உடை, ஒப்பனை, நிகழ்த்துகை கட்டமைப்பு, வடமொழிக் கதைகள், 108 காரணங்களின் பயன்பாடு, அபிநயங்கள், மெய்ப்பாடுகள் ஆற்றுகையில் முக்கிய இடம் வகித்தன. பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் நிகழ்த்துகைக் இணைந்து கொண்டமை இக்கால அரங்க வளர்ச்சியினையே சுட்டுகின்றது.

1300க்குப் பின் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் மாற்றம் அரங்க அளிக்கை முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அடிநிலை மக்களின் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்கள் வட்டவடிவமான அரங்கில் ஆற்றுகை செய்யப் பெற்றன. பண்ணைக்காரன், பள்ளன் பள்ளி, குறவஞ்சி, நொண்டி, செட்டி போன்ற பாத்திரங்களின் சித்திரிப்பு முதன்மை பெற்றது. கதை கூறும் பாங்கே ஆற்றுகையில் முக்கியம் வகித்தது. இதேபோன்று இசையை முதன்மையாகக் கொண்ட கீர்த்தனை நாடகங்களும் நிகழ்த்தப் பெற்றன. இறைவனதும், தனிப்பட்டவர்களினதும் புகழை இசைப்பாடலாகப் பாடினர். மக்கள் கூடும் பொது இடங்களே ஆற்றுகைக்கான வெளியாக அமைந்தது.

தமிழ் நாட்டில் ஐரோப்பியரது வருகை அரசியல், பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கை முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆங்கிலக் கல்வியும், கிறிஸ்தவ மதமும் இவற்றில் முக்கிய பங்கு வகித்தன. மத்தியதர வர்க்கத்தினது தோற்றமும், வசான முறையில் ஏற்பட்ட மாற்றமும் புதிய அரங்க வடிவங்களின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

மேற்கத்தேய நவீன உத்தி முறைகள், நாடகப்பாணிகள் என்பனவற்றை உள்வாங்கி ஆற்றுகை செய்யும் முறை உருவானது. மண்டபங்கள், கொட்டகைகள், படச்சட்ட அரங்க நிகழ்த்துகை என ஆற்றுகை வெளி அமைந்திருந்தது. அரங்கப் பொருள்கள் சீனறிகள், காட்சிச் சோடனைகள், ஒளி, பகட்டான வேட உடை, ஒப்பனை, நடிப்பு, சொல்லாடல் போன்றன ஆற்றுகையில் முக்கிய இடம் வகித்தன.

மேற்கத்தேயப் பாணியிலான அளிக்கை முறை முன்னெடுக்கப்பட்டதைப் போன்று, மரபு சார்ந்த ஆற்றுகை முறையும் முன்னெடுக்கப்பட்டன. இதில் தெருக்கூத்து முக்கிய ஆற்றுகையாக அமைந்தது. 40 சதுரஅடி கொண்ட நீள்சதுரமான அரங்கில் இக்கூத்து நிகழ்த்தப்பெற்றது. ஆடல், பாடல், வேட உடை, ஒப்பனை போன்றன இக்கூத்தின் தனித்துவம் எனலாம்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததனைத் தொடர்ந்து, மாநிலங்களுக்கிடையிலான தனித்துவம், ஆரிய திராவிட மனப்பாங்கு, பிராமணிய, பொதுவுடமைக் கொள்கைகள் போன்றன அரங்க

அளிக்கை முறைமைகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தின. படச்சட்ட அரங்கு, தெருவெளி அரங்கு போன்றவற்றில் ஆற்றுகை நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இயல்பு நெறிசார்ந்த ஆற்றுகைச் சாதனங்களையும், மோடியுற்ற ஆற்றுகைச் சாதனங்களையும் பயன்படுத்தும் போக்கு முன்னெடுக்கப்பட்டது, நவீன அரங்க நிகழ்த்துகையில் புதிய உத்தி முறைகளின் ஆதிக்கம் இடம்பெற்றது. புதிய பரிசோதனை அரங்க நிகழ்த்துகைகளும் முக்கியம் பெறலாயின.

**முதன்மைப் பதங்கள்**

- வரலாறு.
- முறைமை.
- ஆற்றுகை.
- புறநிலை.
- அகநிலை.

**கணிப்பீடு:**

- 1800க்கு முற்பட்ட ஆற்றுகையின் முறைமையினை எடுத்துக் கூறுக.
- 1800க்கு பிற்பட்ட ஆற்றுகையின் முறைமையினை எடுத்துக் கூறுக.
- 1800க்கு முன்பும் பின்புமான ஆற்றுகை வெளிகளைப் பட்டியற்படுத்திக் காட்டுக.

**உசாத்துணைகள்:**

- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி<br>பேராசிரியர் சி. மௌனகுரு.<br>திரு. க. திலகநாதன்.
- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - கார்த்திகேசு சிவத்தம்பி.
- பண்டைத் தமிழரின் நாடகங்கள் - பா. இரகுவரன்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 4.0 | : | சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | 4.2 | : | தமிழகத்தில் அரங்கினது வளர்ச்சிப் போக்கையும் அதற்குப் பின்புலமாய் அமைந்த காரணிகளையும் ஆராய்ந்து பார்ப்பார். |
| **செயற்பாடு** | 4.2.4 | : | தமிழக அரங்கினது ஆற்றுகை குறிகளின் தாக்கவன்மையை அறிந்து கொள்வோம். |
| **பாடவேளை** | | : | 02 |

**கற்றற் பேறுகள்:**

- தமிழக அரங்கினது ஆற்றுகை குறிகளின் தாக்கவன்மை குறித்துக்கருத்துரைப்பார்.
- தமிழக அரங்கினது தாக்கவன்மைக் குறிகளைப் பட்டியற்படுத்துவார்.

**அறிமுகம்:**

தமிழக அரங்க வரலாற்றில் ஆற்றுகையின் போது பார்ப்போரிடையே தாக்கவன்மையினை ஏற்படுத்திய சாதனங்கள் அன்றேல் ஆற்றுகை குறிகளின் தன்மை பற்றி அறிந்து கொள்வதே இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- மாணவர்களிடையே ஆற்றுகைக் காணொளி ஒன்றினைப் பார்ப்பதற்கு வழிப்படுத்தி, அதில் வெளிப்படும் ஆற்றுகைக் குறிகளைப் பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்.
- நடிகர், அரங்கு, வேட உடை, ஒப்பனை, ஆடல், பாடல், இசை, இசைக்கருவிகள், ஒலி, ஒளி கைப்பொருள்கள், காட்சி, மேடைப்பொருள்கள் என்றவாறாக பட்டியற்படுத்தப்பெற்ற ஆற்றுகைக் குறிகள் தமிழக அரங்க ஆற்றுகைகளில் செல்வாக்கு செலுத்திய முறையினை விரிவுரையின் ஊடாக முன்வையுங்கள்.
- வீரயுக காலத்தில் அளிக்கை நிகழ்வுகள் கரணம் சார்ந்தும் கரணத்திலிருந்து விடுபட்ட வகையிலும் முன்னெடுக்கப்படலாயிற்று. கரணம் சார்ந்தவற்றில் களவேள்வி, வெறியாட்டு, தைநீராடல், வாடா வள்ளி போன்றன அடங்கும். இந்நிகழ்த்துகைகளில் வேட உடை, சொற்கள், நடிப்பு, நடனம், பொருள்கள், ஊர்வலம், இசை போன்றன ஆற்றுகைக் குறிகளாக அமைந்திருந்தன. இதில், நோய்வாய்ப்பட்ட பெண், வேலன், தாய், அரசன், போர்வீரர்கள் எனப் பல பாத்திரங்கள் சித்திரிக்கப்பட்டு ஆடல், பாடல், உரையாடல், ஊமம், ஆற்றுகை வெளி போன்றன இவற்றுள் முக்கியப்படுத்தப் பெற்றன.
- இக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட விழாக்களைப் பொறுத்தவகையில்; அவை மக்களின் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காகச் செய்யப்பட்டன. இவ்விழாக்களின் போது நடனங்கள், உடல் வன்மைப் போட்டிகள் என்பன நிகழ்த்தப்பட்டன. இத்திருவிழா, பங்குனி விழா, ஓண விழா, உள்ளி விழா, சுடர் விழா, பூந்தொடை விழா, வைனயவிழா என்பன இவற்றுட் சிலவாகும். இவ்விழாக்களின் போது குரவை, துணங்கை போன்ற ஆட்ட முறைகள் நிகழ்த்தப் பட்டன.

- இக்காலக் கூத்தர் குழாங்கள் ஆடுவோராகவும், பாடுவோராகவும் இருந்தனர். கோடு, முழவு, பதலை, அருணி, வயிர் எனப்படும் வாத்தியங்களை வைத்திருந்தனர். விறலி மெய்ப்பாடுகளைக் காட்ட வல்லவள்.
- தொல்காப்பியம், கலித்தொகை போன்றன நாடகம் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளது. தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம்பூரணார் ''சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்தில் வந்தனவாகத் தொகுத்துக் கூறல்'' என்றார். கலியின் உறுப்புக்களாக, தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்பன குறிப்பிடுகின்றன. இவை, இக்கால ஆற்றுகைக் குறிகளாகவே அமைந்திருந்தன.
- வணிகவுடமைச் சமூகத்தில் ஆற்றுகை பற்றிய தகவல்களைச் சிலப்பதிகாரம் எனும் நூலினூடாக அறிய முடிகின்றது. வேத்தியல் மரபில், மாதவி ஆடிய 11 வகை ஆடல்களும், பொதுவியலில் வேட்டுவவரி, குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை போன்ற நிகழ்த்துகைகளும் முதன்மை பெற்றன. ஒரு பெண்ணே பல பாத்திரங்களைச் சித்திரிக்கின்ற மரபு உருவாகியது. மாதவி கடவுளர்களது கதைகளைச் சித்திரிக்கும் வகையில் முருகன், சிவன், விஷ்ணு, திருமகள், காமன், இந்திரன் போன்ற பாத்திரங்களைச் சித்திரித்தாள். இதில் அரங்க வெளி, வேட உடை, ஒப்பனை, ஆடல்,பாடல் போன்ற ஆற்றுகை குறிகள் நிகழ்த்துகையில் தாக்கம் செலுத்தின. சாஸ்திரிய விதி முறைகளை அனுசரித்து ஆடல் இடம் பெற்றமைக்கு, மாதவியின் ஆற்றுகைக்குக் உதவிய கலைஞர்கள் சான்றாகும். இதுபோன்று மாதவியன் நின்றாடியதும், கிடந்தாடியதுமான ஆடல்முறையினையும் குறிப்பிடலாம்.
- பொதுவியலில், ஒரு கன்னிப் பெண்ணுக்குக் கொற்றவையைப் போல அலங்கரித்தல், பாத்திரம் உட்புகுதல், வாத்தியங்கள் முழங்கல், வேட்டை ஆடுதல் போன்று நடனமாடுதல், பொருள்கள் படைத்தல், காட்சிப் பின்னணி போன்றன ஆற்றுகை குறிகளாக அமைந்தன.
- கோயில் பண்பாட்டுக் காலத்தில்; ஆற்றுகைகள் பக்தி சார்ந்தும் அரசர்கள் வரலாறுகளை, அவர்களின் சிறப்புக்களை வெளிப்படுத்துபவையாகவும், கலைகளையும் கலைஞர்களையும் மதிக்கின்ற போக்கு முனைப்புறுத்தப்பட்டமையினால் நுணுக்கமானவையாகவும் விளங்கின.
- வடமொழி இலக்கியச் செல்வாக்கும் சாஸ்திரிய விதிமுறைகளைப் பின்பற்றி ஆடல்களை நிகழ்த்த வேண்டிய சூழலும் உருவாகின்றது. ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, சாந்திக் கூத்து, மெய்க் கூத்து, அபிநயக் கூத்து போன்ற நுணுக்கமான ஆட்டமரபு வெளிக்காட்டப் பட்டமையினால் நடிப்பு முதன்மை பெறும் போக்கு காணப்பட்டது.
- ஆடல் நங்கையர்களுக்கும், ஆடற் கலைஞர்களுக்கும் அரச கௌரவிப்பும், பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டமை, நிகழ்த்துகையின் போட்டித்தன்மையினை அதிகரிக்கலாயிற்று. இந்நிலை, ஆற்றுகைக் குறிகளின் தாக்கவன்மையை மேம்படுத்திற்று. உதாரணம்: நடன மங்கையர் இருவரின் மெய்ப்பாடுகளைக் காட்டும் சித்தன்னவாசல் ஓவியத்தின் மூலம், சித்திரிப்பு முறை முதன்மைப்படுத்தப் படுவதையும் அதில் காண்பிய சாதனங்கள் முனைப்புறும்

நிலையினையும் காணமுடிகின்றது.

- விஜயநகர நாயக்கர் காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றம், அடிநிலை மக்களது அரங்க வடிவங்களை முதன்மை நிலைக்குக் கொண்டு வந்தது. பள்ளு, நொண்டி, குறவஞ்சி போன்ற ஆற்றுகைகள் கதைகூறும் பாங்கில் ஆற்றப்படும் நிலையினை, அறிய முடிகின்றது. இங்கு, நடிப்பு முறையின் நுணுக்கம், முதன்மை குறைந்து ஏனைய ஆற்றுகைக் குறிகளின் தாக்கவன்மையே மேலோங்கிற்று. குறிப்பாக ஆடல், பாடல், வேட உடை, ஒப்பனை, இசை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- தமிழகத்தில், ஐரோப்பியரது வருகை புதிய அரங்க வடிவங்களை அறிமுகப்படுத்திற்று. இதுவரை காலமும் ஆற்றுகையில் ஆடல், பாடல் முதன்மை பெற்றிருந்த நிலைக்கு மாறாக, சொல்லாடல் ஆற்றுகை குறிகளில் முதன்மைப்படுத்தப்பெற்றது. சொல்லாடலை முதன்மைப் படுத்தி நாடகங்கள் நிகழ்த்தப்பட்டமையால் ஆற்றுகை வெளி, வேட உடை, ஒப்பனை, நடிப்பு, மேடைப் பொருள்கள் போன்றன. அதனை மையமாகக் கொண்டே பயன்படுத்தப் பெற்றன. பாடச்சட்ட அரங்கில் இவற்றின் தாக்கவன்மை அழகியல் நிலையினையும் ஆற்றுகையின் கனதியான தன்மையினையும் வலுப்படுத்தியது. தெருக்கூத்து நிகழ்த்துகையில் ஆடல், பாடல், வேட உடை, ஒப்பனை போன்றன ஆற்றுகையின் தன்மையினை முனைப் புறுத்தின.
- இந்தியா சுதந்திரம் அடைந்தமையினைத் தொடர்ந்து, பிரதேச தனித்துவங்களும் இனவாத தனித்துவங்களும் முதன்மை பெற்றன. நவீன சிந்தனைகள் பலவற்றுக்குத் தமிழ்நாடு முகம் கொடுத்தமையினால் அவற்றின் வெளிப்பாடாக ஆற்றுகைகள் அமையலாயின. சமூக சீர்திருத்த நாடகங்கள், புதிய பரிசோதனை முயற்சிகளுக்குட்பட்ட நாடகங்கள் போன்றன முதன்மை பெறலாயின. இவற்றில் காட்சிகள், மேடை அசைவுகள், ஒலிவிளைவுகள், ஒளி, மேடைத் தளங்கள், மெய்யசைவுகள், உரையாடல்கள் போன்றன ஆற்றுகைக் குறிகளாக வெளிப்பட்டு இருப்பதனை அறிய முடிகின்றது.

**முதன்மைப் பதங்கள்**

- பரிசோதனை முயற்சி
- நிகழ்த்துகை.
- ஆற்றுகை குறிகள்.
- மெய்யசைவு.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- காணொளி.
- ஒளிப்படங்கள்.
- கோயில் அரங்க மரபு -திரு. க. திலகநாதன்.
- சஞ்சிகைகள்.

**கணிப்பீடு:**

- தமிழக அரங்க வரலாற்றில் கி.பி 600 இற்கு முற்பட்டகால நிகழ்த்துகைகளின் ஆற்றுகை குறிகளின் தாக்கவன்மையை எடுத்துக்கூறுக.
- கி.பி 600இற்குப் பிற்பட்ட காலப்பகுதியின் தாக்கவன்மைக் குறிகளைப் பட்டியற்படுத்திக் காட்டுக.

**உசாத்துணைகள்:**

- பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - கார்த்திகேசு கா. சிவத்தம்பி
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி
  - பேராசிரியர் சி. மௌனகுரு

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 4.0 | : | சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | 4.2 | : | தமிழகத்தில் அரங்கினது வளர்ச்சிப் போக்கையும் அதற்குப் பின்புலமாய் அமைந்த காரணிகளையும் ஆராய்ந்து பார்ப்பார். |
| **செயற்பாடு** | 4.2.5 | : | தமிழக அரங்க வரலாற்றில் கி.பி 1800க்கு முன்பும் பின்பும் கலைஞர்களுக்குரிய தளம் பற்றிக் கற்றறிவோம். |
| **பாடவேளை** | | : | 02 |

**கற்றற் பேறுகள்:**

- தமிழக வரலாற்றில் இடம்பெற்ற கலைஞர்களைப் பட்டியற்படுத்துவார்.
- கலைஞர்களின் ஆற்றுகை மரபுகளைச் குறித்துரைப்பார்.
- தமிழக அரங்க வரலாற்றில் கலைஞர்கள் பெற்ற இடத்தினை எடுத்துரைப்பார்.

**அறிமுகம்:**

தமிழக அரங்க வரலாற்றில் கி.பி 1800க்கு முன்பும் பின்பும் ஆற்றுகைகளை நிகழ்த்திய கலைஞர்களுக்கு வழங்கப்பெற்ற முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்வதே இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- நூல் உசாவுகை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- சடங்கரங்க மரபில், அரச சபைகளிலும் தெருக்களிலும், போர்க்களங்களிலும் கலைஞர்கள் ஆற்றுகை நிகழ்த்தியுள்ளனர். கோடியர், வயரியர், கண்ணுளர், அகவுணர், பொருணர், புலவ, பானர், பாடினி, விறலியர் போன்றோர் ஆற்றுகை கலைஞர்களாவர். இவர்களுள்

  கோடியர் - கோடு, முழவு.

  வயிரியர் - முழவு, வயிர்.

  பாணர் - யாழ்.

  பொருணர் - இளை, முரசம்.

  போன்ற வாத்தியங்களை இசைத்து ஆற்றுகை செய்தனர். விறலி, பாடினி போன்றோர் பாடி ஆடினர். மேலும், குரவை, துணங்கை போன்ற ஆட்ட நிகழ்த்துகைகளை ஆண்களும், பெண்களும் இணைந்து நிகழ்த்தினர்.

கலித்தொகை காலத்தில் பெண்கள் பண்ணை என்கின்ற இடத்தில் ஆடினர். சிலப்பதிகார காலத்தில் அடிநிலை மக்கள் தம் கலைகளை ஆடல் முறையில் நிகழ்த்திக் காட்டினர். இவர்கள்

- வேடுவர்
- ஆயர் (மாதவி, ஐயை)

- குறவர்

என்போராவர். இத்திருவிழாவில், மாதவி 11 ஆடல்களை ஆடினனள். சிறந்த வகையில் ஆடல்களை மேற்கொண்டவர் தலைக்கோலிப் பட்டம் பெற்றனர். மாதவி தனியே பல ஆட்ட முறைகளையும் ஆடினாள். இவளின் ஆடலுக்குப் பல கலைஞர்கள் உதவினர். அவர்கள்:

- இசை ஆசிரியன்.
- குழலாசிரியர்.
- தண்ணுமையாசிரியன்.
- புலவன்.
- ஆடலாசிரியன்.
- யாழ் ஆசிரியன்.
- தோரிய மடந்தையர்.

- மாதவி உயர்குடியில் பிறந்த, சாஸ்திரிய ரீதியாக நடனத்தைக் கற்ற ஒருத்தியாகக் காணப்படுகிறாள். ஆட்டத்திற்கென உரிய அரங்கிலேயே அவள் ஆடினாள்.
- கோயிற் பண்பாட்டுக் காலத்தில் நடனமாடுகின்ற கலைஞர் மரபு தொடங்குகின்றது. அரச சபைகளிலும், கோயிலிலும் கலைஞர்கள் நடனமாடினார். பதியிலார், கோயில் பிணாப் பெண்டுகள், மாணிக்கத்தார், சதுரிமாணிக்கம் எனப்பல கலைஞர்கள் ஈடுபட்டனர். கலைஞர்கள் பெரிதும் மதிக்கப்பட்டனர். மகேந்திரவர்மன் பல நாடகங்களை எழுதினான். அவை, மத்த விலாசப் பிரகசனம், பகவர் அர்சுகியம் என்பனவாகும். மேலும், நாடகங்கள், கூத்துக்களை ஆண்களும் ஆடினர்.
- பேரரசு வீழ்ச்சியடைய, நாடகமாடியோர் வாழ்வு இழிநிலைக்குள்ளானது. அவர்கள் வேறு தொழில் தேடிச் சென்றனர். விஜயநகர காலத்தில், தேவதாசிகள் நாடகங்களை நிகழ்த்துவோராக இருந்தனர். பள்ளு, குறவஞ்சி, நொண்டி போன்ற நாடகங்களை நிகழ்த்தினர்.
- ஆடல் மரபுகளை அளித்தோர் போல, முழுமையான நாடகத்தை நிகழ்த்தும் தெருக்கூத்துக் கலைஞர்கள் உருவாகினர். கிராமப்புறக் கலைஞர்களாக இவர்கள் காணப்பட்டனர். ஆடல், பாடல், நடிப்பு என்பனவற்றில் சிறந்து விளங்கினார். தமக்கெனத் தனியான அரங்கு அமைத்தனர். பொழுதுபோக்கிற்காகவும், தொழில் முறையினை முன்னெடுப்பதற்காகவும் அரங்க நிகழ்த்து கையினை முன்னெடுத்தனர். தெருக்கூத்து நிகழ்த்துகையானது வடக்கத்திப் பாணி, தெற்கத்திப் பாணி, தஞ்சாவூர்ப் பாணி என வேறுபட்டிருந்தது. ஆடல், பாடல், அவைக்காற்று முறைகளில் இவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை அறிய முடியும். தெருக்கூத்தினை ஆண்களே ஆடினர். தங்களைப் பெரிதுபடுத்திக் காட்டக் கட்டை அணிந்தாடும் வழக்கம் காணப்பட்டது.

  தெருக்கூத்துக் கலைஞர்களில் புரிசை கண்ணப்ப தம்பிரான், பெருங்கட்டூர் பொன்னுச்சாமி, மு. இராமசாமி, ந. முத்துசாமி போன்றோர் முதன்மையானவர்களாகக் கருதப்பட்டனர்.

- இக்காலகட்டத்தில், பார்ஸி நாடக மரபின் வருகை, தொழின்முறை சார்ந்த கலைஞர்களை அறிமுகப்படுத்தும் நிலைக்கு வழிவகுத்தது. பாலாமணி அம்மையார் புகழ்பூத்த நடிகையாக விளங்கினார். சங்கரதாஸ் சுவாமிகள் இம்மரபில் சிறந்த கலைஞராக விளங்கினார். அவர் நடிப்புத் திறன், பாட்டியற்றும் திறன், நிர்வாகத் திறன், கர்நாடகசங்கீதத் திறன் என்பவற்றைக் கொண்டவராக விளங்கியதனால் அக்காலத்தில் உயர் கலைஞராகக் கருதப்பட்டார். இவரால் சதி அனுசியா, சாரங்கதாரன், வள்ளிதிருமணம், ஞானசவுந்தரி என்பன எழுதப்பட்டு நடிக்கப்பட்டன. டி. கே. எஸ். சகோதரர்கள், எஸ். ஜி. கிட்டப்பா போன்றோரும் சிறந்த நடிகர்களாகக் கணிக்கப்பட்டனர்.
- ஆடலையும், பாடலையும் முதன்மைப்படுத்திய போக்கில் இருந்து விலகி சொல்லாடலுக்குப் பம்மல் சம்மந்த முதலியார் முக்கியத்துவம் கொடுத்தார். வரலாற்று நாடகம், நையாண்டி நாடகம், தழுவல் நாடகம், இன்பியல் நாடகம், கேளிக்கை நாடகம் எனப்பல நாடகங்களைத் தயாரித்தார். சுகுணவிலாச சபாவினைத் தோற்றுவித்து, வழக்கறிஞர்கள், நீதிபதிகள், வைத்தியர்கள் எனப் பல்வேறு தரத்திலுள்ளோரை நடிகர்களாக்கிக் கலைஞர்களின் தரத்தினை உயர்த்தினார்.
- இதனைத் தொடர்ந்து காட்சி ஜோடனை மாற்றங்களையே நாடக உருவாக்கத்தின் உயிராய்க் கொண்டு கண்ணுக்கு, விருந்தளித்த நாடகங்களை உருவாகும் போக்கு எழுந்தது. இதன் முன்னோடிக் கலைஞராக நவால் ராஜமாணிக்கம் திகழ்ந்தார். ஆர். எஸ். மனோஹர், ஹெரன்ராசமாமி போன்றோரும் இவர்களில் உள்ளடங்குவர். மக்கள் இவ்வாறான நாடகங்களை விரும்பியமையினால் நடிகர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் காணப்பட்டன.
- 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சுதந்திரப் போராட்டம் தீவிரமான காலகட்டத்தில் கலைஞர்கள் மேடைதோறும் தேசிய உணர்வுப் பாடல்களைப் பாடினர். இதனால் அரசின் கொடுமைகளுக்கு ஆளாகினர். நாடகம் மூலம் விடுதலை உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தினர். எஸ். எஸ். விசுவநாததாஸ், எஸ். ஜி. கிட்டப்பா, ஜே. பி. சுந்தரம்பாள், கிருஷ்ணசாமிப் பாவலர் இவர்களுட் சிலராவர்.
- இந்தியா சுதந்திரம் அடைந்ததனைத் தொடர்ந்து, பிரதேச தனித்துவங்களும், இனத் தனித்துவங்களும் முதன்மைபெறத் தொடங்கியமையால் பிராமணிய எதிர்ப்பு இயக்கம், பொதுவுடைமை இயக்கம் என்பன தமிழ் நாட்டில் பிரதான இயக்கங்களாக மாறின. இவற்றை வெளிப்படுத்தும் வகையில் சமூக சீர்திருத்த நாடகங்கள் தயாரிக்கப்படலாயின.ஈ. வே.ராமசாமி நாயக்கர், அண்ணாத்துரை, கருணாநிதி, திருவாரூர் தங்கராசா, கலைவாணன் என்.எஸ். கிருஷ்ணன், கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன் போன்றோர் இவ்வாறான நாடகங்களை எழுதி, நடித்துப் புகழ் பெற்ற கலைஞர்களாக விளங்கினர். சமூக சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துக்கூறுவது மட்டுமன்றி அரசியற் கட்சிகளின் கொள்கைகளை எடுத்து கூறுபவர்களாகவும் கலைஞர்கள் காணப்பட்டமையினால் சமூக அங்கீகாரம் கொண்டவர்

களாக விளங்கினர்.

- இதனைத் தொடர்ந்து, அரசியல் சார்ந்த கட்சிபேதங்களில் இருந்து விடுபட்டுக் காலத்தின் தேவைக்கு ஏற்பப் புதிய அரங்கப் பரிசோதனை முயற்சிகளுக்கூடாக அரங்கினை முன்னெடுக்கும் கலைஞர்கள் உருவாகினர். நிஜ நாடக இயக்கம், வீதிநாடக இயக்கம், பரிக்ஷா, கூந்துப் பட்டறை போன்ற அமைப்புக்களுக்கூடாக அ. ராமசாமி, மு. இராமசாமி, ராணி, நா. முத்துசாமி போன்ற கலைஞர்கள் உருவாகினர். இவர்களால் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் புதிய அணுகுமுறையினையும், பாணியினையும் அடையாளப்படுத்தியதால் அவற்றுக்குச் சமூக வரவேற்புக் கிடைத்தது.

**முதன்மைப் பதங்கள்**

- கோயிற் பண்பாடு.
- கூத்தர் குழாம்.
- ஆடல் மரபு.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- ஒளிப்படங்கள்.
- கையேடுகள்.
- சொல்லட்டைகள்.

**கணிப்பீடு:**

- கி.பி 1800க்கு முன்பு உள்ள கலைஞர்களைப் பட்டியல்படுத்துக.
- கி.பி 1800க்கு முன்பும் பின்பும் கலைஞர்கள் பெற்ற பரிசில்களையும், கௌரவிப்புக்களையும் குறிப்பிடுக.
- கி.பி 1800க்கு முன்பு கலைஞர்கள் பெற்ற இடத்தினையும் 1800க்குப் பின்பு கலைஞர்கள் பெற்ற இடத்தினையும் ஒப்பிட்டாராய்க.

**உசாத்துணைகள்:**


- பண்டைத் தமிழச் சமூகத்தில் நாடகம் - கார்த்திகேசு. கா. சிவத்தம்பி.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர். கா. சிவத்தம்பி.
  (திருத்திய இரண்டாம் பதிப்பு) - பேராசிரியர் சி. மௌனகுரு.
  க. திலகநாதன்.

**தேர்ச்சி 4.0** : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : சுதேச நாட்டார் அரங்குகளைக் கற்றுக்கொண்டவர் ஆவார்.

**செயற்பாடு 4.3.1** : சுதேச நாட்டார் அரங்குகளான வடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு வடிவங்களின் அளிக்கை முறைமைகளை அறிந்துகொள்வார்.

**பாடவேளை** : 07

**கற்றற் பேறுகள்** :

- வடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு கூத்துகளின் கிராமிய இருப்புக்கான காரணங்களை முன்வைப்பார்.
- இக்கூத்துகளின் அளிக்கை முறைகளை விபரிப்பார்.
- இக்கூத்து மரபுகளின் எடுத்துரைப்பு முறை, அரங்க வெளிப்பயன்பாடு, பார்ப்போர் தொடர்பு போன்றவை பற்றி எடுத்துரைப்பார்.
- இக்கூத்துக்களின் ஆடல், பாடல்கள் சிலவற்றை நிகழ்த்திக் காட்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- வடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு பாடல்கள்.
- கூத்தர்களின் ஒளிப்படங்கள்.
- கூத்து ஒளிப்பேழைகள்.
- இசைக்கருவிகள்.

**அறிமுகம்** :

மட்டக்களப்புப் பிரதேசத்திலும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் நிகழ்த்தப்படும் வடமோடி, தென்மோடி கூத்துக்கள் பற்றியும் மன்னார்ப் பிரதேசத்தில் நிகழ்த்தப்படும் வடபாங்கு, தென்பாங்கு கூத்துக்களின் வகைகள் பற்றியும், அவற்றின் எடுத்துரைப்பு முறைமை, பாத்திரப்படைப்பு, அரங்க வெளிப்பயன்பாடு, பார்ப்போர் தொடர்பு போன்றவை பற்றியும் அறிவதுடன், இம்மரபுகளின் சில ஆடல், பாடல்களை நிகழ்த்தியும், அவற்றுக்கான களரிகளை வடிவமைத்தும் பார்ப்பதன் ஊடான பயில்வு எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள் :**

- கலந்துரையாடல், கண்டறிகை, செய்முறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- நான்கு கூத்து வடிவங்களில் இருந்தும் தலா ஒவ்வொரு பாடல்களைத் தெரிந்து பாடல்களைப் பயிற்றுவியுங்கள்.
- நான்கு குழுக்களாக அவற்றினைப் பயிற்றுவித்து குழுக்களாக ஆற்றுகை செய்யப்பணியுங்கள்.
- ஒவ்வொரு கூத்து மரபுகள் தொடர்பான, சுவர்த்தாள் அல்லது ohp பயன்பாட்டின் மூலமாகத் தகவல்களை இலகுவாக வழங்கி, கலந்துரையாட முடியும்.
- கூத்துக்களில் குறிப்பாக வடமோடி, தென்மோடி, வடபாங்கு தென்பாங்கு கூத்துக்கள் சடங்குகளில் இருந்து முற்றாக விலகியவையாகவும் நாட்டார் கலைமரபுகளில் மேம்பட்டவையாகவும், ஜனரஞ்சகம் மிக்க சாஸ்திரிய கலைகளுக்கு அண்மித்து நிற்கக் கூடியவடிவங்களாகவும் காணப்படுகின்றன. இவை முழுமையான நாடக வடிவங்களாகவும் அழகியல் பண்பு மிக்கவையாகவும் காணப்படுகின்றன.

**வடமோடி – தென்மோடிக் கூத்துக்கள்.**

- கூத்து வடிவங்களுக்குள் மேம்பட்டு நிற்கின்ற இவ் இருவடிவங்களும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இன்னமும் பயில்நிலையில் உள்ளன. சிலாபம், திருகோணமலை போன்ற இடங்களிலிருந்து மருவிவிட்டன. அதேவேளை யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பிரதேச வடிவங்களிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**மட்டக்களப்பு வடமோடி, தென்மோடி வடிவங்கள்**

- மட்டக்களப்பில் இவ்விரு கூத்து மரபுகளும் ஆடப்படும் களரி, அளிக்கை முறை, இசைக்கருவிகள், பயிலப்படும் முறைமை போன்றவற்றில் பெருமளவில் வேறுபாடு அற்றவையாகக் காணப்படுகின்றன. ஆனால் பின்வரும் வகைகளில் இரண்டும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

- வடமோடி தென்மோடிக் கூத்துக்களின் களரி வட்டவடிவமானதாக, சூழவும் பார்வையாளர்களைக் கொண்டதாக, சற்று உயர்த்தப்பட்டதாகக் காணப்படும். இவ்வெளிக்கு ஏற்ற அளிக்கை முறைகள் நகரும் பண்புடனும் சுற்றிவர ஆடல் நிகழ்த்தும் பண்புடனும் காணப்படும்.

**யாழ்ப்பாண வடமோடிக் கூத்துகள்**

- யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வட்டுக்கோட்டை, சுழிபுரம் அராலி போன்ற இடங்களில் மட்டும் பயிலப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு வடமோடிக் கூத்துக்களில் இருந்து பல வேறுபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றது.
- மகாபாரத, இராமாயணக் கதைகளே பெரும்பாலும் ஆடப்படுகின்றது.
- பாரங்கூடிய ஆடைகள் பயன்படுத்தப்படுவது குறைவு.
- கூத்தினை சபையோர் நகர்த்திச் செல்லும் பண்பே அதிகம் காணப்படுகின்றது.
- தாளக்கட்டுக்கள் உச்சரிக்கப்படுவதில்லை, அவை மத்தளத்திலேயே இசைக்கப்படுகின்றன.
- உயர்த்தப்படாத வட்டக்களரியிலேயே அதிகம் மேடையேற்றப்படுகின்றன.
- பரம்பரை பரப்பரையாகப் பாத்திரம் தாங்கும் பாரம்பரியம் காணப்படுகின்றது.

  உதாரணம்: வீமன் நாகப்பு.
- ஆடல்களில் நுனிக்கால் குதிக்கால் பயன்படுத்தும் நுணுக்கங்களும் உள்ளன.

  (மட்டக்களப்புத் தென்மோடியின் சில சாயலைக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.)
- ஆடப்படும் கூத்துக்களில் தர்மபுத்திரன்நாடகம், இராம நாடகம், கீசகன் வதை, பப்பிரவாகன் நாடகம் ….. குறிப்பிடத்தக்கவை.

**யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்துக்கள்**

- யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பூர்வீகமான தென்மோடி மரபு முற்றுமுழுதாக அழிவடைந்த சூழலில் தென்மோடியில் சில மாற்றங்களை உள்வாங்கிய கத்தோலிக்கக் கூத்துக்களே தென்மோடி என அழைக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசங்கள் முழுவதிலும் பெருவழக்காக இக்கூத்துக்கள் ஆடப்படுகின்றன.

- இவை தற்போது படச்சட்ட மேடைகளிலேயே ஆடப்படுகின்றன. வரண்முறையாக ஆடல்கள் பெருமளவில் குறைவடைந்து எழுந்தமானமான ஆடல்கள், துள்ளல்கள், அசைவுக்கோலங்கள் அதிகம் காணப்படுகின்றன.

- பாடல்கள் செழுமை மிக்கவையாக தாழிசை, கொச்சகம், கலிப்பா, அகவல், இன்னிசை, உலா, காதல், சிந்து எனப் பல தொல்சீர் பாவினங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- பாத்திரங்கள் உச்சஸ்தாயியில் பாடி நடித்தல் காணப்படுகின்றது.
- பாடலும் அசைவுகளும் ஒருங்கிணைந்த தன்மை அதிகம். மேலும் ஒப்பேராவை ஒத்த எளிமை இதில் காணப்படுகின்றது எனலாம்.
- பெருமளவில் கத்தோலிக்க புனிதர்களின் கதைகளும் மற்றும் வரலாற்றுக் கதைகள், கற்பனைக்கதைகள், நாவல்கள் போன்றவையும் கூத்தாக ஆடப்படுகின்றன.
- காண்பியங்களும் காட்சித்திரைகளும் பயன்படுத்தப்படுகின்றன.
- ஹார்மோனியம், மிருதங்கம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- கூத்தின் கதை பெருமளவில் பாத்திரங்களாலேயே நகர்த்தப்படுகின்றது.
- ஆடப்படும் கூத்துக்களில் சில:-தேவசகாயம்பிள்ளை, எஸ்தாக்கியர், மூவிராசாக்கள், சங்கிலியன், கண்டி அரசன் ,ஞான சௌந்தரி, கருங்குயில் குன்றத்துக் கொலை …..

**வடபாங்கு தென்பாங்கு கூத்துக்கள்**

- கூத்துக்களைப் பேணும் பிரதேசங்களில் மன்னார்ப் பிரதேசத்திற்குக் குறிப்பிட்ட முக்கியத்துவம் காணப்படுகின்றது. மன்னார் அதிக அளவில் கிறிஸ்தவர்களைக் கொண்ட பிரதேசமாகக் காணப்பட்டாலும், மன்னார் கூத்துக்களில் கிறிஸ்தவத்தின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டாலும், தம் பாரம்பரிய கூத்து மரபுகளைப் பேணி வருகின்றனர். அங்கு வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு போன்ற வடிவங்கள் காணப்படுகின்றன.
- வடபாங்கு - கூத்துக்களை வடமெட்டுக்கள், யாழ்ப்பாணப்பாங்கு எனவும் அழைப்பர். இக்கூத்து யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றிருக்க வேண்டும் என்று பேராசிரியர் வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாண தென்மோடியின் சாயலை அதிகம் கொண்டிருக்கின்றது.

- தென்பாங்கு - தென் மெட்டு ,மாதோட்டப்பாங்கு என்னும் பெயர்களில் அதிகம் அழைக்கப்படுகின்றது மன்னாருக்கே உரிய தனித்துவமான பண்புகளுடன் காணப்படுகின்றது.
- இக்கூத்துகளில் பெருமளவில் கிறிஸ்தவ கதைகளே ஆடப்பெறுகின்றன.
- புலசந்தோர் எனும் கதை சொல்லும் பாத்திரம் பயன்படுத்தப்பெறுகின்றது.
- இரண்டு மரபுகளுக்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பினும் பின்வரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கூத்துக்களில் நடிப்பானது மோடியுற்ற தன்மையைக் கொண்டதாக ஆடல் பாடல்கள், ஊட்டுவசனங்ள் போன்றவற்றினை ஊடகமாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. கூத்துக்களின் ஆடல் கோலங்களும் பாடல் மெட்டுக்களும் பாத்திரப் பண்பினைச் சித்திரிப்பவையாகக் காணப்படுகின்றன. இவைதொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாத்திரங்களின் பண்புகளை மாணவர்கள் அறியச்செய்தல் வேண்டும்.

- கூத்துகளில் பெரும்பாலானவை வட்டக்களரியிலேயே ஆடப்பெறுகின்றன. ஆனால் மன்னார், யாழ்ப்பாணம் போன்ற தென்மோடிக் கூத்துக்கள் முப்பக்க அரங்குகளிலும் படச்சட்ட மேடைகளிலும் மேடையேற்றப்படுகின்றன. இவ்அரங்கவெளிப் பயன்பாட்டின் தன்மை ஆற்றுகைகளில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கலந்துரையாடி மதிப்பீடு செய்தல் வேண்டும்.
- கூத்துக்களின் கதைப்பொருளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆற்றுகைகளில் செல்வாக்குச் செலுத்தி யுள்ளவாற்றைக் கலந்துரையாட வேண்டும்.

  உதாரணம்: யாழ்ப்பாணத் தென்மோடியில் ஆடல் நலிவடையக் காரணம் கிறிஸ்தவ புனிதர்கள் ஆடுவது முறையல்ல என்பதனால்.

  கணிப்பீடும் மதிப்பீடும்

- தரப்பட்ட நான்கு கூத்து மரபுகளுக்குள்ளும் காணப்படும் ஒற்றுமைகளைப் பட்டியற்படுத்துக.
- படச்சட்ட அரங்க வெளியில் கூத்து ஆடப்படும் பொழுதும், வட்டக்களரியில் ஆடப்படும் பொழுதும் ஏற்படும் அளிக்கை மாற்றங்களை இனங்காண்க.
- கூத்துக் களரிகளின் வடிவங்களை, கழிவுப்பொருட்களில் இருந்து ஆக்க முயலுக.

| வட பாங்கு | தென்பாங்கு |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றதாக | மன்னார் மாதோட்டத்திற்குரிய |
| கருதப்படுகின்றது | தனித்துவமானது |
| கடவுள் வாழ்த்து விருத்தத்தில் அமையும் | வெண்பாவில் அமையும் |
| தரு, சிந்து வண்ணம் போன்ற பாவினங்கள் | கவி, இன்னிசை போன்றவை அதிகம் |
| அதிகம் பயன்படுத்தப்படுகின்றன | பயன்படுத்தப்படுகின்றன |
| கதைச்சுருக்கம் புலசந்தோரினாலும் | தனியே புலசந்தோரினால் சொல்லப்படும் |
| சபையோரினாலும் சொல்லப்படும் | பாத்திரங்கள் ஒவ்வொருமுறையும் மேடைக்கு |
| பாத்திரம் மேடைக்கு வரும்போது ஒருமுறை | வரும்போதும் வரவுபாடப்படும். முடிந்து |
| மட்டுமே வரவு தரு பாடப்படும் | போகும்போது மங்களம் பாடப்படும் |
| வரையறுக்கப்பட்ட ஆடல்கள் இல்லை | ஆடல்கள் வரையறுக்கப்பட்டவையாக |
| அவை எழுந்தமானவையாக இருக்கும் | காணப்படும் |
| காட்சித்திரைகள் பயன்படுத்தப்படும் | காட்சித்திரைகள் பயன்படுத்தப்படுவதில்லை |
| பாடல்கள் வல்லோசை உடையவை | பாடல்கள் மூலம் காட்சிகள் சொல்லப்படும் |
| அரசபாத்திரம் செங்கோலுடன் வரும் | பாடல்கள் மெல்லோசைக்குரியவை |
| பிற்பாட்டிற்குரியவர் மறைந்து நிற்பர் | அரச பாத்திரம் வாளுடன் வரும் |
| ஹார்மோனியம், மத்தளம், டோலக் | பிற்பாட்டுக்காரர் களரியில் பாத்திரங்களுக்கு |
| பயன்படுத்தப்படும் | பின்னால் நிற்பர் |
| | மத்தளம் கைத்தாளம் மட்டுமே |
| | பயன்படுத்தப்படும் |

**தேர்ச்சி** 4.0 : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வர்

**தேர்ச்சி மட்டம்** 4.3 : ஈழத்துச் சுதேச நாட்டார்அரங்குகளைக் கற்றுக்கொண்டவர் ஆவார்

**செயற்பாடு** 4.3.2. : சிந்து நடைக்கூத்து, கோவலன் கூத்து, காமன் கூத்து என்பவற்றின் ஆற்றுகையின் முறைமை, அரங்க வெளி, ஆற்றுகைப்பண்பு, பார்ப்போர்பற்றிக் கற்போர்

**பாடவேளை** : 06

**கற்றற்பேறுகள்**

- நாட்டார் அரங்குகளின் பிரதேசங்களை இனம் காண்பார்.
- நாட்டார் அரங்குகளின் அளிக்கையை எடுத்துரைப்பார்
- பாத்திரங்களின் நடிப்பு முறைய அறிந்திருப்பர்
- கூத்தின் அரங்க வெளிகளை இனம் காண்பர்
- இக்கூத்துகளின் ஆடல் பாடல்கள் சிலவற்றை நிகழ்த்திக்காட்டுவார்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சிந்துநடைக் கூத்து கோவலன் கூத்து காமன் கூத்துப்பாடல்கள்
- கூத்துக்லைஞர்கள்ளின் ஒளிப்படங்கள்
- கூத்துகளின் இறுவட்டுகள் அல்லது காணொளிகள்
- கூத்துப்பிரதிகள்

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்**

- கலந்துரையாடல்
- வினாக்கேட்டல்
- விரிவுரை
- சிந்தனைக்கிழறல்
- செயற்பாட்டுமுறை

**அறிமுகம்**

- யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மலையகம் போன்ற பிரதேசங்களில் காணப்பெறும் கூத்துகள் பற்றியும் அவற்றின் எடுத்துரைப்பு முறைமை பாத்திரப்படைப்பு அரங்க வெளியின் பயன்பாடு பார்ப்போரின் தொடர்பு போன்றன பற்றி அறிவதுடன்இக்கூத்து வடிவங்களின் சில ஆடல்பாடல்களை நிகழத்தவும் அரங்க வெளிகளை வடிவமைப்புபார்ப்பததன் ஊடாக பயிலவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- மூன்று கூத்து வடிவங்களில் இருந்தும் தலா ஒவ்வொரு பாடல்களைத் தெரிந்து பாடல்களை பயிற்றுவியுங்கள் (வரபுப்பாடலாகவோ, வேறுஎதுவாகவும் இருக்கலாம்)

உதாரணம்

**காத்தவராயன் சிந்து நடைக்கூத்து**

காவி உடுத்தல்லவோ ஆதிசிவனாரும் - அப்படிக்

காரணமாய் வேடம் கொண்டார் மாயசிவனாரும்

புலித்தோலுடுத்தல்லவோ ஆதிசிவனாரும் - அப்படிக்

புரமாய் வேசம் கொண்டார் மாயசினாரும்

இலங்கும் இலங்கும் என்று ஆதிசிவனாரும் - எட்டி

நடைவைத்தாராம் மாயசினாரும்

துலங்கும் துலங்கும் என்றே ஆதிசிவனாரும் - தூக்கி

அடிவைத்தாடும் மாயசிவனாரும்

**கோவலன் கூத்து**

பாண்டி மாகராஜர் வந்தாரே – ஒய்யாரமாய்

பாண்டி மகாராஜர் வந்தாரே

□ண்ட மதி மந்திரியும் பத்தினிக்கோப்பெருந்தேவியும் சூழ

பாண்டி மாகராஜர் வந்தாரே – ஒய்யாரமாய்

பாண்டி மகாராஜர் வந்தாரே

**காமன் கூத்து**

தேவலோகம் விட்டுமல்லோ

தேவேந்திரன் வருகிறாரே

ஆயிரங்கண் இந்திரனார்

அனைவருமே சூழ்து வர

தாளங்கள் மேளங்கள் தம்பட்டம் தான் துலங்க

தேவர்களைப் காப்பதற்கு தேவசபை வருகிறாரே

- ஒவ்வொரு கூத்து மரபுகள் தொடர்பான தகவல்களைக் கொண்ட சுவர்த்தாள் அல்லது பல்லூடக எறியி மூலமாக மாணவர்க்கு விளக்கும் அளித்து கலந்துரையாடலில் ஈடுபடலாம்
- இக்கூத்துகள் சடங்குகளில் இருந்து விலகியனவாகவும் சடங்குகளோடு இணைந்தனவாகவும் காணப்படுகின்றன. அழகிய தன்மையுள்ள முழுமையாக நாடக வடிவங்களாக காணப்படுகின்றன.
- பின்வரும் கருத்துகளைப் பற்றிய பயில்வில் ஈடுபடுத்துங்கள்

**காத்தவராயன் கூத்து**

- யாழப்பாணத்திற்கே உரிய கூத்தாக இருப்பினும் வடபுலத்திற்கு பொதுவாகவும் இக்கூத்து உள்ளது. வவுனியா கிளிநொச்சி முல்லைத்தீவு போன்ற பகுதிகளிலும் மன்னாரில் செம்மன் தீவுப் பிரதேசத்தில் பயில்வில் உள்ளது. ஆடல்கள் சிந்துவில் அமைந்துள்ளதன் காரணமாக காத்தவராயன் சிந்து நடைக்கூத்து என அழைக்கும் மரபு உண்டு
- உடுக்கடித்து அம்மன் கொவில்களில் கதையாக பாடப்பட்ட பாடல்கள் (உடுக்கடி கதை) பின்னர் மாரிஅம்மன் கோவில்களில் நாடகமாக நடித்துக்காட்டப்பெற்றுள்ளன.
- காத்தவராதயன் பல்வேறு தடைகத்தாண்டி ஆரியப்□ மாலையை மணம் முடிப்பதே பிரதான கதையாகும்.
- ஒரேவகையான ஆடல்கள் கொண்டவை பாடலகளிலும் ஒரு சிலவேறுபாடுகள் உள்ளன தாளக்கட்டுகள் இல்லை
- பர்த்திரவரவுகளை பாத்திரங்களே பாடும் தாம்வருவதாக அதாவது தன்னைத்தானே அறிமுகம் செய்யும் மரபு இக்கூத்திலேயே அதிகம் காணப்படுகின்றது.

- ஆடல் பாடல்கள் நடிப்பு பிரதானப்படும்.
- வேட உடையகள் பகட்டு ஆடம்பரம் நிரம்பியனவாகவும் காணப்படும்
- காட்சிகள் பெரும்பாலும் காட்சித்திரைகள் பல பயன்படுத்தப்படும் (□ங்கா அரண்மனை, அருவி, வெட்டுக்காடு .....) காட்சிப்பொருட்களும் பயன்படுத்தப்படும். (சிம்மாசனம், மரம் .....)
- பாத்திரங்கள் கைப்பொருட்கள் பலவற்றைப் பயன்படுத்தும்.

  சிவன் - சூலம்

  மாரி – வாழ்

  கிருஸ்ணன் - புல்லாங்குழல்

  நாரதரர் - தம்புரா, டப்ளாக்கட்டை

  டாப்பர் மாமா – விசிறி

  காத்தான் , கிருஸ்ணர் - வில் , அம்பு

  வளையல் செட்டி – காப்புக் கூடை

- அரங்கள வெளி தற்காலிகமாக அமைக்கப்பட்ட படச்சட்ட மேடையாக இருக்கும் ஒரு பக்கப்பாாப்போரைக்கொண்டிருக்கும். உடுக்கு, □ார்மோனியம் தாளம் போன்றன இசைக்கருவிகளாக பயன்படுத்தப்படும். தற்போது டோல்கி தபேலா போன்றவற்றை பயன்படுத்துகின்றனர்.
- ஆரம்ப காலங்களில் விடிய விடிய ஆடப்பெற்ற கூத்துகள் தற்போது நேரம் குறைக்கப்பட்டு கல்வி நிலையங்களிலும் (பாடசாலை, பல்கலைக்கழங்களிலும்) ஆடப்பட்டு வருகின்றன. (பருத்தித்துறை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயம், திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் ஆலயம் ..... )

**கோவலன் கூத்து**

- முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆடப்பெறும் வடிவம் ஆகும் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, மணற்குடியிருப்பு, செம்மலை போன்ற பகுதிகளில் ஆடப்படுகின்றது. முள்ளியவளையில் வற்றாப்பாளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் விழா முடிவில் இக்கூத்து அடப்பெறும்.
- கோவலன் கண்ணகி கதையை அடிப்படையாககொண்டது. பகட்டு ஆடம்பரமான ஆடை அணியப்படும் வில்லுடுப்பு எனப்படும் வேட உடையும் அணியப்படும்.

- அரங்கவெளி வட்டக்களரியாக அமையும். சமதரையில் வட்டவடிவில ˙அமையும் அண்ணாவியார் கூத்தை நடாத்திச்செல்வார். (தளையராசசிங்கம், மற்றாஸ்மயில் ..... அருந்தாகரன்)
- தாளக்கட்டுகள் உண்டு. (தாகு தாகு தாம் தையோம்)
- கோவலன் கண்ணகி பாண்டிய மன்னன் கோப்பெரும்தேவி பிராமணன் தட்டான், (வஞ்சிப்பத்தன்) போன்ற பாத்திரங்கள் முதன்மையானவை.
- வஞ்சிப்பத்தன் (தட்டான்) ஆட்டம் பிரத்தியேமானது. குறிப்பாக கால்களை கிடையாக எறிந்து ஆடும் ஆட்டம் சிறப்புடையது. மெற்றாஸ்மெயில் இதனை ஆட்டக்கூத்து என்கிறார்.
- தாளம் மத்தளம் உடுக்கு போன்றன இசைவாத்தியாமாக பயன்படும்.
- ஒலி அமைப்பை பொறுத்தவரை வாழைக்குற்றிகள் நாட்டப்பெற்று தேங்காய் பாதியில் எண்ணெய் விட்டு ஒளியுட்டல் இடம்பெறும்.
- பார்ப்போர் சுற்றி வர இருந்து பார்ப்பார்
- நடிகர் பெரும்பாலும் விரதம் இருந்து கூத்துகளில் பங்கேற்பர்

**காமன் கூத்து**

- மலையக பெரும் தோட்டங்களில் ஆடப்பட்டு வரும் பாரம்பரிய கூத்துகளுள் ஒன்று இதுவாகும். காமன் வழிபாட்டுடன் தொடர்புடையது.
- காமன் ஆகிய மன்மதன் ரதி கதையை கூறுவது
- மன்மதன் ரதி சிவன் பிரம்மா இந்திரன் வீர பத்திரன் தூதுவன் வெட்டியான் வெட்டிச்சி குறத்தி போன்ற பாத்திரங்கள் இடம்பெறும்
- சிவன் மன்மதனை எரித்து ரதி சிவன் ஊடாக மன்மதனை உயிாப்பித்த கதை நிகழ்த்திக்காட்டப்பெறும்.
- இங்கு கோயில் முற்றம் அரங்காக பயன்படும்
- விசேடமான ஆடைகள் பயன்படும்
- பகட்டானவை
- தப்பு பிரதான இசைக்கருவியாக பயன்படும்
- இரவு வேளைகளிலேயே நடைபெறும்
- பல்வேறு ஊர்களில் இருந்தும் மக்கள் இக்கூத்தினைப்பார்க்க வரவார்

- பாத்திரங்களும் குறிப்பாக தூதுவர் வீரபத்திரர்போன்றன வேறுகோயில்களில் இருந்து ஊர்வலாமாக வந்து கலந்துகொள்ளும்
- மாசிமாதம் அமாவாசை கழிந்துவரும் மூன்றாம் நாள் பெரும்பாலும் நிகழ்த்திக்காட்டப்படும். மூன்று நாட்களில் முதல் இரண்டு நாட்களிலும் ரதி மன்மதன் திருமணம் மன்மதன் சிவனின் நிஸ்டையை குழப்புதல் நடைபெற்று மன்மதன் எரிக்கப்படுவார். இறுதி நாள் ரதி புலம்பல் நடைபெற்று மன்மதன் சிவனால் உயிர்க்கப்படும் காட்சி நிகழ்த்தப்படும்
- பாடல்கள் தெம்மாங்கு இசையில் பாடப்படும் தாளக்கட்டுகள் இல்லை ஆட்டக்கோலங்கள் உண்டு.
- இதன் அரங்கு காமன் பொட்டல் எனப்படும்.
- காண்பிய பொருட்கள் பயன்படுத்தப்படும்
- தீப்பந்தங்கள் ஒளியைத்தரும்
- அண்ணடிவியார் காமன் மாஸ்டர் அல்லது காமாண்டி வாத்தியார் எனப்படுவார்.
- பொதுவாக கூத்துகளை பொறுத்தவரை ஆடல் பாடல் நடிப்பு என்பன முக்கியம் பெறுவதைக்காணலாம்.
- பாத்திரம் ஒன்றை இனம் காண்பது என்பது அப்பாத்திரத்தின் ஆடல் பாடல் என்பவற்றில் தங்கியிருந்தது.
- மாணவர்களுடன் கலந்துரையாடி பாத்திரப்பண்பை வெளிப்படுத்த வழிப்படுத்துங்கள்
- கோவலன் கூத்து காமன் கூத்து என்பவற்றை மக்கள் சுற்றிவர இருந்து பார்ப்பார்
- காத்தவராயன் கூத்து ஒருபக்கப்பார்ப்போரைக்கொண்டது
- இததகைய நிலமையை பாாப்போரின் பங்களிப்பு தொடர்பாக கலந்துயைாடுங்கள்
- மேற்குறித்த கூத்துகள் இன்றைய நிலையில் எவ்வாறு பேணப்பட்டு வருகின்றது வளர்ச்சி அடைந்துள்ளதா. வீழ்ச்சி அடைந்துள்ளதா பழைழய மரபு வழிக்கூத்தில் இருந்து மாற்றங்களைப்பெற்றுள்ளனவா என்பன பற்றிக்கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு**

- தரப்பட்ட 3 கூத்து மரபுகளிற்கும் இடையே காணப்படும் ஒருமைப்பாடுகளை பட்டியல் இடுக

- வட்டக்களரியில் ஆடப்படும் கூத்து படச்சட்டத்திலும் படச்சட்ட மேடைக்கான கூத்ததை வட்டக்களரியிலும் ஆடும்போதும் அளிக்கை முறையில் ஏற்படும் மாற்றங்களை இனம் காண்க.
- ஏதாவதொரு கூத்திற்கான கைப்பொருட்களை (கதாயுதம் ,வாழ், வில், அம்பு) கழிவுப்பொருட்களில் இரந்து ஆக்குக

**உசாத்துணை**


- காத்தவராயன் கூத்து - இ.பாலசுந்தரம்
- வன்னிப்பிராந்திய கூத்துகள் - அருணா செல்லத்துரை
- மலையகக் கூத்துகள் - காரை செ.சுந்தரம்பிள்ளை
- கோவலன் கூத்து – பதிப்பு இரகுநாதன்

**தேர்ச்சி 4.0** : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வர்

**தேர்ச்சி மட்டம் 4.3** : ஈழத்தது சுதேச நாட்டார் அரங்குகளைக் கற்றுக்கொண்டவர் ஆவார்.

**செயற்பாடு 4.3.3** : கூத்து ஆற்றுகையின் சமூக அழகியல் அம்சங்களை அறிவோம்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறு**

- கூத்தின் அளிக்கை முறையின் அறிந்திருப்பார்
- கூத்தின் சமூக முக்கியத்துவத்தை தெரிந்திருப்பார்
- கூத்தின் அழகியல் நயந்திருப்பார்
- கூத்துப்பாடல்களை பாடியிருப்பார்

**தரவிருத்தி உள்ளீடு**

- வீடியோ
- இறுவட்டுகள்
- கூத்துப்பிரதிகள்

**கற்பித்தல் முறை**

- கலந்துரையாடல் செய்முறை
- குழுமுறை

**அறிமுகம்**

- பாரம்பரிய கூத்து நிகழ்த்துகையில் சமூக அழகயில் உணர்திறன் பார்ப்போரின் வெளிப்படும் முறையினை அறிந்து கொள்வதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- மாணவர்களுக்கு கூத்து அளிக்கை ஒன்றினை நேரடியாகவோ அன்றேல் இறுவட்டு மூகலமாகவோ காண்பியுங்கள்
- கூத்துகள் பற்றிய அவர்களது கருத்துகளைக் கேட்டறியுங்கள்
- கூத்துபார்வயைிட்டதன் மூலம் அவர்களை கவர்ந்த விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்

- கூத்துக்களின் சமூக அழகியல் அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்
- அழகியில் நிலையில் அமையும் நிழத்தும் இடம் பார்ப்போர் ஆற்றுவோர் காட்சிப்பின்புலும் பார்ப்போரின் கேள்விகள் ஆற்றுவோரின் பதில்கள் ஆற்றுகையும் அதனோடு இணைந்த நிகழ்வுகளும் என்பன அழகியல் நிலைக்கு உட்படும் நிலையை விபரிப்பதற்கு சந்தர்ப்பம் அழியுங்கள்
- அழகியல் என்பது ஒவ்வொருவரின் இரசனைக்கு உட்பட்டது
- இரசனையானது அவர்களின் எண்ணங்கள் கொண்டு உணரப்படுவதால் கூத்துகளின் அழகியல் சமூகப்பெறுமானங்களோடு இணைத்துப்பார்க்கப்படுவது சிறந்தது என்பதை தெறிவு படுத்துங்கள்
- உதாரணமாக - ஊர் கூடி சதங்கை கட்டுதல் களரி அமைத்தல் அதன் அலங்கரிப்பு போன்றவை அதன் அழகியல் அம்சங்களாக கொள்ளப்படுவதற்கு வாய்ப்பளியுங்கள்
- ஆற்றுகையின் போது பாத்தரங்களின் வரவின் போது கைதட்டி ஆரவாரம் செய்வதும் பாத்தரத்தின் வேட உடை ஒப்பனை அவர்களை கவரும் தன்மை மத்தளஓசையின் நாதமும் ஆட்டக்கோலங்கள் என்பன அவர்களொரு அழகியல் நிலைக்கு இட்டுச்செல்வதை அவதானியுங்கள்
- இவ்வாறு கூத்து ஆற்றுகையானது ஒரு சமூக நிலைப்பட்ட அழகியல் தன்மைெ காண்டு விளங்குவதை அறியச்செய்யுங்கள்

**கணிப்பீடு**

- கூத்துகள் அழிக்கை செய்யப்படும் முறையினை விபரிக்குக
- கூத்துகளிற்கும் சமூகத்திற்கும் இடையான தொடர்பினை கூறுகை
- கூத்தின் அழகியல் அம்சங்களை பட்டியலிடுக

**உசாத்துணைகள்**

- அரங்கு ஓர் அறிமுகம் - கா சிவத்தம்பி, சி.மௌனகுரு, க.திலகநாதன்
- பழையதும் புதியதும் - சி.மௌனகுரு
- அரங்கியல் புதிய பதிப்பு - சி.மௌனகுரு
- ஈழத்து தமிழ் நாடகங்கள்

**தேர்ச்சி 4.0** : சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வர்

**தேர்ச்சி மட்டம் 4.3** : ஈழுத்துச் சுதேச நாட்டார் அரங்ககுகளைக் கற்றுக்கொணடவர் ஆவார்

**செயற்பாடு 4.3.4** : கூத்துப்பாடல்களை பாடி ஆடி மகிழ்வோம்

**பாடவேளை** : 10

**கற்றற் பேறுகள்**

- கூத்துப்பாடல்களைப் பாடுவார்
- நாட்டார் அரங்கின் ஆடல்களை ஆடுவார்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கூத்துப்பாடல்கள்
- கூத்துப்பாடல்கள் அடங்கிய ஒலிப்போழைகள்
- கூத்துப்பாடல்களும், ஆடல்களும் கொண்ட ஒலி ஒளிப்பேழைகள்

**அறிமுகம்**

- கூத்தின் ஆடல்களையும் பாடல்களையும் ஆடிப்பாடும் திறனை வளாப்பதே இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் முறையியல்கள்**

- குழுமுறை
- செய்முறை
- அவதானித்தல்
- பாத்திர நடிப்பு

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- கதையை ஆடல் பாடல் மூலம் வெளிப்படுத்தி காட்டுவதே கூத்து என்பதைன விளக்கிக் கூறுங்கள்
- மாணவர்களை குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் வடமோடி தென்மோடி கோவலன் கூத்து காமன் கூத்து வசந்தன் கூத்து பாடல்களை சேகரித்து வருமாறு வழிப்படுத்துங்கள்

- கூத்துப்பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழைகளை ஒலிக்க விட்டு மாணவர்களை செவிமடுக்கச்செய்யுங்கள்
- ஒவ்வொரு வகை கூத்துப்பாடல்களும் வேறுபட்டவை என்பதை ஒப்பிட்டு விளக்கிகூறுங்கள்
- ஒருவகைக் கூத்தின் பாடல்களுக்குள்ளேயும் வேறுபாடுகள் உள்ளன என்பதை பாடல்களை உதாரணம் கொண்டு தெளிவு படுத்துங்கள்
- மாணவர்களை மூன்று அன்றோல் நான்கு கொண்ட குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவுக்கும் பின்வரும் பாடல்களை வழங்கி அப்பாடல்களை மனனம் செய்யுமாறு கூறுங்கள்
- குழுவுக்குரிய பாடல்களை ராக தாளங்களுடன் பாடிக்காட்டுங்கள்
- குழுவாக பாடலக்ளை பாடிப்பழகுவதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் தங்களுக்குரிய பாடல்களை பாடிக்காட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்
- பாடலகளைப் பாடும்போது தாளம், இராகம், குரலின் ஏற்ற இறக்கம், அழுத்தம், குரலின் வீச்சு போன்றவைற்றை கவனத்திற்கொண்டு பாடவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்
- பாடலின் மூலம் உணர்நிலைகள் வெளிப்படுத்தப்படுவதுடன் நடிப்பும் வெளித்தெரிய வேண்டும் என்பதையும் தெளிவு படுத்துங்கள்
- பாடலில் இனிமையும் கவர்ச்சியும் காணப்படுதல் வேண்டும்
- பாடலின் பல்வகைத்தன்மை வெளிப்படவேண்டும்

  உதாரணம் தரு, கொச்சகத்தரு, அகவல், கந்தாத்ததரு போன்றவை

- வடமேடி தென்மோடி கோவலன் கூத்து காமன் கூத்து வசந்தன் கூத்து போன்று பல்வேறு கூத்துகள் உள்ளடங்கிய இறுவட்டுகளை காட்சிப்படுத்தி மாணவர்களை அவதானிக்கச்செய்யுங்கள்.
- ஒவ்வொரு பிரதேச கூத்துகளின் ஆட்ட முறைகளும் வேறுபட்டவை என்பதனை ஆட்டக்கோலங்களை ஒப்பிட்டு விளக்கிக் கூறுங்கள்
- ஒரு கூத்துக்குள்ளேயே வீசாணம் எட்டடி நாலடி குத்துமிதி ஒய்யாரம் ஓடியலி சுற்றியாடுதல் எனப்பல்வகை ஆட்டக்கோலங்கள் காணப்படுகின்றன என்பதை தெளிவு படுத்துங்கள்
- மாணவர்களுக்க தத்தித்தா தித்ததித்தை எனும் அடிப்படைத்தாளத்திற்கு கால்போடும் முறைமையினை பழக்குங்கள் பின்னர் அதனை ஆட்டமாக மாற்றுங்கள்

- முன்பு பெற்ற ஆட்டப்பயிற்சியுடன் தத்தித்ததா தரிகிட தித்திதைய தைய எனும் தாளத்திற்குரிய ஆட்டப்பயிற்சியையும் வழங்குங்கள்
- இத்தாளத்தினை அடிப்படையாக கொண்டு வீசாணம் எட்டடி நாலடி போன்ற ஆட்டக்கோலங்களையும ் பயிற்றுவியுங்கள்
- இதுபோன்று காமன் கூத்து கோவலன் கூத்து போன்ற கூத்துகளின் ஆட்டங்களுக்கான அடிப்படைப்பயிற்சிகளையும் வழங்கி ஆட்டக்கோலங்களா மாற்றுங்கள்
- மாணவர்கள் ஆட்டக்கோலங்களை ஆடிப்பழகுவதற்க சந்தர்ப்பம் அளியுங்கள்
- மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஆட்டக்கோலங்கள் எழுதப்பட்ட துண்டுகளை குலுக்கல் முறையில் தெரிவு செய்வதற்கு இடமளியுங்கள்
- தமக்கு கிடைத் ஆட்டக் கோலத்தை ஆடிக்காட்டுவதற்கு வாய்பளியுங்கள்
- ஆட்டக்கோலங்களில் காணப்பெறும் குறைபாடுகளை சீர்செய்து கொள்வதற்கு வழிகாட்டுங்கள்
- தாளமும் ஆட்டமும் பொருத்தப்பாடுடையாதாக அமைதல் வேண்டும்
- ஆட்டத்தின் மூலம் பாத்திரத்தின் தன்மைெ வளிப்படவேண்டும்
- ஆடலில் அளவும் கவர்ச்சியும் காணப்படவேண்டும்

**கணிப்பீடு**

- கூத்துப்பாடல்களை பாடும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய அம்சங்கள் யாவை
- கூத்து ஆட்டங்கள் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும் தன்மையை விபரிக்குக
- வழங்கப்பெ றும் ஆட்டக்கோலங்களை ஆடிக்காட்டுக

**உசாத்துணைகள்**


- தமிழர் கூத்துக் கலை - பேராசிரியர் சி.மௌனகுரு

**தேர்ச்சி 4.0 :** சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.4 :** இலங்கைத் தமிழ் அரங்கின் வளர்ச்சியில் இசை நாடகம் பெறும் இடத்தை ஆராய்ந்தறிவார்.

**செயற்பாடு 4.4.1 :** இசை நாடகம் - பாடலே அரங்காக அமைவதை அறிந்து கொள்வோம்.

**பாடவேளை :** 06

**கற்றற் பேறுகள்:**

- இசை நாடகம் முற்று முழுதாகப் பாடல்களால் ஆக்கப்பட்டிருப்பதை அறிந்து கொண்டிருப்பார்.
- பாடல் அரங்காகும் போது அது தனக்குள் உள்வாங்கிக் கொள்ளும் அம்சங்களை முன்வைப்பார்.
- இசை நாடகக் கட்டமைப்பை எடுத்துரைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இசை நாடகக் காணொளிப் பேழைகள்.
- இசை நாடக ஒலிப்பேழைகள்.
- இசை நாடக எழுத்துருக்கள்.

**அறிமுகம்:**

இசை நாடகக் கட்டமைப்பை விளங்கிக் கெண்டு அது பாடல் மூலமே ஆற்றுகையை வெளிப்படுத்தி நிற்பதையும் கற்றுக்கொள்வதே இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப் பெறுவதாகும்.

**கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்:**

- தேடியறிதல்.
- கலந்துரையாடுதல்.
- செய்முறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- தரம் 10இல் கற்றுக்கொண்ட இசை நாடகம் பற்றிய விடயங்களை மீட்பதன் மூலம் இசை நாடக வரலாற்றைச் சுருக்கமாகக் கற்றுக்கொள்ள வழிப்படுத்துங்கள்.
- ‘பாடலே அரங்காக’ என்பதன் அர்த்தப்பாட்டை விளக்குங்கள். இசை நாடகக் காணொளிப் பேழை (சத்தியவான் சாவித்திரி) அன்றேல் தேவையான பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழை யினாலான மாணவர்கள் பார்க்க அன்றேல் கேட்க வழிப்படுத்துங்கள்.
- பாடலின் ஊடக வெளிப்படுத்தப்பெறும் அம்சங்கள் தொடர்பில் மாணவர்களின் கவனத்தைக் குவிக்கச் செய்யுங்கள்.
- பாடி நடித்தலும் நடித்துப் பாடுதலும் இந்த அரங்கின் அடிப்படையாகும்.
- பாட்டும் அதனைப் பாடும் முறையுமே நடிப்பாக அமையும்.
- கதையும், உணர்வுகளும், காட்சிகளும் பாடலின் ஊடாகவே நகர்த்தப்படும்.

- இந்நாடகத்தில் தொடர்பாடல் மொழி இசையேயாகும்.
- உணர்வுகள், செயற்பாடுகள், வர்ணனைகள், காட்சிகள் போன்றன யாவும் பாடலின் ஊடாகவே வெளிப்படுத்தப்பட்டிருக்கும். உதாரணமாக, "சத்தியவான் சாவித்திரி" இசை நாடகத்தில்.

| | | |
|---|---|---|
| கடவுளை வேண்டுதல் | - | "பாத பங்கயம் பணிந்தேன்..." |
| மகிழ்தல் | - | "ஆஹா சத்யவானென்று..." |
| அழுதல் | - | "கண்ணிழந்து வாடலானோம்..." |
| கேள்வி பதில் | - | "ஏனோ எனை எழுப்பலானாய்..." |
| பாத்திர அறிமுகம் | - | "விண்டலமும் மண்டலமும்..." |
| தர்க்கித்தல் | - | "திவ்விய புருஷர் நீர்யார்..." |
| பாத்திரங்களை வர்ணித்தல் | - | "வாறான் ஒருவன் மானே..." |
| காட்சிகளை வர்ணித்தல் | - | "சோலை அழகை..." |

- நாடகச் சூழல், உணர்வு என்பவற்றினைக் கருத்திற் கொண்டே இசை நாடகப் பாடல்களுக்கான இராகங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| கோப வெளிப்பாடு | - | மோகன ராகம். |
| சோக வெளிப்பாடு | - | முகாரி ராகம். |
| தாலாட்டு | - | நீலாம்பரி ராகம். |

- இசை நாடக மரபில் "ஹார்மோனியம்" முக்கிய இசைக்கருவியாகும். நடிகன் தானே பாடி நடிக்கும் போது, இசையை மெருகூட்டவும், உணர்வுகளை அதிகரிப்பதற்கும் நடிகனுக்கு ஆறுதல் அளிப்பதற்கும் "ஹார்மோனியம்" இசை உதவி புரியும்.
- இசை நாடகங்கள் யாவும் இறைவனை வேண்டிப் பாடும் காப்புப் பாடலுடன் ஆரம்பமாகும்.
- அரச காட்சி, தேசவிசாரணை, வேட்டை, இதன் பின்பே அனேகமாகக் கதை ஆரம்பமாகும்.
- கீழைத்தேய மரபுகளின் அடிப்படையில் கதை மகிழ்ச்சியுடன் நிறைவடையும்.
- இறைவனை வேண்டிப் பாடப்படும் தேவாரம் அன்றேல் திருப்புகழுடன் ஆற்றுகை நிறைவடையும்.

**கணிப்பீடு:**

- இசை நாடகம் ஒன்றைத் தெரிவு செய்து அதில் வரும் பாடல்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளைப் பட்டியற்படுத்துக.
- இசை நாடகப் பாடல் ஒன்றினைப் பாடி நடித்துக் காட்டுக.
- இசை நாடகம் ஒன்று கட்டமைக்கப்பட்டுள்ள முறையினை எடுத்துரைக்குக.

**உசாத்துணைகள்:**


- வாழ்வும் அரங்கும் - காரை. செ. சுந்தரம்பிள்ளை.
  நடிகமணி. வி. வி. வைரமுத்து.
- ஆற்றுகை, நாடக அரங்கியலுக்கான

இதழ் 14, 15 - திருமறைக் கலாமன்றம்.

- இசை நாடகப் பாடல் மெட்டுக்கள் - திருமறைக் கலாமன்றம்.
- மரபுவழி இசை நாடகங்கள் ஒன்பது - தொகுப்பு செல்லையா மெட்ராஸ் மெயில்.

**தேர்ச்சி 4.0 :** சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கச் செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.4 :** இலங்கைத் தமிழ் அரங்கின் வளர்ச்சியில் இசை நாடகம் பெறும் இடத்தை ஆராய்ந்தறிவார்.

**செயற்பாடு 4.4.2 :** இசை நாடகப் பாடல்களைப் பாடி மகிழ்வோம்.

**பாடவேளை :** 09

**கற்றற் பேறுகள் :**

- இசை நாடகப் பாடல்களைப் பாடிக் காட்டுவார்.
- இசை நாடகப் பாடல்களைப் பாடி நடிப்பார்.
- இசை நாடகப் பாடல்களை நயந்துரைப்பார்.
- இசை நாடகப் பாடல்களுக்கு ஊடாக உணர்ச்சிகளை வெளிப் படுத்துவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இசை நாடகப் பாடல் தொகுப்பு.
- இசை நாடகக் காணொளிப் பேழைகள்.
- இசை நாடக ஒலிப்பேழைகள்.
- இசை நாடகங்கள் எழுதப்பெற்ற அட்டைகள்.
- வாத்தியக் கருவிகள்.

**அறிமுகம்:**

பயில் நிலையில் உள்ள இசை நாடகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடல்களைப் பாடிநடித்து மகிழ்தல் இங்கு முக்கியம் பெறுகின்றது.

**கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்:**

- குழுச் செயற்பாடு.
- செய்முறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- சுருதிப்பெட்டி / ஹார்மோனியத்தின் உதவியுடன் குரற் பயிற்சியை வழங்குங்கள். ஹார்மோனியத்தின் பல்வேறு சுருதிபேதங்களுடன் மாணவர்கள் குரலைச் சேர்க்க வழிப்படுத்துங்கள்.
- சல்லாரி / தாளவாத்தியத்தின் உதவியுடன் மாணவர்களை ‘‘லயக்’’ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்லுங்கள்.
- மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் அச்சடிக்கப்பெற்ற பாடல்களை வழங்கி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- குறிப்பிட்ட பாடல்கள் அடங்கிய ஒலி / காணொளியினை மாணவர்கள் கேட்டு / பார்க்க வழிப்படுத்துங்கள்.

- பாடல்களை மாணவர்கள் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, குழுவிற்கொன்றாகப் பாடலை வழங்கி, அப்பாடலுக்குரிய உணர்வு, சூழல் என்பவற்றை இனங்காண வழிப்படுத்துங்கள்.
- பாடலின் ஊடாக வெளிப்படும் பாத்திரப்பண்பு, உணர்வு, சந்தர்ப்பம் என்பவற்றிற்கு அமையப் பாடி நடிக்க வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- இசைநாடகப் பாடலைப் பாடிக்காட்டுக.
- இசை நாடகப் பாடல் ஒன்றினைப் பாடி நடித்துக் காட்டுக.

**உசாத்துணைகள்:**

- இசை நாடகப் பாடல், மெட்டுகள் - திருமறைக்கலாமன்றம்.
- மரபுவழி இசை நாடகங்கள் - (தொகுப்பு) செல்லையா மெற்றாஸ் மெயில். ஒன்பது

**பின்னிணைப்பு:**

1) எல்லைப்பிடாரியே எதிராக வந்தெம்
கொள்ளை உன் காவலாய் கொள்ளடி
முண்டாசு கட்டிவரும் நொண்டி வீரப்பனை
கொண்டாடிப் பூசைகள் செய்குவோம்
பித்துப் பிடித்திருக்கும் பேயனாம் நந்தனுக்கு
சித்தம் தெளிந்திடவே செய்திடுவோம்

(இராகம் - சங்கராபரணம், தாளம் - ஆதி, நாடகம்- நந்தனார் கீர்த்தனை)

2) சந்திரமதி - அருந்தவம் செய்தேனடா
அவதிக்குள் ஆனேனடா
பெரும்பழி சூழ்ந்ததடா - என் செல்வமே
பிரிய விதி வந்ததோ.

லோகிதன் - துன்பம் அணுகாதம்மா
தூயன் திருவடியை
அன்பாக நான் துதித்தேன் - என் அம்மணி
அறுத்து சேமித்து வாறேன்.

சந்திரமதி - பொன்னான வாயதனால்
என்ன நீ சொன்னாயடா
கண்மணி உன்னைப் பிரிய - என் செல்வமே
காலமும் வந்ததோடா

லோகிதன் - தனியே விடுத்தேன் என்று
தளராதே உன் மனதில்
இனிவான ஐந்தெழுத்தை - என் அம்மணி
எடுத்தோதிப் போய் வருவேன்

(இராகம் - ஹாயி, தாளம் - ஆதி, நாடகம்- சம்பூரண் அரிசந்திரா)

3) விருந்தன் - பசியால் உடல் மெலிந்தேன் - கொஞ்சம்
நசியாய் அமுதளிப்பாய்
பற்றுதே வயிறெனக்கு
சுற்றுதே தலைகிறுக்கு.

வள்ளி - புனத்தில் அமுதேது - அன்னம்
புசிக்க கிடையாது
போதகுரு நாதரே இப்
போதிதற்கு ஏது செய்வேன்.

விருந்தன் - கண்கள் பஞ்சடைய இரு காதும் செவிடாக
கஞ்சமுக வஞ்சிமனம் கொஞ்சம் இரங்குவாய் சணம்

வள்ளி - தேனும் தினைமாவும் கொஞ்சம் திருடித் தருவேனே
தின்று வயிற்றின் பசியை இன்று தணிப்பீரே சுவாமி

(இராகம் - ஆனந்தபைரவியை அடிப்படையாகக் கொண்டது.
தாளம் - ஆதி நாடகம்- வள்ளியம்மை நாடகம்)

4) பட்டபாடெல்லாம் போச்சு
பாழும் வயல் மிருகத்தாலே
(பட்டபா..)

போட்ட வயல் தன்னை சுற்றி
புஞ்ச நஞ்சை அத்தனைக்கும்
(பட்டபா..)

ஏருழுது விதைவிதைச்சு ஏற்றம் இறைச்சு நல்லாய்
பாடுபட்டு செய்ததெல்லாம் பாழாகிப் போச்சுதையோ
(பட்டபா..)

(இராகம் - ஹரிகாம்போதி, தாளம் - ஆதி (திஸ்ரநடை), நாடகம்- நல்லதங்காள்)

**உசாத்துணைகள்:**


- இசை நாடகப் பாடல் மெட்டுக்கள் - திருமறைக் கலாமன்றம்.
- ஆற்றுகை, நாடக அரங்கியலுக்கான இதழ் - திருமறைக் கலாமன்றம்.

**தேர்ச்சி 5.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களை நயப்பார்.

**செயற்பாடு 5.1.1 :** ஈடிப்பஸ் நாடக எழுத்துருவை நயப்போம்.

**பாடவேளை :** 10

**கற்றற் - பேறுகள் :**

- சோ.ஃ.போகிளீஸின் ஈடிப்பஸ் நாடக எழுத்துருவை வாசித்தறிந்திருப்பார்.
- அந்நாடக எழுத்துரு ஊடாக வெளிப்படும் நயப்பிற்குரிய அம்சங்களை முன்வைப்பார்.
- எழுத்துருப் பகுதி ஒன்றினை நாடக வாசிப்புச் செய்வார்.
- நாடக வாசிப்பின் போது எழும் உணர்ச்சிகளைப் பரிமாறுவார்.
- நாடகக் கதையைச் சுவைபட விவரிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துரு.
- ஈடிப்பஸ் மன்னன் காணொளி இறுவட்டு.
- Flash Cards.
- Youtube.

**அறிமுகம்:**

சோ.ஃ.போகிளீஸின் ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவை நாடக வாசிப்புச் செய்வதனூடு நயப்பிற்குரிய அம்சங்களை முன்வைப்பதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்:**

- வகிபாகச் சித்திரிப்பு (Role Play).
- குழுக் கலந்துரையாடல்.
- முன்னளிக்கை செய்தல். (Presentation)

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- எந்த ஒரு இலக்கியமோ கலைவடிமோ அழகியல் நயப்பிற்குரியதாயும் சமூகத்துக்கு யாதாயினும் ஒன்றைக் கூற முற்படுவதாயும் அமைய வேண்டும்.
- சோ.ஃ.போகிளீஸினால் எழுதப்பெற்ற திறஜெடி நாடகங்களில் ஒன்றே ஈடிப்பஸ் மன்னன் நாடகமாகும்.
- இது தமிழில் அரங்கியற் கண்ணோட்டத்தில் குழந்தை. ம. சண்முகலிங்கம் அவர்களினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- இன்று கிடைக்கப்பெறும் சோ.ஃ.போகிளீஸின் 7 நாடகங்களுள் ஈடிப்பஸ் மன்னன் நாடகமே மிகச் சிறந்த திறஜெடி நாடகமாகப் பலராலும் கருதப்பெறுகிறது.
- ‘விதியின் கையில் ஆட்டுவிக்கப்பெறுகின்ற மனித அவலமே” இதன் தொனிப்பொருளாகும்.

- அவல நாயகனின் மனித நிலைப்பட்ட துன்பம் அங்கு அகப்புற முரண்பாடுகளினூடாக வெளிப்படுத்தப்பெறுகிறது.
- ஈடிப்பஸ் நாடக எழுத்துருவை நயப்பதற்கு ஏதுவாக அமையும்:-

  - கதை
  - கதைப்பின்னல்
  - மோடி
  - பாத்திரங்கள்
  - சொல்லாடல் / மொழி
  - மேடைக்குறிப்புக்கள்

  தொடர்பாகக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
- வாசிக்கும் போது மேலெழும் உணர்வு நிலைகள் எழுத்துருவிற்கூடாக மேற்கிளம்பும் கருத்து நிலைகள், உள்ளுறைப் பொருள்கள், வியக்கவைக்கும் அம்சங்கள், மனதில் தோன்றும் காட்சிப் படிமங்கள், மொழியின் தாக்கவன்மை என்பன தொடர்பாகவும் கலந்துரையாடுங்கள்.
- மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

**செயலொழுங்கு:**

- சோ.ஃ.போகிளீஸின் 'ஈடிப்பஸ் மன்னன்' நாடகக் காட்சி ஒன்றினைக் காணொளியில் காண்பியுங்கள்.
- ஈடிப்பஸ் நாடக எழுத்துருவை எழுத்துரு நுட்பங்களுடன் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- வாசிப்பினிடையே எழும் உணர்ச்சிகள் பற்றிக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
- எழுமாறாகச் சில மாணவர்களைத் தெரிவு செய்து, நாடகக் கதையைச் சுவைபடவும் பகுதி பகுதியாகவும் ஒவ்வொருவராகக் கூறிப் பூரணப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- ஏனையோரை அவதானித்து, அவ்வேளை மனதில் தோன்றும் நடிப்பிற்குரிய அம்சங்களைப் பளிச்சிடு அட்டைகளில் எழுதி (Flash Card) நிறைவில் காட்சிப் பலகையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- நயப்பிற்குரிய அம்சங்கள் தொடர்பில் அவர்களது பக்க நியாயம் தொடர்பாகக் கலந் துரையாடுங்கள்.
- மாணவரால் பார்க்கப்படாத நயப்பிற்குரிய அம்சங்களை முன்னிறுத்திக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
- வாசிப்பு அரங்க உத்திகளுடன் / மேடை நாடக உத்திகளுடன் எழுத்துருவின் ஒரு பகுதியைச் செய்து பார்க்க வழிப்படுத்துங்கள்.
- நாடக வாசிப்பினூடு வெளிப்படும் நயப்பிற்குரிய அம்சங்கள் தொடர்பில் மீள வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
- நயப்பிற்குரிய அம்சங்களை உள்ளடக்கி விமர்சனம் ஒன்றினை ஆக்குவதற்கு வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- எழுத்துருவிற்கூடாக வெளிப்படும் நயப்பிற்குரிய அம்சங்களை முன்வைக்குக.
- எழுத்துருவை நாடக வாசிப்புச் செய்க.
- நாடகக் கதையைச் சுவைபட விவரிக்குக.

**உசாத்துணைகள்:**

- சோ.ஃ.போகிளீஸின் அன்டிகனி - தமிழ் மொழியாக்கம், குழந்தை ம. சண்முகலிங்கம்.
- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - கோகிலா மகேந்திரன்.
- மன்னன் ஈடிபசு - இரத்தினம்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0 :** | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **5.2 :** | விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களை நயப்பார். |
| **செயற்பாடு** | **5.2.1.1 :** | எழுத்துரு மூலக்கூறுகளை அறிவோம். |
| **பாடவேளை** | **:** | 03 |

**கற்றற் பேறுகள்:**

- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவிற்கு ஊடாக மேற்கிளம்பும் நாடக மூலக்கூறுகளைக் கண்டறிந்திருப்பார்.
- அம்மூலக்கூறுகளின் தன்மையை விவரிப்பார்.
- நாடக முழுமைக்கு மூலக்கூறுகளின் பங்களிப்பைக் கற்றுணர்ந் திருப்பார்.
- நாடக எழுத்துருவினூடு சமூகத்தை நோக்குவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- எழுதுதாள்.
- எழுதுகருவி.
- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துரு.

**அறிமுகம்:**

ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவினூடாக மேற்கிளம்பும் மூலக்கூறுகளைக் கண்டறிந்து கொள்வதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- திறனாய்வு முறை.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- எழுத்துருவின் மூலக்கூறுகள் பற்றி ஏற்கெனவே கற்றவற்றை நினைவுபடுத்திக் கலந் துரையாடுங்கள்.
- எழுத்துருவின் மூலக்கூறுகளான கரு, கதை, கதைப்பின்னல், மோதுகை, பாத்திரங்கள், சொல்லாடல், மோடி, மேடைக்குறிப்பு என்பன பற்றி எழுத்துருவின் உதவியோடு பகுப்பாய்வு செய்ய வழிகாட்டுங்கள்.
- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவினூடு அவை தொடர்பாக முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள். எடுத்துக்காட்டாக:-

  **கரு:-** நாடகத்தின் பிரதான செய்தி, பேசுபொருளே கருவாகும்.
- ஈடிப்பஸ் நாடகம் விதியின் பிடியிலிருந்து எவருமே தப்பித்தக்கொள்ள முடியாது என்பதை வலியுறுத்துகிறது.
- நாடகம் முழுமையும் கௌவரமான உயர் பீடத்தில் இருந்து ஈடிப்பஸ் தன் சினத்தாலேயே

ஒதுக்கப்படும் நிலைவரை காட்டப்படுகிறது.

- மனித விதியின் நிச்சயமற்ற தன்மையையே இது காட்டுகிறது.
- தனது விதியைக் கட்டுப்படுத்துவதில் மனிதனுக்குள்ள கட்டுப்பாடுகள் -
  - ஈடிப்பஸ் மக்களுக்கு உதவ விரும்புகிறான். ஆனால், விதி / இறைசித்தம் மனித உருவிலே தொழிற்படுகிறது. இறுதியில் அவன் விதியை ஏற்கிறான்.
  - மனிதன் விதியின் பால் தன்னை அர்ப்பணித்து விடவேண்டும். விதியைத் தவிர்த்தால் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும். தெய்வங்களுக்குத் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும்.
  - ஈடிப்பஸ், நகரின் பாவங்களைத் தன்மீது ஏற்றுத் தண்டனைக்காளாகி மற்றையோருக்கு மீட்பை அளிக்கிறான். விதியால் பலிப்பொருள் ஆகிறான்.
  - மனிதன் கடவுளோடு கொண்டுள்ள உறவு பற்றியும் மனிதன் தனது விதியைக் கட்டுப்படுத்த முயற்சிப்பது பற்றியதுமான கருப்பொருளைக் கொண்டது.
- **கதைப்பின்னல்:–**
  - சம்பவங்களின் நிரலொழுங்கு அன்றேல் கதை பின்னப்பட்டுள்ள ஒழுங்குமுறை கதைப்பின்னல் எனப்படுகிறது.
  - ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தில் விதியின் கையில் அகப்படாது மீள்வதற்காக ஈடிப்பஸ் குழந்தையாக இருக்கும் போது கொலை செய்யப்படுவதற்காக அனுப்பப்படுவதும் வேற்று நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட ஈடிப்பஸ் விதிப்படி தந்தையைக் கொலை செய்வது தாயைத் திருமணம் செய்வதும் அதன் பின்னரான துர்நிமித்தங்களின் விளைவால் ஈடிப்பஸ் தனது கண்களைத் தானே குத்திக் கொள்வதும் சிறப்பாகப் பின்னப்பட்டுள்ளது.
  - ஒரே நேரத்தில் கதை காலத்தால் முன்னும் பின்னும் இயங்குகிறது.

**பாத்திரங்கள்:–**

-நாடகத்தின் கதை மாந்தர்கள். இவர்கள் வெறுமனே பாத்திரங்களாக மட்டுமன்றிச் சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் இருப்பர். அரிஸ்டோட்டிலிய மரபுக்கேற்ப ஈடிப்பஸ் மன்னன் நாடகப் பாத்தரங்கள் படைக்கப்பட்டுள்ளன. திறஜெடியின் இலக்கணத்துக்கேற்ப அவல நாயகன் வீழ்ச்சியைத் தழுவிக் கொள்வதாய் அமைக்கப்பட்டுள்ளது. உளவியல், ஒழுக்கவியல் சார்ந்த குணவியல்களில் அதிக அக்கறை காட்டப்பட்டது.

- **சொல்லாடல்கள்:–**
  - பாத்திரங்கள் ஒன்றுடன் ஒன்றும் பாத்திரம் பார்ப்போருடனும், அன்றேல் பாத்திரம் தனக்குள் தானே பேசிக்கொள்வதும் சொல்லாடல் ஆகும். சொல்லாடலினுள் ஒலிக்குறி, வார்த்தைகள், மௌனம் என்பனவும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
  - பாத்திரங்களின் சொல்லாடலினூடு நாடகக்கரு மேற்கிளம்புவதை அவதானிக்கலாம்.
  - ஈடிப்பஸ் நாடகச் சொல்லாடலினூடு இதை விளங்கிக் கொள்ளலாம்.

உதாரணம்:-

ஈடிப்பஸ்: - இப்போ தந்தையின் குருதி சிந்தி விட்டவன் தாயின் புருஷன், இதுவே என் பெயர்

- **மோதுகை:–**
  - எதிரெதிர் நிலைமைகள் தமக்குள் தாம் முரண்பட்டு நிற்கும் நிலையே மோதுகை எனலாம். ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தில் தனிமனிதனுக்கும் இறைநியதிக்கும் (விதி) இடையிலான போராட்டமே மோதுகையாகச் சித்திரிக்கப்பெற்றுள்ளது.
- **காட்சியமைப்பு:–**
  - நாடகக் கதை நிகழும் தளம் / சூழல் காட்சியமைப்பினுள் உள்ளடங்கும். ஈடிப்பஸ் நாடகக் காட்சிகள் பெரும்பாலும் அரண்மனையை காட்சி பின்புலமாகக் கொண்டிருப்பதனைக் காணலாம். அவை சமூக பண்பாட்டுப் பின்புலத்தையும் வெளிப்படுத்தி நிற்கும்.
- **மேடைக் குறிப்புக்கள்:–**
  - நாடகம் பற்றிய மேலதிக விளக்கமளிப்பதாகவும், நாடகாசிரியரால் ஆற்றுகைக்காக வழிப்படுத்தப்படுகின்ற விளக்கக் குறிப்புகளாகவும் அமைபவை மேடைக்குறிப்புக்களாகும்.
  - மேற்படி விடயங்களை மனதிற்கொண்டு, எழுத்துருவின் முழுமைக்கு மூலக்கூறுகளின் பங்களிப்புப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - பின்வரும் செயற்பாட்டிலோ அன்றேல் பொருத்தமான பிறிதொரு செயற்பாட்டிலோ மாணவரை ஈடுபடுத்துங்கள்.

**செயலொழுங்கு:–**

- எழுத்துருவின் மூலக்கூறுகளான கரு, கதைப்பின்னல், மோதுகை, பாத்திரங்கள், சொல்லாடல், பாத்திர உணர்ச்சிகள், பாத்திரச் செயல்கள், காண்பியங்கள், மோடி, மேடைக்குறிப்புக்கள் எனும் தலைப்புக்களை ஒவ்வொரு அட்டையிலும், ஈடிப்பஸ் மன்னன் நாடகத்திலிருந்து ஒவ்வொரு விடயங்களுக்குமான எடுத்துக்காட்டுக்களைத் தனித்தனி அட்டைகளிலும் எழுதி, அனைத்தையும் சேர்த்து ஒன்றாக ஒரு கடதாசிப் பெட்டியில் இடுங்கள்.
- ஐந்து முதல் பத்து விநாடிகளுக்குள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு அட்டைகளை எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- ஒவ்வொரு தலைப்புக்கும் பொருத்தமான விடயப்பொருள் கொண்டோரை ஒன்றாகச் சேர்ந்து நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தாம் சேர்ந்து நின்றமைக்கான நியாயப்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- தவறாக இணைந்து கொண்டுள்ளோரை இனங்கண்டு, அதற்கான காரணத்தைக் கேட்டறிந்து, சரியான குழுவுடன் / சோடியுடன் இணைந்து கொள்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு தலைப்புக்கும் உரிய குழுவினர் தத்தம் விடயம் சார்பான கருத்துக்களை

முன்வைக்கவும், ஏனையோர் குறிப்பெடுத்துக்கொள்ளவும் இடமளியுங்கள்.

- நிறைவில் தொகுத்து மீளவலியுறுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளைக் கண்டறிக.
- மூலக்கூறுகளின் தன்மைகளை விளங்கிக் கூறுக.
- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்க.
- நாடக முழுமைக்கு மூலக்கூறுகளின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்க.

**உசாத்துணைகள்:**

- ஈடிப்பஸ் மன்னன் - தமிழில் குழந்தை ம. சண்முகலிங்கம்.
- கவிதையியல் - அரிஸ்டோட்டில் - தமிழில், அ. அ. மணவாளன்
- நாடக வழக்கு - குழந்தை ம. சண்முகலிங்கம்.
  தொகுப்பு, க. ஸ்ரீகணேசன்.

**தேர்ச்சி 5.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வோம்.

**செயற்பாடு 5.2.2.1** : ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளைப் பகுப்பாய்வு செய்வோம்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு நோக்கில் வாசித்திருப்பார்.
- எழுத்துரு மூலக்கூறுகள் ஈடிப்பஸ் மன்னன் எழுத்துருவிற்கூடாக மேற்கிளம்பும் விதத்தைப் பகுப்பாய்வு செய்வார்.
- எழுத்துருவாக்கத்துக்கு மூலக்கூறுகளின் பங்களிப்புக்களை விளங்கி முன்வைப்பார்.
- நெறியாளர் நிலையிலும் பார்ப்போர் நிலையிலும் நின்று எழுத்துரு ஏற்படுத்தும் தாக்கத்தை உணர்ந்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- ஈடிப்பஸ் மன்னன் - நாடக எழுத்துரு.
- $A_4$ தாள்கள்
- எழுதுகருவி.

**அறிமுகம்:**

ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவின் கரு, கதைப்பின்னல், மோதுகை, பாத்திரங்கள், சொல்லாடல், மேடைக்குறிப்பு போன்ற எழுத்துரு மூலக்கூறுகளை நெறியாளர் நிலையிலும், பார்ப்போர் நிலையிலும் நின்று பகுப்பாய்வு செய்தலே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- விவாதம்.
- முன்னளிக்கை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடக எழுத்துரு ஒன்றினைப் பகுப்பாய்வு செய்வதன் நோக்கம் பெரும்பாலும் தயாரிப் பதற்காகவே.
- பகுப்பாய்வின் மூலம் எழுத்துரு தரும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- பார்ப்போருக்கு அனுபவத்தைக் கொடுப்பதற்காகவே பகுப்பாய்வின் போது அனுபவத்தைப் பெற்றிருத்தல் அவசியம்.
- ஆரம்பத்திலிருந்து இறுதித் தீர்மானம் வரை செயலியக்கத்தைத் தீர்மானிக்கும் அனைத்தையும் பார்ப்போர் புரிந்துகொள்ளக்கூடியதாய் இருந்தால் அந்நாடகம் முழுமை பெற்றதாய் அமையும்

என்கிறார் அரிஸ்டோட்டில். இத்தகைய முழுமை பெறலுக்குப் பகுப்பாய்வு அவசியம்.

- முதலில் நெறியாளர் நிலையிலும் பின்பு பார்ப்போர் நிலையிலும் நின்று பகுப்பாய்வினை மேற்கொள்ள வேண்டும்.
- நெறியாளர் நிலையிலான பகுப்பாய்வின் போது எழுத்துரு ஒன்றினை முதலில் எவ்வித முற்கற்பிதமுமின்றிக் கதை அன்றேல் நாவல் ஒன்றினை வாசிப்பது போல் வாசிக்க வேண்டும்.
- அப்போதுதான் எழுத்துரு தரும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- தொடரந்து எழுத்துருவை ஆற்றுகை செய்வதை நோக்காகக் கொண்டு பகுதி பகுதியாகப் பல்கோணங்களில் ஆழமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.
- அவ்வாறு பகுப்பாய்வு நோக்கில் வாசிக்கும் போது பின்வரும் அடிப்படை வினாக்களை மனத்திருத்தி அஅவற்றுக்கான விடைகாணலின் அடிப்படையில் மீண்டும் மீண்டும் வாசித்துப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.
    - எழுத்துருவின் பேசுபொருள் யாது?
    - எந்த மோடிக்குரியது?
    - பாத்திரங்களின் பண்புகள் எவை?
    - இலக்குப் பார்ப்போர் யார்?
    - எந்த வகையான நாடகம்
    - மேலோங்கி நிற்கும் உணர்வு யாது?
    - நாடகம் தயாரிப்பதற்கான நோக்கம் யாது?
    - எவ்வகையான அரங்கில் தயாரிக்கப்பட உள்ளது?
    - சொல்லாமற் சொல்ல விளையும் கருத்துக்கள் எவை?
    - யதார்த்த நிலைமைகளோடு எவ்வளவு தூரம் பொருந்தி நிற்கின்றது,
    - அக்கால சமூக, பண்பாட்டு அம்சங்களின் செல்வாக்கு என்ன?
    - நாடகக் கதைப்பின்னல், சம்பவங்கள், சொல்லாடல், மொழிக்கையாட்சி, நாடகச் செயலியக் கங்கள், மோதுகை என்பன எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளன.
    - மேடைக் குறிப்புக்களினால் விளங்கிக் கொள்ளத்தக்க அம்சங்கள் எவை?

போன்ற பல்கோணங்களிலான வினாக்களுக்கு விடைகாணும் வகையில், ஈடிப்பஸ் மன்னனின் நாடக எழுத்துருவின் பகுப்பாய்வினை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, பார்ப்போரின் நிலையில் நின்று ரசனைக்குரிய அம்சங்கள், நாடகம் தரும் அனுபவம், ஏற்படுத்தும் உணர்ச்சித் தாக்கம். வெளிப்படுத்தும் செய்தி என்பவற்றை விளங்கிக் கொள்ள வேண்டும்.

- மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு, ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவை நெறியாளர் நிலையிலும் பார்ப்போர் நிலையிலும் நின்று பகுப்பாய்வு செய்ய வழிப்படுத்துங்கள்.

**செயலொழுங்கு**

- ஏலவே கற்றுக்கொண்ட, கிரேக்க அரங்கத் தகவல்கள், அரங்கத் தொழினுட்பங்கள் என்பன தொடர்பாகக் கலந்துரையாடி மீளநினைவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே நெறியாளர் நிலையிலும், பார்ப்போர் நிலையிலும் நின்று ஈடிப்பஸ் நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்து பக்கப்புரட்டி ஒன்றைத் தயார் செய்யுமாறு அறிவுறுத்துங்கள்.
- அவற்றைக் கண்டறிகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத் துங்கள்.
  - அரிஸ்டோட்டிலிய மரபு பற்றித் தொடர்புடுத்தி மூலக்கூறுகளைக் கண்டறிதல்.
  - கிரேக்கத்தின் பொது நம்பிக்கைகளாக இருந்த விதி, சாபம் என்பவற்றின் அடிப்படையில் வகுத்தமைக்கப்பட்டதொரு தொன்மத்தைக் கதையாகக் கொண்டிருத்தல்.
  - விதியால் விளைந்த அவலத்தை நாடி இந்நாடகம் ஆய்வு செய்வதால், ஈடிப்பஸின் நல்ல இயல்புகள் ஒவ்வொன்றாக வீழ்ச்சியடைந்து செல்வதாய் அமைந்துள்ளமை.
  - மனித முயற்சிகள் யாவும் விதியை மீறிச் செல்வதில்லை. ஆகையால் தன்னோடு தொடர்புடைய எதிர்வுகூறலைப் பொய்யாக்குவதற்குப் புறப்பட்ட ஈடிப்பஸ் தன் நெஞ்சறியா நிலையில் தன் தந்தையைக் கொன்றும் தாயை மணமுடித்தும், தான் தவிர்க்க முயன்ற எதிர்வுகூறலை இறுதியில் தானே நிறைவேற்றி வைப்பவனாக ஆகிவிடுதல் - நலமார்ந்த ஒன்று பாழ்பட்டுப் போதல்.
  - இதனையே சோ.்.போகிளிஸ் ‘மனிதனை விட மேலான, அதிகமான ஒன்றுடன் மனிதன் நடத்திய போராட்டங்கள்’ என்கிறார்.
  - தனிமனிதன் அவல நாயகன் / அவலநாயகியாலும் கூட்டுச் சமூகம் கோரஸாலும் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டன.
  - கிரேக்க திறஜெடியின் பிழிசாரமாகவும், பொது மனநிலையாகவும், ஒழுக்கப் போதனையாகவும், வாழ்வியற் தத்துவமாகவும் விளங்குவது தெய்வ சித்தமே.்.
  - கதைப்பின்னல் ஆவலைத் தூண்டும் எதிர்பார்ப்பு நிலையில் கையாளப்பட்டுள்ளமையால் முழுச் சிறப்போடு கட்டமைக்கப்பட்ட நாடகமாகக் கருதப்பெறுகிறது.
  - ஈடிப்பஸ் - பெயர்க்காரணம் - வீங்கிய பாதம்.
  - இணங்குவித்தல் - நம்பிக்கையார்வம் - பெருவேட்கை இம்மூன்றும் மனிதனைத் தீயனவற்றுக்கு இட்டுச் செல்லும் எனக் கிரேக்கரால் நம்பப்பட்டது. (சிந்தனை)
  - இந்நாடகத்தின் அவலத் தவறாக (Hamartia - tragic flaw) தந்தையைக் கொலை செய்து தாயை மனைவியாக்கியமையைக் குறிப்பிடலாம்.

    அறியாது புரிந்த தவறுகளுக்காகவும் தெய்வ நியதிப்படி தண்டனை பெற்றே ஆக வேண்டும் எனும் உள்ளுறை நியதிப்படி ஈடிப்பஸ் அதனை ஏற்றுக்கொள்கின்றான்.

- முதன்மைப் பாத்திரத்தின் நிலையில் நின்று பார்க்குமிடத்து அவலமுடிவு, பார்ப்போர் நிலையில் நின்று பார்க்குமிடத்து அலவத்தைத் தரிசிப்பதால் விளையும் உணர்ச்சிக் கனிவு - கதாஸிஸ்- என்ற நிலைக்கு இட்டுச் செல்கிறது.
- கிரேக்க சிந்தனை மற்றும் அரிஸ்டோட்டிலிய மரபுக்கமையப் பாத்திர வார்ப்புக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

  உதாரணம்: ஈடிப்பஸ், தெய்ரீசியஸ், கோரஸ்.
- இயேசு கிறிஸ்து எவ்வாறு மனிதர்களுடைய பாவமூட்டைகளையெல்லாம் தானே சுமந்து, சிலுவையில் அறையப்பட்டாரோ அவ்வாறே ஈடிப்பசும் தனது நாட்டு மக்களுக்காகத் துன்பம் சுமந்து தன்னைத்தான் அழித்துக் கொள்கிறான்.

  உதாரணம்:

  உதவியாளர்கள்:- “மேலும் கொடியது காணக் கிடந்தது
  அவளது உடையில் குத்திக் கிடந்த
  தங்க ஊசியை மன்னர் களைந்தார்
  தனது கைகளை உயர்த்தி, மன்னன்
  தனது கண்களைக் குத்திக் கொண்டான்...”

  இந்நாடகத்தின் பிரதான மோதுகையாகத் தனிமனிதனுக்கும் இறைநியதிக்கும் (விதி) இடையிலான போராட்டத்தைக் குறிப்பிடலாம்.

  இதனைப் பல்வேறு பாத்திரங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்துகின்றன.

  உதாரணம்: ஈடிப்பஸ் - ஈடிப்பஸ்
  ஈடிப்பஸ் - தெய்ரீசியஸ்
  ஈடிப்பஸ் - கோரஸ்
  ஈடிப்பஸ் - ஜொகஸ்ரா
  ஈடிப்பஸ் - கிறியோன் ஆகிய பாத்திரங்கள் முரண்பட்டுக்கொள்ளும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு கொள்ளலாம்.

  மேடைக்குறிப்புக்கள், மற்றும் கோரஸ் என்பவற்றினூடு காட்சிக்களம், நாடகச் செயலியக்கங்கள், இசை உணர்வு நிலை போன்ற அம்சங்களையும் கண்டறிந்து கொள்ள முடியும்.
- மலையடிவாரத்தில் அமைக்கப்பெற்ற வட்டவடிவ ஆடுகளத்தில் நிகழ்த்தப்பெறும் போது பெருந்தொகைப் பார்வையாளரைக் கருத்திற்கொண்டு, கூட்டுப் பாடகரான கோரஸ், குதி உயர்ந்த பாதணி, பிரதான நடிப்பிடம், வாயில் புனல் கொண்ட வேடமுகம், அரங்கப் பொறிகள் போன்ற அரங்க உத்திகள் கையாளப்பட்டமை.
- மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு, தாம் ஒழுங்குபடுத்திய பக்கப்புரட்டியின் துணையுடன் முன்வைப்புச் செய்வதற்கு எழுமாற்றாக ஓரிருவருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- நிறைவில் கலந்துரையாடற் களம் (Forum) ஒன்றினை மேற்கொண்டு கருத்தாடுவதற்கு

வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு நோக்கில் வாசிக்குக.
- எழுத்துருவாக்கத்துக்கு மூலக்கூறுகளின் அவசியத்தைக் கண்டறிந்து கூறுக.
- ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தின் மூலக்கூறுகள் கட்டமைக்கப்பெற்றுள்ள விதம் பற்றிக் கருத்துரைக்குக.
- நெறியாளர் நிலையிலும், பார்ப்போர் நிலையிலும் நின்று எழுத்துருவைப் பகுத்தாராய்ந்து முன்வைக்குக.
- நாடக எழுத்துருக்களைப் பகுப்பாய்வு செய்வதில் ஆர்வம் காட்டுக.

**உசாத்துணைகள்:**

- மன்னன் ஈடிப்பஸ் - - தமிழில், குழந்தை ம. சண்முகலிங்கம்.
- சோ.ஃபோகிளீஸின் அன்டிகனி - தமிழ் மொழியாக்கம், குழந்தை ம. சண்முகலிங்கம்.
- நாடக வழக்கு - குழந்தை ம. சண்முகலிங்கம், தொகுப்பு, க. ஸ்ரீகணேசன்.

**தேர்ச்சி 5.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களை நயப்பார்.

**செயற்பாடு 5.2.3.1** : ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவின் சமூக, பண்பாட்டுப் பின்புலங்கள் பற்றி மதிப்பீடு செய்வோம்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- நாடக எழுத்துரு எழுதப்பெற்ற மூலம், களம் மற்றும் கலாசாரப் பின்னணியை எடுத்துரைப்பார்.
- நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளில் சமூக பண்பாட்டுப் பின்புலத்தின் செல்வாக்கை இனங்கண்டிருப்பார்.
- ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவிற்கூடாக மேற்கிளம்பும் சமூக பண்பாட்டுப் பின்புலங்களைத் தேடியறிவதில் ஆர்வமுறுவார்.
- சமூக பண்பாட்டம்சங்களை மதிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- டிமை தாள்கள்.
- எழுதுகருவி.
- ஈடிப்பஸ் மன்னன் - நாடக எழுத்துரு.
- இணையத்தளம் - Youtube

**அறிமுகம்:**

சோ.:.போகிளீஸின் ஈடிப்பஸ் மன்னன் நாடகத்திற்கூடாக வெளிப்படும், அக்கால கிரேக்கத்தின் சமூக பண்பாட்டம்சங்களைப் பற்றி அறிந்து கொள்வதே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கண்டறி முறை.
- ஆய்வு.
- விரிவுரை.
- குழுக் கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

பின்வரும் விடயதானங்களை மைபப்படுத்திக் கலந்துரையாடலைக் கட்டமையுங்கள்.

- நாடக எழுத்துரு ஒன்றின் பாத்திரங்கள், சொல்லாடல், கதைப்பின்னல், கரு, மொழிக் கையாள்கை, மோடி, மேடைக்குறிப்பு, மோதுகை, காட்சியமைப்பு என்பவற்றினூடாக, அக்கால சமூக, பண்பாட்டுப் பின்புலங்களைக் கண்டறிவதில் கவனம் செலுத்துவது சிறப்பானது.
- ஈடிப்பஸ் மன்னன் நாடகம் எழுதப்பெற்ற காலத்து அரசியல், சமூக நிலைமைகள் மற்றும் ஆசிரியரது சமூகப் பின்னணி பற்றியும் நோக்குதல் வேண்டும்.

- கிரேக்க அரங்கப் பாரம்பரியம் பருவகாலத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது. சமூகச் சீர்மையும், மக்கள் தம் பகட்டாரவாரமும், சமயச் சடங்காசாரமும் விஞ்சிய, கரணம் கலந்து சங்கமிக்கும் சமய - சமூக விழாக்களிலேயே அரங்கு வளர்ந்து வந்துள்ளது.
- புராதன கிரேக்கத்தில் காலந்தோறும் நிகழ்ந்து வந்த அந்நியப் படைபெயடுப்புக்களை எதிர்கொண்டு, நாட்டின் சுதந்திரத்தைக் காக்கும் யுத்தங்களில் ஈடுபட்டு, வெற்றி தோல்விகளில் பங்கெடுத்த சமூகத்தின் ஓர் உறுப்பினராக நாடகாசிரியரும் இடம்பெற்றுள்ளார்.
- அக்காலத்தில் கிரேக்கத்தின் எதென்ஸ் நகரம், அறிவியல் வீரியமும், ஆன்மீக ஞானமும் ஊற்றெடுத்து, மகத்தான இலக்கியங்களும் கலைகளும் தோன்றி வளர்ந்த பொற்காலத்திற்குரிய இடமாகக் கருதப்பட்டது.
- கலைகள், மெய்யியல், அறிவியல், அரசியல், காவியம் என அனைத்தத் துறைகளிலும் கிரேக்கம் உச்சத்தைத் தொட்டு நின்ற உன்னத காலப் படைப்புக்களில் இதுவும் ஒன்றாகும்.
- திறஜெடி நாடக மேதைகள் நால்வருள் ஒருவரான சோ.ஃ.போகிளிஸால் இந்நாடகம் எழுதப் பெற்றுள்ளது.
- கிரேக்கர் விண்டிட முடியா ஆன்மீக அனுபவங்களைத் தமது திறஜெடி நாடகங்கள் மூலம் விண்டிட முனைந்தனர்.
- புறக்கண்களாலும், பௌதிக உலகின் நியாயங்களாலும் நிறுவமுடியாதவற்றைத் தமது அறிவைக் கொண்டு கண்டு கொண்டமை- கீழைத்தேயச் சிந்தனை மரபையும் தம்முள் கண்டு கொண்டனர்.
- கிரேக்கர் சட்டத்துக்கே கட்டுப்பட்டனர். தாமே சுயமாகச் சிந்தித்து முடிவுக்கு வந்தனர்.
- வாழ்வு என்பது "ஒரு நிழலின் கனவு" எனக் கண்டு கொண்டனர்.
- ஒரு சமூகத்தின் அரங்க நடவடிக்கையானது, அவர் வாழும் பிரதேசத்துப் பௌதிக நிலைகளாலும், அவர்தம் வாழ்வியற் சிந்தனைகளாலும் கட்டியெழுப்பப்படுகிறது.
- கிரேக்கர் விதி, சாபம் என்பவற்றுக்குக் கட்டுப்பட்டிருந்தனர்.
  - மேலும் எழுத்துருவிற்கூடாக வெளித்தெரியும் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**சோஃபோகிளீஸின் ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருப் பற்றிய சில குறிப்புரைகள்.**

**நாடகாசிரியர் – சோஃபோகிளீஸ் (Sophocles)**

- ஈடிப்பஸ் மன்னன் நாடகாசிரியர் சோ.ஃ.போகிளீஸ் ஆவார்.
- இவர் எதென்ஸ்சின் கொலொனஸ் எனும் பட்டணத்தில் பிறந்தார்.
- இவர் கி.மு 496 - 406 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்தாரெனக் கூறப்படுகிறது.
- கிரேக்கத்தின் பொற்காலத்தில் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்த இவர் அனைத்துக் கலைகள் பற்றியும் கற்றறிந்ததோடு, அரசில் பல உயர் பதவிகளிலும் அங்கம் வகித்தார்.
- ஆடல், பாடல், நடிப்பு, அரங்க ஆற்றுகை நுட்பம் என யாவையும் நன்கு அறிந்திருந்த

இவர் சிறந்த நாடகங்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

- ஆயினும் அவற்றுள் 7 நாடகங்களே இன்று கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.
- இராணுவத் தலைவராக, அரசியல் ஆலோசகராக, வழிபாடு தொடர்பான மதகுருவாக எனப் பல்துறை ஆளுமையாக விளங்கினார்.

**ஈடிப்பஸ் மன்னன் – நாடக எழுத்துரு (Oedipus The King)**

- கிடைக்கப்பெற்றுள்ள இவரது நாடகங்களுள் மிகச் சிறந்த திறஜெடி நாடகமாக 'ஈடிப்பஸ்' மன்னன் நாடகம் விளங்குகிறது.
- இது தீபிய புராணத்தை அடிப்படையாகக் கொண்டது.
- கி.மு 429 - 420 இற்கு இடைப்பட்ட காலத்தே எழுதப்பெற்றதாக் கூறப்படுகிறது.
- இக்கதையுடன் தொடர்புடைய இவரது ஏனைய இரு நாடகங்களாவன:-

  - அன்டிகனி (Antigone கி. மு 442 - 441)

  - கொலொனொஸில் ஈடிப்பஸ் - (Oedipus at Colonus கி. மு 401 - 405)

  என்பனவாகும்.
- விதி, சாபம் என்பவற்றிலிருந்து, எவருமே தப்பித்துக் கொள்ள முடியாதென்ற சிந்தனையைக் கிரேக்கர் முற்று முழுதாக நம்பினார்.
- இக்கருத்தினை மீறமுடியாத நிலையில் ஈடிப்பஸ் நாடகமும் கட்டமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, தனது தலைவிதியிலிருந்து ஈடிப்பஸால் தப்பித்துக் கொள்ள முடியாது தீராப் பழிகேட்டுக்கு ஆளானமையைக் குறிப்பிடலாம்.
- தொன்மையான அகக் காட்சிகளினூடு புதிய / சமகால வாழ்வின் நிகழ்வுகளை நோக்குவதாக இந்நாடகம் படைக்கப்பட்டுள்ளது.

  உதாரணம்: ஈடிப்பஸ் மன்னன் கதையினூடு அக்கால அரசியல், சமூக நிலைமைகள் மீள வலியுறுத்தப்பட்டுள்ளன.
- மன்னராட்சி முறையிலுள்ள சர்வாதிகாரத்தன்மை, வல்லாண்மை என்பன அதிகாரத்திலிருப்போர், ஆளப்படுவோர் தொடர்பான பொது நியதிகள் பலவற்றை என்றும் வெளிக்காட்டுவதாய் அமைகின்றன.
- மனித வாழ்வின் நிகழ்வுகள் யாவற்றையும், அனைத்திலும் மேலான கடவுளர் கட்டுப்படுத்துகின்றனர் என்பதோடல்லாமல் மனிதனும் காரணமாகிறான் என்பதையும் ஆசிரியர் சொல்லாமற் சொல்ல விளைகிறார்.
- அதாவது, மனித வாழ்வின் நிகழ்வுகள் யாவும் தெய்வ சித்தத்தால் நடப்ன என்ற கருத்தை வலியுறுத்தி, மனிதனைப் பொறுப்பற்றவனாக்காது, மனிதனது முடிவுகளுக்கும் அவனது செயற்பாடுகளுக்கும் அவனே காரணம் என்பதையும் மறைமுகமாக வலியுறுத்துகிறார்.

  எடுத்துக்காட்டாக:- ஈடிப்பஸ் கொறிந்திலிருந்து தப்பியோடிய போதிலும் ஈற்றில் விதிவழி வகுத்த பழிகேட்டுக்கு ஆளாகினான். எனினும் அவனிடையே காணப்பெற்ற உடலியல்,

உளவியல் சார் பலவீனங்களும் அவன் எடுத்த முடிவுகளுமே அவனை இழிநிலைக்குத் தள்ளின - சடுதியில் கோபமுற்று மன்னர் லேயஸை கொலை செய்தமை, ஜொகஸ்ராவைத் திருமணம் புரிந்தமை, தீர்க்கதரிசியின் மீது சினமுற்று, வார்த்தைகளை வெளித்தள்ளியமை.

- வாழ்வு என்பது கசப்பானது அதனிடையே இனிமையும் உறைந்திருக்கிறது. அதனூடு ஏற்படுத்தப்படும் பரிவும் பயமும் பார்ப்போரிடத்தே ஏற்படுத்தும் உளத்தூய்மை இன்றைய ஆற்றுப்படுத்தல் செயன்முறையாகிய சீர்மியப் பணியுடன் ஒப்புநோக்கத்தக்கது.
- அவல நாயகன் / நாயகியிடமுள்ள யாதாயினும் ஒரு பலவீனம் இழிநிலைக்கு இட்டுச் செல்லும் நிலைமையை உணர முடியும்.
- தனிமனித சுதந்திரம் (பிரதான பாத்திரங்கள்) கூட்டு மனித சுதந்திரம் - நாட்டின் சுதந்திரம் (கோரஸ்) என்பன வெளிக்கொணரப்பட்டுள்ளமை; கூட்டு மனித நலனிலேயே தனிமனித நலன் தங்கியிருப்பது கோரஸ் மூலம் சுட்டப்படுகிறது.

மேலும்:-

- அன்றைய நகர அரசின் ஆட்சி முறையும் சமூகத் தொடர்பும்.
- தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவம்.
- புதிரை விடுவித்தலும் சிம்மாசனத்தை ஏற்றுக் கொள்ளலும்.
- யாத்திரை செல்லல்.
- பலியிடுதல்.
- அரசுரிமையுடன் அரசியையும் உரிமையாக்குதல்.
- துர்நிமித்தங்களுக்கான காரணம் இழிசெயல்.
- பாறையில் ஆணி அறைந்து கொலை செய்யும் மரபு.
- முதியோர் - மிகப்பெரும் பொக்கிஷமாக மதிக்கப்பெறும் நிலை - கோரஸ்.

போன்றன தொடர்பாக எழுத்துருவின் உதவியோடு குழுக்கலந்துரையாடல் மூலம் கண்டறிய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- ஈடிப்பஸ் மன்னன் எழுத்துரு எழுதப்பெற்ற காலத்தின் பின்னணியை விளக்குக.
- எழுத்துருவிற்கூடாக வெளித்தெரியும் சமூக பண்பாட்டுப் பெறுமானங்களைக் குறிப்பிடுக.
- எழுத்துருவினூடு பெற்றுக்கொள்ளும் கிரேக்கச் சிந்தனைகளைப் பட்டியலிடுக.
- எழுத்துருவினூடு தோன்றும் சமூகப் பெறுமானங்களை இன்றைய கால நிலைமைகளோடு ஒப்பு நோக்குக.
- ஈடிப்பஸ் மன்னன் எழுத்துருவை ஒரு சிறந்த திறஜெடி நாடகமாகக் கொள்வதற்கான ஆதாரங்களை முன்வைக்குக.

**உசாத்துணைகள்:**

- சோ∴போகிளீஸின் அன்டிகனி - தமிழ் மொழியாக்கம்,

குழந்தை ம. சண்முகலிங்கம்.

- நாடக வழக்கு - தொகுப்பு க. ஸ்ரீகணேசன்.
- கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - கோகிலா மகேந்திரன்
- மன்னன் ஈடிப்பஸ் - இரத்தினம்.

**தேர்ச்சி 5.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.3 :** நாடக எழுத்துருவானது ஆற்றுகையாக மாற்றப்பட்டுள்ள விதத்தை அறிந்து கொள்வார்.

**செயற்பாடு 5.3.1 :** ஈடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவின் காட்சித் துண்டம் ஒன்றை ஆற்றுகை செய்வோம்.

**பாடவேளை :** 05

**கற்றற் பேறுகள்:**

- ஈடிப்பஸ் மன்னன் நாடகக் கருவானது ஆற்றுகையில் இழையோடியுள்ள விதத்தை அறிந்துரைப்பார்.
- சொற்கள் காட்சி வடிவம் பெறும் விதத்தை நயந்துரைப்பார்.
- ஆற்றுகையை நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- ஈடிப்பஸ் மன்னன் நாடகக் காணொளிக் காட்சித் துண்டங்கள். (இறுவட்டு / Youtube)
- ஈடிப்பஸ் மன்னன் - நாடக எழுத்துப் பிரதி.

**அறிமுகம்:**

ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தின் காட்சித் துண்டம் ஒன்றினைப் பகுப்பாய்வு நோக்கில் ஆற்றுகை செய்தலே இங்கு எதிர்பார்க்கப்பெறுவதாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- செய்முறை.
- கலந்துரையாடல்.
- வகிபாகமேற்றல் (Role Play)

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- சோ∴போகிளீஸின் ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தின் காட்சித் துண்டங்கள் சிலவற்றை (வெவ்வேறுபட்ட நெறியாள்கை வெளிப்பாடு) காண்பியுங்கள்.
- ஏற்கெனவே எழுத்துரு வாசிப்புச் செய்து பகுப்பாய்வின் மூலம் நயக்கப்பெற்ற விடயங்களைக் குறித்துக் கொள்ள இடமளியுங்கள்.
- வகுப்பறையைச் சுற்றியுள்ள சுவரிலோ அன்றேல் பொருத்தமான இடங்களிலோ ஆங்காங்கே ஈடிப்பஸ் நாடகக் கரு, மோடி, மோதுகை, பாத்திரங்களின் இயல்புகள் என்பவற்றைச் சுருக்கமாக எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தில் இருந்து பின்வரும் எழுத்துருப் பகுதிகளில் ஒன்றினையோ அன்றேல் தாம் விரும்பிய ஒரு பகுதியையோ தெரிந்தெடுத்து ஆற்றுகை செய்ய வழிப் படுத்துங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, தெரிவு செய்யப்பெற்ற ஒரு காட்சியை மாத்திரம் தத்தமது

மனப்பதிவுகளுக்கேற்ப அளிக்கை செய்யுமாறு அறிவுறுத்துங்கள்.

பகுதி – **I**

கோரஸ்:- நல்ல வார்த்தைகள் விவேகி ஒருவரால் செவிமடுத்தல் கருத்திற் கொள்ளத்தக்கவை. மிக விரைந்த சிந்தனைகள் அரிதாகவே பாதுகாப்பானவையாக இருக்கும்.

(என்னும் பகுதியிலிருந்து)

சிறியோன்- நான் இத்தகைய சூழ்ச்சி எதனையும் செய்த குற்றவாளியாயின் கடவுளரின் சாபம் என்மீது என்றென்றும் கிடப்பதாக

(என்னும் பகுதிவரை)

பகுதி – **II**

ஈடிப்பஸ்:- என் மனையாளே! எனக்கு நீ சொன்னவை என்னைக் குழப்பிவிட்டன. எனது மனம் பின்னோக்கிச் செல்கிறது. ...

ஈடிப்பஸ் - ஓ... மனையாளே நான் அஞ்சுகிறேன். நான் அதிகம் பேசிவிட்டேன். அஞ்சுகிறேன்; எனவே இந்த மனிதனை நான் காண வேண்டும்.

பகுதி – **III**

ஈடிப்பஸ்:- அவன் சொல்வதைக் கேளுங்கள்! இத்தகைய வார்த்தைகள் - அரசின் மீது இத்தகைய அவதூறுகள் ஒரு புனிதரைக் கூட சினத்துள் தள்ளும்.

தெய்ரீசியஸ் - சிறியோனுமல்ல, உனது எதிரி நீயேதான்...

- தெரிந்தெடுக்கப்பெற்ற நாடக எழுத்துருப் பகுதியை அளிக்கை செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்களை வலியுறுத்துங்கள்.
- கிரேக்க திறஜெடி நாடகங்கள் பெரும்பாலும் மொழி / சொல்லாடலில் தங்கியிருப்பவை (Verbal Oriented).
- கிரேக்க நாடகங்களில் கோரஸ் மிக முக்கிய பங்கு வகிக்கும்.
    - உணர்வினை முனைப்புறுத்தும்.
    - மீளவலியுறுத்தும்.
    - நாடக ஓட்டத்தை இணைக்கும்.
    - எடுத்துரைஞர் போற் தொழிற்படும்.
    - கருவினை அழுத்திச் செல்லும்.
- சொல்லாடலின் போது மொழியின்
    - ஏற்ற இறக்கம்.
    - தொனி.
    - வீச்சு.
    - புறத்தெறிகை.
    - உணர்ச்சி வெளிப்பாடு என்பவற்றையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

- சொல்லாடலின் போது பாத்திரக் குணாம்சங்களும் கவனத்திற் கொள்ளத்தக்கன.

  **உதாரணம்:**

  கோரஸ் - பக்குவப்பட்ட கிரேக்க முதியோரைப் பிரதிபலிப்பதால் நிதானம், உறுதிப்பாடு என்பவற்றுடன் பேசும்.

  **ஈடிப்பஸ்: -**

  - வீங்கிய பாதம் உடையவனாதலால் பௌதிகத் தேற்றத்திலும் சிறு குறைபாடு உடையவன். மேலும், திடீரெனக் கோபமுறுதல், சடுதியாக முடிவெடுத்தல் போன்ற உளவியல் சார் பலவீனமுடையவனாகவும் இருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கது.
  - சொல்லாடலின் போது ஒலிக்குறி, மௌனம் எனபனவும் கருத்திற் கொள்ளவேண்டியனவாகும். உதாரணம் -

  **ஈடிப்பஸ்**

  ஆ... அங்குதான் அவனது புத்திசாதுரியம் தெரிகிறது .... (ம்)... போக்கிரிச் சாத்திரி.

  **தெய்ரீசியஸ்**

  - பழுத்த அனுபவமிக்க ஒரு தீர்க்கதரிசி, ஊனக்கண்ணுடையோனாகிலும் ஞானக்கண் எனும் அகக்கண் (மெய்யறிவு) உடையோன். அனுபவ முதிர்ச்சியின் விளைவால் சொல், செயலில் அவதானம் மிக்கவர்.

  **ஜொகஸ்ரா**

  - தனது தனயனே தனது துணைவன் என்பதை அறிந்து வெம்பி, மனம் புழுங்கி, அல்லற்பட்டு, அவதியுறும் பெண்ணவள் முறைதவறி ஈன்றெடுத்த பிள்ளைகளின் தாயவள் எனும் மனக்கொதிப்பிற்குட்படுபவள்.
- இத்தகைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பொருத்தமான பாத்திரச் செயல்கள், பாத்திர அசைவுகள், பாத்திர ஊடாட்டம், பாத்திர எதிர்வினை என்பவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்த ஆலோசனை வழங்குங்கள். ஏனெனில் பாத்திரச் செயலியக்கங்களினுடே கரு வளர்த்துச் செல்லப்படுகிறது.
- மேலும், நாடகச் சொல்லாடல்கள் செயல்பொதிந்தவை (Action Packed Words) என்பதை நினைவிற் கொண்டு அவற்றினூடே மறைந்துள்ள நாடகச் செய்கைகளை இனங்கண்டு வெளிப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- கிரேக்க நாடகங்கள் இசையால் விளைந்தவை. எனவே கிடைக்கப்பெறும் கருவிகளின் துணையுடன் அன்றேல் குரல்வழி இசைப் பிரயோகத்துடன் ஆற்றுகைப் பகுதியைத் திட்டமிட வழிப்படுத்துங்கள்.
- கிரேக்கப் பண்பாடு பற்றி ஏலவே கற்றவற்றை மீளநினைவுறுத்தி, பாத்திரங்களுக்குப் பொருத்தமான வேட உடை, ஒப்பனையைத் தமது கலாசாரத்தோடு பொருந்தத்தக்க வகையில் உருவாக்கிப் பயன்படுத்த உதவுங்கள். (விரும்பின் சிறிதளவில் காட்சியமைப்புக்களும்

செய்யலாம்)

- மாணவர்களால் தெரிவு செய்யப்பெற்று ஆக்கப்பெற்ற ஆற்றுகையை நிகழ்த்திக்காட்ட இடமளியுங்கள்.

  (அனைத்துக் குழுக்களும் ஒரே பகுதியையே ஆற்றுகை செய்ய வேண்டும் என்பதை உறுதிப்படுத்துங்கள்.)
- ஒவ்வொரு குழுவினதும் ஆற்றுகை முறைமை / வெளிப்பாட்டு முறைமை வேறுபட்டு நிற்பதை உணரச் செய்து, அது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- எழுத்துருவிற்கூடாக மேற்கிளம்பும் செய்திகளைத் தழுவியவாறு ஆற்றுகைகள் அமைந்திருப்பின் அவற்றிடையேயான வேறுபாடுகள் பெரியளவில் கவனத்திற் கொள்ளத்தக்கதன்று.
- ஏனெனில் நெறியாளரது பார்வைக் கோணத்திற்கேற்ப ஆற்றுகை வேறுபடுவது இயல்பே. ஆயினும், எழுத்துருவிற்குப் புறம்பான / பொருத்தமற்ற வியாக்கினிப்புக்கள் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அது தொடர்பான நியாயப்பாடுகள் பற்றிக் கலந்துரையாடித் தெளிவுபடுத்தல் அவசியமாகும்.
- நிறைவில் ஆற்றுகைகள் தொடர்பான மீளாய்வு ஒன்றினைச் செய்து கொள்ளல் சிறந்தது.

**கணிப்பீடு:**

- நாடகக் கருவானது பாத்திரச் சொல்லாடலுக்கிடையில் இழையோடியுள்ள விதத்தை அறிந்துரைக்க.
- கதைப்பின்னலினூடு கதை வளர்த்துச் செல்லப்படும் முறைமையை விளக்குக.
- சொற்களினுள் பொதிந்துள்ள காட்சி வடிவம் பற்றி நயந்துரைக்குக.
- உமக்குப் பிடித்த பாத்திரம் பற்றிக் கருத்துரைக்குக.

**உசாத்துணைகள்:**

- சோ.்.போகிளீஸின் அன்டிகனி - தமிழ் மொழியாக்கம், குழந்தை ம. சண்முகலிங்கம்.
- மன்னன் ஈடிப்பஸ் - தமிழ் மொழியாக்கம், குழந்தை ம. சண்முகலிங்கம்.
- மன்னன் ஈடிப்பஸ் - இரத்தினம்.

  இணையத்தளம் - Youtube.

**தேர்ச்சி** **5.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.1** : விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களை நயப்பார்.

**செயற்பாடு** **5.1.2** : கோடை நாடக எழுத்துருவை நயப்போம்.

**பாடவேளை** : 10

**கற்றற் பேறுகள்** :

- நாடக எழுத்துருக்களை வாசித்தறிந்திருப்பார்.
- நாடக எழுத்துரு ஊடாக வெளிப்படும் நயப்புக்குரிய அம்சங்களை முன்வைப்பார்.
- எழுத்துருவின் சில பகுதியை நாடக வாசிப்புச் செய்வார்.
- நாடக வாசிப்பின் போது எழும் உணர்ச்சிகளைப் பரிமாறுவார்.
- நாடகக் கதையைச் சுவைபடச் விவரிப்பார்.
- வாசிப்பின் வழியாக அறிந்து கொண்ட மோதுகை பற்றி விளக்கம் தருவார்.
- நாடகச் சொற்கள் மற்றும் சொல்லாடலின் வன்மையை உணர்ந் திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நாடக எழுத்துரு - மகாகவி து. உருத்திரமூர்த்தியின் கோடை.

**அறிமுகம்:**

மகாகவியின் படைப்புக்களில் உன்னதமான படைப்பாகக் கருதப்பெறுவது கோடை நாடகம் ஆகும். இது அந்நிய ஆட்சியினால் யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று எதிர்நோக்கிய பிரச்சினைகள், அவர்களின் தகிப்பு, அதன் கலை வெளிப்பாடு போன்றவற்றை ஆராய்ந்து நயப்பது இங்கு எதிர்பார்க்கப்பெறுகிறது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- குழுக் கலந்துரையாடல்.
- கருத்துரைகள்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நல்ல நாடக எழுத்துரு ஒன்றினை வாசித்து நயப்பதற்காக அதன் அடிப்படையான அம்சங்களில் கவனஞ் செலுத்துவது அவசியம் ஆகும்.
- கோடை நாடகத்திற்கான கரு உருவான விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கோடை நாடக எழுத்துருவை நயப்பதற்கு ஏதுவாக அமையும் கதை, கதைப்பின்னல், மோடி, பாத்திரங்கள் போன்றவை கையாளப்பட்ட விதம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- நாடக எழுத்துருவில் கையாளப்பெற்றுள்ள மொழியின் தாக்கவன்மை பற்றிக் கலந் துரையாடுங்கள்.
- தம்மைக் கவர்ந்த பாத்திர நிலைமை, சம்பவங்கள் என்பன பற்றிக் கேட்டறியுங்கள்.

- நாடக எழுத்துரு ஊடாக மேற்கிளம்பும் கருத்து நிலைபற்றி வினவுங்கள்.
- நாடக நயப்பிற்குப் பாத்திரங்கள், சொல்லாடல்கள், மேடைக்குறிப்புக்கள் உதவிய விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கோடை நாடக எழுத்துருவில் வெளிப்படையாகத் தெரியும் அர்த்தம் பற்றியும் உள்ளுறையாகத் தெரியும் அர்த்தம் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- கோடை நாடக எழுத்துரு சுட்டி நிற்கும் யதார்த்தப் பண்புகளை விவரியுங்கள்.
- கோடை நாடக எழுத்துருவின் மூலம் அக்கால நிலைமைகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- எழுத்துரு வாசிப்பின் ஊடாகத் தம்மை வியக்க வைத்த, மகிழ்வைத்தந்த அன்றேல் துன்பப்படுத்திய விடயங்கள் பற்றிக் கூறச் செய்யுங்கள்.
- வாசிக்கும் போது மனதிற் தோன்றிய காட்சிப் படிமங்களை வினவியறியுங்கள்.

**கோடை நாடகம் பற்றிச் சில குறிப்புரைகள்**

- கோடை நாடகம் மகாகவி து. உருத்திரமூர்த்தி அவர்களால் 1966ஆம் ஆண்டு எழுதப்பெற்றது.
- இது பா நாடக வகையைச் சார்ந்தது.
- கோடை நாடகத்தின் முதன் மேடையேற்றம் 1969 - 08- 15 ஆம் திகதி, லும்பினி அரங்கு, கொழும்பில் அ. தாசீசியஸ் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டது.
- இந்நாடகம், கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மேடையேற்றப்பெற்றது,
- அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியினால் கிராம சமுதாய மனப்பாங்கில் ஏற்பட்ட விளைவுகள், தாக்கங்கள் முரண்பாடுகள் போன்றன கோடையின் அடிப்படையாகும்.
- கோடையின் பிறப்புப் பற்றி மகாகவி கூறுகையில்

  ‘‘நாடகம் பலப்பல நடக்கக் காண்கிறோம்.
  ஆடுவோர் தேவரும் அரக்கரும் ஆன
  புராண காலப் பொய்களே அதிகம்.
  ஆடையும் அணிகளும் மினுங்கும் அரிய
  அரசர்களுடைய பெருமைகள் கூறும்
  சரித்திரக் கதைகளும் சரிக்குச் சரியே.

  அச்சிலே அடித்த பாத்திரங்கள்
  அச்சிலே அடித்த சம்பவங்கள்
  கண்டு கண்டு கவலை கொண்டோம்.

  புதிய களங்கள் புதிய போர்கள்
  புதிய வெற்றிகள், இவைகளைப் புனையும்
  நாடகம் வேண்டி நம்மொழி கிடந்தது

கோடை எழுதும் காலமும் குதிர்ந்து''

- இதனை நாம் ஆராயும் போது, 1937 ஆம் ஆண்டு நம்நாடு பிரித்தானிய மகாராணியின் பெயராலே ஆளப்பட்டு வந்தது.
- பிரித்தானியரின் ஆட்சிமுறை, கல்வி, சட்டம் பொருளாதார நிலைமைகள், அடிமைத்தனங்கள் போன்றவற்றால் எதிர்நோக்கிய பிரச்சினைகள், எமது கலைகள் புறக்கணிக்கப்பட்டு பிரித்தானியரின் கலைகள் உட்புகுத்தப்படும் விதம் போன்ற நிலைமைகளைக் கருத்திற் கொண்டு, அக்கால சமூகத்தினை முழுமையாகச் சித்திரிக்கும் விதமாகக் கோடை நாடக எழுத்துரு அமைக்கப்பெற்றுள்ளது.
- கோடை நாடக எழுத்துருவினை நயப்பதற்குப் பாத்திரங்கள், அவற்றின் சொல்லாடல்கள், மேடைக் குறிப்புகள், காட்சிகள் போன்றன துணைபுரிகின்றன.
- கோடை நாடகத்தில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தத்தமது ஆழமான கருத்துக்களைச் சொல்லாடல் மூலம் வெளிப்படுத்துவது நயக்கக் கூடியதாக உள்ளது.

உதாரணமாக:-

பஞ்சையர் எனும் பாத்திரம் எதிர்காலத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும், கலையாக்கத்தில் அவர் கொண்டுள்ள ஆர்வத்தையும், புதியதோர் சமுதாயத்தைப் பற்றிய எழுச்சியையும் பின்வரும் பகுதி எடுத்தியம்புகின்றது.

''என்றோ ஒரு நாள், இருந்து பார் மாணிக்கம்:
நின்றந்தக் கோயில் நிமிர்ந்து நெடுந்தூரம்
பார்த்துப் பயன்கள் விளைக்கின்ற கோபுரமும்
வேர்த்துக் கலைஞர் விளைத்த மணி மண்டபமும்
வீதிகளும், நூறு விளக்கும், பரதத்தின்
சேதிகளைக் கூறும் சிலம்புச் சிறுபாதம்
ஆடும் அரங்கும், அறிந்து சுவைஞர்கள்
நாடிப் புகுந்து நயந்திட நீ சோமனுடன்
ஊதும் குழலில் உயிர் பெற்று உடல் புளகித்து
ஆதி அறையில் அமரும் கடவுளுமாய்
என்றோ ஒரு நாள் எழும்''

- கோடை நாடக எழுத்துருவானது வார்த்தைச் சோடனை குறைந்து, எளிய சொற்களில் அமைந்திருப்பது நயக்கக்கூடியதாகும்.

உதாரணமாக:

''கொட்டை உழுந்தைக் குளிர்நீரில்
ஊற வைத்துத் தோலை அகற்றித் தொழிலாளினி
ஒருத்தி, காலை மடக்கிக் கருங்கல்லின் முன்னமர்ந்தே

ஓர் கை குழவி உருட்டப் பிறிதோர் கை

ஈர மாத் தள்ளி இருக்க, உழைத்திடுவாள்''

- இந்நாடக எழுத்துருவின் பிரதேச வழக்குகள் அரசாங்க உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் போன்றன வாசிப்பின் ஊடாக நயக்கூடியதாகும்.

  உதாரணம்:: கரண்டகம், ஏச்சண்டர் மற்றும் பிற

* வாசிப்பின் மூலம் நயக்கக் கூடிய பகுதிகள் சிலவற்றைத் தேடியறிந்து நயப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

* நாடக எழுத்துரு வாசிப்பின் ஊடாக,
  - தனிமனிதன் தனக்குத்தானே, முரண்படும் சந்தர்ப்பங்கள்
  - தனிமனிதன் இன்னொரு மனிதனுடன் முரண்படும் சந்தர்ப்பங்கள்
  - மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையிலான

    முரண்பாடு போன்றவற்றை இனங்கண்டு நயத்தல் சிறந்ததாகும்.

  உதாரணமாக: மாணிக்கம், செல்வம், சோமு என்ற பாத்திரங்களை அவதானிக்கலாம்.

**கணிப்பீடு :**

- கோடை நாடகக் கதையைச் சுவைபடக் கூறுக.
- நாடக எழுத்துருவில் உமது நயப்பிற்குரிய பகுதியை வாசித்துக் காட்டுக.
- நாடக எழுத்துருவில் உணர்வுகள் மேலோங்கி நிற்கும் பகுதிகளை எடுத்துரைக்குக.
- நாடக எழுத்துருவில் உம்மைக் கவர்ந்த பாத்திரங்கள் பற்றிக் கலந்துரையாடி அறிக்கைப்படுத்துக.
- நீர் வாசித்த வேறு நாடக எழுத்துருவிற்கும் இந்நாடக எழுத்துருவிற்கும் இடையேயான வேறுபாடு பற்றிக் கருத்துரைக்குக.
- நாடக எழுத்துருவில் காணப்பெறும் பிரதேச வழக்குச் சொற்களைப் பட்டியற்படுத்துக.

**உசாத்துணைகள்:**

- நாடக வழக்கு - குழந்தை ம. சண்முகலிங்கம், (தொகுப்பு) க. ஶ்ரீ கணேசன்.

**தேர்ச்சி 5.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவைப் (பனுவல்) பகுப்பாய்வு செய்வார்.

**செயற்பாடு 5.2.1.2** : கோடை நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளை அறிந்து கொள்வோம்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- கோடை நாடக எழுத்துருவில் மேற்கிளம்பும் நாடக மூலக்கூறுகளின் தன்மையை விவரிப்பார்.
- நாடக மூலக்கூறுகள் நாடக முழுமைக்கு வழங்கியுள்ள பங்களிப்பினை உணர்ந்திருப்பார்.
- கோடை நாடக எழுத்துருவின் கரு, கதைப்பின்னல், கதை போன்ற வற்றை அறிந்திருப்பார்.
- கோடை நாடக எழுத்துருவின் பாத்திரங்களைத் தெரிந்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கோடை நாடக எழுத்துரு.
- பாத்திரப் பட்டியல்.
- பளிச்சிடு அட்டை.

**அறிமுகம் :**

கோடை நாடக எழுத்துருவின் நாடக மூலக்கூறுகளான கரு, கதைப்பின்னல், மோடி, மோதுகை, பாத்திரம், சொல்லாடல், மேடைக் குறிப்பு போன்றவற்றைத் தேடியறிதல் இங்கு எதிர்பார்க்கப்பெறுகிறது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- குழுக் கலந்துரையாடல்.
- கருத்துரைகள்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடக எழுத்துருவின் மூலக்கூறுகள் ஒவ்வொன்றையும் அறிதல் இங்கு அவசியம் ஆகும். கரு, கதை, கதைப்பின்னல், மோதுகை, பாத்திரங்கள், துணைக்கலைகள், சொல்லாடல்கள் போன்ற விடயங்களை கோடை நாடக எழுத்துருவில் ஆராய்ந்து கலந்துரையாடுங்கள். எடுத்துக்காட்டாக,

  * **கதைப்பின்னல்:–**

  எமக்குக் கதை சொல்லப்படும் நிரலொழுங்கு.

  * **பாத்திரங்கள்:–**

  நாடகத்தில் குடியிருப்பவர்கள். இவர் தம் செயலியக்கங்கள் கதைப்பின்னலை உருவாக்கும். இவர்கள் வாழ்வை ஒத்தவர்களாக இருப்பார்கள். அன்றேல் சிறிதளவு உண்மை மனிதர் போல் இருப்பார்கள் அன்றேல் அருவப்ப ண்புகளின் ஆளுருவாக்கம் செய்யப்பட்டவர்களாக

இருப்பார்கள்.

* **சொல்லாடல்கள்:**

ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களுக்கிடையேயான உரையாடல், பாத்திரங்கள், அவை தொடர்பாடும் முறைமையும் வேறுபடும். சிலர் எம்மைப்போல், எமக்குத் தெரிந்தவர் போலப் பேசுவார்கள். சிலர் வேறுபட்ட முறையில் பேசுவார்கள். கவிதையிலும் வார்த்தைகளைப் பயன்படுத்துவார்.

* **காட்சியமைப்பு:**

கதை நிகழும் சுற்றாடல். அவை பௌதிகச் கனத்தை மட்டுமல்லாமல், கதை நிகழும் சமூகத்தையும் பண்பாட்டையும் குறித்து நிற்கும்.

* **கரு:**

நாடகம் பேசுகின்ற பிரதான பேசு பொருள்.

* **மேடைக் குறிப்பு:**

நாடகாசிரியரால் தரப்படுகின்ற ஆற்றுகைக்கான வழிகாட்டல் குறிப்புகள்.

மேல்வரும் விடயதானங்களை அடிப்படையாகக் கொண்டு, கோடை நாடக எழுத்துருவில் பின்வரும் விடயங்களை அவதானிக்கலாம்.

* **கரு:**

அந்நிய ஆட்சி யாழ்ப்பாணத்துச் சமூக வாழ் நிலை மீது கோடையாகத் தகிப்பதும் அதன் எதிர்விளைவுகளுமே இந்நாடகத்தின் மையக்கருவாகும்.

* **கதைப்பின்னல்:**

செல்லம் குடும்பத்தின் பிரச்சினைகளுடன் ஆரம்பித்து, பஞ்சையர், மாணிக்கம் ஊர்ப் பொதுமையான விடயங்கள், அவர்களது எதிர்பார்ப்புகள் கட்டியெழுப்பப்பட்டு சோமு இணைவுவரை முரண்பாடுகள் ஊடாகக் கதை பின்னப்பட்டுள்ளது.

* **கதை:**

அந்நிய ஆட்சிக் காலத்தில் ஈழத்தின் வடக்கே ஒரு கிராமத்தில் வாழும் மாணிக்கநாயனக் காரரின் மகள் கமலி, தன் தந்தையின் சிட்சைப்பிள்ளையான சோமுவைக் காதலிப்பதும், அக்காதலை விரும்பாத கமலியின் தாய் செல்லம், பொலிஸ்காரரான முருகப்புவிற்கு அவனை முணமுடிக்க முயல்வதும் காதலர் நள்ளிரவொன்றில் ஊர்க்கோயில் மண்டபத்தில் ஒன்று சேர்வதுமான குடும்பக் கதையை எடுத்தியம்புகின்றது. இக்கதையின் ஊடாகக் காதலையும் நாயனக் கலையையும் குடும்பத்தின் இயல்பு குன்றாமல் சித்திரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

* **பாத்திரங்கள்:**

மாணிக்கம், செல்லம், கமலி, கணேசு, சோமு, பஞ்சையர், முருகப்பு, விதானை, காசி, சாமியார்.

* **மோதுகை:**

  ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் தோற்றுவித்த புதிய நாகரிகத்துக்கும் தமிழ்ச் சமூகத்தின் பிரபுத்துவ விழுமியங்களுக்கும் இடையே தோன்றிய முரண்பாடுகளைச் சித்திரிக்கின்றது. இவ்வாறான மோதுகையைக் கோடை நாடக எழுத்துருவில் தேடியறிய வாய்ப்பளியுங்கள்.

* **துணைக்கலைகள்:**

  வேட உடை ஒப்பனை, காட்சி விதானிப்பு கைப்பொருள்கள், மேடைப்பொருள்கள், ஒலி, ஒளி, இசை போன்றவை கோடை நாடக எழுத்துருவில் கையாளப்பெற்ற விதம் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

**கணிப்பீடு:**

- கோடை நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளைக் கூறுக.
- நாடக எழுத்துருவில் உம்மைக் கவர்ந்த ஒரு மூலக்கூறு பற்றி விவரிக்குக.
- எழுத்துருவில் மோதுகைகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களை எடுத்துரைக்குக.
- கோடை நாடக எழுத்துருவில் வெளித்தெரியும் துணைக்கலைகளை எடுத்துரைக்குக.
- மையக்கருத்து வெளிப்படும் இடங்களை எடுத்துரைக்குக.

**உசாத்துணைகள்:**


- ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி - க. சொக்கலிங்கம்
- மகாகவிவியல் - ஸ்ரீ. பிரசாந்தன்.

**தேர்ச்சி 5.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2.2 :** விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வார்.

**செயற்பாடு 5.2.2.2 :** கோடை நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளைப் பகுப்பாய்வு செய்வோம்.

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள் :**

- கோடை நாடக எழுத்துருவிற்கூடாக மேற்கிளம்பம் மூலக்கூறுகளை அடையாளம் காண்பார்.
- எழுத்துருவினை நெறியாளர் நிலையில் நின்று ஆராயும் அறிவினைப் பெற்றிருப்பார்.
- பார்ப்போர் நிலையில் எழுத்துரு ஏற்படுத்தும் தாக்கத்தினை உணர்ந் திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கலந்துரையாடல்.
- குழுக் கலந்துரையாடல்.
- கருத்துரைகள்.

**அறிமுகம்:**

கோடை நாடக எழுத்துருவினைப் பார்ப்போர் நிலையிலும், நெறியாளர் நிலையிலும் நின்று ஆராய்ந்து அதனைப் பகுப்பாய்வு செய்தல் இங்கு எதிர்பார்க்கப்பெறுகிறது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- குழுக் கலந்துரையாடல்.
- கருத்துரைகள்.
- கண்டறிதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

எழுத்துருவின் மூலக்கூறுகளை நெறியாளர் நிலையிலும் பார்ப்போர் நிலையிலும் நின்று பகுப்பாய்வு செய்யும் போது, நாம் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்வது சிறந்தது.

- பகுப்பாய்வின் போது எம்மை நாம் கேட்டுக்கொள்ளும் பலவகையான வினாக்கள் உள்ளன.
- எமது நோக்கத்தினைப் பொறுத்து எமது வினாக்களும் வேறுபடும்.

எமது நோக்கங்கள் - 1. மகிழ்வுக்காகப் படிப்பதா?

2. நெறியாள்கை செய்வதா?

3. நடிப்பதற்காகவா

4..மறைந்திருக்கும் குறியீடுகள் பற்றியதொரு ஆய்வா?

- குறித்த நாடகமொன்றின் அர்த்தத்தை அன்றேல் பொருளைப் புரிந்து கொள்வது அவசியமாக

உள்ளது.

- நாடக எழுத்துருப் பகுப்பாய்வில் பயன்படும் நான்கு காரணிகள்.

  i. அதன் தோற்றம்.

  ii. அதன் நோக்கம்.

  iii. அதன் மூலங்கள்.

  iv. அதன் உள்ளடக்கம்.

  இக்காரணிகளை ஆராய்வதன் ஊடாக நாடகத்தின் கரு அன்றேல் செய்தி பற்றி அறிய முடியும். மேலும், சம்பவங்கள் விரியும் போது ஒரு அடிப்படையான உண்மையை நாம் அறிந்து கொள்கின்றோம்.

- இதன் அடிப்படையில் நெறியாளர் நிலையில் இதனை நோக்கும் போது, நாடக எழுத்துருவில் பின்வரும் விடயங்களை நோக்குதல் அவசியமாகும்.

  i. நாடக எழுத்துரு யதார்த்தத்தில் உண்மை நிலையின் இயல்பு பற்றிப் பேசுகிறதா?

  ii. உலகம் பற்றிய நாடகாசிரியரின் தரிசனத்தைத் தருகிறதா?

  iii. நாடகாசிரியர் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் விஞ்சி நின்ற விடயங்கள் அன்றேல் பண்பாட்டின் மீது விஞ்ஞானம் கொண்டிருந்த செல்வாக்கு என்பவற்றின் ஒரு விளைபயனாக நாடக எழுத்துரு இருக்கிறதா?

  iv. நாடகாசிரியர்கள் தமது உலகினை எவ்வாறு வரையறை செய்து கொள்கிறார்கள்?

  v. அவர்கள் எழுதும் நாடகங்களின் மோடிகள்.

  vi. நாடகாசிரியரின் மனப்பாங்கின் எதிரொலியாக உலகம் நல்லதா / இல்லை கெட்டதா? போன்ற மெய்யியல்சார் விடயங்களின் நம்பிக்கை அன்றேல் நம்பிக்கைகள் பற்றிய தரிசனங்களைக் கொண்டிருக்கிறதா?

  vii. நாடகக் கட்டமைப்பு எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது? அங்கு தொடர்ச்சியான சம்பவங்கள், நிகழ்வுகள், காட்சிகள் உரையாடல்கள் போன்றவற்றின் ஊடாக, நாடகச் செயலியக்கம் எவ்வாறு கொண்டு செல்லப்படுகின்றது?

  viii. ஒரு பிரச்சினை / மோதல் அதனை வெற்றி கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அன்றேல் தீர்மானம் அன்றேல் புதிர்விடுவிப்பு போன்றவை எவ்வாறு வழிநடத்திச் செல்லப்படுகின்றன?

  ix. எழுத்தாளன் வாழ்ந்த சமூகம் எப்படிப்பட்டதாக இருந்தது? இந்த நாடகம் எந்த அளவுக்கு அந்தப் பண்பாட்டைப் பிரதிபலிக்கிறது? அந்தப் பண்பாட்டில் சில அம்சங்கள் மீதான எதிர்வினையாகவோ, எதிர்பார்ப்பாகவோ இந்த நாடகம் உள்ளதா?

  x. இந்த நாடகம் எழுதப்பட்ட காலத்தில் அரங்கின் மரபுகள் எவை? இந்த நாடகம் எழுதப்பட்ட முறைமையில் அவை எந்த அளவுக்குச் செல்வாக்கு செலுத்துகின்றன?

  xi. எவ்வகையான பாத்திரங்களை நாடகாசிரியர் வரைந்துள்ளார்? அவற்றை எவ்வகையான

மொழியைப் பேசவைக்கின்றார்? தனது இலக்கை அடைய அவரது தெரிவுகள் எவ்வாறு உதவுகின்றன?

xii. நாடகத்தில் உள்ள பாத்திரங்கள் மீது, காட்சி, காட்சியமைப்புக்கள் எத்தகைய செல்வாக்கினைச் செலுத்துகின்றன?

xiii. இந்த நாடகத்தில் அறிவுத்திறன் சார்ந்த கருத்து ஒன்று உள்ளடங்கி இருப்பதாகத் தெரிகிறதா?

xiv. நாடகாசிரியர் எதனை நிறைவேற்ற முயற்சிக்கிறார்? அதனை நிறைவேற்றக் குறியீடுகள், கருத்துக்கள், மேடைக் குறிப்புக்கள், பாத்திரங்களின் துலங்கல்கள் போன்றன அவருக்கு எந்தளவு துணைபுரிகின்றது? இந்த உலகம் பற்றிய எழுத்தாளரது மனப்பாங்கு நாடக எழுத்துரு ஊடாக நல்லதொரு கதையைச் சுட்டி நிற்கிறதா?

xv. மேற்குறித்த விடயங்களை நெறியாளர் பகுப்பாய்வு செய்வதன் ஊடாக, எழுத்துரு தொடர்பான ஒரு முழுமையான பரிமாணத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- ஆற்றுகை நிலைக்குத் தயார் செய்வதற்காகத் நெறியாளர் நாடக எழுத்துருக்களைப் பகுப்பாய்வு செய்யும் போது, நாடகாசிரியர் எதனை நிறைவேற்ற முயற்சிக்கின்றார் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொண்டு அளிக்கை நிலைக்குத் தயார் செய்வது நெறியாளரின் பணியாகும்.
- நாடக எழுத்துருவைப் பார்ப்போர் நிலையில் நின்று பகுப்பாய்வு செய்யும் போது அவர் ஒரு ரசிகர் என்ற நிலையிலும், அந்நாடக எழுத்துரு சுட்டி நிற்கும் ஆற்றுகையில் பாத்திரங்கள், காட்சியமைப்புக்கள் (பௌதிக மற்றும் பண்பாடு சார்ந்தவை இரண்டும்) எத்தகைய தாக்கத்தினைப் பார்ப்போர் மனதில் ஏற்படுத்தி உள்ளது என்பதை அறிந்திருத்தல் அவசியம். மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில் கோடை நாடக எழுத்துரு தொடர்பான நெறியாளர் நிலைப்பட்டதும் பார்ப்போர் நிலைப்பட்டதுமான பகுப்பாய்வைச் செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்யும் நோக்கத்தினை எடுத்துரைக்குக.
- நாடக எழுத்துரு மூலம் நாடகாசிரியர் கூறவந்த செய்தியினை முன்மொழிக.
- நாடக எழுத்துருவினை நெறியாளர் நிலையில் நின்று பகுப்பாய்வு செய்யும் முறையை விவரிக்குக.
- நாடக எழுத்துரு பார்ப்போர் நிலையில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதை எடுத்துரைக்குக.
- நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்களைப் பட்டியற் படுத்துக.

**தேர்ச்சி 5.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வார்.

**செயற்பாடு 5.2.3.2** : கோடை நாடக எழுத்துருவின் சமூக பண்பாட்டுப் பின்புலங்கள் பற்றி மதிப்பீடு செய்வோம்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- எழுத்துரு எழுதப்பெற்ற மூலம், களம் மற்றும் கலாசாரப் பின்னணியை எடுத்துரைப்பார்.
- எழுத்துருவில் மொழிநடை, மோதுகை, செயலியக்கம், மோடி, பாத்திரங்கள், சொல்லாடல், கதைப்பின்னல், கரு உணர்ச்சிகள் போன்ற அம்சங்களின் சமூகப் பண்பாட்டுப் பின்புலத்தின் செல்வாக்கை இனங் கண்டிருப்பார்.
- எழுத்துரு முன்னிறுத்தும் காலச்சூழல் பற்றி அறிந்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நாடக எழுத்துரு - மகாகவி து. உருத்திரமூர்த்தியின் கோடை.
- டிமைன்தாள்.
- மாக்கர்.

**அறிமுகம்:**

கோடை நாடக எழுத்துருவிற் சொல்லாடல், பாத்திரங்கள், மோடைக் குறிப்புகள், காட்சிகள் போன்றவற்றின் மூலம் முன் வெளிப்படும் சமூகப் பண்பாட்டுப் பின்புலங்களை ஆராய்ந்து மதிப்பிடுதல் இங்கு எதிர்பார்க்கப்பெறுகிறது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- குழுக் கலந்துரையாடல்.
- கண்டறிதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடக எழுத்துரு ஒன்றினை வாசிப்பதன் ஊடாக அக்காலச் சமூகப் பண்பாட்டுப் பின்புலங்களை நுணுகி ஆராய்ந்து பார்ப்பதில் கவனம் செலுத்துவது அவசியம் ஆகும்.
- கோடை நாடக எழுத்துரு உருவாக்கப்பட்ட காலப்பகுதியினையும் அக்கால நிலைமைகளையும் கலந்துரையாடுங்கள்.
- நாடக எழுத்துருவின் ஊடாக வெளித்தெரியும் விருந்தோம்பற் பண்பினை அறியச் செய்யுங்கள்.
- சாதி வேறுபாடு பற்றியும், சாதி ஒடுக்குமுறைக்கெதிராக மேற்கிளம்பிய முற்போக்குச் சிந்தனைகள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- தொழில் அந்தஸ்து, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- கலைகள் வளர்க்கப்படும் முறை பற்றியும் வெளிநாட்டுக் கலை, கலாசாரம் கிராமத்தில் உட்புகுவதால் சுதேசக் கலைகள் நலிவுறுதல் குறியீடாகக் காட்டப்பெறும் விதம் தொடர்பாகவும் கலந்துரையாடுங்கள்.
- எழுத்துருவிற்கு ஊடாக வெளிப்படும் இறை நம்பிக்கையோடு தொடர்புடைய விடயங்கள் பற்றி விவரியுங்கள்.
- நாடக எழுத்துருவில் தெரியும் பொருளாதார நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**கோடை நாடக எழுத்துரு எழுந்த காலம் தொடர்பான குறிப்புரைகள்:**

1966ஆம் ஆண்டு கோடை நாடகம் எழுதப்பட்டிருந்தாலும் இந்நாடகம் 1937ஆம் ஆண்டு காலப்பகுதியின் சம்பவங்களைச் சுட்டி நிற்பதாக நாடகாசிரியர் குறிப்பிடுகின்றார். இது பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலப்பகுதியாகும்.

- இக்காலப்பகுதியில் கல்வி கட்டாயம் ஆக்கப்பட்டதுடன் ஆங்கில வழிக்கல்வி அறிமுகம் செய்யப்பெற்றது.
- நீர்ப்பாசனத் திட்டங்கள், பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், துறைமுகங்கள் அமைக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- நாட்டு மக்களின் உடைமையாக இருந்த நிலத்தை, வெளிநாட்டு முயற்சியாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தமை.
- தேசிய பாரம்பரியத்தை அழித்தொழித்தமை.
- வெளிநாட்டு மோகம் கொண்ட அடிமை மனப்பான்மை கொண்ட குடிகளை உருவாக்கியமை.
- பணப் பரிமாற்றத்தினை அறிமுகப்படுத்தியதுடன் லஞ்சம், ஊழல் போன்றவை மேற்கிளம்பியமை.
- மேற்படி நிகழ்வுகள் இடம்பெற்ற ஒரு காலகட்டத்தை இக்கோடை நாடக எழுத்துரு பின்னணியாகக் கொண்டுள்ளது.
- இந்நாடகம் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு எழுதப்பெற்றது.
- நாடக ஆரம்பத்தில், நாடகாசிரியர் 1937ஆம் ஆண்டு ஆனியில் ஒருநாள் வைகறை தொடக்கம் மறு வைகறை வரை நிகழ்ந்த சம்பவங்களை எடுத்தியம்புகிறார். ஏனெனில், இலங்கை சுதந்திரம் பெற்றிருந்தாலும் அதற்கு முற்பட்ட கால நிலைமைகளே அக்காலத்திலும் நிலவியது.
- பிரித்தானியர் ஆட்சி முறையானது கல்வி, சட்டம், பொருளாதாரம், சுதேசியக் கலைகள் போன்றவற்றில் செல்வாக்குச் செலுத்தியது.
- இந்நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு, சமகால சமூகத்தினை முழுமையாகச் சித்திரிக்கும் வகையில் தாம் பிறந்து வளர்ந்து வந்த சமூகக் குழுமம் ஒன்றை மையமாகக் கொண்டு இந்நாடகத்தினை உருவாக்கினார்.

  எடுத்துக்காட்டாக, சங்கரப்பிள்ளை விதானையார், பிரித்தானியர் ஆட்சியின் மகிமைகளை எடுத்தியம்பும் வகை, பழைய அரசாங்க அதிபர் மாறி வேறொருவர் வருவதாக அறிந்து விதானையார் நடத்தும் தடல் புடல், அவர் மாணிக்கத்தின் நாயனத்தைப் புதிய அரசாங்க

அதிபரை வரவேற்க ஒழுங்கு செய்திருக்க, அவ்வொழுங்கு பொருத்தமில்லை என்று மேலிடத்தார் ‘பாண்ட’ (Band) வாத்தியத்தினை ஒழுங்கு செய்தல்.

- அதனால் அவர் அடையும் ஏமாற்றம்; அரசாங்க உத்தியோகம் பெறுவதைப் பெரும் பேறாகக் கருதும் அக்காலத்தவரின் மனப்போக்கு; உண்மைக் கலையை உதாசீனம் செய்தல் போன்ற விடயங்களை இவ்வெழுத்துரு ஊடாக நாம் அறிந்து கொள்ளலாம்
- இந்நாடக எழுத்துரு ஊடாக வெளித்தெரியும் சமூக பண்பாட்டுப் பெறமானங்கள் சில.
  - வேதியர்களை மான்தோலில் அமரவைத்தல், பிதிர்க்கருமங்களுக்கு அரிசி, மரக்கறி வழங்குதல், சனிக்கிழமைகளில் எண்ணெய் வைத்து நீராடும் வழக்கம் போன்றன இன்றுவரை தொடர்வதைக் காணலாம்.
  - பிரதேச வழக்குச் சொற்களின் பயன்பாடு.
  - விருந்தோம்பும் பண்பு.
  - இறை நம்பிக்கையும், கோயில்களில் தேவார, திருவாசக, புராண படனம் ஓதும் மரபும்.
  - பானைக்குள் பொருள்களை மறைத்து வைக்கும் பழக்கம்.

**கணிப்பீடு :**

- எழுத்துரு எழுதப்பெற்ற காலத்தினை எடுத்துரைக்குக.
- எழுத்துரு ஊடாக வெளித்தெரியும் சமூக, பண்பாட்டுப் பெறுமானங்களைக் குறிப்பிடுக.
- எழுத்துருவினூடு வெளித்தெரியும் பிரித்தானியர் ஆட்சியினால் கிடைத்த நன்மை, தீமைகளைக் கூறுக.
- எழுத்துருவிற் காணப்பெறும் சமூகப் பெறுமானங்களை இன்றைய காலத்தோடு ஒப்பிட்டாராய்க.
- எழுத்துருவில் வெளித்தெரியும் சுதேசக் கலைகளின் பெறுமானங்களை மதிப்பிடுக.
- கோடையை ஒரு சமூக வரலாற்று நாடகமாகப் பார்ப்பதற்கான ஆதாரங்களைத் தருக.

**தேர்ச்சி 5.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.3 :** நாடக எழுத்துருவானது ஆற்றுகையாக மாற்றப்படுகின்ற விதத்தை அறிந்து கொள்வார்.

**செயற்பாடு 5.3.2 :** கோடை நாடக எழுத்துருவின் காட்சித்துண்டம் ஒன்றை ஆற்றுகை செய்வோம்.

**பாடவேளை :** 05

**கற்றற் பேறுகள் :**

- கருவானது ஆற்றுகையில் இழையோடி உள்ள விதத்தினை அறிந் திருப்பார்.
- சொற்கள் காட்சி வடிவம் பெறும் விதத்தை நயந்துரைப்பார்.
- எழுத்துருவில் மேலோங்கி நிற்கும் உணர்ச்சி, ஆற்றுகையில் கையாளப் பெற்றுள்ள முறையினைச் சுட்டிக்காட்டுவார்.
- எழுத்துருவின் தொனியை வெளிக்கொணர்வதில் துணைக்கலைகளின் பங்களிப்பை விவரிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மகாகவியின் கோடை நாடக எழுத்துருவின் காட்சித்துண்டம் அடங்கிய சொல்லாடல் அட்டைகள்.
- எழுத்துருப் பிரதிகள்.

**அறிமுகம்:**

நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளில் சொல்லாடல் முக்கியமானது. பாத்திரங்களின் நிலைமையை வெளிப்படுத்தவும், உணர்வு நிலைமைகளை, மோதுகை நிலைமைகள், துணைக்கலை அம்சங்கள் என்பன வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதே இக்காட்சித் துண்டம் ஒன்றை ஆற்றுகை செய்வதன் ஊடாக எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- குழுச் செயற்பாடு.
- வகிபாகம் ஆடுதல்.
- செயன்முறை.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

வகுப்பில் உள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அவர்களைக் குழுக்கள் ஆக்குவதனூடாகப் பின்வரும் செயற்பாட்டினைச் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

- கோடை நாடக எழுத்துருவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வரும் காட்சித்துண்டத்தைச் சித்திரித்துக் காட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.

* பஞ்சையர் : கதையன் அப்பா

சோமு வந்தான் காலமை. நீ சொல்லி அனுப்பியதாய்?

எனும் உரையாடல் தொடங்கி

பஞ்சையர்: செல்லம் பகிடி சிரிப்புக் கிளப்பாது! நல்லது இனி நாம் நடப்பம்.

எனும் பகுதி வரையான காட்சித்துண்டத்தினை ஆற்றுகை செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

- காட்சித்துண்டம் ஒன்றை ஆற்றுகை செய்வதற்காக சொல்லாடல்களை நன்கு தயார்படுத்திக் கொள்ளுங்கள்.
- சொல்லாடலில் ஈடுபடும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலத்துவதில் ஆர்வம் கொள்ளச் செய்யுங்கள்.
- சொல்லாடல் என்பது வார்த்தைக்கு அமைவாகச் செய்து காட்டுவதாகும். சொல்லாடலில் உச்சரிப்பு ஒலிவேறுபாடு, மொழி நயம், ஓசை நயம் என்பன முக்கியமானதாகும்.
- பாத்திரங்களுள் பல்வேறு உணர்வுகள் ஏற்படலாம். அவ்வுணர்வுகளை, ஓசை, மாத்திரைகள், சொற்கள் மூலம் வெளிக்காட்டலாம். அதேபோல் உணர்வுகள் வெளிப்படும் விதத்தில் உச்சரிப்புக் கோலங்களும் மாற்றமடைகின்றன.
- சொல்லாடலில் உணர்வுக்கு அமைவாகக் குரலைக் கூட்டிக் குறைத்தலும், மாற்றுதலும் காணப்பெற வேண்டும். குரல் மற்றும் சொற்கள் தெளிவாக உச்சரிக்கப்பட வேண்டும்.
- பாத்திரங்களின் மெய்நிலைகள், அசைவுகள் என்பனவும் வெளிப்படும் விதமாகச் சொல்லாடலில் ஈடுபட வேண்டும்.
- நாடகச் சொல்லாடலில் ஒவ்வொரு சொற்களும் வசனங்களும் விளங்கக்கூடியவாறும், அவற்றின் அர்த்தம் புலப்படுமாறும் சொல்லாட வேண்டும்.
- நாடகத்தின் மோடி அன்றேல் பாணி ஓரளவு புலப்படுமாறு சொல்லாட வேண்டும்.
- பாத்திரங்களின் பௌதிக, உளவியற், சமூக குணாம்சங்கள் வெளிப்படும் விதமாகப் பாத்திரங்கள் படைக்கப்பட வேண்டும்.

உதாரணமாக: **மாணிக்கம் பாத்திரத்தின் குணஇயல்புகள்.**

- நாதஸ்வரக் கலையை உயிராக மதிப்பவர்.
- சமூகம் பற்றிய ஆழ்ந்த பார்வை கொண்டவர்.
- நிதானமும் பொறுமையும் உடையவர்.
- இறை பக்தியுள்ளவர்.
- கலையார்வம் உள்ளவர்.
- சீடனை மதிக்கும் பண்பு கொண்டவர்.
- தன்னுடைய மாணவனுக்கு, தனக்குத் தெரிந்த அத்தனையையும் சொல்லிக் கொடுக்கும் ஆர்வம் கொண்டவர்.

மேற்படி குணஇயல்புகளை மனதில் இருத்தி மாணிக்கம் பாத்திரத்தினைப் படைத்தல் வேண்டும்.

- நாடக எழுத்துருவில் காணப்படும் மோடைக் குறிப்புக்கள், அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள குறிப்புரைகள் போன்றவை பாத்திரங்களின் உணர்வுகளைப் புரிந்து நடிப்பதற்கு உதவியாக

அமையும்.

- எழுத்துரு ஊடாக வெளித்தெரியும் உறவு நிலைகளைக் கவனத்தில் கொள்வதன் ஊடாகப் பாத்திரப் படைப்பினைச் சிறப்பாக அமைக்க முடியும்.
- நாடக எழுத்துருவின் காட்சிகள் இடம்பெறும் தளத்தினை அறிந்திருத்தல் வேண்டும்.
- நாடக எழுத்துருவின் (நாம் தேர்ந்தெடுத்த பகுதி) காட்சியானது மாணிக்க நாயனக்காரரின் வீட்டில் நடைபெறுவதாகும்.
- பஞ்சையர், மாணிக்கம், செல்வம் ஆகிய பாத்திரங்கள் மேடையில் அசைகின்ற விதம்; அதாவது, மிகவும் நிதானமாயும் பொதுவாகவும் அமைவதுடன் அவர்களின் உரையாடல் தொடர் பேச்சோசை நிரம்பியதாகவும், பல்வேறு மனநிலைக்கு ஆட்பட்டுத் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதன் ஊடாக, எதிர்காலம் மீது உள்ள நம்பிக்கையையும் எடுத்தியம்புகின்றார்கள்.
- ‘‘கோடை நாடக எழுத்துருவின் மையக்கருத்தினைப் பஞ்சையரின் சொல்லாடலான,’’ இதுவோ கடுங்கோடை, வெய்யிலினால் அல்ல, வெளியார் அரசாட்சி செய்யும் கொடுமைச் சிறப்பே அது தானே’’ என்பதன் ஊடாக நாம் அப்பாத்திரத்தின் மனநிலை, அக்கால நிலைமைகள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு பாத்திரத்தை மேடையில் அசைய விடுதல் வேண்டும்.
- மேலும், ‘‘என்றோ ஒரு நாள், இருந்து பார்’’ எனத் தொடங்கும் வரிகள் நிதானமாகவும் நம்பிக்கையுடனும் தொடங்கிச் குரல் மெல்ல மெல்ல அதிகரித்து, பல்வேறு உணர்வுகளை உள்வாங்கி உச்ச நிலைக்குச் செல்வதை அவதானித்து இவை ஆற்றுகை நிலையில வெளிபடுவதற்கு ஊக்கமளியுங்கள்.
- மாணிக்கம், பஞ்சையர் ஆகிய இரு பாத்திரங்களும் சாதாரணமாக உலக விடயங்களில் தொடங்கிய உரையாடல், அவர்கள் விரும்புகின்ற உண்மை உலகத்தின் நினைவில் மிதக்கும் போது, பாத்திரம் அவர்கள் நினைவை உடைத்து யதார்த்த நிலைமைக்குக் கொண்டு வருவதை ஆற்றுகை நிலையில் சொற்கள் காட்சி வடிவம் பெறுவதை அவதானித்துச் செயற்பட வழிப்படுத்துங்கள்.
- ஆற்றுகை நிலையில் துணைக்கலைகளின் பயன்பாடுகளை அவதானித்துச் செயற்பட வழிப்படுத்துங்கள்.
- நாடக எழுத்துருவில் உள்ள காட்சித்துண்டத்தை ஆற்றுகை செய்கையில் நாடகத்தின் கருவானது பாத்திரங்களின் ஊடாக அவர்களின் உடல்மொழி, குரல் உணர்வுகள் போன்றவற்றில் இழையோடி யுள்ள விதத்தினைப் பார்ப்போர் அறியும் வண்ணம் பாத்திரங்களை நம்பகத்தன்மையுடன் படைத்து ஆற்றுகையைச் சிறந்ததாக அமைத்தல் சிறப்பானதாகும்.

**கணிப்பீடு:**

- கோடை நாடக எழுத்துருவில் வழங்கப்பட்ட அன்றேல் விதந்துரைக்கப்பெற்ற காட்சியினை ஆற்றுகை செய்க.

- சொல்லாடலில் கவனிக்க வேண்டிய பண்புகளை எடுத்துரைக்குக.
- கோடை நாடக எழுத்துருவை ஆற்றுகை செய்யம் போது கவனிக்க வேண்டிய விடயங்களைப் பட்டியற்படுத்துக.
- பாத்திரங்களின் பண்புகளை எடுத்துரைக்குக.
- ஆற்றுகை செய்யப்பட்ட பகுதியை இன்றைய காலநிலைமைகளோடு ஒப்பிட்டுக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி 5.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களை நயப்பார்.

**செயற்பாடு 5.1.3 :** சி. மௌனகுருவின் இராவணேசன் நாடகத்தினை நயப்போம்.

**பாடவேளை :** 10

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இராவணேசன் நாடக எழுத்துருப் பிரதிகள்.

**கற்றற் பேறுகள் :**

- இராவணேசன் நாடக எழுத்துருவை வாசித்தறிந்திருப்பார்.
- நாடகத்தினூடாக வெளிப்படும் நயப்புக்குரிய அம்சங்களை முன்வைப்பார்.
- எழுத்துருவின் பகுதியை நாடக வாசிப்புச் செய்வார்.
- நாடக வாசிப்பின் போது எழும் உணர்ச்சிகளைப் பரிமாறுவார்.
- நாடகக் கதையைச் சுவைபட விவரிப்பார்.
- நாடகப் பாத்திரச் செயலியக்கங்களைச் செய்து பார்ப்பார்.
- சொல்லாடலின் வன்மையை உணர்ந்திருப்பார்.

**அறிமுகம்:**

1965 இல் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் ஆலோசனைக்கமைய சி. மௌனகுருவினால் எழுதப்பெற்று பேராசிரியரினால் தயாரிக்கப்பெற்றும், 2000ஆம் ஆண்டின் பின்னர், சி. மௌனகுருவினால் பலதடவைகள் தயாரிக்கப் பெற்றதும் வடமோடிக்கூத்தின் வடிவத்தினை உள்வாங்கி எழுதப் பெற்றதுமான இராவணேசன் நாடகத்தினை வாசிப்பதனூடாகவும் அதன் பாடல்களைப் பாடி நயப்பதனூடாகவும், அந்நாடகத்தினைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென இவ்வலகில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- குழுமுறைக் கலந்துரையாடல்.
- வாசிப்பு.
- பாடுதல்.
- விரிவுரை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- இராவணேசன் நாடக எழுத்துருவை, அதன் பாடலுக்குரிய கவிதை முறைக்மைய, மாணவர்களைப் பல தடவைகள் வாசிக்கச் செய்வதனூடாகவும், சில பாடல்களைப் பாடிச்சுவைப் பதனூடாகவும், நயத்தல் அனுபவத்தினை வழங்கி, அதனூடாகக் கலந்துரையாடுங்கள்.
- இராவணேசனின் உருவாக்கம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- அறுபதுகளில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமிழ்க்கூத்து மரபுகளைப் புத்தாக்கம் செய்து பல்கலைகழக மாணவர்களுக்கு அவற்றினைப் பயிற்றுவித்து மேடையேற்றினார். 1962 இல் கர்ணன் போர், 1963 இல் நொண்டி நாடகம், மேடையேற்றப்பட்டது. இவை ஏற்கெனவே இருந்த வடமோடி, தென்மோடிக் கூத்து எழுத்துருக்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் பட்டவை. அதனைத் தொடர்ந்து, வடமோடிக் கூத்துமரபை அடிப்படையாகக் கொண்டு, புதியதொரு கூத்தினை எழுத வேண்டுமென்ற பேராசிரியர் வித்தியானந்தனின் வேண்டு கோளுக்கும், வழி நடத்தலுக்கும் அமைய, சி. மௌனகுரு அவர்களால் எழுதப்பெற்ற நாடகமே இராவணேசன் ஆகும்.
- இராமாயணத்தின் படி, இராவணன் ஒரு அரக்கனாக, அழிக்கப்பட வேண்டியவனாக, பெண்பித்துப் பிடித்தவனாகச் சித்திரிக்கப்பட்ட, ஆரிய நிலைப்பட்ட இலக்கியப் பார்வையைத் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றி அமைத்தது. இராவணனைச் சுத்தவீரனாக, இலங்கையை ஆண்ட மூத்த தமிழ் மன்னனாகச் சித்திரித்தனர். அண்ணாத்துரையின் நீதிதேவன் மயக்கம் உள்ளிட்ட பல நாடகங்கள், மனோகரன், இலங்கேஸ்வரன் போன்ற நாடகங்கள் அனைத்தும் இந்தவழியே மேடையேற்றப்பட்டன. இப்போக்கின் நீட்சியாக, மட்டக்களப்பு வடமோடி நாடகமாகிய 'இராம நாடகத்தில்' வருகின்ற இராவணனை அன்றிப் புதியதொரு இராவணனைக் கதாநாயகனாகப் படைத்த படைப்பாக இந்த இராவணேசன் அமைகின்றது.
- அக்காலத்தில் நிலை கொண்ட, 'தமிழ்த் தேசியம்' பற்றிய சிந்தனை மேலெழுகையின் விளைவாகப் பேராசிரியர் வித்தியானந்தன் அத்தகைய இராவணனைப் படைக்க முற்பட்டிருக்கலாம். பேராசிரியர் வித்தியானந்தனுடன் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி போன்றோரும் இந்நாடக உருவாக்கத்தில் ஆலோசகர்களாக இருந்ததாகச் சி.மௌனகுரு குறிப்பிடுகின்றார்.
- 1965 ஆம் ஆண்டு, பேராசிரியர் சு. வித்தியானந்தன் இதனை நெறிப்படுத்திய பின், பேராசிரியர் சி. மௌனகுரு 2010 க்குப்பின் மூன்று தடவைகள் வெவ்வேறு தொனிப்பொருளுடன் நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளார். அவை, இதனை 'வடமோடி கூத்து' என்ற நிலையைத் தாண்டிய நவீன கூத்துருவ நாடகங்களாகப் புதிய, புதிய கலையாக்கங்களாக மலர்ந்துள்ளன. அதனால் இந்த எழுத்துருவைக் 'கூத்து' வடிவத்திலும் 'நாடக' வடிவத்திலும் தரிசிக்க முடியும்.
- நாடகத்தினை வாசிப்பதனூடாக, அதன் கதைப்பொருளையும் தமது இரசனையையும் கலந்துரையாடச் செய்யுங்கள்.
  - இந்நாடகம் 'இராவணன்' என்ற கதாபாத்திரத்தினை மையமாகக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது.
  - கதைகூறுகின்ற பாணியிலே நாடகம் முழுவதும் நகர்த்தப்படுகின்றது.
  - இராவணன், மண்டோதரி, கும்பகர்ணன், இந்திரஜித், இராமன், இலட்சுமணன், அங்கதன் ஆகிய பாத்திரங்களுடன் 'ஏடுபார்ப்போர்' என அமைக்கப் பெறுகின்ற உரைஞர் பாத்திரமும்

முக்கியத்துவம் பெறுகின்றது.

- 'வீரத்திற்காக இலங்கையின் வீழ்ச்சியை ஏற்ற' அவல நாயகனாக இராவணன் இந்நாடகத்தில் சித்திரிக்கப் படுகின்றான்.
- அங்கதன் தூதுடன் நாடகம் ஆரம்பமாகின்றது. அதேவேளை, அங்கதன் தூதிலேயே நாடகத்திற்கான பிரதான முரண்பாடும் ஆரம்பிக்கின்றது.'துன்றிடும் பெண்ணை விட்டுத் தொழுது வாழ்' என்ற அங்கதனின் கூற்று, இராவணனின் தன்மான உணர்வினைத் தாக்கி விடுகிறது. அதுவே இராவணனின் எல்லா முடிவுகளுக்கும் காரணமாகின்றது.
- அங்கதன் தூதினை அலட்சியம் செய்யும் இராவணன் மீது இராமன் போர் தொடுக்கின்றான். போரில் இராவணன் தோற்கிறான். கும்பகர்ணனைப் போருக்கு அனுப்பி, அவனையும் இழக்கிறான். நீலன், சிங்கன், மகரன், குருதிக் கண்ணன் என்ற மாபெரும் வீரர்களைப் போருக்கு அனுப்பி, அவர்களையும் இழக்கிறான். இறுதியில், தன் மகன் இந்திரஜித்தையும் அனுப்பி, அவனையும் இழக்கிறான். முடிவில், மண்டோதரி தடுத்த போதும் தன்தோல்வியும் மரணமும் நிச்சயம் என்று தெரிந்தும் "இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்குமிறுதி உண்டோ" என்று இராமனுடன் போர் செய்து மடிகின்றான்.
- இராவணனின் 'வீரம்', 'தன்மானம்' என்ற குணாம்சங்களை மையமாக வைத்து இந்நாடகம் பின்னப்பட்டுள்ளது. மண்டோதரி, கும்பகர்ணன், இந்திரசித் ஆகிய அனைவரும் சீதையை விடுதலை செய்ய வேண்டுகின்றனர். ஆனால், "துன்றிடும் பெண்ணை விட்டுத் தொழுதுவாழ், சுற்றத்தோடும்" என்ற அங்கதனின் வார்த்தையே அவனில் போர்வெறி கொள்ளச் செய்கின்றது. "வெற்றி வீரனாக வந்து உன்னைச் சநதிக்கிறேன், அதன்பின் வேண்டுமானால் சீதையை விடுகிறேன்" என்று மண்டோதரிக்குக் கூறும் வார்த்தைகளில் இருந்து அவனது 'தன்மானம்' அழுத்தம் பெறுகின்றது.
- இந்நாடகம், இராவணன் என்ற பாத்திரத்தின் குணாம்ச வளர்ச்சியையே மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. ஏனைய பாத்திரங்கள் இராவணேசனின் குணாம்சங்களை வளர்க்கும் வகையிலேயே படைக்கப்பட்டுள்ளன. அங்கதன், மண்டோதரி, கும்பகர்ணன், இந்திரசித்தன், இராமன் ஆகிய பாத்திரங்களோடு அவன் உரையாடும் போது, அவை வெளிப்படுகின்றன.
- அங்கதனின் வார்த்தைகளில் அவனது தன்மான உணர்வும், தம்பியை, மகனை இழந்து தவிக்கையில் அவனது பாசம், சோகமும், இந்திரசித்தின் வெற்றிச் செய்தி கேட்கையில் பூரிப்பும், இந்திரசித் இறந்தபின் சீதையைக் கொல்ல முற்படுகையில் அவனது சினமும் எனப் பல்வேறு மனித சுபாவங்களும் மனித நேயமும் வெளிப்படுகின்றது.
- இராமாயணத்தின் நாயகனாகிய இராமன், இங்கு எதிரியைப் போலத் தோற்றமளிக்கின்றான்.
- உண்மையை உரைத்த பின், போரிட்டு உயிரிழக்கும், இந்திரசித்தும் கும்பகர்ணனும், இறுதியில் புலம்பி இறக்கும் மண்டோதரியும் பரிவினையும் சோகத்தையும் தரும்

பாத்திரங்களாகக் காணப்படுகின்றனர்.

- நாடகம் நகர்த்தப்படும் முறை கூத்தும், நாடகப் பாங்கும் கலந்த முறையில் அமைகின்றது.
    - ♦ ஏடு பார்ப்போர் கதை சொல்லும் பாங்கில் கதையை நகர்த்துகிறார்.
    - ♦ பாத்திர வரவுகள் படர்க்கை முறையில் அமைகின்றன.
    - ♦ வடமோடிக் கூத்தின் ஆட்டப்பாணிக்குரிய தாளக்கட்டுக்கள் பாத்திரப் பண்புகளைப் புலப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- யுத்தக் காட்சிகளில் ஆடலுக்குரிய தாளக்கட்டுக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- உரையாடலுக்குப் பாடல்கள், கவிதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

  விருத்தம், தரு, கந்தார்த்தம் என்ற பாவரிகளும் மிக சிறிய அளவில் ஊட்டு வசனங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- இந்நாடகம், தயாரிப்பு நிலையில் நாடக அம்சங்களுடன் நிகழ்ந்தாலும் எழுத்துவடிவம் பெருமளவில் வடமோடிக் கூத்துக்குரியதாகவே காணப்படுகின்றது.

  மேற்கூறப்பட்ட விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு :**

- இராவணேசன் நாடகத்தின் கதையைக் கூறுக
- இதில் வரும் பிரதான பாத்திரங்கள் எவை?
- இராவணன் பாத்திரத்தை மையப்படுத்தியதாகவே இந்நாடகம் அமைந்துள்ளது என்பர். இக்கூற்றினை விளக்குக.
- இதில் வரும் சில பாடல்களைப் பாடி நடிக்குக.
- இந்நாடகத்தில் உம்மைக் கவர்ந்த விடயங்களைத் தருக.

**உசாத்துணைகள்:**

- இராவணேசன் நாடக பாடம் - பேராசிரியர் சி. மௌனகுரு.
- பேராசிரியர் சி. மௌனகுருவின் நேர்காணல்கள் - க. ஸ்ரீகணேசன்.

**தேர்ச்சி 5.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வார்.

**செயற்பாடு 5.2.1.3** : இராவணேசன் எழுத்துரு மூலக்கூறுகளை அறிவோம்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களில் மேற்கிளம்பும் நாடக மூலக்கூறுகளின் தன்மையை விவரிப்பார்.
- அம் மூலக்கூறுகள் நாடக முழுமைக்கு வழங்கியுள்ள பங்களிப்பை உணர்ந்திருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இராவணேசன் எழுத்துருப் பிரதி.
- இராவணேசன் ஒளிப்பதிவு இறுவட்டு.
- இராவணேசன் பற்றிய பத்திரிகை விமர்சனங்கள்.

**அறிமுகம்:**

இராவணேசன் நாடக எழுத்துருவின் மூலக்கூறுகள் நாடக முழுமைக்கு வழங்கியுள்ள பங்களிப்பினை ஆராய்வதே இவ்வலகின் நோக்கமாகும்.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- வாசிப்பு.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- மாணவர்களைக் குழுநிலை வாசிப்புக்குட்படுத்தி நாடக மூலக்கூறுகளான கரு, கதைப்பின்னல், கட்டமைப்பு, மோதுகை, பாத்திரங்கள், சொல்லாடல், பாத்திர உணர்ச்சிகள், எதிர்பார்ப்பு நிலை, பாத்திரச் செயல்கள், காண்பியங்கள், மோடி போன்ற கூறுகள் இராவணேசன் நாடகத்தில் வெளிப்படுவதனைக் குழுக் கலந்துரையாடல் மூலம் கண்டறிந்து முன்வைப்பதற்குப் பணியுங்கள்.
- கண்டறிந்து முன்வைக்கப்பட்ட மூலக்கூறுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - இராவணேசனின் எழுத்து வடிவமானது பெருமளவில் மரபுவழிக் கூத்தின் சாயலிலேயே காணப்படுகின்றது. அதாவது காப்பு, பாத்திர வரவுகள், பாடலிலான உரையாடல்கள், வாழிபாடுதல் எனக் கூத்தின் கட்டமைப்பிலேயே காணப்படுகின்றது.
  - கதைப்பின்னலானது இராவணனின் வரவில் இருந்து அங்கதன் தூதுடன் ஆரம்பமாகி, இராவணனின் இறப்புடன் நிறைவு பெறுகின்றது.
  - அங்கதன் தூதிலேயே நாடகத்துக்கான மோதுகை ஆரம்பமாகின்றது.
  - நாடகத்தின் கதைக் கருவாகத் தன்மானத்திற்காகத் தோல்வி என்று தெரிந்தும் போரிட்டு

மடியும் வீரம்மிக்க மன்னனின் வரலாறு காணப்படுகின்றது.

- பாத்திரங்களாக இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித், மண்டோதரி, இராமன், இலக்குவன், அங்கதன், போர்வீரர்கள் போன்றோருடன் ஏடுபடிப்போரும் காணப்படுகின்றனர்.
- நாடகத்தின் மோடியானது மோடியுற்றதாகக் காணப்படுகின்றது.
- சொல்லாடல்கள் பாடல்களிலேயே அமையப்பெறுகின்றன.
- கதை சொல்லும் பாணியிலேயே இந்நாடகம் நகர்த்தப்படுகின்றது.
- தன்மானத்தை பெரிதாக நினைக்கும் பாத்திரமாக வீரம், கோபம் போன்ற உணர்வுகளுடன் இராவணன் பாத்திரம் காணப்படுகின்றது.
  - ♦ மண்டோதரி, கணவன் மேல் அக்கறை கொண்ட பாத்திரமாகப் புத்திர பாசம் மிக்க பாத்திரமாக, கணவன் ஏற்காதுவிடினும் தர்மத்தை எடுத்துரைக்கும் பாத்திரமாகச் சித்திரிக் கப்படுகிறது.
  - ♦ கும்பகர்ணன் சகோதர பாசத்தோடு படைக்கப்பட்டாலும் சரியானதை எடுத்துச் சொல்லும் பாத்திரமாகக் காணப்படுகிறது.
  - ♦ இந்திரஜித்தன் துடுக்குத்தனமும் வீரமும் மிக்க பாத்திரமாகவும் தந்தைக்காக எதையும் செய்யத் துணியும் பாத்திரமாகவும் காணப்படுகின்றது.
  - ♦ இராமன் இரக்கமற்ற பாத்திரத்தினைப் போல, எதிரியைப்போலச் சித்திரிக்கப்பட்டுள்ளான்.
- இராவணேசன் நாடகத்தின் முழுமைக்கு, அதன் அரங்க மூலக்கூறுகள் பல்வேறு வகையில் உதவியுள்ளன.
  - ♦ இந்நாடகம் எடுத்துரைப்புப் பண்புமிக்க நாடகமாக இருப்பதற்கு அதன் மோடியுற்ற பண்புகளும், கூத்து வடிவத்தினாலான கட்டமைப்பும் முக்கியமான காரணமாகும்.
  - ♦ நாடகம் ஒரு அவலநெறி நாடகமாக, வாசிப்பவரின் மனதினை வருடுவதற்கு அதன் கரு, காரணமாகக் காணப்படுகின்றது. இராவணனின் பக்கத்தே நியாயம் இல்லாது விடினும், தன்மானத்துக்காக வீழ்ச்சியை ஏற்கும் அவனின் வீரம், அவனை அவல நாயகனாகச் சித்திரிப்புச் செய்கின்றது.
  - ♦ இராவணன் கதாபாத்திரத்தினை மட்டுமே மையமாகக் கொண்டு நாடகத்தின் கதை பின்னப்பட்டுள்ளதனால் அக்கதைப் போக்கிற்குக் கதை சொல்லும் பாங்கிலான கதைப் பின்னல் அமைப்பு பொருத்தமானதாக ஆகி வருகின்றது.
  - ♦ விருத்தம், தரு, அகவல், கந்தார்ந்தம் எனப் பாவினங்கள் மூலமாகக் கூத்தின் உரையாடல் களும், செயல்களும் நகர்த்தப்படுவதானது இதனை ஒரு ஓயிலாக்க நாடகமாக முற்றிலும் இனங்காட்டுகின்றது. அது மட்டுமன்றிப் பாத்திரங்களின் பண்புகளை வெளிப்படுத்துவதிலும், இப்பாடல்கள், ஆடல்கள் நன்கு உதவுகின்றன.
  - ♦ நாடகத்தின் தொடக்கமே அங்கதன் தூதுடன் ஆரம்பிக்கின்றது. அங்கதன் தூதுலேயே 'முரண்' ஆரம்பிக்கின்றது. அம்முரணே, நாடக முழுமையிலும் விரவி அவலத்தை

நோக்கி நாடகத்தினை நகர்த்துகின்றது.

♦ இராவணனிடம் மேலோங்கி இருக்கின்ற வீர உணர்ச்சி, நாடக முழுமையில் செல்வாக்குச் செலுத்தி, கும்பகர்ணன், இந்திரஜித்தன் போன்ற பாத்திரங்களிலும் விரவி, வீழ்ச்சியில் சோகத்தினை வருவிக்கின்றது.

இவ்வாறு இராவணேசனின் முழுமையில் அரங்க மூலக்கூறுகள் ஏற்படுத்திய விளைவு களைக் கலந்துரையாடுதல் மூலமாக, மாணவர்களுக்கு உணர்த்திட முனைதல் வேண்டும்.

**கணிப்பீடு:**

- இராவணேசன் நாடகத்தின் பாத்திரங்களைப் பட்டியலிடுக.
- இந்நாடகத்தில் ஏடுபடிப்போர் பாத்திரங்களின் பணி யாது?
- இராவணேசனில் பயன்படுத்தப்பட்ட பாவினங்கள் எவை?
- இராவணேசன் நாடகத்தினை விளங்கிக் கொள்ள அதன் அரங்கக் கூறுகள் எவ்வகையில் உதவுகின்றன.
- இராவணேசன் நாடகத்தில் காணப்படுகின்ற வடமோடிக் கூத்து வடிவத்தின் பண்புகளை இனங்காண்க.

**உசாத்துணைகள்:**

- இராவணேசன் - சி. மௌனகுரு
- மௌனகுருவின் நேர்காணல் - க. ஸ்ரீகணேசன்

**தேர்ச்சி 5.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம 52 :** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வார்.

**செயற்பாடு 5.2.2.3 :** நாடக எழுத்துருவின் மூலக் கூறுகளை நெறியாள்கை நிலையிலும் பார்ப்போர் நிலையிலும் பகுப்பாய்வு செய்வோம்.

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள் :**

- கரு, கதைப்பின்னல், கட்டமைப்பு, மோதுகை, பாத்திரங்கள், சொல்லாடல், பாத்திர உணர்ச்சிகள் எதிர்பார்ப்பு நிலை, பாத்திரச் செயல்கள், காண்பியங்கள்,மோடி, கதி போன்றவை எழுத்துருவுக்கு ஊடாகமேற்கிளம்பும் விதத்தினைப் பகுப்பாய்வு செய்திருப்பார்.
- பார்ப்போர் நிலையில் எழுத்துரு ஏற்படுத்தும் தாக்கத்தினை உணர்ந் திருப்பார்.
- நாடகம் கட்புல செவிப்புல மற்றும் உணர்ச்சி ரீதியாக ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது என்பதனைப் பார்ப்போர் நிலையில் பெற்றிருப்பார்.

**அறிமுகம்:**

இராவணேசன் நாடக எழுத்துருவினையும் அதன் தயாரிப்பு வடிவத்தினையும் வைத்து, நெறியாள்கை நிலையிலும் பார்ப்போர் நிலையிலும் அந்த எழுத்துருவின் பண்புகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்பெறுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- வாசிப்பு.
- கலந்துரையாடல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடக வாசிப்பினூடாக இனங்கண்ட விடயங்களினூடாகவும் சந்தர்ப்பம் இருப்பின் இராவணேசன் ஒளிப்பதிவு வடிவத்தினை மாணவர்கள் பார்க்கச் செய்வதனூடாகவும், அதனை நெறியாள்கை நிலையில் பகுப்பாய்வு செய்து கலந்துரையாடுங்கள்.
- இராவணேசன் நாடகத்தின் கதைக்கருவாக, ‘‘தோல்வி நிச்சயம் என்று தெரிந்தும், தன்மானத்திற் காகப் போர் செய்து இலங்கையின் வீழ்ச்சி ஏற்கும் தன்னிகரில்லாத அவல நாயகனின் நிலை’’ என்பதாக வெளித்தெரிகின்றது.
- நாடகத்தின் கதைப்பின்னல் - இராவணன் வரவு - அங்கதன் தூது - மண்டோதரி வரவு - இராமன், இராவணன் போர் - இராவணன் தோற்றுத் திரும்புதல் - கும்பகர்ணன் வரவு - இராவணன், கும்பகர்ணன் உரையாடல் - இராமன் கும்பகர்ணன் போர் - கும்பகர்ணன் இறப்பு - சிங்கன், நீலன், மகரன் குருதிக் கண்ணன் போன்றோர் போரில் மடிதல் - இராவணன் துயரம் - இந்திரஜித் வரவு - இந்திரஜித், இராவணன் சந்திப்பு - இந்திரஜித்

- யுத்தம் புரிதல் - இராவணன் இந்திரஜித் சந்திப்பு - இந்திரஜித் இலக்குவன் போர்

இந்திரஜித் இறத்தல் -மண்டோதரி இராவணன் புலம்பல் - இராவணன் இராமன் யுத்தம் - இராவணன் வீழ்ச்சி - மண்டோதரி புலம்பலும் இறப்பும் என நகரும் கதைப்பின்னலை நினைவுபடுத்துங்கள்.

- கட்டமைப்பு - 13 அங்கங்களில், ஏடுபார்ப்போரின் கதை நகர்வுடன் நாடகம் நகர்த்தப்படுகிறது. காப்புடன் ஆரம்பித்து, இராவணன் வரவு தொடக்கமாகவும் - அங்கதன் வரவுடன் சிக்கல் ஆரம்பித்து - மண்டோதரியின் உரையாடலுடன் அது முழுமை பெற்றுக் கும்பகர்ணன், இந்திரஜித் வரவுகள், போர் போன்றவற்றில் சிக்கல் உச்சம் நோக்கிச் சென்று, இராவணன் இறப்பு உச்சக்கட்டமாக அமைந்து, மண்டோதரி புலம்பலுடன் நாடகம் நிறைவு பெறுகின்றது.
- மோதுகை - நாடகத்தின் தொடக்கத்திலேயே 'மோதுகை' ஆரம்பிக்கின்றது. அதாவது அங்கதன் இராவணனுடன் உரையாடி, 'கேளடா இராவணா! சீதையை சிறைவிட்டு எங்கள் இராமனின் கால்களைத் தொழுதுவாழ்' என்ற வார்த்தைகள் இராவணனைச் சினங்கொள்ளச் செய்வதுடன் மோதுகை ஆரம்பமாகிறது. பின்னர், இராவண - இராம யுத்தம், கும்பகர்ணன் - இராவணன் தர்க்கம், கும்பகர்ணன் - இராமன் போர், இந்திரஜித் - இராமன் போர், இராவணன் - இந்திரஜித் உரையாடல், இந்திரஜித் - இலக்குவன் போர், என வளர்ந்து, இராவணனின் இறப்புடன் நிறைவு பெறுகின்றது. தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலான போராட்டமே இந்நாடகத்தின் மோதுகையாகும்.
- பாத்திரங்கள் - கதை சொல்லும் பாத்திரமாக - ஏடுபடிப்போர்.
  பிரதான பாத்திரங்களாக - இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித், மண்டோதரி, இராமன், இலக்குவன், அங்கதன்.
  உதிரிப் பாத்திரங்களாக - படை வீரர்களும்
  தோன்றாப் பாத்திரங்களாக - சீதை, சிங்கன், நீலன், மகரன், குருதிக் கண்ணன்.
- சொல்லாடல் - வடமோடிக் கூத்து மரபுக் கொப்பச் சொல்லாடல்கள், பாடல்கள் மூலமாகவே சித்தரிக்கப்படுகின்றது. விருத்தம், அகவல் சமூக விலாசம், கந்தார்த்தம், போன்ற பாவினங்களும், பல்வேறு மரபுவழித் தருக்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. மிகச் சிறிய அளவில் ஊட்டு வசனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. செம்மையான மொழிப் பிரயோகமே காணப்படுகிறது.
  அதேவேளை, தனிப்பாடல்கள் - உ+ம் : இராவணன் வரவு
  உரையாடல் பாடல்கள் - உ+ம் : மண்டோதரி-இராவணன் உரையாடல்.

தர்க்கப் பாடல்கள் - உ+ம் : அங்கதன் - இராவணன் உரையாடல்.

சண்டைப் பாடல்கள் - உ+ம் : இலக்குவன் - இந்திரஜித்

கதை சொல்லும் பாடல்கள் - உ+ம் : ஏடுபார்ப்போர் தருக்கள்

என வகைப்படுத்தக் கூடியனவாக உரையாடல்கள் அமைந்துள்ளன.

*இராவணேசனில், கம்பராமாயணத்தில இருந்து சில பாடல்கள் இணைக்கப் பெற்றுள்ளன.

- வாரணம் பொருத மார்பும்.
- தலையின் மேல் சுமந்த கைகள்.
- வென்றிவன் வருவேன்.
- வென்றிலேன் என்ற போதும்.

*மட்டக்களப்பு 'இராம நாடக' (வடமோடிக் கூத்து) த்தில் இருந்தும் சில பாடல்கள் இணைக்கப் பெற்றுள்ளன.

- காரணப் பொருளே போற்றி.
- இந்த இராவணன் வார்த்தை கேட்டு.
- அண்ட பகிரண்ட முதல்.

• பாத்திர உணர்ச்சிகள் - பிரதான பாத்திரங்களின் பண்புகளை வெளிப்படுத்தவல்ல வரவுத் தருக்களில் அவ்வப் பாத்திரங்களின் பிரதான உணர்ச்சி நிலைகள் சித்திரிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இராவணன் வரவு விருத்தத்தில் ''மும்மூர்த்திகளை ஓட்டி'' எனத் தொடங்கும் பாடல் இராவணனின் வீர உணர்ச்சியையே சித்திரித்து நிற்கின்றது. ''உரமுள்ள நெஞ்சோடு உலகெங்கும் ஆள்கின்ற வரம் பெற்று வாழ்ந்திருப்பேன்'' இந்த வீர உணர்ச்சியின் பாற்பட்ட தன்மான உணர்வே இராவணன் பாத்திரத்தின் நிரந்தர உணர்ச்சியாகும். ஆயினும், அவ்வப்போது நெருக்கீடுகளில் பல்வேறு உணர்வுகள் வந்து மறைகின்றமையைப் பாடல்கள் சித்திரிக்கின்றன.

உ+ம்: ''அனுப்பினேன் வீரரெல்லாம் அனைவரும் இறந்தனரையோ, எனக்கு இப்பரீட்சைதனை ஏன் வைத்தாய் இறைவா'' என்னும் போது சோகமும்

''எதிர்த்திடுவேன் எனவுரைக்கும் எனது மைந்தா
ஈன்றிட்ட பொழுதைவிட இன்றுதானே
குதிக்குதடா எனது நெஞ்சம் சென்றுவாராய்''- என்னும் போது மகிழ்வும் வெளிப்படுவதனை நோக்கலாம்.

- இவ்வாறு மண்டோதரி, இந்திரஜித்தன், கும்பகர்ணன், இராமன் போன்ற பாத்திரங்களின் உணர்ச்சிகளைப் பார்க்க முடியும்.

- **எதிர்பார்ப்பு நிலை** -

நாடகத்தினை வாசிக்கும் போது, அடுத்தது என்ன? என்றதான
எதிர்பார்ப்பு நிலைகள் (Suspense) இராவணேசனின் சில இடங்களில் ஏற்படுகின்றன. இராவணன் யுத்தம் செய்து தோல்வி யுடன் திரும்புதல் - இந்திரஜித்தின் இறப்புக்குப் பின்னரான நிலை - இராவணன் - இராமன் இறுதியுத்தம், போன்ற இடங் களில் இத்தகைய எதிர்பார்ப்பு நிலை தோன்றுகின்றது.

**பாத்திரச்செயல்கள்**

பாத்திரச்செயல்கள் இராவணேசனில் மேடைக்குறிப்புகளுக்குள் நேரடியாகக் குறிக்கப்பட்டுள்ளன. அதனைவிடப் பாடல்களுக்குள் புதைந்துள்ளவையாகச் செயல்கள் உள்ளன. கூத்து வடிவமாக இதனை ஆடும் போது ஆடல்கள் ஊடாகவே அச் செயல்கள் வெளிப்படலாம்.

- **காண்பியங்கள்** -

கூத்து வடிவ நாடகமாக, இராவணேசன் காணப்படுவதனால் காண்பியங்கள் முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால், மேடைக் குறிப்புக்களுக்குள் ‘‘திரைபிடித்து அழைத்து வரப்படுதல்’’ என்ற வார்த்தைகளுக்கூடாகப் பிடித்து வரப்படும் திரை ஒரு காண்பியமாகக் காணப்படுகின்றது. கூத்து வட்டக் களரிக்காக எழுதப்படும் போது காண்பியங்களும் கற்பனையில் பாரக்கப்படக் கூடியவாறு பாடல் களில் சொல்லப்படுவது வழக்கம். அவ்வழக்கம் இதிலும் காணப்படு கின்றது. உதாரணமாக, இந்திரஜித்தின் வருகையில், ‘‘மாயரதமோதியே பேய்கள் நின்றாடவே வந்தனனுமிச் சபையிலே’’ என்ற பாடலிலுள்ள தேர் கற்பனையான காண்பியம்.

இவ்வாறு எழுத்துருவுக்குள் மறைந்து கிடைக்கும் காண்பியங்களை மாணவர்கள் இனங்காணச செய்து எழுதச் செய்யுங்கள்.

- **மோடி** -

இராவணேசன் பாடல், ஆடல் மூலங்களை அடிப்படையாக கொண்ட வகையிலும், எடுத்துரைக்கும் பண்பால் அமைந்தவகையிலும் இது யதார்த்தமற்ற மோடியுற்ற நாடகமாகும்.

இது தவிரவும், பாத்திரப் பண்புகள் அறிமுகம் - உரையாடல் - கதைப்போக்கு ... போன்ற பலவிடயங்களுக்கூடாகவும் இதன் மோடித் தன்மையை இனங்காண முடியும்.

- **கதி** -

நாடகம் நகருகின்ற வேகத்தினைக் கதி என்று அழைப்பர். இராவணேசனின் கதியானது தொடக்கத்திலேயே, முனைப்புடைய கதியுடன் ஆரம்பமாகி, அங்கதன் தூதின் தர்க்கத்தில் அதிகரித்து, மண்டோதரியின் உரையாடல் நேரம் தணிந்து, யுத்தத்தில் மீண்டும் உயர்ந்து என மாறி மாறிக் கதி உச்சம் பெற்று, இறுதிக்கட்டத்தில் இராவணன் இறப்புடன் உயர்ந்து தணிகின்றது. பாரப்போர் நிலையில் எழுத்துருவினை நோக்கும் போது, இராவணேசன் கூத்தாகவும், நவீன நாடகமாகவும் நோக்கப்படலாம் என்பதனை மனங்கொள்க.

- கூத்து என்ற வகையில் இராவணேசனை நோக்கும் போது, காப்பு- பாத்திர வரவுகள் -கதை

நகர்வுகள் -

வாழி பாடுதல் என்ற அதன் கட்டமைப்புக்குட்பட்டதாகவே எழுத்துருவின் அமைப்பு காணப்படுகின்றது. எடுத்துரைக்கும் பண்புகள், வடமோடிக்கூத்துக்குரிய போர் பற்றிய கருப்பொருள், வீரத்தை மையப்படுத்திய இயக்க முழுக்கதையையும் சொல்லும் வழக்கின்மை, உணர்வுக்கு முக்கியத்துவமின்மை என்றவகையில் கூத்துக்குரிய எழுத்துருவாக இதனை நோக்க முடியும். நவீன நாடகமாக நோக்கும் வகையில் கூத்தின் கட்டமைப்புக்குட்பட்ட எழுத்துருவில் இதன் ஆசிரியர்.

- ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு கதையைப் பின்னி இருப்பது.
- 1 மணி நேரத்திற்குள் முடிவுறத்தக்க முழுமையான கதைப் பின்னலை வடிவமைத்திருப்பது.
- பாத்திரங்களைக் கூத்துப்பாணியில் அறிமுகம் செய்தலும் அவற்றை வளர்த்துக் கொண்டு சென்ற வகையில், உணர்வுப் பாங்கான பாத்திரங்களை வடிவமைத்திருப்பது.
- தொடக்கம் வளர்ச்சி சிக்கல் - முடிவு என்ற நியம நாடக வளர்ச்சிக் கட்டமைப்பை உட்கொண்டிருத்தல்.
- ஒரு அவல நாடகத்துக்குரிய தன்மையில் அதன் முடிவைச் சித்திரித்திருக்கின்றமை.
- ஏடுபார்ப்போரை, உரைஞர்களைப் போன்று கதைசொல்லி களாகப் பயன்படுத்தி இருக்கின்றமை போன்றதான விடயங் களை எடுத்துக்கூறிக் கலந்துரையாடலாம்.

-இதன் மேடையேற்றங்களை நோக்கும் போது,

-1965இல் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றிய போது, கூத்தின் மரபுவழித்தன்மையில் இருந்து வேறுபட்டதாக

-படச்சட்ட மேடையில்

-நடிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்ததாக

-நாடக மயப்பட்டதாக

-புதிய இசைக்கருவிகள், செம்மையாக்கப்பெற்ற, இசை ஒழுங்குகளுடன்

-யதார்த்தத்துடன் கூடிய வேடஉடைகளுடன்

-புத்தாக்கப்பட்ட கூத்தாக மேடையேற்றப்பட்டது.

-2000ஆம் ஆண்டளவில் பேராசிரியர் சி. மௌனகுரு நெறிப்படுத்திய போது, இராவணேசன் புதியதொரு வடிவத்தில் நவீன நாடகமாகவே மேடையேற்றினார் எனலாம்.

-இதில் நடிப்புடன் பாத்திர வளர்ச்சி நிலை என்பது மிகவும் துல்லியமாக வளர்த்து செல்லப்பட்டது.

பச்சை, வெள்ளை, வர்ண நகரும் துண்டுக் காட்சித் தட்டிகள் அரங்கின் பிரதான காண்பிய வடிவங்களாக, போர்க்கருவிகளாக, போர்க்களமாக, அரண்மனையாகப் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. - கூத்தின் பாடல்கள் செம்மைப்படுத்தப்பட்டுப் பாடப்பட்டதுடன் கர்நாடக

இசை மெட்டுக்களும் எடுத்துரைப்போருக்குப் பயன் படுத்தப்பட்டன.

-போர்க்காட்சிகளிலும், பாத்திர வரவுகளிலும் அசைவுக் கோலங்கள், ஆட்டக்கோலங்கள் அழகியல் மயப்படுத்தப் பட்டதாக நிகழ்த்தப்பட்டன.

-வேட உடைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனவையாக, கருத் துருவப்பண்புகளுடனும், வடிவமைக்கப்பட்டது.

-நாடக நகர்வும், கதியும் சூழமைவுக்கேற்ப நேர்த்தியாக நிகழ்த்தப்பட்டன.

-இராவணனின் வீரமும், தன்மானத்திற்காக இலங்கையின் வீழ்ச்சினை ஏற்கும் மாவீரனாக உயர்ந்த பாத்திரமாக, பாத்திரம் முனைப்புறும் வகையில் நாடகம்□ வியாக்கியானம் செய்யப் பட்டிருந்தது.

-2010ஆம் ஆண்டு மீளவும் தயாரித்த போது, மண்டோதரியின் பாத்திரத் துயரம், புத்திர சோகம் முனைப்புறும் வகையில் தயாரிக்கப்பட்டது.

- பார்ப்போர் நிலையில்இராவணேசன் தயாரிப்புக்களின் தன்மைக்கு ஏற்ப வரவேற்பைப் பெற்றன.
  - பார்ப்போர் கதையுடன் ஒன்றித்திருந்தனர்.
  - அசைவியக்கங்களும், நாடகக் கதியும் வைத்த கண் வாங்காமல் நாடகத்துடன் பார்ப்போரை ஒன்றிக்க வைத்தன.
  - 2010 இல் இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் இந்நாடகம் மேடையேற்றப்பட்ட தனால், யுத்த அழிவுகளின் விளைவுகளுடன் நாடகத்தினை இணைத்து நோக்கினர். அது சமகால விடயத்தினைப் பேசியதாக உணர்ந்தனர்.

**கணிப்பீடு:**

- இராவணேசன் நாடகத்தின் பாடு பொருள் யாது?
- இதன் மோதுகை நிலைகளைச் சுட்டிக்காட்டுக.
- பிரதான பாத்திரங்களின் பண்புகளை எழுதுக.
- இராவணேசனை, கூத்தாகவும், நவீன நாடகமாகவும் பிரித்து ஆராய்க.
- இராவணேசன் பார்ப்போருக்கு எவ்வகையான உணர்வு நிலைகளைப் பிரதிபலித்திருக்கும் என்பதனை எழுதுக.
- இராவணேசனில் வெளிப்பட்ட நவீன நாடகப் பண்புகளை எடுத்துரைக்குக.
- இராவணேசனை ஒரு முழுமை பெற்ற கூத்தாகக் கொள்ள முடியுமா? உமது கருத்துக்கு நியாயம் தருக.

**தேர்ச்சி** 5.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.2 : விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வார்.

**செயற்பாடு** 5.2.3.3 : இராவணேசன் நாடக எழுத்துருவின் சமூக பண்பாட்டுப் பின்புலங்களை மதிப்பீடு செய்வோம்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்:**

- இராவணேசன் நாடக எழுத்துரு எழுதப் பெற்ற மூலம், களம் மற்றும் கலாசாரப் பின்னணியை எடுத்துரைப்பார்.
- இராவணேசன் நாடக எழுத்துருவின் மொழிநடை மோதுகை, செயலியக்கம், மோடி, பாத்திரங்கள் , சொல்லாடல், கதைப்பின்னல், கரு, உணர்ச்சிகள் போன்ற அம்சங்களில் சமூக பண்பாட்டுப் பின்புலத்தின் செல்வாக்கை இனங்கண்டிருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இராவணேசன் நாடக எழுத்துரு.
- இராவணேசன் - காணொளி இறுவட்டு.
- இராவணேசன் நாடக ஒளிப்படங்கள்.

**அறிமுகம்:**

இராவணேசன் நாடக எழுத்துருவினூடாக வெளிப்படுகின்ற சமூக, பண்பாட்டுப் பின்புலங்களை இனங்காண வேண்டுமென இவ்வலகில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- விரிவுரை.
- வாசிப்பு.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- நாடக எழுத்துரு பற்றிய சில அடிப்படை விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.

* இராவணேசன் நாடகம் எழுதப்படுவதற்குக், கம்பராமாயணத்தின் யுத்தகாண்டம் மூலமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இராவணனின் கதை பல்வேறு இலக்கியங்களிலும் வான்மீகி ராமாயணம் போன்ற புராணங்களிலும் சித்திரிக்கப்பட்டுள்ளது. அவை எல்லாவற்றிலும் இராவணன் என்ற பாத்திரம், அரசனாக, அரக்கனாக, பெண்பித்துப் பிடித்தவனாக, எதிரிப் பாத்திரமாகவே சித்திரிக்கப்பட்டுள்ளது. ஈழத்தில் எழுதப்பட்டு, வடமோடிக் கூத்தாக ஆடப்படுகின்ற இராம நாடகமும். அதற்கு விதிவிலக்கன்று. ஆனால், ஏற்கெனவே கூறியது போன்று, தமிழகத்தின் திராவிட முன்னேற்றக்கழகத்தின் எழுச்சியில் திராவிட மன்னனான, இராவணன் சிவபக்தனாக, நேர்மையாக ஆட்சி செய்த தமிழ் மன்னனாகச் சித்திரிக்கப்பட்டான்.

இத்தகைய பின்னணியிலேயே, இராவணேசன் நாடகத்தின் கதாநாயகனாக, இராவணன் எடுத்தாளப்பட்டுள்ளான்.

கம்பராமாயணத்தின் யுத்த காண்டப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு, புதிய வியாக் கியானத்தோடு இதன் கதைப்பொருள் எடுத்தாளப்பட்டுள்ளது.

* இராவணேசன் 1964 இலும், 2000 இலும், 2003 இலும், 2010 இலும் புதிய புதிய தயாரிப்புக்களாகத் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது.
  - 1964 இல் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இராவணேசனைத் தயாரித்த போது மரபு வழியான வடமோடிக் கூத்துக் கலாசாரத்தில் இருந்து மாறி, இராவணன் மன்னனை தன்மானத்துக்காகத் தான் தோற்பது என்பது தெரிந்தும் போரிட்டு மடியும் அவல நாயகனாகச் சித்திரிக்கப்படுகின்றான். இவ்வாறு இராவணன் பாத்திரம் எடுத்தாளப் பட்டமைக்கும், அவனைத் தன்மானம் மிக்க தமிழ் மன்னனாகச் சித்திரித்தமைக்கும், அக்கால சமூக அரசியற் சூழமைவுகளும் காரணம் எனலாம். அறுபதுகளில் தமிழ்த் தேசிய எழுச்சிகள் முனைப்புப் பெற்றிருந்த காலமாகும். தமிழரசுக் கட்சி போன்றவை தோற்றம் பெற்று, இலங்கைச் சிறுபான்மையினராகிய தமிழர்கள் தாம் ஒடுக்கப்படுவதனைப் பல்வேறு போராட்டங்களிலும் வெளிப்படுத்திய காலமாகும். எனவே, வீரம் மிக்க தமிழ் மன்னனாக இராவணன் தமிழ் தேசியம் சார்ந்து முன்னிலைப்படுத்தப்பட்டான்.
* இந்தச் சிந்தனைப் பாங்கிற்குப் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி போன்றோரின் வழிநடத்தல் காரணமாக இருந்துள்ளது. அதேநேரத்தில் அதிகம் வேறுபடாத நாட்டாரியற் பண்புகளுடனேயே நாடகம் மேடையேற்றப்பட்டுள்ளது. ஆனால், நேர்த்தியுடன் நியம நாடக மூலக்கூறுகளுடன் மத்தியதரப் பார்ப்போரினையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் அம்முதற் தயாரிப்பு அமைந்தது.

  சிங்களத்தில் ‘மனமே’ ‘சிங்கபாகு’ போன்ற, பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவின் நாடகங்கள் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள், சிங்களத் தேசிய நாடகம் என்ற சிந்தனை அவற்றுக்கு முன்வைக்கப்பட்ட முக்கியத்துவம் போன்றவையும் இராவணேசனின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்துள்ளன.
* 2000, 2003 காலப்பகுதியில் பேராசிரியர் சி. மௌனகுரு தாமே இதனை நெறியாள்கை செய்தபோது, இன முரண்பாடுகள் முனைப்புப் பெற்று யுத்த சூழலுக்குள் மக்கள் வாழ்ந்தனர். எனவே இப்படைப்பில், இராவணன் எடுக்கும் யுத்தத்துக்கான முடிவினை, விபீஷணன் வழியில் கும்பகர்ணன், மண்டோதரி, இந்திரஜித்தன் ஆகிய அனைவரும் எதிர்க்கின்ற பாத்திரங்களாகப் படைக்கப்படுகின்றன. ஆயினும், தவிர்க்க முடியாத சூழலில் உடன்பட்டுப் போரிட்டு மடிகின்றனர். இதற்கென உருவாக்கப்பெற்ற போர்க்காட்சிகளும், மண்டோதரியின் துயரமும், கும்பகர்ணனின் செஞ்சோற்றுக்கடனுக்கான அர்ப்பணிப்பும், இந்திரஜித்தின் மனம் சோர்ந்த போக்கும், சமகால யுத்தத்தினை நினைவுபடுத்துகின்றன. தனித்து

நிற்கும் பாத்திரம் போல இராவணன் பாத்திரம் அவலத்தினைச் சுவைக்கச் செய்கின்றது.

அதேவேளை, அரங்க மூலங்கள் ஒவ்வொன்றும் தமிழ் மரபுவழி நாடகக் கூறுகளில் இருந்து கவனமாகப் பிரிந்ததெடுக்கப்பெற்ற நேர்த்திமிகு நுட்பங்களுடன் நெறியாக்கம் செய்யப்படுகின்றது. உதாரணமாக, வேட உடை ஒப்பனை, தமிழ்க் கலாசார வேட உடையாக வடிவமைக்கப்பட்டமையையும், 'திரைபிடித்தல்' என்னும் செயற்பாட்டின் நீட்சியாகச் செவ்வகத் தட்டிகளைப் பிரதான காட்சிப் பொருளாகப் பயன்படுத்தியமையையும் குறிப்பிட முடியும்.

2010இல் தயாரிக்கப்பெற்ற இராவணேசன், ஈழத்தில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பெற்ற சூழலில், யுத்த இழப்புக்களின் பின்னணியில் நின்ற, மண்டோதரியின் பாத்திரத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் போரின் இழப்புகளாற் குமுறும் தாய்மைகளின் பிரதிநிதியாக மண்டோதரி சித்திரிக்கப்படுகிறாள். மண்டோதரியின் கேள்விகள் இராவணன் பாத்திரத்தினை நிலை குலையச் செய்கின்றது.

''யுத்தம் வந்தால் பகைமைகள் பரவும் குரோதம் கௌவும்
கொலைத் தொழில் நிகழும்''
''போரை என்றும் மக்கள் ஏற்கோம் - எங்கள்
புருஷர் பிள்ளைகள் போரில் மடிவது பார்க்கோம்.''

என்ற வாதங்கள் கொடூர யத்தத்தின் விளைவுகளைப் பிரதிபலிப்பதாகவும், பெண்ணியல் நோக்குடன் அணுகப்பட்டதாகவும் புதுப்பொலிவுடன் மேடையேறியது.

அரங்க உத்திகளிலும் நுட்பங்களிலும் நவீன முறைமைகள் பின்பற்றப்பட்டன. வடமோடி கூத்தின் பாடல், ஆடல் மெட்டுகளுடன் கர்நாடக சங்கீதத்தினதும், பரதத்தினதும் கூறுகள் இணைக்கப்படுகின்றன. புதிய இசைக் கருவிகளின் சேர்க்கையும் இசைசார்ந்த செம்மையும் இப்படைப்பில் முதன்மை பெற்றன.

மேற்கூறப்பட்டவாறு, இராவணேசனின் வெவ்வேறு தயாரிப்புக்கள், அந்தந்தக் கால, அரசியல் சமூகச் சூழமைவுகளைப் பிரதிபலிக்கின்றவையாகவும், அதற்கேற்பப் பாத்திரங்கள் படைக்கப்பட்டவையாகவும், அதற்கேற்ப நாடகத்தின் கரு, உணர்ச்சிகள், சொல்லாடல், செயலியக்கம் என அனைத்தும் மாற்றம் பெற்றவையாகவும் காணப்படுகின்றமையைக் கலந்துரையாடுங்கள்.

* மாணவர்களை 3 குழுக்களாகப் பிரித்து, இராவணேசனின் மூன்று தயாரிப்புக்களினதும், சமூக, அரங்கியற் பெறுமானங்களைத் தனித்தனியாக இனங்கண்டு முன்வைப்பதற்குப் பணியுங்கள்.

i. 1964 ஆற்றுகை.

ii. 2000, 2003 ஆற்றுகை.

iii. 2010 ஆற்றுகை.

* குழுக் கலந்தாய்வின் பின்னர், எழுத்துருவின் சமூகவியல் முக்கியத்துவம், எவ்வாறு புறச்சூழமைவுகள் வெவ்வேறு தொனி பெறுகின்றன என்பதனைக் கலந்துரையாடுங்கள்.

* இராவணேசனின் வெவ்வேறு தயாரிப்புக்களின் காணொளியைப் பெறக்கூடியதாக இருப்பின் அவற்றினை மாணவர்கள் பார்வையிடச் செய்வதன் மூலம் செயற்பாட்டினை இலகு படுத்தலாம்..

**முதன்மைப் பதங்கள்**

- தேசியம்.
- சூழமைவு.
- தொனி.
- அரங்க உத்தி.
- இனமுரண்பாடு.

**கணிப்பீடு:**

- இராவணேசன் நாடக ஆற்றுகையின் வெவ்வேறு காலகட்டங்களை வரிசைப்படுத்துங்கள்.
- 1964இல் இராவணேசனை நெறிப்படுத்தியவர் யார்?
- 2000 ஆண்டுகளில் இராவணேசன் மேடையேற்றப்பட்ட போது வெளிப்பட்ட நாடகத்தின் தொனிப்பொருளை விவரிக்குக.
- 'அரசியல், சமூகச் சூழமைவுகள் நாடகங்களின் பாடுபொருளைத் தீர்மானிக்கின்றன என்பர்' இராவணேசன் நாடகத் தயாரிப்புக்களினூடாக, இக்கூற்றினை ஆராய்க.
- இராவணேசனின் வெவ்வேறு தயாரிப்புக்களிலும், வேறுபட்ட பாடுபொருள், ஆடல் பாடல், அரங்க உத்திகள், சமூகச் சூழமைவுகள் என்பவற்றை வெளிப்படுத்தவல்ல அட்டவணையொன்றினை ஆக்குக.
- மண்டோதரி என்ற பாத்திரத்தின் முன்னுரிமைப்பாட்டிற்கு அக்கால சமூக அரசியற் சூழலின் தாக்கம் எவ்வகையில் பின்புலமாக இருந்திருக்க முடியும்?

**உசாத்துணைகள்:**


- இராவணேசன் - சி. மௌனகுரு.
- சர்வதேச எழுத்தாளர் மாநாட்டு சிறப்புமலர் (2011) - கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன். "கூத்துருவம் ஊடாக புதுப்பரிமாணம் பெறும் ஈழத்து அரங்கம்" இராவணேசர்.

தேர்ச்சி 5.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார்.

தேர்ச்சி மட்டம் 5.3 : விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களை நயப்பார்.

செயற்பாடு 5.3.3 : இராவணேசன் நாடக எழுத்துருவின் கட்சித் துண்டம் ஒன்றினை ஆற்றுகை செய்வோம்.

பாடவேளை : 05

**கற்றற் பேறுகள் :**

- கருவானது ஆற்றுகையில் இழையோடியுள்ள விதத்தினை எடுத்துரைப் பார்.
- எழுத்துருவில் மேலோங்கி நிற்கும் உணர்ச்சி, ஆற்றுகையில் கையாளப் பெற்றுள்ள முறையினைச் சுட்டிக்காட்டுவார்.
- எழுத்துருவின் தொனியை வெளிக்கொணர்வதில் துணைகலைகளின் பங்களிப்பை விவரிப்பார்.
- ஆடல் பாடல்களினூடாகப் பாத்திரங்களைச் சித்திரிக்கும் அனுபவத் தினைப் பெற்றிருப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இராவணேசன் நாடக எழுத்துரு.
- இராவணேசன் காணொளி.
- தோல்கருவி, மிருதங்கம் / டொங்கி / மத்தளம்
- சல்லாரி.
- வேட உடைகள்.
- ஒப்பனைப் பொருட்கள்.

**அறிமுகம்:**

'இராவணேசன்' நாடகத்தில் இருந்து, காட்சித் துண்டம் ஒன்றை ஆற்றுகை செய்து பார்ப்பதும், அதனூடாகச் சித்திரிப்பு அனுபவத்தைப் பெறுவதும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- பாத்திரமேற்று நடித்தல்.
- முன்னளிக்கை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- 'இராவணேசன்' காணொளியினை மாணவர்கள் பார்வையிடுவதற்கு வழி செய்யுங்கள்.
- இராவணேசன் நாடக எழுத்துருவிலுள்ள காட்சி ஒன்றினை ஆற்றகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினை முன்வைத்து, மாணவர் விரும்பும் காட்சி ஒன்றினை முன்வைக்கப் பணியுங்கள்.
- மாணவர்கள் தெரிவு செய்யும் காட்சி பொருத்தமானதாக இருக்குமாயின் அதனை ஊக்கப்படுத்தலாம். அன்றேல் பொருத்தமான காட்சித் துண்டம் ஒன்றினை முன்வையுங்கள்.
- உதாரணமாக, 11ஆவது காட்சியாகிய, இராவணனும் இந்திரஜித்தும் சந்திக்கின்ற காட்சியினை

நிகழ்த்துவதற்கு முன்மொழிவு செய்யுங்கள்.

- அக்காட்சியில் வரும், ஏடுபார்ப்போர், இராவணன், இந்திரஜித் என மூன்று பாத்திரங்களை, விரும்பிய மாணவர்கள் வாசிப்பதற்குத் தூண்டுங்கள்.
- வாசிப்பதன் மூலம் அக்காட்சி பற்றிய பின்வரும் விடயங்களில் மாணவர்களுக்கான தெளிவினை ஏற்படுத்துங்கள்.

- இக்காட்சியில் தொடர்புபடுகின்ற பாத்திரங்கள்.
    - இக்காட்சிக்கு முன்னைய சம்பவங்கள்.
    - இக்காட்சியின் சாரம்.
    - இதில் வெளிப்படும் உணர்வுகள்.
    - இதில் வரும் பாத்திரங்களின் மனநிலை.
    - பாத்திரங்களின் பண்புகள்.
    - இதில் வருகின்ற மனதினைத் தொடுகின்ற சம்பவம் /விடயம்.
    - இக்காட்சித் துணடத்தின் உச்ச நிலையாகக் கொள்ளக்கூடிய சம்பவம் /விடயம்.

- வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கு அமைய, குழுக்களாகப் பிரித்து, தெரிவு செய்யப்பெற்ற காட்சியைக் குழுவாக ஆற்றுகை செய்வதற்குப் பணியுங்கள்.
- அக்காட்சிகளுக்குரிய பாடல்களின் மெட்டுக்களைப் பாடி அன்றேல் ஒலிப்பதிவு செய்வதனூடாக, மாணவர் கேட்டுப் பயிலச் செய்யுங்கள்.
- மாணவர்கள் சுதந்திரமாகப் புதிய புதிய மெட்டுக்கள் / முறைகளைப் பயன்படுத்தலாமென் பதனை எடுத்துக் கூறுங்கள்.
- மாணவர்களின் குழு ஆற்றுகையைப் பார்வையிடுங்கள்.
- ஆற்றுகைகளில் ஈடுபட்ட மாணவர் குழுக்களில் அதிக பாத்திரப் பொருத்தம் மிக்கவர்களை, மாணவர்களைக் கொண்டே தெரிவு செய்யுங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், அப்பாத்திரங்களைத் தாங்குவதற்கும், ஏனையோர் அரங்கு சார்ந்த ஏனைய பணிகளைப் பொறுப்பேற்கவும் வழிப்படுத்துங்கள்.
    - நெறியாளர்.
    - பிற்பாட்டுப் பாடுவோர்.
    - அரங்க முகாமையாளர்.
    - வேட உடை.
    - ஒப்பனை.
    - இசைக்கருவிப் பிரயோகம்.
- முதலில் பாடலைப் பயின்று பின்னர், ஆடலையும், நடிப்பையும் ஒழுங்குபடுத்த ஆலோசனை வழங்குங்கள்.
- குறிப்பிட்ட நாளில் காட்சியினை ஆற்றுகை செய்வதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.

- ஆற்றுகையின் விளைவினைக் கலந்துரையாடி மதிப்பீடு செய்யுங்கள்.
- குறிப்பிட்ட காட்சித் துண்டத்தில் வெளிப்படும் விடயங்கள் தொடர்பான தெளிவினை மாணவர் களுக்கு ஏற்படுத்துங்கள்.

  - இக்காட்சியில் • ஏடுபார்ப்போர் (எழுத்துரைஞர்)
    - இந்திரஜித்தன்
    - இராவணன் ஆகிய பாத்திரங்கள் தொடர்புபடுகின்றன.
  - இராவணன் யுத்தம் செய்து தோல்வியுற்று வந்தபின், கும்பகர்ணன், அண்ணனின் தவறை உணர்த்தி, செஞ்சோற்றுக் கடனுக்காகப் போர் செய்து, இறந்த பின்னர் இந்திரஜித்தன் வருகின்றான். அவன் தந்தைக்காகப் போருக்குச் செல்வதும், போரில் சவால்களைச் சந்தித்தும் மீளுகிறான். இதில் இருந்து இக்காட்சி ஆரம்பிக்கின்றது.
  - இக்காட்சியின் சாரமாக நோக்கக்கூடியது, வீரமாகப் போர் செய்து வெற்றியுடன் மகன் வருகிறான் என இராவணன் மகிழ்வோடு காத்திருக்கின்றான். வந்தவுடன் மகனைப் பாராட்டுகின்றான். இந்திரஜித்தோ, தான் செய்த ஒவ்வொரு யுத்தத்தின் நுட்பங்களும், விபீஷணன் கொடுத்த தகவல்களினால் தோற்கடிக்கப்படுவதாக மிகவும் நொந்து கூறுகின்றான். சீதையைச் சிறைவிடுமாறு ஆலோசனை கூறுகிறான். அது பேதமை, உயிரை விட்டாலும் விடுவேன், சீதையை விடேன் என்று கூறும் இராவணன், மகனைத் தாயிடம் செல்லப்பணித்து, தான் போர் செய்யப் புறப்படுகின்றான். அது கண்ட இந்திரஜித், தந்தையை மறுத்துத் தானே போருக்குப் புறப்படுகின்றான்.
  - இக்காட்சியில், இராவணனின் மகிழ்ச்சி, பெருமை, இந்திரஜித்தின் சினம், தானே போர் செய்ய மீளப்புகும் அவன்மேற் பரிவு, இறந்து விடுவானோ என்ற ஏக்கம் எனப் பல்வேறு உணர்வுகள் காணப்படுகின்றன.
  - இதில் இந்திரஜித்தினதும், இராவணனதும் பாத்திரப் பண்புகளும் மனநிலைகளும் துல்லியமாக வெளிப்படுகின்றன.
  - இக்காட்சியில் மனதைக் தொடும் சம்பவமாகவும், காட்சியின் உச்சமெனத் கொள்ளக்கூடியதும் இந்திரஜித்தன், தந்தை போருக்குச் செல்வதைப் தடுத்து மீண்டும் தானே செல்வதாகப் புறப்படுவது

    ‘‘உந்தன் உதிரமையா - உனக்கிது
    உதவாமல் போய்விடுமா.’’ ...’’
    ‘‘நான் மாண்டு மடிந்த பின்தான்
    இலங்கையில் தோல்வி நுழையுமப்பா’’

    என்ற வரிகள் மனதினைத் தொடுகின்றன.
  - காட்சி ஒன்றினைத் தயாரித்த அனுபவத்தினை ஒரு ஒப்படையாகப் பதிவு செய்யப் பணியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்**

- காட்சித் துண்டம்.
- காட்சியின் சாரம்.
- ஏடுபார்ப்போர்.

**கணிப்பீடு:**

- கூத்து வடிவத்திலுள்ள நாடகமொன்றினைப் பயிலும் ஒழுங்கு ஒன்றினைத் தருக.
- நாடகக் காட்சி ஒன்றினைச் சித்திரிப்பதற்கு அக்காட்சி தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?
- இராவணேசன் காட்சி 11இல் மேலோங்கி நிற்கின்ற உணர்வு நிலை யாது?
- எழுத்துருவின் தொனியை வெளிப்படுத்துவதில் துணைக்கலைகள் ஆற்றக்கூடிய பணிகள் எவை?
- தனியே உரையாடல் மூலமாக ஒரு பாத்திரத்தினைச் சித்திரிப்பதற்கும் ஆடல்பாடல்களினூடாகச் சித்திரிப்பதற்கும் உள்ள வேறுபாடுகளை, உமது அனுபவத்தின் அடிப்படையில் விவரிக்குக.

**உசாத்துணைகள்:**

- இராவணேசன் - சி. மௌனகுரு (நூல், DVD)

ே

| | | | |
|---|---|---|---|
| **தர்ச்சி** | **5.0** | **:** | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பாகப் பல்வேறு படைப்புக்களை நயக்கவும் விமர்சிக்கவும் முற்படுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **5.4** | **:** | நாடகத்தில் பார்ப்போரது பதிற்குறிகளின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுவார். |
| **செயற்பாடு 5.4** | | **:** | பார்ப்போரது பதிற்குறிகள் நாடகத்திற்குப் பங்களிப்பதை அறிந்து கொள்வோம். |
| **பாடவேளை** | | **:** | 04 |

**கற்றற் பேறுகள்:**

- பார்ப்போரிடமிருந்து என்னென்ன வகையான பதிற்குறிகள் கிடைக்கப் பெறலாம் என்பதை எடுத்துரைத்திருப்பார்.
- பார்ப்போரின் பதிற்குறிகள் ஆற்றுகையின் போக்கில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பிடுவார்.
- பதிற்குறிகள் அகவயமாகவும், புறவயமாகவும் வரலாம் என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்.
- நெறியாளரில் பதிற்குறிகளின் தாக்கம் பற்றி ஆராய்ந்து கூறுவார்.
- பார்ப்போருக்கிடையில் பதிற்குறிகள் ஏற்படுத்தும் தாக்கம் ஆற்று கையைப் பாதிக்கும் விதத்தை எடுத்துக் கூறுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- எந்தையும் தாயும் நாடக ஆற்றுகைகள்.
- இராவணேசன் காணொளி.

**அறிமுகம்:**

பார்ப்போரின் பதிற்குறிகளை இனம்காணலும் அவை ஆற்றுகையில் தாக்கம் ஏற்படுத்தலை அறிதலும் இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்பெறுகின்றன.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- செய்துகாட்டல்.
- குழுமுறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

- தாம் கண்டு கழித்த நாடகங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- இனம்காணப்பட்ட பதிற்குறிகளைப் பட்டியலிட வழிப்படுத்தல்.
- எந்தையும் தாயும், இராவணேசன் என்பன ஒவ்வொரு மேடையேற்றத்தின் போதும் வெளிப்படுத்திய பதிற்குறிகள் பற்றிக் கலந்துரையாடல்.
- 5 நிமிட நாடகத்தினைத் தயார் செய்து நடித்தல்.
- பதிற்குறிகள், வெளிப்பாட்டில் ஏற்படுத்திய தாக்கங்களை விவரித்தல்.

- நெறியாளனில் பதிற்குறிகள் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிக் கூறுதல்.
- பார்வையாளரிடையே பதிற்குறிகள் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிவிளக்குதல்.

கலைச் செயற்பாட்டில் கலையினை உருவாக்குதல், அதனை இரசித்தல் எனும் இரு செயற்பாடுகளும் இரு வேறு தளங்களில் நடைபெறும் நடவடிக்கைகளாகவும் ஒன்றை ஒன்று சார்ந்தனவாகவும் உள்ளன. கலைப்படைப்பொன்றை உருவாக்கும் (நெறியாளன்) கலைஞன் தன் படைப்புருவாக்கத்திற்குப் பல்வேறு காரணங்களைக் கற்பித்தாலும் படைப்பாக்கத்திறன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட படைப்பைப் பார்ப்போரின் இரசனைக்கு உட்படுத்துவதாக விளங்குகிறது. இதனால், கலைஞன், பார்ப்போரைக் கவரக்கூடிய படைப்பை உருவாக்குகிறான் பார்ப்போர் கலைஞனால் உருவாக்கப்பட்ட படைப்பை இரசிக்கின்றனர். இதனால் பார்ப்போரின் இரசனை மட்டத்தை உணர்ந்து செயற்பட வேண்டிய தேவை கலைஞனுக்கு ஏற்படுகிறது. நிகழ்கலையின் மூலம் கலைஞனும் கலை ஞானம் இல்லாதவனும் தமது புலன்களைச் செலுத்தி, ஏதாவது ஒரு அனுபவத்தை வெளிக்காட்டுவான். இதனையே ரசம், மெய்ப்பாடு, கதாசிஸ் என அழைப்பார். இதன் பேறாகப் பதிற்குறிகள் கிடைக்கும்.

**கணிப்பீடு:**

- பதிற்குறிகள் என்றால் என்ன?
- பார்ப்போருக்கிடையில் பதிற்குறிகள் ஏற்படுத்தும் தாக்கம் ஆற்றுகையைப் பாதிக்கும் விதத்தைத் தருக.
- நாடகத்தின் வெற்றி / தோல்வியைத் தீர்மானிப்பதில் பதிற்குறிகளின் பங்களிப்பினை விளக்குக.

**உசாத்துணைகள்:**

- இந்தியக் கலையும் இரசனையும் - வடிவேல் இன்பமோகன்.
  விபுலம் வெளியீடு: மட்டக்களப்பு, ஆவணி 2007
- எந்தையும் தாயும்
 - இராவணேசன்.

**தேர்ச்சி** 6.0 : நாடக அரங்கக்கலைகளுடன் தொடர்புடைய கொள்நெறிகளை அடிப்படையாக கொண்டு படைப்பாக்க செயற்பாடுகளை விருத்தி செய்வார்

**தேர்ச்சி மட்டம்** 6.1 : அனுபவங்களை அடிப்படயாகக் கொண்டு, நாடகப் பொருத்தமான சூழமைவுகளை படைப்பாக்கம் செய்பவர் ஆவார்.

**செயற்பாடு** 6.1.1 : படைப்பாகத்திறனை விருத்தி செய்வோம்

**பாடவேளை** : 06

**கற்றற்பேறு**

- தாம் விருத்தி செய்யவேண்டிய படைப்பாகத்திறன்களை இனங்கண்டிருப்பார்
- திறன்களை விருத்தி செய்வதற்கான பயிற்சிகளை செய்திருப்பார்
- பயிற்சி முறைகளை விவாதித்திருப்பார்
- அரங்கிற்குப் படைப்பாக்கத்திறனின் அவசியத்தை உணர்ந்திருப்பார்

**தரவிருத்தி உள்ளீடு**

- தாளவாத்தியங்கள்

**கற்றல் கற்பித்தல் முறைகள்**

- கலந்துரையாடல்
- செய்முறை

**அறிமுகம்**

- மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கம் திறன்களை அவர்கள் அறிந்துகொள்ளச் செய்வதுடன் படைப்பாக்கத்திறன் விருத்திக்கான பயிற்சிகளில் ஈடுபடச்செய்து அதனூடாகத் தமது கற்பனையை விரிவு படுத்தித் தமது திறன்களை விருத்தி செய்வது இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்**

- மாணவர்கள் அனைவரையும் சுத்தமான காற்றோட்டமான இடத்திற்கு அழைத்துச்செல்லுங்கள்
- அனைவரையும் இலகுவான முறையில் நிற்கச்செய்யுங்கள்.

- அவர்களின் உடல் உளர் தளர்வுக்கான அரங்கள விளையாட்டுகளுள் ஒன்றைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்

(ஆடும் வீடும், அன்றோல் கரடியும்

- விளையாடி முடிந்ததும் மாணவர்களை ஆழமாக சுவாசிக்கச் செய்து சுவாசப்பயிற்சியில் ஈடுபடுத்துங்கள்
- சுவாசப்பயிற்சியின் பின்னர் கண்களை மூடித் தாம் வாழும் உலகத்தினை நினைப்பதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்
- தாம் வாழும் உலகத்தில் இருந்து வேறொரு உலகத்திற்கு அழைத்துச்செல்லுங்கள்
- அழைத்துச் செல்லப்படும் இடம் மனதிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் இடமாக இருக்கும் என்பதைத் தெளிவு படுத்துங்கள்
- அந்த இடத்தினை நோக்கி நகர்வதற்கான ஆயத்தத்தை மேற்கொள்ளுங்கள்
- இப்பயணத்ததினை தொடரும்போது அவர்கள் வயது அவர்கள் யார் அவ்வியடம் செல்வதற்கான காரணங்கள் போன்றவற்ளை தெளிவு படுத்துங்கள்
- அவர்கள் பொதுவாக கண்ணைத்திறந்து செல்லலாம்அன்றேல் கண்களை மூடிய நிலையில் பயணத்தினை ஆரம்பிக் வழிப்படுத்துங்கள்
- இதமான காற்றில் தம்மை மறந்து நடந்தும் சுடுமணணில் ஓடியும் முட்புதர்களைத் தாண்டியும் சுமைகளை சுமந்தும் செல்கிறார்கள் என்பதை உணர்த்தும் வகையில் அமைந்த செயற்பாடுகளைச் செயற்படுத்துங்கள்
- இவ்வாறு பல இடங்களைத்தாண்டி வந்தவர்கள் தாம் கண்ட, தமது மனதிற்கு பிடித்தமான இடத்தினை அடைந்ததும் அவர்கள் தமது மகிழ்ச்சியினை உடல் மொழி மூலம் வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளியுங்கள்
- உடல மொழிச்செயற்பாட்டின் ஊடாகத் தமக்கு விருப்பமான நபர்களுடன் சேர்ந்து தமது மகிழ்ச்சிப் பிரவாகத்தை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளியுங்கள்
- இவ்வாறு அமைக்கப்பட்ட குழுக்கள் ஒவ்வொன்றும் வழிநடத்தப்படுபவராக வழங்கப்படும் சொற்கள் ஒவ்வொன்றுக்குமான காட்சியை உருவாக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்
- கடல், மலை, நீர்வீழ்ச்சி, பறக்கம் மனிதன், விசித்திர மனிதன்
- காட்சிகளைப்படைப்பாக்கம் செய்யும் போது கற்பனையை முன்னிறுத்திச் செயற்பட வழிப்படுத்துங்கள்

- படைப்பாக்கம் செய்யப்பட்ட விடயங்கள் அசைந்து செல்வதற்கு வழிப்படுத்துங்கள்
- இச்செயற்பாடுகளின் பின்ன அவர்களின் மனநிலையையும் கருத்துகளையும் கேட்டறியுங்கள்
- இக்கருத்துகள் ஊடாக படைப்பாக்கம் தொடர்பான கருத்துளை கலந்துரையாடுங்கள்
- படைப்பாகத்திறன் என்பது கற்பனையை மையப்படுத்தி அன்றி சுய எண்ணப்பாங்கின் அடிப்படையில் தற்புதுமையான படைப்பின் உருவாக்குதல் ஆகும்.
- இப்பயிற்சியின் ஊடாக மாணவர்கள் மத்தியில் பின்வரும் திறன்கள் மேம்படுத்தப்படலாம் என்பதை உணரச்செய்யுங்கள்

  கற்பனை

  அவதானம்

  உற்றுநோக்கும் திறன்

  நம்பிக்கை ஏற்படுதல்

  உலகம் பற்றிய பார்வை

  தன் பற்றிய எண்ணம்

  தமது பலம் பலவீனம் பற்றிய தெளிவு

  சுகந்திரமான சிந்தனைச் சூழல்

  போன்ற திறன்கள் விருத்தி செய்து கொள்ள முடியும்

**கணிப்பீடு**

- படைப்பாக்கத் திறன் பயிற்சியில் நீரு் பெற்றுக்கொண்ட அனுபவங்ளைக் கூறுக
- படைப்பாக்கத்திறன் செயற்பாட்டில் உமக்குப் பிடித்த விடயங்களைப் பட்டியல் படுத்துக
- மனிதனூடாக பயணத்தின்போது உமக்குத் தடையாக அமைந்த விடயங்கள் யாவை
- உம்மில் இனம் கண்ட படைப்பாக்கத் திறன்கள் யாவை?

**தேர்ச்சி** 6.0 : நாடக அரங்கக்கலைகளுடன் தொடர்புடைய கொள்நெறிகளை அடிப்படையாக கொண்டு படைப்பாக்கச் செயற்பாடுகளை விருத்தி செய்வார்

**தேர்ச்சி மட்டம்** 6.1 : அனுபவங்களை அடிப்படயாகக் கொண்டு, நாடகப் பொருத்தமான சூழமைவுகளை படைப்பாக்கம் செய்பவர் ஆவார்.

**செயற்பாடு** 6.1.2 : படைப்பாகத்திறனை விருத்தி செய்வோம்

**பாடவேளை** : 09

**கற்றற்பேறு** :

தாம் விருத்தி செய்யவேண்டி படைப்பாக்கத்திறன்களை இனம் கண்டிருப்பார்.

திறன்களை விருத்தி செய்வதற்கான பயிற்சிகளைச் செய்வார்.

பயிற்சி முறைகளை விபரிப்பார்.

பாத்திரங்களை உருவாக்குவார்

பாத்திரங்களிற்கு ஏற்ற உரையாடல்களை உருவாக்கியிருப்பார்

எதிர்பார்பைத் தூண்டும் மோதுகைளை அமைத்திருப்பார்

**அறிமுகம்** :

படைப்பாகத்திறன் விருத்திக்கான பயிற்சிகளின் ஊடாக பாத்திரங்களை உருவாக்கி அவற்றின் உடாக பாத்திரச் செயல்களையும் சொல்லாடல்களையும் வளர்த்துச்செல்வது இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

விடய உள்ளடக்க வழிகாட்டல்கள் : மாணவர்களை மண்டபத்தினுள் இலகுவாக நடக்கச் செய்யுங்கள் பின்பு வட்டமாக அமரச்செய்யுங்கள் அவர்களுள் ஒருவர் ஒரு செயலின் முதல் வாக்கியத்தினைக் கூறு மற்றவர்கள் தொடர்ந்து அவர்ருக்கு முன்னுள்ளவர்கள் கூறும் வாக்கியத்திற்கு பொருத்தமானவாறே வேறு வாக்கியத்தைக் கூறி ஒரு செயல்நிகழ்வு வருமாறு சம்பத்தினை உருவாக்கும் விளையாட்டினை விளையாட சந்தர்ப்பம் அளியுங்கள்

இவ்விளையாட்டுப்பற்றிய கருத்துகளைக் கேட்டறியுங்கள்

அவர்களை சிறிய குழுக்கள் ஆக்குங்கள்

ஒவ்வொரு குழுவுக்கும் பின்வரும் தலைப்புகளை வழங்கி அவை பற்றிக் கலந்துரையாடுங்கள்

வட்டிக்குப் பணம் கொருத்தவர் - வாங்கியவர்

போலி மருந்து விற்பவர் - போலி மருந்தினால் பாதிக்கப்பட்டவர்

காணிச் சொந்தக்காரர் - அடாத்தாக குடியிருப்பவர்

போலிச்சாமியார் - பக்தர்

ஊரை ஏமாற்றும ் ஊர் பெரியவர் - பொதுமகன்

வேலை வாய்ப்பு முகவர் - வெளிநாடு செல்ல முற்படுபவர் போன்ற பலவற்றை வழங்கலாம்.

இப்பாத்திரங்கள் ஒவ்வொன்றினதும் செயல்களை எழுத வழிப்படுத்துங்கள்.

ஒவ்வொரு பாத்திரத்திற்கும் பொருத்தமான வாறு சொல்லாடல்களைக் கட்டியெழுப்புமாறு கூறுங்கள்.

அச்சொல்லாடல்கள் சிற மோல்களை வளர்த்துச்செல்ல சந்தர்ப்பம் அளியுங்கள்.

இம்மோதல்களை அடிப்படையாக கொண்டு சூழமையவுகளை செய்து பார்க்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்

செய்துகாட்டலின் போது அரங்கப்பொருட்கள் பயன்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்

செய்து காட்டிய விடயங்களை எழுத்துருவாக எழுதுவதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்

அவ்வெழுத்துருவில் செயல்கள், மேடைக்குறிப்புகள், உள்ளடக்கப்படவேண்டும் என்பதை தெளிவு படுத்துங்கள்.

எழுத்துரு எழுதப்படும்போது சொல்லாடல்கள் செழுமைப்படுத்தப்படவேண்டும் என்பதையும் அறியச்செய்யுங்கள்

எழுதப்பட்ட எழுத்தருக்களைக் காட்சிப்படுத்தி அது தொடர்பாக கலந்துரையாடி அவர்களை உட்சாகப்படுத்துங்கள்

**கணிப்பீடு**

பாத்திரச்செயல்நிலைகளைப்பபட்டியற்படுத்துக

படைப்பாகத்திறன் விருத்தி தொடர்பான பயிற்சி, படிமுறைகளை எடுத்துரைக்க

படைப்பாகத்திறனை விருத்தி செய்யக் கூடிய அரங்க விளையாட்டுகளை பட்டியற்படுத்துக.

**தேர்ச்சி 7.0 :** நாடக அரங்கக் கலைகளுடன் தொடர்புடைய துணைக்லைகளைப் பயில்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.1 :**துணைக்கலைகள் தொடர்பான பிரயோகக் கற்றலில் ஈடுபடுவார்.

**செயற்பாடு 7.1 :** எழுத்துருவிற்கமையத் துணைக்கலைகளைக் கையாள்வோம்.

**பாடவேளை :** 15

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கோடை நாடக எழுத்துரு.
- டிமைன் தாள்கள்
- நிறப்பேனாக்கள்.
- ஒளிவிதானிப்புக் கருவிகள்.
- இசைக்கருவிகள்.
- வேட உடைகள்.

**கற்றற் பேறுகள்:**

- நாடகாசிரியர் தரும் விவரக்குறிப்பில் இருந்து துணைக்கலைகள் பற்றிய தகவல்களைப் பெற்றிருப்பார்.
- பாடல்களின் விளக்கங்கள், காட்சிப்படிமங்கள், உணர்ச்சிகள், கரு, செயலியக்கம் என்பவற்றுக்கு அமைவாகத் துணைக்கலைகளைப் பயன்படுத்தும் விதத்தைக் கூறுவார்.
- காலம், களம், பாத்திரப்பண்புகள், மோடி என்பவற்றுக்கு ஊடாகத் துணைக்கலைகளைத் திட்டமிட்டிருப்பார்.
- ஆற்றுகையில் துணைக்கலைகளைப் பிரயோகிப்பார்.
- வெவ்வேறுபட்ட ஆற்றுகைகளில் துணைக்கலைகளின் பிரயோகம் குறித்து அறிவதில் ஆர்வம் காட்டுவார்.

**அறிமுகம்:**

கோடை நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு, துணைக்கலைகளை இனங்காண்பதும் அதனை ஆற்றுகைக்காகத் திட்டமிட்டுப் பிரயோகிப்பதும் இப்பாடத்தினூடாக எதிர்பார்க்கப்பெறுகிறது.

**கற்றல் – கற்பித்தல் முறையியல்கள்:**

- கலந்துரையாடல்.
- முன்வைத்தல்.
- செயன்முறை.
- குழுமுறை.

**விடய உள்ளடக்க வழிகாட்டல்கள்:**

**செயற்பாடு – I**

- தவில், நாதஸ்வரம் ஆகிய இசைக்கருவிகளின் இசையை இறுவட்டில் ஒலிக்கவிட்டு, அதனை மாணவர்கள் சற்றுநேரம் செவிமடுக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தவில், நாதஸ்வரம் ஆகிய இசைக்கருவிக்கும் கோடை நாடக எழுத்துருவிற்கும் இடையேயான தொடர்புநிலை குறித்து மாணவர்களிடையே வினவிக் கலந்துரையாடல்களைக் கட்டி யெழுப்புங்கள்.
- மாணவர்களை ஏழு குழுக்களாக்கி, குழுவிற்கு ஒன்றாகப் பின்வரும் தலைப்புக்களை வழங் குங்கள்.

குழு - I - காட்சி விதானிப்பு.
குழு - II - மேடைப்பொருள்.
குழு - III - கைப்பொருள்.
குழு - IV - வேட உடை.
குழு - V - ஒப்பனை.
குழு - VI - ஒளி.
குழு - VIII - இசை.

- மேற்படி தலைப்புக்களைக் கொண்ட குழுக்கள் ஒவ்வொன்றும் தமது விடயப்பரப்பு சார்ந்த தகவல்களை இனங்கண்டு பட்டியற்படுத்த வாய்ப்பளியுங்கள்.

(கோடை நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு)

**காட்சி விதானிப்பு**

கோடை நாடக எழுத்துருவில் மூவகைப்பட்ட முறைமையில் காட்சிகள் விவரிக்கப்படுகின்றன.

1. மேடைக் குறிப்பினூடாக நேரடியாக விவரித்தல்.

   உதாரணமாக;

   ‘‘மேடையின் வலது மூலையில் ஓலைக்குடில் ஒன்றின் வாயில் தெரிகிறது’’

2. உரையாடலுக்கூடாக விவரித்தல்.

   உதாரணமாக;

   பஞ்சை:- ஆயிரங்கால் மண்டபம் அக்காலத் திருந்தனவாம்
   எங்களது கோயிலுக்கோ.
   மாணிக்கம்:- எட்டுத்தூண்!
   பஞ்சை:- எட்டுக்கும்
   சாந்தேனும் பூசிக் சரிச்கட்ட
   காலமில்லை ...

3. பார்ப்போர் கற்பனைக்கு இடமளித்தல்.

   உதாரணமாக

   செல்லம்:- ஆனாலும், குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் குறையாமல் அத்தனை காய்பிஞ்சும்

அடுக்காய் விளைக்கிறார். கொத்தவரை கூடக் குலை குலையாய்க் காய்க்கிறது. காணி ஒன்று வாங்கி அதில் வீடு ஒன்று கட்டிவிட்டார்.

இவ்வாறு எழுத்துருவில் இருந்து ஒவ்வொரு துணைக்கலை சார்ந்தும் தகவல்களை இனங்காணுங்கள். மேடைக் குறிப்பு, பாத்திர உரையாடல்கள், பாத்திரச் செயலியக்கம் மூலம் துணைக்கலைகளை இனங்காணமுடியும்.

**மேடைப்பொருள்**

உதாரணமாக

''திண்ணைக்கு முன்னால் ஒரு மரக்குற்றி, இடது புறத்திண்ணைக்கு வெளியே ஒரு சாய்வு நாற்காலி''

**கைப்பொருள்**

உதாரணமாக

''குனிந்து முற்றம் பெருக்கும் பாவனையில் விளக்குமாற்றோடு கமலி சிலையாக நிற்கிறாள்.''

''செல்லம் போய் பேணியில் நீர் கொண்டு வந்து கொடுக்கிறார்.''

**வேடஉடை**

உதாரணமாக

''கணேசு பள்ளிக்குத் தயாராய் உடுத்து புத்தகங்களுடன் இழுத்து வரப்படுகிறான்.''

''சோமு அலுமாரியின் பின் மறைந்து வேட்டி மாற்றி வருதல்.''

**ஒப்பனை**

உதாரணமாக;

''மாணிக்கம் குடுமியை கோதிக்கட்டி முடிதல்.''

சோமு - சொல்லி விட்டேன்.

(பொட்டு வைத்துக் கொள்ளல்)

**ஒளி**

உதாரணமாக:-

''திரை விலக, மேடை முழுவதும் இருள் வைகறைப் பொழுதை உணர்த்தும் வண்ணம் மேடைப் பின்புற வெண்திரை செவ்வரி படர்ந்திருக்கிறது.''

**இசை**

குரலிசை, கருவி இசை, ஒலி விளைவுகள் என்பன பயன்படுத்தப்படுவதைக் கோடை எழுத்துருவிலிருந்து அறிய முடிகிறது.

உதாரணமாக; **குரலிசையாக**

''தோடி இராகத்தை விரிவாக வாய்க்குள் இசைத்தல்''

**பாடல் –**

''அள்ளி இறைத்த அமிழ்தாய் எழுந்ததிவ்.''

**கருவி இசையாக**

"நாயன இசையில் பூபாளம் கேட்டுத் தணிதல்"

**ஒலி விளைவுகளாக**

"கார்க்கோணை இழுத்து அடித்துக் கேட்டல்"

- மேற்படி ஒவ்வொரு குழுவும் தாம் எழுத்துருவில் இருந்து இனங்கண்ட துணைக்கலை அம்சங்களின் விவரங்களைக் காட்சிப்படுத்தவும் ஏனைய குழுக்களுடன் கருத்துக்களைப் பரிமாறவும் வாய்ப்பளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது விடயத்தலைப்பில் குறிப்பிட்ட துணைக்கலை சார்ந்த தகவல்களைச் சேகரித்து வர வழிப்படுத்துங்கள். இதன்போது கோடை நாடக எழுத்துரு விவரிக்கும் கதையின் காலமான, 1937ஐக் கருத்திற் கொண்டு அக்காலத்திற்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைத் தேடுவதில் மாணவர் கவனம் செலுத்த வழிப்படுத்துங்கள்.

  படங்கள், கட்டுரைகள், நூல்கள், ஒளிப்படங்கள், நேர்காணல்கள் மூலம் இதற்கான தகவல்களைத் தேடிப்பெற முடியும்.

**செயற்பாடு – II**

- ஒவ்வொரு குழுவும் துணைக்கலை சார்ந்து சேகரித்த தகவல்களையும் மேற்படி எழுத்துருவில் இருந்து இனங்கண்ட துணைக்கலை பற்றிய குறிப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு, கோடை நாடக எழுத்துருவிற்கான துணைக்கலைகளைக் குழுநிலையில் திட்டமிட வழிப் படுத்துங்கள்.
- காட்சிவிதானிப்பு, மேடைப்பொருள், கைப்பொருள் தொடர்பாகச் சேகரித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு குழுவும் அதனைப் படமாக வரையச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- "இசை" சார்ந்து பயன்படுத்தத்தக்க இசைகள்;
  - மனோநிலை இசை (Mood Music).
  - கரு இசை (Theme Music).
  - பின்னணி இசை (Back ground Music).
  - தேவையான இசைக்கருவிகள் - நாயனம்.
    - தவில்.

தவில், நாயனம் தவிர, நாடக உணர்வு நிலைக்கும், மோடிக்கும் ஏற்ப இசையைப் பிரயோகிப்பதற்காக மேலதிக இசைக்கருவிகள் யாதாயினும் தேவைப்படின் பயன்படுத்தலாம். ஆனால், அவை நாடகத்தின் உணர்வு நிலையைப் பாதிக்காமல் இருப்பதனைக் கவனத்திற் கொள்வது அவசியம்.

இதற்காகத் துறைசார்ந்த வளவாளர்களது ஆலோசனையை மாணவர்கள் பெறுவதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

இசையமைப்புத் தொடர்பாக பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

இதுபோன்று, இசை பிரயோகிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்.

நாடகத்தில் இடம்பெறும் பாடல், இராகம் என்பவற்றை நாடக உணர்வுக்கேற்பப் பாடத்தக்க வர்களை மாணவர்கள் தெரிவு செய்ய வாய்ப்பளியுங்கள்.

**வேட உடை**

கோடை நாடக எழுத்துருவில் பின்வரும் பாத்திரங்கள் இடம்பெறுகின்றன.

மாணிக்கம் - நாயனக்காரர்.

செல்லம் - அவர் மனைவி.

கமலி - அவர் மகள்.

கணேசு - அவர் மகன்.

சோமு - அவர் சிட்சைப்பிள்ளை.

பஞ்சையர் - அவர் கலைஞர்.

முருகப்பு - அவர் மனைவியின் உறவினர்.

விதானை - அவர் ஊரவர்.

காசி - அவர் வண்ணான்.

சாமியார் - அவர் அறியாப் பரதேசி.

இதுவரை தேடிப்பெற்ற தகவல்கள், கதை எழுந்த காலத்து (1937) சமூக, பண்பாட்டுப் பின்புலம், பாத்திரங்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பாத்திரங்களுக்குமான வேட உடைகளைப் படமாக வரைந்து வர்ணந்தீட்ட வாய்ப்பளியுங்கள்.

வரைந்து வர்ணந்தீட்டிய படங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பாத்திரங்களிற்கும் பொருத்தமான வேட உடைகளை அயலவர்களிடமோ தெரிந்தவர்களிடமோ கேட்டுப்பெற மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

வசதி வாய்ப்பிருப்பின் புதிதாகக் கொள்வனவு செய்யலாம்.

**ஒப்பனை**

ஒவ்வொரு பாத்திரத்திற்குமெனத் தீர்மானித்த வேட உடைக்கும், பாத்திரப் பண்புக்கும் பொருத்தமான வகையில் ஒப்பனையை மேற்கொள்வதற்குத் தேவையான ஒப்பனைப் பொருள் களை மாணவர்கள் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

ஒப்பனைக்குத் தேவையான பொருள்களைப் பின்வரும் வகையில் பட்டியற்படுத்தச்

| தேவையான இசைக்கருவி | வாசிப்பவர் | சந்தர்ப்பம் |
|---|---|---|
| நாயனம் | இசைக்கருவியை வாசிப்பதற்கெனத் தீர்மானித்த நபர் | நாடக ஆரம்பத்தில் வரும் பாடலில் "ஆட்சி விளைத்த ஒரு கோடை" என்ற வரியைத் தொடர்ந்து,நாயன இசையில் பூ பாளம் கேட்டுத் தணிதல். |

இவ்வாறு தேவைப்படும் ஒப்பனைப் பொருள்களைப் பட்டியற்படுத்தலும் அவற்றைச் சேகரித்து ஒருநிலைப்படுத்தவும் வழிப்படுத்துங்கள்.

**ஒப்பனை**

ஒவ்வொரு பாத்திரத்திற்குமெனத் தீர்மானித்த வேட உடைக்கும், பாத்திரப் பண்புக்கும் பொருத்தமான வகையில் ஒப்பனையை மேற்கொள்வதற்குத் தேவையான ஒப்பனைப் பொருள் களை மாணவர்கள் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

**மேடைப்பொருள்**

- கோடை நாடக எழுத்துருவினூடாகத் சாய்வு நாற்காலி, வாங்கு, மரக்குற்றி, அலுமாரி போன்ற மேடைப்பொருள்கள் பயன்படுத்தப்படுவதனை அறிய முடிகின்றது.
- மாணவர்கள் வாசித்து இனங்கண்ட மேடைப்பொருள்களை, சேகரித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் கதைக்காலம் (1937), நாடக மோடிக்கேற்பவும் பொருத்தமான வகையில் ஒவ்வொன்றாக வரைய வாய்ப்பளியுங்கள்.
- வரைந்தெடுத்த மேடைப்பொருள்களின் வடிவ மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு மாணவர்கள் உருவாக்க வழிப்படுத்துங்கள். அன்றேல் அயற்சூழலில் தேடிப்பெற வாய்ப்பளியுங்கள்.

**கைப்பொருள்**

கோடை நாடக எழுத்துரு விவரிக்கும் கைப்பொருள்களுக்கு உதாரணங்களாக;

- விளக்குமாறு.
- தண்ணீர்க்குடம்.
- பேணி.
- கத்தி.
- முட்டி.
- உப்புச் சிரட்டை.

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கைப்பொருள் பயன்பாடு குறித்துப் பின்வரும் வகையில் பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்.

உதாரணமாக

| ஒப்பனைப் பொருள் | எண்ணிக்கை |
|---|---|
| பவுண்டேசன் கிறீம் (Foundation Cream) | 01 |
| உதட்டுச் சாயம் (Lipstick) | 02 |

இவ்வாறு நாடகத்தில் இடம்பெறும் கைப்பொருள்கள், அதனைக் கையாளும் பாத்திரம், பயன்படுத்தும் சந்தர்ப்பம் என்பவற்றை முழுமையாகப் பட்டியற்படுத்த வாய்ப்பளிப்பதுடன் அவை ஒவ்வொன்றையும் படமாக வரையவும் வழிப்படுத்துங்கள்.

இக்கைப்பொருள்களை மாணவர்கள் சேகரித்து வரச் சந்தர்ப்பம் வழங்குங்கள். ஆனால் இக்கைப்பொருள் அனைத்தும் கதைக்காலம் (1937), நாடக மோடிக்குப் பொருந்தும் வகையில் இருப்பது அவசியமானதாகும்.

**ஒளி**

வெவ்வெறு வகைப்பட்ட ஒளிமுதல்கள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணங்களாக;

- அரிக்கன் லாம்பு
- தூண்டாமணி விளக்கு.
- நவீன ஒளிக்கருவி (“வெண்திரையில் இளஞ்சூரிய ஒளி சிறிது சிறிதாக மறைகிறது”)

ஒளியமைப்புக்குத் தேவையான ஒளிக்கருவிகளைப் பட்டியற்படுத்துங்கள்.

உதாரணமாக

அவரவர் கற்பனைக்கேற்ப ஒளிக்கருவிகளைத் தீர்மானிக்க முடியுமெனினும் இத்தீர்மானத்தின் போது நாடக கதைக்காலம் (1937), நாடக மோடி, நாடகத்தின் ஒட்டுமொத்த உணர்வு நிலை என்பவற்றைக் கவனத்திற் கொள்வது அவசியம்.

வசதி வாய்ப்பிருப்பின் ஒளிக்கருவிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். அன்றேல் கிடைக்கின்ற ஒளிமுதல்களைக் கொண்டு ஒளியமைப்பைப் மேற்கொள்ளலாம். அத்துடன் நாடகத்தின் உணர்வோட்டத்திற்கு இடையூறு வினைவிப்பதாக ஒளியமைப்பு அமையக்கூடாது.

இசையமைப்பைப் போன்று ஒளியமைப்பிற்கும் பின்வருமாறு பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள். உதாரணமாக

தேவைவே ... கு

வா

செயற்பா

| கைப்பொருள் | கையாளும் பாத்திரம் | சந்தர்ப்பம் |
|---|---|---|
| வெள்ளிப்பாத்திரம் | செல்லம் | “பாலிருந்தால் வெள்ளிப்பாத்திரத்தில் கொண்டுவா, மேலும் ஒன்று! என்னும் மாணிக்கத்தின் உரையாடலைத் தொடர்ந்து |

- இது ... வா அன்றேல் முன்வைத்தலுக்கூடாகவோ ஒவ்வொரு குழுவும் தமது சிந்தனைகளைப் பரிமாறிக் கொள்வதுடன் இத்துணைக்கலைகளைப் பிரயோகிப்பதில் ஏற்படும் சிக்கல்களையும் இனங்கண்டு தீர்ப்பதற்கு வழிப்படுத்துங்கள். குறிப்பாக, காட்சி விதானிப்பு, மேடைப்பொருள், ஒளிவிதானிப்பு, வேடஉடை தொடர்பாகப் பணியாற்றும் குழு இதனைக் கூடியளவில் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**செயற்பாடு – IV**

- ஒவ்வொரு குழுவும் தாம் திட்டமிட்ட விடயத்தை ஆற்றுகையில் பிரயோகிப்பதனைக் கருத்திற் கொண்டு, அன்றேல் தனித்தனியே தம்மைத் தயார்படுத்துவதற்கான ஒத்திகையில் அதனை வடிவமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

  உதாரணமாக;

  இசை தொடர்பாக பணியாற்றும் குழு, பாடல்களைப் பாடிப்பார்த்தல், குறித்த இசை விளைவு களைத் தோற்றுவித்தல் போன்ற இசைப்பயிற்சிகளில் ஈடுபடுதல்.
- வேட உடை தொடர்பாகப் பணியாற்றும் குழு, ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஏற்பத் தேடிப்பெற்ற வேட உடைகளை அந்தந்தப் பாத்திரங்களுக்கு அணிவித்துப் பார்த்தல், அவற்றில் உள்ள

| தேவையான ஒளிக்கருவி | எண்ணிக்கை |
|---|---|
| பரப்பொளி | 03 |
| பொட்டொளி | 02 |

- ... போது சமநிலை, மட்டம், நடிபரப்பு என்பனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.
- ஒளி தொடர்பாகப் பணியாற்றும் குழு, திட்டமிட்டதற்கமைய அரங்கில் ஒளிக்கருவிகளைப் பொருத்துதல், அவற்றை இயக்கிப் பார்த்தல் போன்ற விடயங்களில் ஈடுபடுதல்.

**செயற்பாடு – V**

- ஏற்கெனவே தேர்ச்சி மட்டம் 5.3இல் மாணவர்களால் தயாரிக்கப்பெற்ற நாடகக் காட்சிகளுள் யாதாயினும் ஒன்றினை

  (உதாரணம் - கோடை) அரங்கில் மாணவர்கள் நிகழ்த்திக் காட்டவும் இதற்குப் பொருத்தமான வகையில் இசை, ஒளி, காட்சி, மேடைப்பொருள், கைப்பொருள் ஆகிய துணைக்கலைகளை

| ஒளிக்கருவி | ஒளி முதல் | மின்விநியோகம் | சந்தர்ப்பம் |
|---|---|---|---|
| பரப்பொளி | 1,2 | D1 | நாடக ஆரம்பத்தில் நாயனம் கேட்டுப்பாடல் தொடங்கியதும் |
| பொட்டொளி | 3 | D2 | "போ நீ அப்பாலே பொடிக்குச் சுகம் வரும் எனச்சாமியார் வசனம் பேசி முடித்ததும் |

துணைக்கலைகளின் பிரயோகமும் ஒன்றில் இருந்து ஒன்று மேலோங்காமல் ஓர் ஒத்திசைவுடன் அழகியல் முழுமையைப் பேணத்தக்க வகையில் இருப்பதனையும் கருத்தில் கொள்ளுங்கள்.

**செயற்பாடு – VI**

- ஆற்றுகைக்காக துணைக்கலைகளைப் பிரயோகித்தல்.

**கணிப்பீடு:**

- கோடை நாடக எழுத்துருவை ஆதாரமாகக் கொண்டு அதனூடு மேற்கிளம்பும் காட்சி விதானிப்புப் பற்றிய விவரங்களை முன்வைக்குக.
- கோடை நாடக எழுத்துருவின் தொடக்கக் காட்சியில் எவ்வெவ் விடயங்கள் முனைப்புறும் வகையில் இசையமைப்புச் செய்வீர்?




















A
step to roof
side door
B
C


ප්‍රේක්ෂාගාරය
ඕකෙස්ට්‍රා
ස්කේන් ගොඩනැගිල්ල






















































ROGUE
001
CHAUVET


CHAUVET